# சேர சோழ பாண்டியன்



மயிலை சீனி. வேங்கடசாமி

# சேர சோழ பாண்டியன்

மயிலை சீனி வேங்கடசாமி

வ. உ. சி. நூலகம்

பதிப்பாளர் மற்றும் நூல் விற்பனையாளர்கள்

ஜி - 1, லாயிட்ஸ் காலனி, இராயப்பேட்டை, சென்னை - 14.
தொலைபேசி : 044 - 28476273 / 98404 44841

3427

# சேர சோழ பாண்டியன்

மயிலை சீனி வேங்கடசாமி

வெளியீடு :

வ. உ. சி. நூலகம்
பதிப்பாளர் மற்றும் நூல் விற்பனையாளர்கள்
ஜி-1, லாயிட்ஸ் காலனி, இராயப்பேட்டை, சென்னை - 14.

நூல் சேர்க்கை எண் 2969

| *Sera Sozha Pandiyan* |

| *Mayilai Seeni Venkatasamy* |

| *First Edition : 2005* |

*Published by : V. O. C. NOOLAGAM,*
*Publisher and Book-Sellers*
*G - 1, Lloyds Colony, Royapettah, Chennai - 600014.*
*Phone: 044 - 28476273*

| *No. of Pages : 240* |

| *No. of Copies : 1000* | *Size of the Book : 1/8 Demy* |

| *Paper used for text : 18.6 Maplitho* | *Printing Type : 11 Points* |

| *Typeset at : Thaiyal Graphic Solutions, Chennai - 14.* |

| *Printed at : Deva Offset, Chennai- 5.* |

*Price : Rs. 90/-*

## உள்ளே...


1. சேரர் 05

2. சோழர் 112

3. பாண்டியர் 198

# சேரர்

## சேரர் வரலாறு

சங்க கால இலக்கியங்களின் வாயிலாக அக்கால மக்களின் அக வாழ்க்கையையும், புற வாழ்க்கையையும் ஒருவாறு அறிய முடிகின்றது. அரசர், அரசியல், புலவர்கள், மக்கள், அரசு முறை, போர்முறை, கொடைத்தன்மை, பழக்கவழக்கங்கள், நாடு, எல்லைகள் ஆகியவற்றை உய்த்துணர முடிகின்றது.

### சேரர் - சொல்லும் பொருளும்

இராமாயண காலத்தில் சீதையைத் தேடிச் சென்ற வானர வீரர்களுக்குச் சுக்கிரீவன் வழித்துறைகளை வகுத்துரைக்கும்போது சோழ, சேர, பாண்டிய நாடுகளைக் குறிப்பிடுகிறான். உதிட்டிரன் இராயசூய வேள்வி வேட்டபோது சோழ, சேர, பாண்டியர் மூவரும் வந்திருந்ததாக வியாசரும் கூறுகிறார்.

கிரேக்கத் தூதரான மெகஸ்தனீஸ் என்பார் தமது குறிப்பில் சேரர்களைச் சேரமான்கள் என்றே அழைக்கின்றார்.

திருஞான சம்பந்தரும் தமது பதிகங்களில் சேரர், சேரலர் என்னும் சொற்களைப் பயன் படுத்துகிறார். இவர் வாழ்ந்தது ஏழாம் நூற்றாண்டாகும். இதனை நோக்கும்போது சேரர், சேரலர் என்னும் சொற்களே வழக்கில் வந்தனவாகும்.

அசோகனது கல்வெட்டுகளை நாம் நோக்கும்போது, சேரல புத்திரர் என்பதைக் கேரள புத்திரர் என்றே வடமொழி அறிஞர்கள் படித்து வந்துள்ளனர். கல்வெட்டில் உள்ள பிராமிய எழுத்துக்கள் சேரலபுத்திரர் என்று படிக்கும் வண்ணமும் உள்ளது. அதைப் படித்த அறிஞர்கள் கேரளபுத்திரர் என்றே படித்து வந்ததனால், பிற்கால அறிஞர்களும் கேரள புத்திரர் என்றே கூறிவந்தனர்.

இதனால் நாம் அறிவதாவது: சேரலர் தம்மைக் கேரளரென வழங்கத் தலைப்பட்ட காலமானது, தமிழ்மொழியானது சிதைந்து மலையாளமாக மாறிய காலமாயிருக்கலாம். கேரளர் என்னும் சொல்லானது கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பின்தான் மாறிற்று என்று உரைக்கத்தக்க வகையில், கி.பி. பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த பிற்காலச் சோழன்

வீரராசேந்திரன் என்னும் அரசனின் கல்வெட்டுகளில் 'கேரளாந்தகன்' என்றே குறிப்பு உள்ளது. இன்றும் தென்னாட்டில் சிலர் தங்களது ஊர்களை வடவரிட்ட பெயராலேயே அழைத்து வருதல் காணலாம். இது வடமொழியின் மீது உள்ள பற்றினால் எழுந்ததே ஆகும். இந்த வகையில் கேரளம் எனும் சொல் வழக்கினையே பெரிதும் விரும்பி வழங்கி வந்தனர்.

## நாடும் எல்லைகளும்

சேர மன்னர்களைக் கூறும் முக்கியச் சங்க கால நூல்களை நோக்குவோமானால் நாட்டினது பரப்பும் அதன் எல்லைகளும் குறிக்கப் பெறும். பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் பார்ப்போமாயின், சேர நாட்டில் அடங்கியுள்ள பகுதிகள் குட்டநாடு, குடநாடு, பூழிநாடு, குன்ற நாடு, மலைநாடு, கொங்குநாடு, பொறைநாடு முதலியன ஆகும். இதில் அயிரைமலை, நேரிமலை, செருப்புமலை, அகப்பாக் கோட்டை, உம்பற்காடு, நறவுத் துறைமுகம், முசிறித் துறைமுகம், தொண்டித் துறைமுகம் ஆகிய இடங்களும் அடங்கும். பல அரசர்கள் வஞ்சியையும், சிலர் மாந்தையையும் தலைமை நகராகக் கொண்டு ஆட்சி செய்தனர். சேர மன்னர்களின் இவ்வஞ்சி நகரைப்பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுள்ளது. சேரன் வஞ்சி எனும் சிறந்த நூலை எழுதிய சா. கிருட்டினசாமி என்பார் சேர நாட்டில் பெரியாறு என்னும் ஆற்றின் அருகில் உள்ள கரூர்ப்பட்டினமே சேரர்களது வஞ்சிமாநகர் என்று குறிப்பிட்டுள்ளார். இதையே திரு கனகசபைப் பிள்ளையவர்களும், திரு. கே.ஜி. சேஷய்யரும் ஒப்புக் கொண்டுள்ளார்கள். கொங்கு நாட்டில் உள்ள கரூர் ஆனிலை என்ற நகரத்தையும், அதைச் சுற்றியுள்ள இடத்தையும் பிற்காலச் சேரர்களே வென்று தங்கள் நாட்டுடன் சேர்த்துக்கொண்ட பிறகு அதற்குச் 'சேரர் கொங்கு' என்ற பெயரும் வழங்கினர். எனவே, சேர நாட்டில் உள்ள கரூர்ப்பட்டினமே சங்க நூல்களில் கூறப்பெறும் வஞ்சிமா நகரம் எனக் கொள்ளவேண்டும். இவர்களது நல்லாட்சியை ஓரளவு உறவு முறையுடன் தெரிந்து கொள்ள மேற்கூறிய நூல்கள் துணை புரிகின்றன. அவற்றை ஒரு முறைப்படுத்தித் தெளிவான முறையில் நோக்கினால் அவர்களது வரலாற்றை அறிய முடியும்.

பதிற்றுப்பத்து என்னும் நூல் சேர அரசர்கள் பதின்மரும் அவர்களது உறவு முறைகளும் தெரிந்து கொள்ள முழுதும் பயன்படுகிறது. இந்தப் பதின்மரின் வரலாற்றை முதலிலும் பின்னர் ஏனைய நூல்களில் காணப்படும் மற்றச் சேர அரசர்களையும், சேரமான் புலவர்களையும் பற்றித் தெரிந்து கொள்ளலாம். இதையே சேர அரசர்கள், பிற சேர அரசர்கள், அரசப் புலர்கள் என்னும் தலைப்புகளின் கீழும் காணலாம்.

# 1. சேர அரசர்கள்

பதிற்றுப்பத்து என்பது சங்ககால நூல்களில் ஒன்று. இது ஒரு தொகுப்பு நூல். இதில் பத்துப் புலவர்கள் பாடிய பாடல்கள் இடம் பெற்றிருந்தன என்பது பதிற்றுப் பத்து என்னும் நூலின் பெயரால் தெரியவருகிறது. ஒவ்வொரு புலவரும் ஒவ்வோர் அரசனைப் புகழ்ந்து பத்துப் பாடல்கள் பாடியுள்ளனர். அந்தப் பாடல்கள் முதற் பத்து, இரண்டாம் பத்து, மூன்றாம் பத்து என்னும் முறையில் எண் குறியீட்டுப் பெயரால் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முதல் பத்தும் பத்தாம் பத்தும் இதுவரை கிடைக்கவில்லை. இடையிலுள்ள எட்டுப் பத்துகளே கிடைத்துள்ளன.

கிடைத்துள்ள இந்த எட்டுப்பத்துகளில் எட்டுப் புலவவர்கள் எட்டுச் சேர அரசர்களைப் பாடியுள்ளனர்.

இந்த எட்டுப் பேர்களில் ஐந்து பேர் ஒரு கால்வழியினராகவும், எஞ்சிய மூன்று பேர் மற்றொரு கால்வழியினராகவும் இருந்தவர்கள் என்னும் உண்மையைப் பதிற்றுப்பத்து நூலைத் தொகுத்த ஆசிரியரின் பதிகக் குறிப்பு வாயிலாக அறிகிறோம்.

பத்துப் புலவர்களின் பாடல்களை ஒன்றுதிரட்டிப் பதிற்றுப்பத்து என்னும் பெயருடன் நூலாக்கிய தொகுப்பாசிரியர் இன்னார் என்று தெரியவில்லை. எனினும், அந்தப் புலவரும் சங்க காலத்தவரே ஆவார். இந்தப் பதிற்றுப் பத்து நூலைச் சங்க நூல்களில் இறுதியாகத் தோன்றியவற்றுள் ஒன்று எனச் சிலர் கூறுகின்றனர். எனவே, பதிற்றுப்பத்துச் சேர அரசர்களைப் பற்றி இவர் தரும் பதிகச் செய்திகளை நாம் வரலாற்று உண்மை என்றே கொள்ள வேண்டும்.

பதிற்றுப் பத்து நூலைத் தொகுத்தவர் ஒவ்வொரு பத்துப் பாடல்களைப் பற்றியும் பதிகம் என்னும் பெயரில் சில தெளிவான உண்மைகளைத் தெரிவிக்கின்றார். இந்தத் தொகுப்பாசிரியர் ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு சிறப்புப் பெயர் இட்டுள்ளார்; இன்னின்ன சிறப்புப் பெயர் கொண்ட பாடல்கள் இன்னின்ன பத்தில் அடங்கியுள்ளன என்றும் கூறியுள்ளார். இந்தப் பத்துப் பாடல்களையும் பாடிய புலவர் இன்னார் என்பதும், அவரால் பாடப்பட்ட அந்தப் பத்து இன்ன சேர அரசனைச் சிறப்பித்துக் கூறுகிறது என்பதும், அந்தச் சேர அரசன் இன்னார்க்கு இன்ன உறவு முறையினன் என்பதும் அவரது பதிகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மற்றும் இந்தப் புலவர் இந்தச் சேர அரசனை இந்தப் பத்துப் பாடியதற்காக இன்ன பரிசு பெற்று இவ்வாறு சிறப்பிக்கப்பட்டார் என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், இந்த அரசன் இத்தனை ஆண்டுகள் அரசனாய் விளங்கினான் என்னும் செய்தியையும் குறிப்பிட்டுள்ளார். நாம் இந்தச் செய்திகளையெல்லாம் வரலாற்று உண்மைகள் என்றே கொள்ள வேண்டும்.

## உதியன் கால்வழி

பதிற்றுப் பத்தில் இரண்டு கால்வழியைச் சேர்ந்த அரசர்கள் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளனர் என்று கூறினோம். அவற்றுள் ஒன்று இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனையும், அவன் தம்பியையும், ஆண் மக்கள் மூவரையும் கொண்ட ஒரு கால்வழியாகும். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் தந்தை உதியஞ்சேரல் என்று கூறப்பட்டுள்ளான். இந்த உதியஞ்சேரலுக்கு முன்னோன் என்ற சான்றுடன் இவனது கால்வழியில் கூறத்தக்கவர் யாரும் தெரியவில்லை. ஆதலால், இந்தக் கால்வழியை நாம் உதியன் கால்வழி என்று குறிப்பிடலாம். இந்த வகையில் உதியன், உதியன் மகன் நெடுஞ்சேரலாதன், நெடுஞ் சேரலாதனின் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன், நெடுஞ்சேரலாதனின் மக்கள் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்ற முறையில் ஆறு சேர அரசர்களை நாம் அறிய முடிகிறது.

## அந்துவன் கால்வழி

மற்றொரு கால்வழி மூன்று அரசர்களைச் சிறப்பித்துப் பாடுகிறது என்று கூறினோம். இந்த மூவருள் முன்னவன் செல்வக்கடுங்கோ வாழியாதன் ஆவான். இவன் தந்தை அந்துவன் என்று கூறப்படுகிறான். எனவே, இவர்களது கால்வழியை அந்துவன் கால்வழி என்று குறிப்பிடலாம். இந்த வகையில் அந்துவன் கால்வழி அரசர்கள்

நான்குபேர் ஆவர். அந்துவன், அந்துவன் மகன் செல்வக்கடுங்கோ, செல்வக்கடுங்கோவின் மகன் பெருஞ்சேரல் இரும்பொறை மற்றும் குட்டுவன் இரும்பொறை ஆகியோரே அந்த நால்வர். இளஞ்சேரல் இரும்பொறையின் தந்தை குட்டுவன் இரும்பொறையையும் கணக்கில் சேர்த்துக்கொண்டால் இந்த மாந்தரஞ்சேரல் கால்வழி அரசர்கள் ஐவர் எனக் கொள்ளலாம்.

இந்த ஐந்து அரசர்கள் பெயரிலும் 'பொறை' என்னும் அடைமொழி உள்ளது. இதனால் இவர்களைப் 'பொறையர்குடி அரசர்கள்' என்று குறிப்பிடுதலும் உண்டு. பொறை அரசர்கள் என்று நோக்கும்போது, யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, மாந்தரன் பொறையன் கடுங்கோ முதலான அரசர்களையும் ஒன்றுசேர்ந்து எண்ணவேண்டும்.

இனி, நாம் மேலே கண்டவாறு உதியன் குடியைச் சேர்ந்த சேர அரசர்கள் ஆறு பேர், அந்துவன் குடியைச் சேர்ந்த சேர அரசர்கள் நான்குபேர், ஆக மொத்தம் பத்துச் சேர அரசர்களைச் சேர அரசர்கள் என்னும் தலைப்பின் கீழ்க் காண்கிறோம்.

இந்தப் பத்துச் சேர அரசர்களின் வரலாற்றைப் பதிற்றுப்பத்து என்னும் நூலை அடிப்படைச் சான்றாகக் கொண்டு நாம் ஆராயும்போது, புறநானூறு, அகநானூறு முதலான பிற சங்கப் பாடல்களிலிருந்தும், சங்க காலக் கல்வெட்டுக்களிலிருந்து தெரிய வரும் செய்திகளையும் ஆங்காங்கே இணைத்துக் காண்கிறோம். பின்னர், முறையே பிற நூல்களில் காணும் சேர அரசர்களையும், சேரமான் புலவர்களையும் காண்போம்.

## உதியஞ்சேரல்

உதியஞ்சேரல் (நற். 113 : 9; அகம் 65 : 5, 168 : 7, 233 : 8) செங்குட்டுவனின் பாட்டன் (பதிற்.பதி. 2 : 3). வீரமும் கொடையும் இவனது வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்றன.

கோர்த் திறன்

'நாடுகண் அகற்றிய உதியஞ்சேரல்' (அகம் 65 : 5) என்று இவன் குறிப்பிடப்படுகின்றான். நாட்டின் பரப்பை விரிவாக்கினான் என்பதே இதன் பொருளாகும். இதனால், இவன் தன் முன்னோரிடமிருந்து நாட்டுப் பகுதி ஒன்றைப் பெற்றிருந்தான் என்பது தெளிவாகிறது. இவன் முன்னோர் சேர அரசர்களாய் முடியாட்சி புரிந்து வந்தனர் என்பது விளங்குகிறது.

## பேய்க்குப் பெருஞ்சோறு

உதியஞ்சேரல் நாட்டின் பரப்பை விரிவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தான். இதனால், அவன் பகைவர்கள் காழ்ப்புணர்ச்சி கொண்டனர். 'முதியர்' என்னும் குடியினர் பாண்டியர்க்குப் பகைவர்; சேரருக்கு நண்பர் (பதிற். பதி. 3 : 4). முதியர் குதிரைப் படையில் சிறந்து விளங்கினர். இந்தக் குடியினரைப் பகைவர்கள் தாக்கினார்கள். முதியர்களில் பலர் மாண்டனர். செய்தி அறிந்த உதியஞ்சேரல் முதியர்களுக்குத் துணை வந்தான். பகைவர்கள் பலர் மாண்டனர். அவர்களின் உடல் குறுகியதும், நெடியதுமாய் வீழ்ந்து பல பேய்கள் கூட்டத்திற்குப் பெருஞ்சோறாய் (அகம் 233 : 6-10) அமைந்தன.

## கொடை நலம்

இவனைப் பாடிக் கொண்டு புலவர்கள் பலர் சென்றனர். அவர்களெல்லாம் மனம் மகிழும்படி இவன் கொடை வழங்கினான். இவனை மாமூலனார் 'உதியஞ்சேரற் பாடிச் சென்ற பரிசிலர்' (அகம் 65 : 5-6) எனவும் 'தொய்யா நல்லிசை முதியர்ப் பேணிய உதியஞ்சேரல்' (அகம் 233 : 7-8) எனவும் அவன் கொடை வழங்கிய காட்சியைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

## குழுமூர்ச் சோற்றுமடம்

குழுமூர் என்பது ஓர் ஊர். அவ்வூரில் வாழ்ந்தவர்கள் ஆடு மாடு மேய்த்து வாழும் ஆயர்கள். இவ்வூரைச் சூழ்ந்த பகுதியில் ஆங்காங்கே குன்றுகளும் நிழல் தரும் மரங்களும் உண்டு. ஆயர்கள் ஆங்காங்கே அம் மரநிழல்களில் தங்குவர். அதுவே உதியனின் சோற்றுமடமாகும் (அகம் 168 : 4 - 7). 'உதியன் அட்டில்' என்றும் இது வழங்கப்பட்டது. இதற்குக் கைம்மாறாக இவன் ஆயர்களிடம் எதையும் எதிர்பார்க்கவில்லை. இந்த மடத்தில் உணவு உண்ணும் ஒலி, அருவியில் ஒலிக்கும் ஒலியின் எதிரொலி போல் கேட்டது.

## பண்பு நலம்

இவன் குற்றமற்ற சொற்களையே பேசுவான்; உண்மையே பேசுவான். 'வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றுந் தீமை இலாத சொலல்' என்னும் குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தான் என்று கூறலாம்; கொடை வங்குதலைத் தன் கடமை என எண்ணிச் செய்தான்; கோணாத தன் நெஞ்சு விரும்பியவாறு செய்தான். நிலம், விசும்பு, காற்று, தீ, நீர் என்னும் ஐம்பெரும் பூதங்களின் இயற்கைக் குணங்களாகிய பொறை, சூழ்ச்சி, வலி, தெறல், அளி போல் இவன் தனக்குப் பகைவர்

பிழை செய்தபோது அப்பிழையைப் பொறுத்தலும், சூழ்ச்சியது அகலமும், அவரை அழித்தற்கேற்ற மனவலியும், அவ்வாற்றலால் அவரை அழித்தலும், அவர் வழிபட்டால் அவருக்குச் செய்யும் அருளும் உடையோனாவான் (புறம் 2 : 1-8).

## இசை வேட்கை

இவன் இனிய இசையுடன் முரசுகளை முழக்கி மகிழ்வது உண்டு என்பது 'இன்னிசை முரசின் உதியஞ்சேரல்' (பதிற். பதி. 2 : 2) என்று குறிப்பிடுவதால் தெரிகிறது. இவன் போர் புரியும்போது இயவர்கள் (இசைக் கருவிகள் முழங்குவோர்) ஆம்பலங் குழல்களால் ஊதினார்கள் (நற். 113 : 11).

## மனைவி மக்கள்

இவனது மனைவி நல்லினி ஆவாள். இவள் வெளியின்வேள் என்பவனின் மகள் ஆவாள். இவனுக்கும் நல்லினிக்கும் பிறந்த ஆண் மக்கள் இருவராவர். மூத்தவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்; இளையவன் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் ஆவான் (பதிற்.பதி. 2:3)

## ஒப்பு நோக்கம்

சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்னும் அரசன் ஒருவன் இருந்தான். அவன் பாரதப் போரில் இரு தரத்துப் படைகளுக்கும் சோறு வழங்கினான். அவன் வேறு, இவன் வேறு. அவனைப் பற்றிய செய்தியினைப் பிற சேர அரசர்கள் என்னும் தலைப்பின்கீழ்க் காணலாம்.

# நெடுஞ்சேரலாதன்

சங்ககாலத்தில் சேரலாதன் என்னும் பெயர் கொண்ட அரசர் நால்வர் இருந்தனர். நெடுஞ்சேரலாதன் இரண்டு பேர். இவர்கள் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன் என்போர் ஆவர். பெருஞ்சேரலாதன், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆகியோர் மற்ற இருவர். இவர்களுள் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் வரலாற்றைச் சேர அரசர்கள் எனும் இப் பகுதியின் கீழும், முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதனின் வரலாற்றைச் சேர அரசப் புலவர்கள் எனும் தலைப்பின் கீழும் காணலாம்.

நெடுஞ்சேரலாதன், சோழன் வேல்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியோடு போரிட்டு மாண்டான். பெருஞ்சேரலாதன், கரிகாற் பெருவளத்தானோடு போரிட்டு, முதுகில் காயம்பட்டதற்காகப்

போர்க்களத்திலேயே வடக்கிருந்து உயிர்நீத்தான். சேர வேந்தர்களைச் சிறப்பித்துப் பாடும் பதிற்றுப்பத்து என்னும் நூலில் நெடுஞ்சேரலாதன் இரண்டாம் பத்தில் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளான்.

## போர்த் திறம்

கடம்பறுத்தல்: அரபிக் கடலில் பல சிறு தீவுகள் உள்ளன (பதிற். 11 : 12-14, 12-14, 12 : 1-3, 17 : 4-5, 20 : 2-4). 'இருமுந்நீர்த் துருத்தி' (பதிற். 20 : 2) என இது பதிற்றுப்பத்தில் கூறப்பட்டுள்ளது. அங்குக் கடம்ப (கடப்ப) மரத்தைக் காவல் மரமாக உடைய அரசன் ஒருவன் இருந்தான். அவனைக் கடம்பன் என்றே குறிப்பிடலாம்[2] நெடுஞ்சேரலாதன் தன்னிடமிருந்த பெரும்படையைக் கடற்போரில் ஈடுபடுத்தினான் (அகம். 347 : 3-4); கடம்பனைத் தாக்கினான். நெடுஞ்சேரலாதன் கடம்பனின் படையைக் கொன்று குவித்தான். குருதி ஆறு ஓடிக் கடற்கழிகளைச் செந்நிறமாக்கியது. காவல் மரம் கடம்பு அடியோடு வெட்டி வீழ்த்தப்பட்டது. அதன் அடித்துண்டால் அக்கால வழக்கப்படி நெடுஞ்சேரலாதன் தனக்குப் போர் முரசு செய்து கொண்டான்.

கடம்பை'வெட்டி வீழ்த்தும்படி நெடுஞ்சேரலாதன் ஏவினான் என்று ஒரு பாடல் கூறுகிறது (பதிற். 11 : 12). இவனது மகன் செங்குட்டுவன் கடம்பறுத்தவன் என்று சிறப்பித்துப் பாராட்டப்படுகிறான். எனவே, நெடுஞ்சேரலாதன் இந்தப் போரில் தானே நேரில் ஈடுபடாமல் தன் மகனை அனுப்பி வெற்றிகொண்டானோ என எண்ணவேண்டியுள்ளது.

அரபிக்கடல் தீவுகள் நெடுஞ்சேரலாதனின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. நெடுஞ்சேரலாதன் அப்பகுதிகளில் வயவர்களை அமர்த்தி நாடு காவல் புரிந்துவர ஏற்பாடு செய்தான். அத்தீவுகளில் அதற்கு முன்னர் ஆட்சி புரிந்து வந்த மன்னர்கள் வயவர்களோடு போரிட்டு அவர்களை வீழ்த்தித் தம் நாடுகளைக் கவர்ந்து கொண்டனர் (பதிற். 20 : 3 - முரணியோர்). மேலும், இவர்கள் நெடுஞ்சேரலாதனுக்கு எதிராக நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் சினமுற்றுச் சேரலாதன் இப்போரில் ஈடுபட்டான்.[3]

கடற்போரில் ஈடுபட்டுக் கடப்ப மரத்தை வெட்டி வீழ்த்தியவனைச் சிலப்பதிகாரம் பல இடங்களில் குறிப்பிடுகிறது. சில இடங்களில் கடம்பு எறிந்த செயலும், இமயமலையில் வில்லைப் பொறித்த செயலும் இணைத்துப் பேசப்படுகின்றன (சிலப். 23 : 81, 29 : 1, 25 : 187, 28 : 135, 29 : உரைப்பாட்டுமடை. ஓரிடத்தில் செங்குட்டுவனை 'வாய்வாட்கோதை' என்று குறிப்பிட்டு, கடம்பு எறிந்ததும் வில் பொறித்ததும் அவனது செயல்கள் என்று கூறப்படுகின்றன (சிலப். 25 : 1-3). ஓரிடத்தில் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைக் கண்டு வாழ்த்தும் பராசரன் எனும் பார்ப்பான் கடம்பு எறிந்ததும், இமயத்தில் வில்லைப் பொறித்ததுமாகிய

செயல்களை அவனது செயல்கள் என்று கூறுவதைக் காண்கிறோம் (சிலப். 23 : 81-82). இவற்றிற்கு மாறாகக் கடம்பு எறிந்த அரசன் கண்ணகிக்குக் கல்நாட்டு விழா நடைபெற்றபோது உயிருடன் இல்லை என்று குறிப்பிடுவதையும் காண்கிறோம் (சிலப். 28 : 135).

ஓரிடத்தில் யவனரைப் பிணித்தவன் என்றும், பாரதப் போரில் சோறு வழங்கியவன் என்றும், கடம்பறுத்தவன் என்றும் மூன்று வரிப்பாடல்கள் சேரனை வாழ்த்துதல் என்னும் ஒரு பொருள்மேல் அடுக்கி வந்துள்ளன (சிலப். 29 : ஊசல்வரி; 23 : 3, 24 : 2, 25 : 1). இச் செய்தியைப் பொதுப்படையாகக் குறிப்பிடும் இடமும் உண்டு (சிலப். 29 : வள்ளைப்பாட்டு).

இவற்றையெல்லாம் வைத்துக்கொண்டு நாம் பார்க்கும்போது கடம்பு எறிந்தவன் நெடுஞ்சேரலாதன் என்பதையும், அவனது அச்செயல்களுக்கு உறுதுணையாகச் செங்குட்டுவனும், மாந்தரஞ்சேரல் இரும்பொறையும் இருந்தார்கள் என்பதையும் நாம் அறிகிறோம்.

## வன்சொல் யவனர் பிணித்தல்

கடம்பு தடிந்த போர்ச்செய்தி, நெடுஞ்சேரலாதனைச் சிறப்பிக்கும் பதிகத்தில் கூறப்படவில்லை. பதிகத்தில் யவனரைப் பிணித்ததாகக் கூறப்படும் செய்தி, பாடல்களில் கூறப்படவில்லை. எனவே, கடம்பு தடிந்தது போரின் விளைவே. 'வன்சொல் யவனர்' (பதிற். பதி. 2 : 8) என்று குறிப்பிடப்பட்டுள்ளவர் கடம்பு தடிந்த போரில் பிடிபட்ட போர்க் கைதிகள் எனலாம். இந்தப் போர்க் கைதிகளைப் பிணித்துக்கொண்டு வரும்போது அவர்களுடைய கைகளைப் பின்புறத்தில் சேர்த்துக் கட்டியும், தலையில் நெய்யை ஊற்றியும் அழைத்து வந்தனர். போர்க் கைதிகளை இவ்வாறு அழைத்து வருவது கிரேக்கர் மரபு. நெடுஞ்சேரலாதன் சார்பில் அழைத்து வந்த செங்குட்டுவன் பகைவரின் மரபுக்கு மதிப்பளித்து அழைத்துவந்தான்.[4]

பிணிக்கப்பட்ட யவனர்கள் யார் என்பதில் அறிஞர்கள் இடையே கருத்து வேறுபாடுகள் உண்டு. மேலைநாட்டுக் கடல் வாணிகராகிய யவனர்கள் என்று சிலரும், வடநாட்டில் வாழ்ந்த சாக யவனர் என்று சிலரும் கருதுகின்றனர். சாக யவனரின் கூட்டத்தார் செலாவணியில் நாட்டின் பொருளியலை வளப்படுத்திய மேலை நாட்டு வாணிகக் குழுவினராகிய யவனரைப் பிணித்தான் என்பது பொருந்தாது என்கிறார். வடநாட்டு யவனர் வடுகரைப் போன்றும். ஆரியரைப் போன்றும் நேரே தமிழகத்தில் ஊடுருவாமல் அரபிக் கடல் தீவுகளுக்குச் சென்றிருக்க மாட்டார்கள் என்பது மறுசாரார் கருத்து. இந்தக் கருத்துகள் உய்த்துணரப்பட்டவையாகத் தென்படுகின்றன.

யவனர் யாவர் என்பதை, கிடைக்கும் அடிப்படைச் சான்றுகளை வைத்துக்கொண்டு தீர்மானிப்பதே நல்லது. யவனரின் பாவை விளக்கு (நெடுநல். 101), அன்ன விளக்கு (பெரும்பாண். 316-317), கட்குடம் (புறம் 56 : 18) ஆகியவை சிறப்பு மிக்க பொருள்கள் எனப் பேசப் படுகின்றன. யவனரின் மரக்கலங்கள் முசிறித் துறைமுகத்திற்குப் பொன்னைக்கொண்டு வந்து இறக்கிவிட்டு மிளகு மூட்டைகளை ஏற்றிச் சென்றதையும் நாம் காண்கிறோம் (அகம். 149 : 9-11). இதனால் இவர்கள் பிற நாட்டிலிருந்து கடல் கடந்து வந்த வாணிகர்கள் என்பது தெளிவாகிறது. இவர்கள் புகார் நகரத்திற்கு வாணிகத்தின் பொருட்டு வந்திருந்து தங்கியிருந்ததையும் நாம் காண்கிறோம் (சிலப். 5 : 10). மதுரை நகரில் யவனர்கள் வாளைக் கையில் ஏந்திக்கொண்டு கோட்டை வாயிலில் காவல்புரிந்து வந்ததைக் காணும்பொழுது (சிலப். 14 : 66-67), யவனர்கள் சிலர் தமிழ்நாட்டிலேயே தங்கி வாழ்ந்தனர் என்பதை அறிகின்றோம். இவ்வாறு தங்கியவர்களில் புகார் நகரில் தங்கியவர் மாட மாளிகைகளில் வாழ்ந்ததையும் மதுரையில் தங்கியவர்கள் கோட்டையைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருந்ததையும் நாம் பார்க்கிறோம்.

சேர அரசன் ஒருவன் யவனர்களின் வளநாட்டை ஆண்டான் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது (சிலப். 28 - 141 - 142). இந்த அரசன் இந்த யவனர் நாட்டுடன் தென்குமரி, இமயம் ஆகிய எல்லைக்குட்பட்ட நாட்டையும் ஆண்டான் என்று அங்குக் கூறப்பட்டுள்ளது.

யவனர் நாடு தென்குமரி, இமயம் ஆகிய எல்லைகளுக்கு உட்பட்டதென்பது விளங்காத காரணத்தால் அந்தச் சேர அரசன் ஆண்ட யவனர் நாட்டையும் இதனுடன் இணைத்துக் கூற வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. அந்த யவனர் நாடு எது?

மேலே கூறியபடி தென்குமரி, இமயம் இவ்விரு எல்லைக்குட்பட்ட நாட்டை ஆண்ட சேர அரசன் நெடுஞ்சேரலாதன் (பதிற். 11 : 24). இவன் கடற்போரில் ஈடுபட்டுக் கடப்ப மரத்தை வீழ்த்தினான். கடப்ப மரம் மேற்குக் கடற்கரையை அடுத்த தீவுகளில்[5] இருந்த காவல் மரம். இந்தக் காவல் மரத்தை உடையவர்கள் அந்தத் தீவு மக்கள். மேலை நாடுகளிலிருந்து அரபிக்கடல் வழியே கலம் செலுத்தி வாணிகம் செய்து வந்த யவனர்கள் இந்த இலக்கத் தீவுகளில் தங்கினார்கள். அங்கிருந்த மக்களைத் தம் வாணிகத்திற்குத் துணையாகக் கொண்டனர்.

சேர நாட்டில் இவர்கள் செய்துவந்த வாணிகத்தில் ஏதோ ஒரு வகையில் தவறு நேர்ந்திருக்கலாம். அந்தத் தவறுக்குக் கடம்பத் தீவுகளிலிருந்த மக்களும் உடந்தையாயிருந்திருக்கலாம். அரசன், தவறினைத் திருத்த அவர்களோடு போரிட வேண்டியதாயிற்று. இந்தப் போரின் விளைவுதான் காவல் மரமாகிய கடப்பமரம் வெட்டியதும்,

அதனால் முரசு செய்துகொண்டதும், யவனரைக் கைது செய்து கொண்டு வந்ததும், பிறகு அவர்களது செல்வத்தைச் சேரநாட்டு மக்களுக்கு வழங்கியதும் ஆகிய நிகழ்ச்சிகளாகும்.

## இமயம்வரை வெற்றி

நெடுஞ்சேரலாதன் இமயமலையில் தன் சேரர்குடிச் சின்னமாகிய வில்லைப் பொறித்துவிட்டு மீண்டான் எனப் பதிகம் கூறுகிறது. பதிகம், பதிற்றுப்பத்தைத் தொகுத்தவரால் பிற்காலத்தில் உருவாக்கப்பட்டது. பாடல் தோன்றிய காலமே அந்தந்த மன்னர்களுக்குரிய காலம். இவன் காலத்தில் பாடப்பட்ட இரண்டாம் பத்துப் பாடல்களில் இமயத்தில் வில் பொறித்த செய்தி கூறப்படாமையை எண்ணவேண்டியுள்ளது.

குமட்டூர்க் கண்ணனார் நெடுஞ்சேரலாதன் மீது பத்துப் பாடல்கள் பாடிச் சிறப்பித்த காலத்தில் நெடுஞ்சேரலாதன் இமயத்தில் வில்லைப் பொறித்த நிகழ்ச்சி நடைபெறவில்லை.

இந்த நிகழ்ச்சி இவனது வரலாற்றில் மிக முக்கிய நிகழ்ச்சி யாகையால், குமட்டூர்க் கண்ணனார் பாடலில் இடம் பெறாவிட்டாலும் சேர்க்கப்பட வேண்டும் என்னும் கருத்து உடையவராய்ப் பதிற்றுப்பத்து நூலைத் தொகுத்த ஆசிரியர் தம் பதிகத்தில் சேர்த்துக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னர் யவனரைப் பிணித்த நிகழ்ச்சியை இமயத்தில் வில் பொறித்த நிகழ்ச்சிபோல் அல்லாது பாடல் பாடப்பட்ட காலத்திற்குப் பின் நடந்த நிகழ்ச்சி என்றாலும் நெடுஞ்சேரலாதன் காலத்து நிகழ்ந்தது என்று கூறினோம். அதற்கு முதன்மைக் காரணமாவது கடம்பறுத்த முக்கிய நிகழ்ச்சியானது பதிகத்தில் விடுபட்டபோதிலும், பதிகத்தில் காணப்படும் யவனரைப் பிணித்ததாகிய தொடர் நிகழ்ச்சியில் வேறு வகையில் பதிகத்தில் கூறப்பட்டுள்ளது என்று கொண்டதே ஆகும்.

இமயம் நோக்கிச் சென்றபோதும், அங்கிருந்து தன் நாட்டை நோக்கி மீண்டபோதும் நெடுஞ்சேரலாதன் பல மன்னர்களை வென்றான். இந்த வெற்றிகளில் ஆரியரை அடிபணியும்படி செய்த செயல் பதிகத்தில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. இந்த வெற்றிச் செய்திகள் பதிற்றுப் பத்துப் பாடல்களிலும் (பதிற். 11 : 23) கூறப்பட்டுள்ளன.

இவனது வடநாட்டுப் போரில் பல அரசர்களை வென்றான்; ஆயினும் அவர்களது நாடுகளைக் கைப்பற்றிக் கொள்ளவில்லை. இதனைச் சமுத்திரகுப்தனின் தென்னிந்தியப் படையெடுப்பிற்கு ஒப்புமையாகக் காட்டலாம். இமயம் சென்ற வழியில் சிலர் நெடுஞ்சேரலாதனைவிட அவர்களது அரசர்கள் மேம்பட்டவர் எனப் புகழ்ந்து கூறினர் (பதிற். 11 : 23- 25). அவர்களது பேராற்றல் அழியும்படி வென்றான். இவ்வாறு புகழ்ந்து கூறியதால் பேராற்றல் அழிக்கப்பட்டவரே ஆரியர். இவனது

இமயப் படையெழுச்சி வடநாட்டு அரசர்களின் வரலாற்றில் எங்கும் காணப்படாமைக்கு இதுவே காரணமாகும்.

இமயத்தில் வில்லைப் பொறித்தான் என்று கூறும் பதிகம் அப்பகுதிகளில் தமிழகத்தின் பெயர் விளங்கும்படி தன் கோலை நிலை நாட்டினான் என்றும் கூறுகிறது ('தமிழகம் விளங்கத் தன் கோல் நிறீஇ' – பதிற். பதி. 2 : 5 - 6). கோலை நிலைநாட்டினான் என்றால் ஆட்சியை நிலைநாட்டினான் என்பது பொருள். தமிழ் நாட்டு வரலாற்றில் ஆட்சியை நிலைநாட்டுதல் என்பது அரசாளுதலை மட்டும் குறிக்கும் சொல் அன்று. பிறர் பணிந்து கொடுத்துப் பின்னர் மீண்டாலும் திறை தந்த நாடு, திறை பெற்ற மன்னனின் ஆட்சிக்குக் கீழ் இருந்ததாகவே கருதப்படும் (பதிற். பதி. 2 : 10-12).[4]

இந்த வகையில் நெடுஞ்சேரலாதன் இமயமலைப் பகுதியில் ஆட்சியை நிலைநாட்டினான் என்று பதிகம் கூறுவதாவது, இமயம் முதல் குமரி வரை வென்றான் (பதிற். 11 : 23-24) என்று பொருளாகும். எல்லை காணமுடியாத அளவுக்கு இவன் நாடு விரிந்தது (பதிற். 17 : 10 -15) என்ற பாடற் கூற்றுகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய உண்மைகளேயாகும்.

## நெடுஞ்சேரலாதனின் போர்முறைச் செய்திகள்

'கூற்று வெகுண்டுவரினும் மாறாதவன்' (பதிற். 14 : 10) என்றும், 'பகைவர் உள்ளத்தை வருத்தும் போர்ச் செயல்களைச் செய்பவன் ('அணங்குடை நோன்றாள் - பதிற். பதி. 2 : 12) என்றும் வரும் செய்திகளால் இவனது பேராற்றலை நன்கு உணர்கின்றோம்.

இவனும், இவனது படைவீரர்களும் எழுமரம் போன்ற உறுதியான நெஞ்செலும்பை உடையவர்கள் ('எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலம்' – பதிற். 14 : 11, 16 : 17); முறுக்கான உடற்கட்டு உடையவர்கள் ('வயவர்' – பதிற். 12-1, 19 : 7, 'வயவர் வேந்து' – பதிற். 15 : 21); இவனது படை வரிசை வரிசையாக வந்தது ('போரடு தானை' – பதிற். 11 : 16; 'நிரையவெள்ளம்' – பதிற். 15 : 4). நெடுஞ்சேரலாதன் தன் மார்பில் பச்சை நிறக் கற்கள் பதித்த அணிகலன்களை அணிந்திருந்தான் ('பசும்பூண்மார்பன்' – பதிற். 17 : 14). நெடுஞ்சேரலாதன் யானைமீதேறிப் போர்க்களம் சென்றான் ('போர்வல்யானைச் சேரலாதன்' – பதிற். 15 : 23, 11 : 14 - 16). அப்போது அவன் படைப் பிரிவுகளின் கண்களாக விளங்கினான் ('புரையோர் உண்கண்' – பதிற். 16 : 18). படைகளைத் தழுவிச் செல்லும் முறையில் படையின் கவசமாக விளங்கினான் ('சான்றோர் மெய்ம்மறை' – பதிற். 14 : 12). வெற்றிக்கொடி நாட்டும் படையை ஏராகக் கொண்டு இவன் பகைவர்களாகிய நிலத்தை உழுபவன் ('படையே ருழவ பாடினி வேந்தே' – பதிற். 14 : 17). இவ்வகைச்

செய்திகள் எல்லாம் இவனது படை எழுச்சி நிலையைக் காட்டுகின்றன. படையில் இருந்த இயவர்கள், உலகமெல்லாம் பாதுகாப்புக்காக இவனுடைய குடை நிழலின் கீழ் வரவேண்டும் என்று கூறி வெற்றி முரசினை முழங்கினர் (பதிற். 17 : 7 - 14).

இவன் படையெடுத்துச் சென்றபோது கூளியர்கள் காட்டுப் பாதைகளில் படைசெல்ல வழி அமைத்துக்கொடுத்தனர். இதற்கு மாறாக நெடுஞ்சேரலாதன் வெற்றிபெற்ற நாடுகளில் உணவுப் பொருள்களைக் கொள்ளையடித்துக் கொண்டனர். வயவர்கள் தம் வேல்களில் இருந்த புலித்தோல் உறைகளை நீக்கிவிட்டு ஏந்திச் சென்றனர். முரசு முழக்குவோர் குருதி பாயும் போர்க்களத்தைக் காணும் விருப்பத்தோடு செந்தினையில் குருதியைக் கலந்து தூவிப் போர் முரசை முழக்கினர். இவனது படையினர் போருக்கெழுந்த நாள் முதல் போர் முடியும் நாள் வரை தம் போர் உடைகளைக் களைந்ததே இல்லை (பதிற். 19 : 1-10). இவ்வாறு இவனது படையெடுப்பு நிகழ்ந்தது.

நெடுஞ்சேரலாதன் தன் போர்ப்பாசறையில் நீண்ட நாள் தங்கினான் (பதிற். 16 : 8-9). ஓர் ஆண்டுக்குமேல் தொடர்ச்சியாகத் தங்கியதும் உண்டு (பதிற். 15 : 1-2).

போரில் இவன் பகைவர்களது மதில்களையும் கதவுகளையும் அழித்தான் (பதிற். 16 : 4-5). அவர்களது ஊர்களைத் தீக்கிரையாக்கினான் (பதிற். 15 : 2). வளமுடன் விளங்கிய பகைவரது நாடுகளும் இவனை எதிர்த்தமையால் அழிந்து தம் பொலிவை இழந்துபோயின (பதிற். 13 : 10-13, 15 : 7, 19 : 16-17). அரிமாக்கள் நடமாடும் இடங்களில் பிற விலங்குகள் தலைகாட்டாமைபோல நெடுஞ்சேரலாதன் தோன்றிய நாடுகளில் மன்னர்கள் ஒடுங்கினர் (பதிற். 12 : 5-8).

## தும்பைப் பகைவரை வெல்லுதல்

வடநாட்டில் இவனை எதிர்த்துத் தாக்கும் மன்னர்கள் இல்லை என்று கூறினோம். தமிழ்நாட்டில் இத்தகைய நிலை இல்லை. இவன் போர் தொடுக்காமல் இருந்தபோதே இவனைச் சில அரசர்கள் இவனது நாட்டை அடையக் கருதிப் போர் தொடுத்தனர் ('தும்பைப் பகைவர்' – பதிற். 14 : 8). அவர்களை எதிர்த்துப் போரிட்டு நெடுஞ்சேரலாதன் அழித்தான் (பதிற். 14 : 8-9, 15 : 5).[7] இது தற்காப்புப் போர் ஆகும். இவ்வாறு புகழ் நாட்டும் போர்களிலும் தற்காப்புப் போர்களிலும் ஈடுபட்டு வெற்றி பெற்றான்.

தமிழ்நாட்டு அரசர்களை வலியச் சென்று தாக்கும் செயலை இவன் செய்யவில்லை. தமிழ்நாட்டு அரசர்கள் யாராக இருந்தபோதிலும் தன்னைச் சேர்ந்தவர்கள் என்றே இவன் கருதினான். தன்னை வலியவந்து

எதிர்த்த வடநாட்டு அரசர்களைத்தாம் இவன் பகைவர்களாகக் கருதினான்; தமிழ்நாட்டு அரசர்கள் வலிய வந்து எதிர்த்தாலும் இவன் பகைவர்களாகக் கருதவில்லை. இவனது உணர்வை அறிந்திருந்த பதிற்றுப்பத்துத் தொகுப்பாசிரியர் வடநாட்டில் இவன் சேரநாட்டுப் புகழ் விளங்கும்படி செய்தான் என்று கூறாமல் தமிழகத்தின் புகழ் விளங்கும்படி செய்தான் எனக் கூறியுள்ளார்.

இவன் இமயத்தில் வில்லைப் பொறிக்கும்போது புலியையும் கெண்டையையும் சேர்த்துப் பொறித்ததும் உண்டு (சிலப். 29 ஊசல்வரி, 25 : 2).

இவனது இந்த ஒருமைப்பாட்டு உணர்வுகள் போற்றுதலுக்கு உரியவையாகும்.

## போர்ப்புறம் வேற்போர்

நெடுஞ்சேரலாதன் சேரநாட்டில் இருந்துகொண்டு ஆட்சி புரிந்து வருகையில் கொங்குநாட்டுக் கருவூரைத் தலைநகராகக் கொண்டு அந்துவஞ்சேரல் இரும்பொறை ஆட்சி செலுத்தி வந்தான். இவர்கள் காலத்தில் சோழநாட்டை ஆண்டுவந்த வேந்தன் வேல்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி என்றும் பெருவிறற்கிள்ளி என்றும் அழைக்கப்பட்டான்.

நெடுஞ்சேரலாதனுக்கும், இந்தச் சோழ அரசனுக்கும் போர் மூண்டது. அந்தப் போரானது 'போர்' (அகம் 326 : 10-11) என்னுமிடத்தில் நடைபெற்றது. சோழன் அவனைப் 'போர்' என்ற நகரத்திற்கு வெளியே எதிர்த்துப் போராடினான். போரில் இருதிறத்துப் படைகளும் அழிந்தன. இறுதியில் வேந்தர் இருவரும் நேரில் வேற்போரில் ஈடுபட்டனர். கிள்ளியானவன் வேற்போரில் வல்லவன் என்பது அவனது பெயரிலேயே விளங்கும். இருபெருவேந்தரும் போரில் சாய்ந்தனர் (புறம் 62 : 7-8, 63 : 10). நெடுஞ்சேரலாதன் உயிர் நீங்குகின்ற நிலையில் நெடுநேரம் போர்க்களத்திலேயே கிடந்தான். அப்போது கழாத்தலையார் என்னும் புலவர் அவனைக் கண்டு பாடி அவனது கழுத்தில் இருந்த ஆரத்தைப் பரிசிலாக் கேட்டார். அவனும் வழங்கினான்; பின்னர் மாண்டான்.

இவனுக்குப் பின் சேர நாட்டின் தலைமைப் பொறுப்பினைச் செங்குட்டுவன் ஏற்றான் என்பதைச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் வரலாறு உணர்த்துகிறது.

## கொடைத் தன்மை

இவன் சிறந்த வள்ளல் ஆவான். இவன் நாட்டில் பருவமழை பொய்த்தல் இல்லை. அப்பருவமழையே தவறிவிட்டாலும் பரிசிலர்

விரும்பி வந்த பொருள்களை இவன் அளிப்பதில் தவறியதில்லை (பதிற். 18 : 10-13, 20 : 22-24). இவனது கைகள் பிறருக்குக் கொடுத்துக்கொடுத்து மிகுந்த வளமை பெற்றிருந்தன (பதிற். 15 : 36-37). இவனது கொடைத்தன்மையைப் பகைவர்களும் புகழ்ந்தனர் (பதிற். 20 : 25-28).

இவன் கொடையில் கர்ணனைப் போன்றவன் என்று குமட்டூர்க் கண்ணனார் இவனை ஒப்புமைப்படுத்திப் பாடியுள்ளார் (பதிற். 14 : 5 - 7). இவன் உயிர் நீங்கும் நிலையில் போர்க்களத்தில் கிடந்திட்டபோது இவனைக் கண்டு பாடிய கழாத்தலையார் இவனது கழுத்தில் இருந்த மணிமாலையைப் பரிசிலாகக் கேட்டுப் பெற்றார். கண்ணனானவன் கர்ணனிடம் அவன் செய்த புண்ணியங்களை யெல்லாம் தானமாகக் கேட்டு அவன் இறக்கும் தறுவாயில் இருந்தபோது பெற்ற நிகழ்ச்சி இதனோடு பொருத்தமாய் அமைந்து விட்டது. முன்னர்ப் புலவர் பாடிய ஒப்புமையானது பின்னர் உண்மை நிகழ்ச்சியாய் அமைந்துள்ளது.

பாடினி (பதிற். 14 : 17, 17 : 14), விறலியர் (பதிற். 18 : 6), புலவர், வயிரியர், ஓவியர், சிற்பத்தொழில்களில் வல்ல கண்ணுளர் (பதிற். 20 : 15-17) முதலான பலருக்கு இவன் கொடை வழங்கினான். பரிசில்பெற வந்தவர் பெறத் தகுதியற்றவராய் விளங்கினாலும் அவர்களது அத்தன்மையைப் புறத்தார் உணராவண்ணம் மறைத்துவிட்டு நல்கினான் (பதிற். 20 : 23-24).

மா, களிறு, தேர் ஆகியவற்றைப் பரிசிலாகக் கொடுத்தான் (பதிற். 20 : 16). பகைவர்களிடம் பெற்ற உயர்ந்த அணிகலன்களைப் பரிசிலாகக் கொடுத்தான் (பதிற். பதி. 2 : 9-10). உணவு, உடை முதலானவற்றால் மகிழ்ந்திருக்கும் தன் மகிழ்ச்சியான வாழ்வையே பிறருக்கு அளித்தான் (பதிற். 12 : 25).[8] மிளை, அகழி, மதில், நிலைவாயில், ஆரெயில் முதலானவற்றால் இவனது அரண்மனை, பகைவரால் உள்ளே நுழைய முடியாத அளவு அமைந்திருந்தது; ஆனால் பரிசிலர்கள் எளிதாக நுழைவதாய் அமைந்திருந்தது. பரிசிலர்கள் உள்ளே நுழைந்து உண்டு, உடுத்து, நுகர்ந்து, மகிழ்ந்து இருந்தனர். இவ்வாறு பரிசிலர்கள் இருந்ததைப் பார்த்துப் பெருமிதத்தோடு மலரும் மார்பினனாய் அவன் விளங்கினான் (பதிற். 20 : 21 – 'அட்டுமலர் மார்பன்'). இத்தகைய வள்ளன்மையால் இவனைப் பரிசிலர்களின் செல்வம் என்றே அழைத்தனர் (பதிற். 15 : 21 – 'பரிசிலர் வெறுக்கை').

இவன் தன்மீது பத்துப் பாடல்கள் பாடிச் சிறப்பித்த குமட்டூர்க் கண்ணனார் என்னும் அந்தணப் புலவருக்குத் தான் வெற்றி பெற்ற உம்பற்காட்டுப் பகுதியில் ஐந்நூறு ஊர்களைப் பிரமதேயமாகக் கொடுத்தான். மேலும், அவரது வாழ்க்கைச் செலவுக்காகத் தனது எஞ்சிய ஆட்சிக் காலம் முழுவதும் தான் வென்ற தென்னாட்டிலிருந்து வரும் வருவாயில் சரிபாதியும் கொடுத்தான்.

## பண்பு நலம்

பகைவர்கள் பெரிய தவறைச் செய்திருந்தாலும் அவர்கள் பணிந்து திறை தந்தால், திறையை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு அருள்புரியும் பண்பு நலம் உடையவன் (பதிற். 17 : 2-3). நிலத்தைப் போல் பொறுமையுடையவன்; நீரைப் போல் சினம் ஆறும் தன்மை உடையவன்; காற்றைப் போல் எல்லோர் உள்ளங்களிலும் நிறைந்திருப்பவன்; வெட்ட வெளியைப் போல் பரந்த உள்ளம் உடையவன். இந்தப் பண்புகளில் இவன் அந்த நான்கு பூதங்களைப் போல் அளக்க முடியாத தன்மையை உடையவன் (பதிற். 14 : 1-2). நாள், கோள், திங்கள், ஞாயிறு, அழல் ஆகிய ஐவகை ஒளிப்பிழம்புகள் ஒருங்கிணைந்தால் தோன்றும் ஒளிபோல இவனது பொலிவும் புகழும் விளங்கின (பதிற். 14 : 3-4). இவனது புகழ் திருமாலின் புகழ் போலப் பரவியிருந்தது (பதிற். 15 : 39). இவனது ஆட்சிக்குக் கீழ் இருந்த நாடுகள் வளமுடனும், இவனை எதிர்த்த நாடுகளின் வளமை பாழடைந்தும் காணப்பட்டன (பதிற். 13 : 19-28, 15 : 1-8).

## இசை வேட்கை

இவனது தந்தை உதியஞ்சேரல் இன்னிசை முழக்குடன் மகிழ்வாக வாழ்ந்தவன் (பதிற். பதி. 2 : 2). இவனும் மகிழ்ச்சியால் முழக்கும் முரசொலியைக் கேட்டுத் தன்னையே பரிசிலாகக் கொடுத்தான் (பதிற். 15 : 21). இதனால் தந்தைக்கும் மகனுக்கும் இசையின் மீது இருந்த ஈடுபாடு நன்கு விளங்கும்.

## பெற்றோர்

இவனது முன்னோர்கள் நாவலந் தண்பொழில் முழுவதும் ஆட்சிபுரிந்து புகழுடன் விளங்கினர் (பதிற். 14 : 19-20). இவனது தந்தை அந்துவஞ்சேரலாகும்; தாயார் நல்லினி ஆகும்.

பெற்றோர்

இவனது முன்னோர்கள் நாவந் தண்பொழில் முழுவதும் ஆட்சிபுரிந்து புகழுடன் விளங்கினர் (பதிற். 14 : 19-20). இவனது தந்தை அந்துவஞ்சேரலாகும்; தாயார் நல்லினி ஆகும்.

## மனைவியின் மாண்புகள்

இவனது மனைவி சிறந்த அழகியாவாள் (பதிற். 14 : 13-15). அடக்கமான தோற்றப் பொலிவினை உடையவள் (பதிற். 16-10 – 'அடங்கிய சாயல்'). பெரிய சான்றாண்மைப் பண்புகள் அவளிடம்

12964

அமையப் பெற்றன; நாணம் மிக்கவள் (பதிற். 19 : 14); கணவனிடம் ஊடல் கொள்ளாத ஆறிய கற்பினை உடையவளாக விளங்கினாள். கணவனொடு ஊடிய காலத்தும் இனிய சொற்களையே கூறுவாள் (பதிற். 16 : 10). அவளே வேளாவிக் கோமான் பதுமன் மகளாவாள் (பதிற். பதி. 4 : 2-3, 6 : 1-2). இவள் பெற்ற பிள்ளைகள் 4, ஆறாம் பத்தில் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளனர்.

'சோழன் மணக்கிள்ளி'யின் மகள் நற்சோணை என்னும் பெயருடைய மற்றொரு பெண்ணை இவன் மணந்தான் (பதிற். 5 : 3). இவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் இருவர். மூத்தவன் பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தின் தலைவன். இளையவன் சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகள்.

## காலம்

இவன் 58 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான். இவனைப் பாடியதற்குப் பரிசாக 38 ஆண்டுகள் தென்னாட்டில் இருந்து வரும் வருவாயில் குமட்டூர்க் கண்ணனார் பங்கு பெற்றார். இதனை அவன் தனது ஆட்சிக் காலம் முடியும் வரையில் தந்திருக்க வேண்டும். எனவே, இரண்டாம் பத்தானது இவனது இருபதாம் ஆட்சியாண்டில் பாடப்பட்டது எனலாம். இதற்குப் பின்னர்தான் இவன் செங்குட்டுவன் தாயை மணந்திருக்க வேண்டும். திருமணமான ஓராண்டில் செங்குட்டுவன் பிறந்து அவனது இருபதாம் வயதில் இளவரசுப் பட்டம் கட்டப்பட்டான் என்றால், செங்குட்டுவன் அரியணை ஏறியது.[9] நெடுஞ்சேரலாதனது 42ஆம் ஆட்சியாண்டில் எனக் கொள்ளலாம். இதனை ஐந்தாண்டுக் குறியீட்டுக்குச் சரி செய்து 40ஆம் ஆட்சியாண்டு எனக் குறிப்பிடலாம்.

## சிறப்புப் பெயர்கள்

மாமூலனார் இவனைச் 'சேரலாதன்' என்றே குறிப்பிடுகின்றார். பதிற்றுப்பத்துப் பதிகம் மூன்று இவனை 'இமயவரம்பன்' என்று மட்டும் குறிக்கிறது. குடக்கோ (புறம். 62, 63, 368; பதிற். பதி. 6 : 1), குடவர் கோமான் (பதிற். பதி. 5 : 2) என்னும் அடைமொழிகள் இவனது ஆட்சியானது தொடக்க நிலையில் குடநாட்டில் தொடங்கியதைத் தெளிவுறுத்துகின்றன. இமயவரம்பன் (பதிற். பதி. 2 : 13) என்றால் இமயமலையினை வரம்பாக வைத்து ஆண்டவன் என்பது பொருளாகும்.

இவன் 'ஆராத் திருவின் சேரலாதன்' (பதிற். பதி. 4 : 1) என்றும் குறிப்பிடப்படுகின்றான். இது இவனது செல்வ வளத்தை வெளிப்படுத்துகின்றது.

# பல்யானைச் செல்கெழு குட்டுவன்

இவன், பாலை பாடிய கௌதமனார் என்னும் பார்ப்பனப் புலவரால் சிறப்பித்து இரண்டாம் பத்தில் பாடப்பெற்றவன். பாலை என்னும் இவனது ஊர் இப்போதுள்ள பாலக்காடு என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

இவன் நெடுஞ்சேரலாதனுக்குத் தம்பி; செங்குட்டுவனுக்குச் சிறிய தந்தையாவான்.

## பூழியர்கோ

நெடுஞ்சேரலாதன் சேரநாட்டு முடிவேந்தனாய் ஆண்டபோது இவன் பூழிநாட்டில் இருந்துகொண்டு நாடுகாவல் புரிந்து வந்தான். பின்னர்ப் பூமி நாட்டை ஆண்டுகொண்டிருந்ததால் 'பூழியர்கோ' (பதிற். 21 : 23) என்று கூறப்பட்டான்.

பூழிநாடானது செருப்பு மலையைத் தன்னகத்தே கொண்டது. செருப்பு மலையில் மணிக் கற்கள் கிடைத்தன. கோவலர் தம் ஆடுமாடுகளைப் புல்வெளிகளில் மேய விட்டுவிட்டு இச்செருப்பு மலையில் கிடைத்த மணிக் கற்களைத் திரட்டி விற்று வாணிகம் செய்து வந்தனர். அக்கால மக்கள் அந்த மணிக் கற்கள் பதித்த அணிகலன்களை விரும்பி அணிந்து வந்தனர் (பதிற். 20 : 23). இந்தப் பூழி நாட்டுக் கோவலர்களுக்கு முல்லைப்பூ குடிப் பூவாகும்.

## மழவர் மெய்ம்மறை

மழவர்கள் கொங்குநாட்டு மக்கள். அவர்களுள் ஒரு சாரார் குவியற் கண்ணியைத் தம் முடியில் அடையாளச் சின்னமாகக் கொண்டிருந்தனர். அவர்கள் சேரர்களின் துணைவர்களாய் விளங்கினர். மழவரின் மற்றொரு சாரார் பாண்டியனைச் சார்ந்திருந்தனர். பல்யானைக் குட்டுவன் குவியற் கண்ணி மழவரின் பாதுகாவலனாகக் கவசம் போல் விளங்கினான் (பதிற். 21 : 24).

## அயிரைப் பொருநன்

ஓர் ஊரில் தங்கியிருந்து ஆண்ட அரசனை அவ்வூரின் பொருநன் எனக் குறிப்பிடுவது வழக்கம். அயிரை மலையிலிருந்த கொற்றவை சேரர்களின் குடித்தெய்வம். இதனை இவன் வழிபட்டான்.[10] இவன் பல நாள்கள் வழிபாட்டில் ஈடுபட்டு அயிரை மலையில் தங்கியிருந்தான். அதனால், 'அயிரைப் பொருநன்' (பதிற். 21 : 29) என்னும் சிறப்பினைப் பெற்றான்.

## உம்பற் காட்டு வெற்றி

'உம்பல்' என்னும் சொல்லுக்கு யானை என்னும் பொருள் உண்டு. எனவே, உம்பற்காடு என்பது ஆனைக்காடு என்று பொருள்படும். ஆனைமலைப் பகுதியில் இருந்த காடு இப்பெயர் பெற்றிருந்தது. ஆனைமலைக்கு வடக்கில் இருந்தது பூழிநாடாகும். உம்பற்காடானது அப்போது இவனது ஆட்சியின் கீழ் இருந்திருக்கவேண்டும். பூழி நாட்டில் ஆண்ட இவன் உம்பற்காட்டின் மீது படையெடுத்துச் சென்று, வென்று தன் ஆட்சியின் கீழ்க்கொண்டுவந்தான் (பதிற். பதி. 3 : 2).

## அகப்பாக் கோட்டையை அழித்தல்

பாகுபடி என்பது ஊரின் பெயர்.[11] இந்த ஊர், பெருமலைகளுக்கு இடையே இருந்ததால் (பதிற். 22 : 26 – 'அண்ணலம் பெருங்கோட்டகப்பா வெறிந்த') அகப்பாக்குடி எனப்பட்டு, 'அகப்பா' என மருவியும் வழங்கப்பட்டது. உம்பற்காட்டைத் தன் ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்த பல்யானைக் குட்டுவன் அகப்பாக் கோட்டையைத் தாக்கி வென்று தீக்கிரையாக்கினான் (பதிற். பதி. 3 : 3). இக்கோட்டையைக் கைப்பற்றவேண்டும் என்பதே அவன் நோக்கம் (பதிற். 22 : 27 – 'உழிஞைசூடி').

அகப்பாக் கோட்டை மிக வலிமையானது. உயர்ந்த மதிற்சுவர்; அதில் வரிசைவரிசையாகப் பதுங்குமிடங்கள்; மதிற்சுவரை அடுத்து ஆழமான அகழி; அகழியைச் சுற்றிக் காவற் காடு.

கோட்டைக்குள்ளே நுழைய உயர்ந்த நிலைவாயில்; வாயிற் கதவைச் சாத்தித் தாழிடுவதற்காக வில்விசை முறைப்படி மாட்டித் தொங்கும்படி அமைக்கப்பட்ட கணையமரம்; வாயிலுக்கு முன் அகழியைக் கடக்கும் மரப்பாலம்; பாலத்திற்கு வெளியே காவற் காட்டிலும் இருந்துகொண்டு கோட்டையைக் காக்கும் நாற்படைகள். இத்தனை பாதுகாவலையும் கொண்டது அகப்பாக் கோட்டை (பதிற். 22 : 26) ஆகும்.

அகப்பாக் கோட்டையைச் சூழ்ந்திருந்த மலை தலைமலை ஆகும் (பதிற். 22 : 26–'அண்ணலம் பெருங்கோடு').[12] இப்பகுதியில் முதியர் என்னும் மக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் பாண்டியரின் ஆட்சியை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தனர்.[13] பல்யானைக் குட்டுவன் முதியரைத் தம் பக்கம் தழுவிக்கொண்டான் (பதிற். பதி. 3 : 4). அவர்களுக்காகப் போராடி அகப்பாவில் இருந்த பாண்டிய ஆட்சியாளரை அழித்தான்.

உம்பற்காட்டு வெற்றியாலும் அகப்பா வெற்றியாலும் தனக்குக் கிடைத்த பரந்த நாட்டைப் பகுத்துக் கொடுத்தான் (பதிற். பதி. 3 : 2-3).

அப்பகுதியில் உம்பற்காட்டு ஆட்சி, அவனது அண்ணன் மகன் செங்குட்டுவனது நேரடிப் பார்வையில் விடப்பட்டது. அகப்பா முதியர்க்கு விடப்பட்டது.

அகப்பா வெற்றி, பாண்டியரின் வேற்படைக்குப் பேரச்சத்தை உண்டுபண்ணியது. கொங்குநாட்டைத் தன் ஆட்சியில் கொண்டுவந்த படைக்கே இத்தகைய அச்சத்தை உண்டாக்கியது.[14]

## சோழ பாண்டியரின் தோல்வி

இவனது போர் வலிமையையும் அதனால் பெற்ற புகழையும் அறியாத சோழரும் பாண்டியரும் சில வேளிர் மன்னர்களும் ஒன்று திரண்டு வந்து இவனைத் தாக்கினார்கள். இவனும் எதிர்த்துத் தாக்கினான். போரில் முதன் முதலில் பகைவரைத் தாக்கும் படை தார்ப்படை எனப்படும் (பதிற். 22 : 16). வேந்தர்களின் இந்தத் தார்ப்படை பல்யானைச் செல்கெழு குட்டுவனின் தாக்குதலால் அழிவுற்றது (பதிற். 23 : 16 -17; 30 : 30).[15] இந்த நிலையில் எஞ்சிய படையையும் தாக்கும் பொருட்டு இவன் தன் படைவீரர்களுக்குப் பெருஞ்சோறு வழங்கிப் போர்விழா நடத்தினான். அப்போது போர்வீரர்கள் வஞ்சினங் கூறலாகிய மந்திரம் சொல்லிக் கடவுளை (அயிரைமலைக் கொற்றவை) வழிபட்டனர். பகைவரின் தார்ப்படை தாக்கியபோது தாம் பெற்ற விழுப்புண்களில் வழியும் குருதியைத் தூவிப் படையின் வெற்றி முரசை முழக்கினர். இந்த முரசொலியின் எழுச்சி மிக்க ஒலியைக் கேட்டு இவனது எதிரிப் படையினர் காடுகளிலும், கடற்பகுதிகளிலும் ஒடி ஒளிந்துகொண்டனர் (பதிற். 30 : 31); எனவே, தொடர்ந்து போரிடாமல் போர்க்களத்தை விட்டு நீங்கினர். இதன் விளைவால் எதிரியின் நாடுகளில் சில பகுதிகள் அழிவைப் பெற்றன (பதிற். 23 : 20 - 25).

## போர் முறை

பல்யானைச் செல்கெழு குட்டுவன் போர்க் காலங்களில் படை வீரர்கள் தங்கியிருந்த அறைகளிலேயே உடன் தங்கியிருந்து ஊக்கமூட்டினான் (பதிற். 24 : 12-14). குதிரைகள் பூட்டிய தேரில் சென்று போரிட்டான் (பதிற். 25 : 1). வீரர்கள் தம் வேல்களில் இருந்த புலித்தோல் உறைகளை நீக்கிவிட்டு வெற்றிக்கு அறிகுறியாக வலத் தோளால் அவற்றை உயர்த்தியபோதே வெற்றி மாலையை இவன் சூடிக் கொண்டான். அவனே அவர்களின் படைத் தலைவனாக விளங்கினான் (பதிற். 24 : 5).

'பெரும்படைத் தலைவ', 'வயவர்', 'இருக்கை இயலறைக் குருசில்' என்னும் தொடர்களைக் கொண்டு இவன் பெரும் படைத்

தலைவனாகவே விளங்கினான் என்று கருத இடமுண்டு; அரசனாக விளங்கவில்லை எனவும் எண்ணலாம். ஆனால், 'கடுஞ்சினவேந்து'[16] என இவன் கூறப்படுவதால் இவன் வேந்தனாகவும் விளங்கினான் என்பது பெறப்படுகிறது.

## இரு கடல் நீரில் ஒரு பகல் ஆடல்

இரண்டாம் பத்தில், இமயத்தில் வில் பொறித்த நிகழ்ச்சி குறிப்பிடப்படாமல் அதன் பதிகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல மூன்றாம் பத்தில் 'இருகடல் நீரும் ஒருபகல் ஆடிய' நிகழ்ச்சி (பதிற். பதி. 3 : 7) அதன் பதிகத்தில் மட்டும் கூறப்பட்டுள்ளது. மற்றும் இவன் நெடும்பாரதாயனார் வழிநின்று காடுபோந்த நிகழ்ச்சியும் இவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இந்த நிகழ்ச்சிகள் மூன்றாம் பதிகம் பாடப்பட்ட பின் நிகழ்ந்தவை எனலாம். இவன் 25 ஆண்டுகள் அரியணையில் வீற்றிருந்தான். இம் மூன்றாம் பத்தானது இவனது இருபதாம் ஆண்டில் பாடப்பட்டதாகவும், அண்ணனுக்குப் பின் தம்பி, 5 ஆண்டுகள் கழித்து அரியணையேறினான் என்றும் கொண்டால், இரண்டாம் பத்துப் பாடப்பட்ட பின் சுமார் ஐந்து ஆண்டுகள் கழித்து மூன்றாம் பத்துப் பாடியிருக்க வேண்டும் என்பது தெரிய வரும். அப்போது அவனைப் பாடிய புலவர் விருப்பப்படி பத்து வேள்விகள் செய்துவிட்டுத் தொடர்ந்து ஆண்டு வரும்போது 'இருகடல் நீரும் ஒருபகல் ஆடிய' நிகழ்ச்சி நடைபெற்றிருக்க வேண்டும்.

தன் யானைப் படையின் ஒரு பகுதியை வங்கக் கடலுக்கும் மற்றொரு பகுதியை அரபிக் கடலுக்கும் அனுப்பிக் கடல் நீரைக் கொண்டுவரச் செய்தான். அந்த இரண்டு கடல் நீரையும் ஒரே நாளில் ஊற்றிக்கொண்டு திருமுழுக்காடிய பின் இவன் காடு போந்தான்.

## பகைவர் நாட்டு அழிவு – தன் நாட்டு வளம்

இவனது ஆட்சிக்குக் கீழிருந்த நாட்டில் வெள்ள நீர் மோதிக் கேட்கும் பூசல் ஒலி அல்லாது மக்கள் கொடுமைகளுக்குள்ளாகி ஓலமிட்டு அழும் பூசல் ஒலி கேட்டதே இல்லையாம் (பதிற். 27 : 13 - 15). இவனை எதிர்த்த பகைவர்களது நாடுகள் வளம் நிறைந்தவையாய் இருந்து, இவனால் அழிக்கப்பட்டுப் பொலிவிழந்து காணப்பட்டனவாம் (பதிற். 22 : 38, 23 : 13,25 : 9,27 : 1,29 : 10). முருகன் என்னும் மன்னனின் சீற்றத்திற்குள்ளாகிய உரும்பில் கூற்றம் அழிந்ததுபோல அவை அழிந்துபோயினவாம்.[17]

## கொடைத் தன்மை

மழை பருவத்தில் பெய்ய மறந்தாலும் இவன் வந்தவர்களுக் கெல்லாம் உணவளித்தான் (பதிற். 24 : 28-30). மரபுக் கடவுளைப்

பேணுவதற்காக இவன் செய்த வேள்வி 'பெரும் பெயர் ஆவுதி' எனப்பட்டது. தன்னை நாடி வந்தவர்களுக்கு உணவளிக்க இவன் செய்த வேள்வி 'அடுநெய் ஆவுதி' எனப்பட்டது (பதிற். 21 : 7-13). வயிரியர் தம் வறுமைக் காலத்திலும் பிறரிடம் கையேந்தும் வழக்கம் இல்லை; பொதுவிடங்களில் தம் இசைக் கருவிகளை முழக்குவர். மக்கள் தாமே முன்வந்து அவர்களுக்கு வழங்கிப் பேணுவர். இத்தகைய வயிரியர்களுக்குப் பல்யானைச் செல்கெழு குட்டுவன் பொன் அணிகலன்களையும் உணவுப் பொருள்களையும் வழங்கினான் (பதிற். 23 : 6-8). தன் கொடை முரசை முழக்கி அவர்களைத்தானே அழைத்து வழங்கினான் (பதிற். 23 : 8-9).

தன்னைப் பத்துப் பாடல்களில் சிறப்பித்துப் பாடிய புலவர்களுக்கு அவர் விருப்பப்படி இவன் கொடை வழங்கியுள்ளான். அக்கொடை பத்து வேள்வியாக அமைந்தது. இத்தகைய வேள்விகளை இவனும் பிற வேந்தவர்களும் சங்ககாலத்தில் செய்ததற்கெல்லாம் கொடை உள்ளமே காரணம்; வேந்தர்கள் விருப்பம் அன்று என்பதை இவனது வேள்வி நிகழ்ச்சி தெளிவுபடுத்துகிறது.

பாலைக் கௌதமனார் மூன்றாம் பத்தில் சேர்க்கப்பட்டுள்ள பாடல்களைப் பாடி முடித்தார். புலவர் வேண்டியதைக் கேட்டுப் பெறலாம் என்றான் வேந்தன். பார்ப்பனப் புலவர் தாமும் தம் மனைவியும் வானுலகம் புக வேண்டினர். புலவரின் விருப்பத்தை நிறைவேற்ற அரசன் செய்வது குறித்துப் பார்ப்பாரிற் பெரியாரை (நெடும்பாரதாயனாரை)க் கேட்டான்.

கௌதமனார் பெயரில் பத்து வேள்விகள் செய்யவேண்டும் என்றார். வேண்டியனவெல்லாம் கொடுத்து நெடும்பாரதாயனாரையே வைத்து அந்த வேள்விகளை முறைப்படி நடத்தினான். தாயனார் ஒன்பது வேள்விகள் செய்தார். பத்தாம் வேள்வியில் புலவரும் அவரது மனைவி பார்ப்பனியும் மறைந்தனர் என்பதனால் அவர்கள் இறந்து விட்டனர் என்று தெரிகிறது. இது அவர்கள் அடைந்த சுவர்க்கம். இந்தச் செய்தியானது பதிகத்தில் காணப்படுகின்றது.

## பண்பு நலம்

தன் வாய்ச் சொல்லாலும், தனக்கிருந்த செல்வாக்காலும், தன் குறிப்புப் பார்வைகளாலும், தான் கேள்விப்பட்ட செய்திகளைக் கொண்டு பிறர்க்கு நெஞ்சாலும் தீமை எண்ணாத கொள்கை உடையவனாய்ப் பல்யானைச் செல்கெழு குட்டுவன் விளங்கினான் (பதிற். 22 : 34). நீர், நிலம், தீ, வளி, விசும்பு என்னும் ஐம்பூதங்களை அளந்தறிந்தாலும், அவற்றின் தன்மைகள் அமையப்பெற்றிருந்த இவனது

பண்புகளின் பெருமையை அளந்தறிய முடியாது (பதிற். 24 : 15-16). காலை நேரத்தில் பிறக்கும் தெளிவைப்போல இவனது வாயிலிருந்து பிறக்கும் சொற்கள் அமைந்திருந்தன (பதிற். 21 : 4).

## தோற்றப் பொலிவு

இவனது மார்பில் எப்போதும் சந்தனம் படிந்திருந்தது ('மண்படு மார்ப' – பதிற். 21 : 19). போர்ச்சின்னமாகிய உழிஞைப் பூவையும் இவன் பொன்னால் செய்து அணிந்துகொண்டான் (பதிற். 22 : 27). இவனது மாலையும் பொன்னால் செய்யப்பட்டது (பதிற். 23 : 10).

## துறவிக்குப் பணிவிடை

இத்தகைய போர்த்திறனும் கொடை உள்ளமும் நற்பண்புகளும், ஆடம்பர வாழ்வும் கொண்டிருந்த இவன் காட்டுக்குச் சென்றான். இவனைப் பாடிய புலவரின் விருப்பத்தை நிறைவேற்ற நெடும்பாரதாயனார் உதவினார். உதவிய தாயனாரின் விருப்பத்தை நிறைவேற்ற இவன் காட்டுக்குச் சென்றான். அங்குத் தாயனாரின் தவத்திற்கு இடையூறு வாராமல் காத்து நின்றான் எனலாம் (பதிற். பதி. 3 : 10-11).

சில காலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்துவிட்டுப் பின் துறவு பூண்டான் பல்யானைச் செல்கெழு குட்டுவன். அண்ணன் தொடர்ந்து நாடாண்டு கொண்டிருந்தான் (இளங்கோவடிகள் தன் சிறிய தந்தையான பல்யானைச் செல்கெழு குட்டுவனின் துறவு வழியை இளமையிலேயே பின்பற்றினார்).

## முன்னோர்

சினம், காமம், கழிகண்ணோட்டம், அச்சம், பொய்ச்சொல், அன்புமிகவுடைமை, தெறல், கடுமை முதலான தீய பண்புகள் அறநெறியில் செல்லும் ஆட்சிக்குத் தடையாய் அமைந்துவிடும் என்னும் உண்மையை உணர்ந்து அந்தத் தீய பண்புகளை விட்டு, நல்லன பல செய்து இவனது முன்னோர் வாழ்ந்துவந்தனர். நாட்டுமக்கள் மாசற்ற தெளிவான அறிவினை உடையவர்கள்; பிறரை நலியாதவர்கள்; வேற்றவர் பொருளைப் பறிக்க விரும்பாதவர்கள்; செந்நெறியில் நடப்பவர்கள்; தம்மை விரும்பி வாழும் துணைவரைப் பிரியாதவர்கள்; பிணியின்றி வாழ்ந்தமையால் மூத்துப் பின்னர்தான் இறந்தனர். இவ்வாறு குடி மக்கள் வாழும்படி பல்யானைச் செல்கெழு குட்டுவனது முன்னோர் அரசாட்சி செலுத்தினார்களாம். இத்தகைய உரம் பெற்ற முன்னோரின் வழிவந்து. அவர்களைக் காட்டிலும் மேம்பட்டு உயர்ந்து விளங்கி னானாம் பல்யானைக் குட்டுவன் (பதிற். 22 : 10-11).

### மனைவியின் மாண்பு

இவன் மனைவி சிறந்த உடலழகும் ஒப்பனை அழகும் கொண்டவள். இவனுடன் இவள் அரியணையில் வீற்றிருந்தாள்.[18] இவளது கற்பு நெறியால் நாட்டில் பருவமழை தவறாமல் பெய்தது (பதிற். 21 : 37-38). கணவனைப் போலவே இவளும் திருந்திய இயல்மொழியைப் பேசினாள்.[19] பலரும் இவளைத் தம் பாடல்களில் போற்றிப் புகழ்ந்தனர். அவற்றை அவள் விரும்பவில்லை; உலகமெல்லாம் தன் கணவன்வழி ஒழுகும்படி தன் வாழ்க்கைப் பாங்கை அமைத்துக்கொண்டாள். எனினும் ஆறு தொழில்களைச் செய்யும் அந்தணர்களின் சொற்களை இவள் வழிமொழிந்து ஒழுகியது நமக்கு வியப்பைத் தருகிறது. 'கணவன் எவ்வழி மனைவி அவ்வழி' என்பதே நாம் காணும் அமைதி.

### சிறப்புப் பெயர்கள்

'செல்போர்க் குட்டுவன்' (பதிற். 22 : 27), 'பொலந்தார்க் குட்டுவன்' (பதிற். 23 : 10), 'பெரும்பல்யானைக் குட்டுவன்' (பதிற். 29 : 14) என்றெல்லாம் இவன் அடைமொழிகளுடன் சிறப்பித்துக் கூறப் பட்டுள்ளான். பதிகம் இவனைப் பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்று குறிப்பிடுகிறது. பல யானைகள் சேர்ந்த கூட்டமானது மேகக்கூட்டம்போல் காட்சி அளிக்கும். அதனைப் 'பல்யானைச்செல்'[20] எனக் குறிப்பிடலாம். அந்த யானைகளாகிய மேகக் கூட்டத்திடையே இவன் மிகுதியும் தோற்றமளித்ததால் பல்யானைச் செல்கெழு குட்டுவன் எனப்பட்டான்.

### பாலைக் கௌதமனார்

இவர் இவன்மீது பாடியுள்ள பத்துப்பாடல்கள் பதிற்றுப்பத்தில் மூன்றாம் பத்தாக அமைந்துள்ளன. பொதுவாகக் 'குட்டுவன்' என்று குறிப்பிட்டுச் செய்திகளைத் தெரிவிக்கும் பாடல்கள் உள்ளன. அந்தக் குழப்பங்கள் பிற சேர அரசர்கள் என்னும் தலைப்பின் கீழ் ஓரளவு தெளிவாக்கப்பட்டுள்ளன.

## நார்முடிச் சேரல்

'களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்' என்று முழுமையான அடைமொழிகளுடன் கூடிய பெயரால் கூறப்படும் இவன், செங்குட்டுவனது மாற்றாந்தாயின் மகன் ஆவான்; செங்குட்டுவனுக்கு மூத்தவன். தந்தை நெடுஞ்சேரலாதன் ஆவான். தாய் பதுமனின்

மகளாவாள். இந்தப் பதுமன் வேளிர் குடியில் ஒரு பிரிவான ஆவியர் குடியைச் சேர்ந்தவன். இந்த ஆவியர்குடி பழனிமலைப் பகுதியில் சிறப்புற்று விளங்கியது.

## நன்னன் போர்

வாகை மரத்தைக் காவல் மரமாகக்கொண்டு நன்னன் எழில் மலைப் பகுதியில் அரசாண்டு வந்தான். அவனுக்கும் நார்முடிச்சேரலுக்கும் போர் மூண்டது. போர் 'வாகைப் பறந்தலை' என்னுமிடத்தில் நடைபெற்றது. இந்த இடம் குடமலைக்கு மேற்குப் பக்கம் இருந்தது. போரில் நன்னன் கொல்லப்பட்டான் (பதிற். *40 : 14*, பதிற். பதி. *4 : 7-8*; அகம் *199 : 20*). அவனது காவல் மரம் 'வாகை' வெட்டிச் சாய்க்கப்பட்டது.

இந்த வெற்றிக்குப் பின் மகிழ்வால் நறவுண்டு மகிழ்ந்தும், இரவலர்களுக்கு வாரி வழங்கியும் இவன் இருந்தான். பின் நேரிமலைப் பகுதிக்குச் சென்று தங்கியிருந்தான்.

இப்போரில் வென்றதன் வாயிலாக நார்முடிச் சேரல் தான் முன்பு இழந்த நாட்டைத் திரும்பப் பெற்றான் என்று கல்லாடனார் கூறுகிறார். இழந்த நாடு எது என்பதனை அறியப் பதிகம் நமக்கு உதவி செய்கிறது. அது 'பூழி நாட்டைப் படையெடுத்துத் தழுவிக்கொண்டான்' என்று கூறுகிறது.

பழனிமலைப் பகுதியில் சிறப்புற்று விளங்கிய ஆவியர் குடிப்பதுமனிடம் இவன் பெண் கொண்டதால் அவர்களின் உதவியும் இப்போரில் கிடைத்திருக்கும். பூழி நாடு, பழனி மலைகளுக்கு வடக்கில் உள்ள நாடு.

## நெடுமிடல் சாய்தல்

நெடுமிடலை நார்முடில் சேரல் போரில் சாய்த்தான் எனக் காப்பியாற்றுக் காப்பியனார் கூறுகிறார். நெடுமிடல் பசும்பூட் பாண்டியனின் பகைவர்களால் சாய்க்கப்பட்டவன் எனப் பரணர் கூறுகிறார். மற்ற இரண்டையும் ஒப்பிட்டு நோக்கும்போது பசும்பூட் பாண்டியனின் பகைவனான நார்முடிச் சேரல் நெடுமிடலைக் (பதிற். *32 : 10*; அகம் *266 : 12*) கொன்றான் என்பது பெறப்படுகிறது.

எவ்வி என்பவனின் மிழலை நாட்டை நெடுஞ்செழியன் (தலையாலங்கானத்துச் செருவென்றவன்) கைப்பற்றினான் என்பது வரலாறு. இதனால் எவ்விக்கும் பாண்டியனுக்கும் இடையே பகைமை உணர்வு இருந்தமை புலனாகும். இந்தப் பகைமை உணர்வு காரணமாகப் பசும்பூட் பாண்டியனின் படைத் தலைவனாய் விளங்கிய நெடுமிடல், எவ்விக்குப் பல இடையூறுகள் செய்துவந்தான். இதனால் எவ்வி,

சேரலின் உதவியை நாடினான், சேரல் படை எவ்விக்கு உதவியது. போரில் நெடுமிடல் கொல்லப்பட்டான்.

நெடுமிடலைக் கொன்ற நார்முடிச் சேரலின் படையும் எவ்வியின் படையும் அரிமணவாயில் (அரிமழம்), உறத்தூர் (உரத்தநாடு) ஆகிய இடங்களில் கள்ளும் பெருஞ்சோறும் உண்டு மகிழ்ந்தன.

## கொடுமிடல் மாய்தல்

கொடுமிடல் (பதிற். 32 : 10) என்பவன் பாண்டியனின் மற்றொரு படைத்தலைவன். நெடுமிடல் போரில் சாயவே இவன் பாண்டியர் படைக்குத் தலைமை தாங்கிப் போரை நடத்தினான். இவனும் நெடுமிடலைப் போலவே கொல்லப்பட்டான்.

இந்தப் போர் வெற்றியினால் நார்முடிச் சேரலுக்குக் கிடைத்த நாடு, நெல்லும் கரும்பும் விளையும் நாடாகும் (புறம் 24 : 1-13).

போரில் இவன் பெருமலை (பழனிமலை) யானைகளைப் பயன்படுத்தி வெற்றி பெற்றான்.

## பெரும் படை

இவனது படை வரம்பில்லாத வெள்ளம்போல் வருவது (பதிற். 33 : 6); நால்வகைப் படைகளையும் கொண்டது (பதிற். 34 : 4-12); பகைவர்களுக்குப் பேய் போன்ற நடுக்கத்தைத் தருவது; ஆயினும் நகைவர்க்கு (மகிழ்ச்சி செய்பவர்களுக்கு) அரண்போல் விளங்கியது (பதிற். 31 : 34). போர் நிழலில் வாழ்வதையே அப்படை மிகவும் விரும்பியது (பதிற். 40 : 1).

## போராற்றல்

பகைவரது காவல் மரங்களில் இவன் தனது யானைகளைப் பிணிப்பான்; அந்த யானைகளைப் பகைவர் நாட்டிலுள்ள நன்னீர்த் துறைகளில் குளிக்கச் செய்து கலக்குவான். வானை மதிலாகவும், வேல்களைக் காவற்காடாகவும், வில் அம்பு, எஃகம் ஆகியவற்றை அகழியாகவும் தம் படைக்குக் காவலாய் அமையும்படி முரசு முழங்கக் காற்றுப் போல் படையை நடத்திச் சென்று இவன் போரிடுவதை நினைத்தவுடனே பகைவர்கள் நடுங்குவர் (பதிற். 33 : 10-12). கூளியரும் பறவைகளும் உண்டு மகிழப் பிணம் குவிப்பான் (பதிற். 35 : 5-10). பகைவர்களுக்கு இவன் எமன் போன்றவன் ஆவான் (பதிற். 39 : 8).

## வளம் பெருக்குதல்

*இவன் நாட்டில் சில பகுதிகள் வளம் குன்றின. அந்த நிலங்களுக்கு இவன் வளப்பத்தை உண்டாக்கினான் (பதிற். 38 : 34). கால்வாய்கள், ஏரிகள் அமைத்து வளமுறச் செய்தான். இவ்வாறு நிலத்தை வளமுறச் செய்ததன் வாயிலாகச் சோர்வு நீக்கிக் குடிமக்களைக் காப்பாற்றினான். இதனால் குடிமக்கள் போர்க் காலங்களில் இவனுக்குப் பெரிதும் உதவினர். உழவர்களின் உதவியால் இவனுக்குப் போர் வெற்றி எளிதாயிற்று (பதிற். 31 : 13-14, 32 : 3-5, 37 : 7-10, 38 : 1-2; பதிற். பதி. 4 : 6-9).*

## தோற்றப் பொலிவு

*இவன் பெரிய மாலையை அணிந்து இருந்தான். காலிலே பெரிய வீரக்கழல் அணிந்திருந்தான் (பதிற். 37 : 8). இவனது மார்பு அகலமும் உறுதியும் கொண்டது (பதிற். 31 : 14-17). கொடிகள் பறக்கும் தேரில் ஏறிக்கொண்டு இவன் பீடுடன் செல்வது வழக்கம் (பதிற். 33 : 1). யானைமீது செல்வதும் சில வேளைகளில் வழக்கமாயிருந்தது (பதிற். 38 : 6).*

*இவன் தலையில் 'நார்முடி' அணிந்திருந்தான். அது பட்டு நூல் போர்வையைக்கொண்டு செய்யப்பட்டு இருந்தது. இதனால் வெள்ளை நிறத்துடன் நாரால் செய்யப்பட்ட முடிபோல் காட்சியளித்தது. அதில் பொன் கம்பிகள் ஊடுருவிய அழகுக் கரைகள் இருந்தன. அந்தக் கரைகளுக்கிடையே மணிகளும் முத்துகளும் சேர்த்து அழகு செய்யப் பட்டிருந்தன. மணிகள் கரிய நிறமுடைய களாப்பழம் போலவும், பொன் கம்பிகளில் கோக்கப்பட்ட முத்துகள் களங்காய்கள் போலவும் நிறத்தால் தோற்றம் அளித்தன. மணியும் முத்தும் கோக்கப்பட்ட இந்தக் கோவை, களாப்பழமும் களங்காயும் கோத்துக் கட்டிய கண்ணி போல் காட்சியளித்தது. இந்தக் கோவையால் அழகுபடுத்தப்பட்டிருந்த பட்டுத் துணியால் ஆன முடியை இவன் அணிந்திருந்ததால் இவன் 'களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்' என்று சிறப்பித்துக் கூறப் பட்டுள்ளான் (பதிற். 38 : 4). இந்தப் பெயர் பாடலின் உள்ளேயே பாடிய புலவரால் குறிப்பிடப்பட்டுள்ளமை வலிமை மிக்க சான்றாகத் திகழ்கிறது.*

## கொடைத் தன்மை

*இனிய பொருள் எதனைப் பெற்றாலும் இவன் அதனைப் பகுத்துண்ணும் பண்பினன் ஆவான் (பதிற். 38 : 15-16); பாணர்க்கும் (பதிற். 38 : 9, 40 : 24) விறலியர்க்கும் (பதிற். 40 : 21), பரிசிலர்க்கும் (பதிற்.*

*38 : 9) இவன் பரிசில் வழங்கினான். போர்த் தொழிலில் வல்ல யானைகளை இவன் பரிசிலாக வழங்கியதும் உண்டு (பதிற். 40 : 31). தனக்கு மகிழ்ச்சி யூட்டியவர்களுக்கு இவன் நல்ல கலன்களை வழங்கினான் (பதிற். 37 : 4).*

## பண்பு நலம்

*போரில் வெற்றி பெற்றாலும் சினம் தணியாத அரசர்கள்தாம் சங்ககாலத்தில் மிகுதி. இவனோ சினங்கொள்ளாமலேயே நெடுமிடல், கொடுமிடல் ஆகியவர்களோடு போரிட்டு வென்றனன் (பதிற். 32 : 10); போர்க் கைதிகளை நன்முறையில் நடத்தினான். இவன் தனது கொள்கையில் சிறிதும் வளைந்து கொடுக்கமாட்டான். இவன் ஆன்று அவிந்து அடங்கிய செம்மலாக விளங்கினான் (பதிற். 37 : 10-14).*

## சிறப்புப் பெயர்

*இவனை வானவரம்பன் என்னும் சிறப்புப் பெயராலும் அழைத்துவந்தனர். இவனது ஆட்சியின் கீழ் ஒரு பெரிய நிலப்பரப்பு இருந்தது என்பதை இதனால் உணரலாம்.*

## 'சேரலர் வேந்து'

*சேரநாட்டில் ஆங்காங்கே பல அரசர்கள் ஒரேகாலத்தில் ஆட்சி செய்து வந்தனர். குட்ட நாட்டை ஆண்டவன் குட்டுவன் என்றும், குட நாட்டை ஆண்டவன் குடவர் கோமான் என்றும், பொறை நாட்டை ஆண்டவன் பொறையன் என்றும்பொதுப்படையாக வழங்கப்பட்டனர். இவன் ஒரு காலத்தில் இத்தகைய சேரர் குடி அரசர்களுக்கெல்லாம் தலைவனாக விளங்கியமையால் இவன் 'சேரலர் வேந்து' (பதிற். 38 : 8) எனக் குறிப்பிடப்பட்டான்.*

## செல்வ மிகுதி

*இவனும் இவனது சுற்றத்தார்களும் செல்வத்தை வாரிவாரி வழங்கினர். எனினும் இவனது செல்வம் குறைவுபடவில்லை. அந்த அளவு மிகுதியான செல்வம் இருந்தது (பதிற். 32 : 5-8).*

*தூங்கெயில் என்பது ஒருவகைக் கோட்டை. அது வானம் என்னும் நகரில் அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் கோட்டையை அமைத்தவன் கடவுள் அஞ்சி என்பவன். அந்தக் கோட்டையின் காவலன் வண்டன் என்பவன் ஆவான். இந்தக் காவலை நாடு காவல் என்றும் கொள்ளலாம். அவன் பெருஞ் செல்வனாகவும், கொடையாளியாகவும் விளங்கினான். அந்த வண்டன்போல நார்முடிச் சேரலும் சிறந்து விளங்கினான் (பதிற். 31 : 23).*

இவனது தந்தை 'ஆராத்திருவின் நெடுஞ்சேரலன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளான். இதனால் இவன் தந்தை வழியே இவனுக்குக் கிடைத்த செல்வம் மிகுதி எனத் தெளிவாகிறது.

## ஆட்சி

ஆளுந்திறமை, கொடை, வீரம் இவை அனைத்தும் ஒருங்கே பெற்றவன். மக்கள் மகிழ்வுடன் கடவுளை வழிபட்டு வாழும்படி இவன் நல்லாட்சி நடத்தினான்.

மனைவியின் மாண்பு

அவள் வானத்துச் செம்மீன் போலக் கற்புக்கடம் பூண்டவள் (பதிற். 31 : 27-28). அவளது கற்பை அறக்கற்பு எனப் புலவர் கூறுகின்றார். அறக் கற்பென்பது ஊடியும் கூடியும் இல்லற நெறியில் வழுவாது கணவனுடன் வாழ்வது. ஏனைய ஆறிய கற்பும் சீறிய கற்பும் இன்றி அவளது கற்பு அறக்கற்பாய் அமைந்தது.

தழைத்த கூந்தல், காதிலே குழை, அந்தக் குழைக்கே ஒளி நல்குவதுபோல் அமைந்து ஒளிரும் நெற்றி, மார்பிலே பொன்னாலான இழைகள், அந்த இழைகளுக்கு ஒளி ஊட்டுவது போல் விளங்கி அழகுத் தெய்வம் பிய்த்துத் தின்னும் உத்தி. இத்தகைய நலங்களுடன் அவள் விளங்கினாள்.

## காப்பியனார்

காப்பியாறு என்னும் ஊரில் வாழ்ந்த புலவர் காப்பியனார் என்னும் பெயரைப் பெற்றார். காப்பியன் என்பது காப்பியம் இயற்றியமையால் வழங்கப்பட்ட பெயர் என்றும் தெரிகிறது. தொல்காப்பியனார், பல்காப்பியனார் என்னும் பெயர்கள் இதற்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றன. இந்தக் காப்பியனார் காப்பி ஆற்றின் மீது காப்பியம் பாடியதால் காப்பியாற்றுக் காப்பியனார் என்னும் பெயரைப் பெற்றார் எனக் கொள்வது பொருத்தமாயிருக்கும். காப்பியாறு இப்போது வழங்கும் கபினி என்னும் ஆறாக இருக்கலாம்.

பதிற்றுப்பத்தில் உள்ள இவர் பாடிய பத்துப் பாடல்களில் ஒரு புதுமையான அமைப்பைக் காண்கிறோம். இந்தப் பாடல்கள் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளதே அந்தப் புதுமையாகும். ஒரு பாடலின் கடைசிப் பகுதி அடுத்த பாடலின் முதற் பகுதியில் அமையும்படி அமைத்துப் பாடுவது அந்தாதித் தொடைப் பதிற்றுப்பத்து 34, 35, 38ஆம் பாடல்களின் கடைசி அடி அப்படியே அடுத்த பாடலின் முதல் அடியாக அமைந்திருப்பதையும், பிற பாடல்களில் (இறுதிப் பாடல் நீங்கலாக)

இறுதியில் உள்ள இரண்டு சீர்கள் அடுத்த பாடலின் தொடக்கத்தில் அமைந்திருப்பதையும் நாம் பார்க்கிறோம்.

இந்தப் புலவர் திருமால் மீது பற்றுடையவர்போல் காணப்படுகிறார். மாலைக் காலத்தில் துளசி மாலைச் செல்வனை மக்கள் வழிபடுவதாகவும் நார்முடிச் சேரலின் மார்பு திருமாலிருஞ்சோலை மலை (விண்டு விறல்வரை) போல் இருப்பதாகவும் இவர் கூறுவதால் (பதிற். 31 : 7-10) இவரது திருமால் பற்று விளங்குகிறது.

இவர் மாலைக் காலத்துக் காட்சிகளில் மகிழ்ந்து திளைத்துள்ளார். மாலைக் காலத்தில் திருமால் கோயிலின் மணி கேட்பதும், மக்கள் குளிர்ந்த நீர்த்துறைகளில் நீராடிவிட்டு வந்து திருமாலின் திருவடிகளைப் பரவுவதும் இவரது உள்ளத்தைக் கவர்ந்துள்ளன (பதிற். 31 : 6-9).

போர்க்களத்தில் பேய்களும் முண்டங்களும் ஆடுவதும், குருதி பாய்ந்து செக்கச் செவேலெனத் தோன்றுவதும், அந்தி மாலையில் தோன்றும் வானக் காட்சிகளை நினைவுக்குக் கொண்டு வருகின்றன (பதிற். 35 : 6-9).

# செங்குட்டுவன்

பதிற்றுப் பத்தில் குறிப்பிடப்படும் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனும், சிலப்பதிகாரத்தில் காணப்படும் சேரன் செங்குட்டுவனும் ஒருவனே.

## பெற்றோர்

குடவர் கோமான் நெடுஞ்சேரலாதன் இவனின் தந்தையாவான். 'சோழன் மணக்கிள்ளி' என்பவள் இவனது தாய் ஆவாள் (பதிற். பதி. 5 : 2-3).

தாயின் பெயர் சோழ அரசனின் பெயராகவும், ஆண்மகனின் பெயராகவும் அமைந்திருப்பதைப் பிற பெயர்களை ஒப்புநோக்கி அறியலாம். இக்காலத்தில் கணவன் பெயருக்கு முன் 'திருமதி' என்னும் அடைமொழியைச் சேர்த்து மனைவியின் பெயராகக் குறிப்பிடும் வழக்கம்போல், அக்காலத்தில் எல்லாரும் அறிந்த தந்தையின் பெயரால் மகளைக் குறிப்பிடும் வழக்கம் இருந்ததை இந்தப் பெயர் காட்டுகிறது. திருமணமாகு முன்னர்ப் பெண்டிரைத் தந்தையார் பெயரோடு தொடர்பு படுத்தியோ, தந்தையின் பெயரால் குறித்தோ வந்தது தெரிகின்றது.[21]

சிலப்பதிகாரப் பதிகத்துக்கு அடியார்க்கு நல்லார் உரையில் 'சேரலாதற்குச் சோழன் மகள் நற்சோணை ஈன்ற மக்களிருவருள்'

என்னும் தொடர்பு உள்ளதால் 'சோழன் மணக்கிள்ளியீன்ற மகள்' என்னும் பதிற்றுப்பத்து ஐந்தாம் பதிகத்தின் தொடர் கூறுவது சோழன் மகள் நற்சோணையையே குறிக்கும்.

## ஆட்சியின் தொடக்க நிலை

இவனது தந்தை நெடுஞ்சேரலாதன் குடநாட்டு மாந்தை நகரில் இருந்து கொண்டு, தனது ஆட்சியைத் தொடங்கினான். சிறிய தந்தை பல்யானைச் செல்கெழு குட்டுவன் குட்டநாட்டு வஞ்சியில் இருந்து கொண்டு ஆட்சியைத் தொடங்கினான். அண்ணன் நார்முடிச்சேரல் குன்ற நாட்டில்[22] தனது ஆட்சியைத் தொடங்கினான். இவன் குட்டநாட்டுக் கிழக்குப் பகுதியையும் பூழி நாட்டையும் தன்னகத்தே கொண்ட பகுதியில் இருந்து ஆட்சி செய்தான். இந்த ஆட்சித் தொடக்க நிலைகள் தந்தை அரசாண்ட காலத்திலேயே நாடுகாவல் பணி என்ற முறையில் அமைந்தவை.[23]

முசிறித் துறைமுகம் இவனது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்று இவனைப் பதிற்றுப்பத்தில் பாடிச் சிறப்பித்த பரணர் குறிப்பிடுகிறார் (புறம் 343 : 10). வஞ்சி மாநகரில் இருந்துகொண்டு இவன் நாடாண்டதைச் சிலப்பதிகாரம் விளக்கமாகக் கூறுகிறது. இவை, இவன் தனது முன்னோருக்குப் பின் முழுமை பெற்றுப் பேரரசனாக, சேர நாட்டுக்கெல்லாம் பெருவேந்தனாக விளங்கிய காலத்து நாட்டுப்பரப்பு எனக் கொள்வது பொருந்தும்.

## மோகூர்ப் போர்

'மோகூர் மன்னன் முரசங்கொண்டு' (பதிற். 44 : 14, 49 : 8-9, பதிற். பதி. 13-14) என்பதால் இப்போர் நிகழ்ச்சி சிறப்புடையது. இது பாண்டிய நாட்டில் இருந்த ஓர் ஊராகும்.[24] பழையன் என்பவன் இவ்வூரை ஆட்சிபுரிந்து வந்தான். இவனைத் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனது படைத் தலைவனாக விளங்கிய பழையன் மாறன் எனக் கொள்வதும் பொருத்தமாகும்.

அறுகை என்பவன் அக்காலத்தில் இருந்த மற்றுமோர் அரசன். இவன் குன்றத்தூரில் இருந்து ஆட்சி புரிந்து வந்தான்.[25] இந்த அறுகை செங்குட்டுவனது நண்பன். செங்குட்டுவனது அண்ணன் நார்முடிச்சேரல் குன்ற நாட்டில் தனது ஆட்சியைத் தொடங்கினான். அவன் இருபத்தைந் தாண்டுகள் அரசாண்டான். அண்ணனுக்குப் பின் சுமார் ஐந்தாண்டுகள் கழித்துத் தன் ஆட்சியைத் தொடங்கி ஐம்பத்தைந் தாண்டுகள் செங்குட்டுவன் அரசாண்டான். எனவே, 35 ஆண்டுகள் (55-20) அண்ணனுக்குப் பிறகு அரசாண்டான். அக்காலத்தில் அண்ணனது குன்ற நாட்டுப் பகுதியைக் குன்றத்தூரில் இருந்துகொண்டு இந்த அறுகை

ஆண்டு வந்தானாகையால், சேரர்களுக்கு அவன் நண்பனாக விளங்கினான். வஞ்சிக்கும் குன்றத்தூருக்கு மிடைவெளி சற்று அதிகமாக இருந்தாலும் ('சேண ளாயினுங் கேளென மொழிந்து' – பதிற். 44 : 11). செங்குட்டுவனுக்கும் இந்த அறுகைக்கும் நட்பு நீடித்திருந்தது.

மோகூர்ப் பழையன் அறுகையைத் தாக்கி வென்றான் போலும், அறுகையைப் பிடித்து வந்து சிறையில் மறைத்து வைத்துக் கொண்டனர் ('ஒளித்த களையாப் பூசல்' – பதிற். 44 : 12). தன் நண்பனை மறைத்து வைத்த செய்தி கேட்டுப் பொறுக்காத செங்குட்டுவன் பழையனை அவனது மோகூரிலேயே தாக்கினான்.

இந்தப் போரில் பழையனுக்குத் துணையாகப் பாண்டியனும் சோழனும் சேர்ந்து கொண்டனர். அன்றியும் வேளிர் அரசர்கள் பலரும் சேர்ந்து கொண்டனர். இவர்களுக்கும், செங்குட்டுவன் படைக்கும் பெரும்போர் நடந்தது. போர்க்களத்தில் குருதியாறு வெள்ளம்போல் ஓடிற்று.

செங்குட்டுவன், பழையனது காவல் மரமாகிய வேப்ப மரத்தை வெட்டிச் சாய்த்தான்; அவனது கோட்டைகள் பலவற்றைக் கடந்தான்; பழையன் கூறிய வஞ்சின மொழிகள் பொய்யாகும்படி வெற்றி பெற்றான். போரில் பழையன் மாண்டான் எனலாம். அவனது வீரர்களும் மாண்டனர்.

தம் கணவன்மார் போரில் மாண்டது கண்டு மோகூரிலிருந்த அவர்களது மனைவியர் கைம்மைக் கோலம் பூண்டனர். கைம்மைக் கோலத்திற்குத் தலைமுடியை மழித்துக்கொள்வது அக்கால வழக்கம். அவ்வழக்கப்படி அவர்கள் மொட்டை அடித்துக் களைந்தெறிந்த முடியைக் கொண்டு கயிறு திரித்து அக்கயிற்றால் தான் வெட்டி வீழ்த்திய வேப்பமரத் துண்டை யானைகளோடு பிணித்துச் செங்குட்டுவன் தன் நாட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தான். அம்மரத்தால் தன் வெற்றி முரசைச் செய்து கொண்டான்.

குராலம் பறந்தலைப் போர்

மோகூர் போரில் வென்று திரும்புகையில் பழையனது நண்பர்களாக விளங்கிய சில அரசர்கள் செங்குட்டுவனைத் தாக்கினர். அவர்களை இவன் குராலம் பறந்தலை என்னுமிடத்தில் தாக்கி வென்றான் (பதிற் 44 : 19; சிலப். 27 : 118-123, 28 : 116-117).

## நேரிவாயில் போர்

சோழநாட்டு உறையூரின் தென்வாயில் நேரிவாயில் எனப் பெய பெற்றிருந்தது. பதிற்றுப்பத்தில் 'வாயிற்புறம்' என்று கூறப்படுவதுட இதுவேயாகும். செங்குட்டுவனது மைத்துனர் கிள்ளிவளவன் ஆவான்

கிள்ளிவளவன் சோழநாட்டுப் பெருவேந்தனாவதைச் சோழர் குடியைச் சேர்ந்த ஒன்பது மன்னர்கள் விரும்பவில்லை. எனவே, அவர்கள் கிள்ளிவளவனுக்கு எதிரான நடிவடிக்கைகளில் ஈடுபட்டனர். செங்குட்டுவன் தன் மைத்துனனுக்கு உதவ முன் வந்தான்.

நேரிவாயிலில் அப் போர் நடைபெற்றது. செங்குட்டுவன் வெற்றி பெற்றான். ஒன்பது குடை மன்னர்களும் ஒரே பகற்பொழுதில் அழிக்கப் பட்டனர் (பதிற். பதி. 5 : 19). கிள்ளிவளவன் அரசனாக்கப்பட்டான்.

## வியலூர்ப் போர்

வியலூர் என்பது சேரநாட்டின் வடபகுதியில் இருந்த ஓர் ஊர். சிறு குரல் நெய்தல் வியலூர், வயலை வேலி வியலூர், விரிநீர் வியலூர் என்றெல்லாம் இந்த ஊர் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. இந்த வியலூரில் செங்குட்டுவனுக்கு எதிரான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதனால், செங்குட்டுவன் இந்த ஊரைத் தாக்கி அழித்தான் (பதிற்.பதி. 5 : 11-14).

## கொடுகூர்ப் போர்

வியலூருக்கு வடபால் ஓர் ஆறு ஓடிற்று. அந்த ஆற்றின் வடகரையில் கொடுகூர் என்னும் ஊர் இருந்தது. வியலூரில் செங்குட்டுவனிடம் தோற்ற படையின் சார்பாளர் கொடுகூரில் செங்குட்டுவனைத் தாக்கினர். செங்குட்டுவன் அவர்களுடன் போரிட்டு அவ்வூரையும் அழித்தான் (பதிற். பதி. 5 : 12).

## இடும்பில் போர்

இது சோழநாட்டு ஊராகும். இவ்வூர் தேவாரத்தில் 'இடும்பாவனம்' என்றும் இக் காலத்தில் இரும்பாதவனம் என்றும் வழங்கப்படுகிற தென்பர்.[26] செங்குட்டுவன் வெட்சிப் பூச்சூடி ஆனிரைகளைக் கவரும் போரில் ஈடுபட்டான். அவன் தான் கவர்ந்துவந்த ஆனிரைகளை இந்த ஊரின் புறத்தே இளைப்பாற்றிப் பின் தன் நாட்டுக்கு ஓட்டிக்கொண்டு வந்தான். ஆனிரைகளுக்கு உரியவர்கள் இவனை அவ்வூரில் எதிர்த்துத் தாக்கினர். நடந்த போரில் செங்குட்டுவன் வெற்றி பெற்றான்.

## கொங்கு நாட்டுப் போர்

சோழ அரசனும் பாண்டிய அரசனும் சேர்ந்து கொங்கு நாட்டில் செங்குட்டுவனைத் தாக்கினர். இந்தத் தாக்குதலில் போர்க்களம் குருதியால் செங்களம் ஆகியது. இந்தப் போரில் செங்குட்டுவன் வெற்றி பெற்றான் (சிலப். 25 : 152-155, 29 : உரைப்பாட்டுமடை); களவேள்வி செய்து வெற்றியைக் கொண்டாடி மகிழ்ந்தான்.

## தக்கணப் போர்

வஞ்சிக் காண்டத்தில் தக்கணப் போர் பற்றிய செய்தி காணப்படுகிறது (சிலப். 25 : 156-159). தமிழ்நாட்டின் வட எல்லைப் பகுதிகளில் பல்வேறு குடியைச் சேர்ந்தவர்கள் செல்வாக்குப் பெற்று விளங்கினர். கொங்கணர்,[27] கலிங்கர்,[28] கருநாடார்,[29] பங்களர்,[30] கங்கர்,[31] கட்டியர்,[32] வட ஆரியர்[33] என்போர் இவர்களில் குறிப்பிடத் தக்கவர். இவர்கள் எல்லோருமே தமிழைத் தாய் மொழியாக உடையவர்கள் அல்லர்.[34] இவர்களுக்கும் செங்குட்டுவன் தலைமையேற்ற தமிழர் படைக்கும் போர் நடந்தது. போர் வேங்கடமலைப் பகுதியில் நடைபெற்றது. இந்தப் போரில் செங்குட்டுவன் வெற்றி பெற்றான்.

## கடல் பிறக் கோட்டல்

இவன் நிலப் போர்களில் வெற்றி பெற்றது போன்றே கடற்போரிலும் ஈடுபட்டு வெற்றி பெற்றான் (அகம் 212 : 15-16; பதிற். 41 : 25-27, 42 : 21-22, 45 : 20-23, 46 : 11-13, 48 : 3-4, 50 : 12-13, பதிற். பதி. 20-21: சிலப். 28 : 119, 23 : கட்டுரை 12). இப்போரைப் பற்றிக் குறிப்பிடும் இடங்கள் பலவற்றில் போர்க்களம் கடலாக உருவகம் செய்யப்பட்ட இடங்கள் பல உண்டு. நிலப் பகுதிகளில் நடந்த போரே உருவக நிலையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளதோ என்று எண்ணத்தோன்றும். உண்மை அஃது அன்று. 'நீர்புக்குக் கடலொடு உழந்தான்' (பதிற். 48 : 3-4) என்னும் தொடரைச் சில இடங்களில் 'கடற்படை' என்றே கொள்ள வேண்டும்.

இவன் பின்னிடச் செய்த கடற்படை எது என்பது தெளிவாகத் தெரியவில்லை. இவன் தந்தை நெடுஞ்சேரலாதன் கடற்போரில் ஈடுபட்டுக் கடப்ப மரத்தைக் காவல் மரமாக உடைய கூட்டத்தாரை வென்றான். அப்போரில் செங்குட்டுவன் துணை நின்று தந்தைக்கு வெற்றி தேடித் தந்திருக்கலாம் அல்லது தந்தையால் அடக்கப்பட்ட கடல் கூட்டத்தார் இவன் காலத்து மீண்டும் குழப்பம் விளைவித்தபோது மீண்டும் போரில் ஈடுபட்டு வெற்றி கண்டிருக்கலாம்.

செங்குட்டுவனைப் போன்று பழங்காலப் பாண்டிய அரசன் ஒருவனும் கடலில் வேலிட்டதை (கடற் போரில் வென்றதை) இவ்விடத்தில் நினைவுகூரலாம் (சிலப். 11 : 17-22).

கடல் பிறக்கோட்டிய இந்தச் செயலைக் கடல் கடந்த செயலாக எண்ணிப் போற்றிய நிலையும் உண்டு (சிலப். 17, பூவைநிலை : உள்வரி வாழ்த்து 3).

## தகடூர்ப் போர்

*செங்குட்டுவன் தகடூரை முற்றுகையிட்டான் (அகம் 212 : 14-16). அப்போது அங்கு அவனது முற்றுகையை எதிர்த்துப் போரிடுவோர் இல்லை. எனவே, வறிதே தன்னாடு திரும்பினான். அப்போது அங்கு இவனது பெருஞ் சினத்திற்குத் தீனி கிடைத்தது. கடலை முற்றுகையிட்டான். கடலில் தன்னை எதிர்த்த பகைவர்களைக் கடலுக்கப்பால் ஓட்டி விட்டான். தகடூர்ப் போரானது கடல் பிறக்கோட்டிய நிகழ்ச்சிக்கு முன் நடைபெற்றதாகும்.*

## இமயத்தில் வில் பொறித்தல்

*செங்குட்டுவன் தன் முன்னோர்களைப் போலவே தானும் இமயமலையில் தன் வில்சின்னத்தைப் பொறித்தான் (சிறுபாண். 48-49).*

## கடம் பெறிதல்

*செங்குட்டுவன் தன் தந்தை நெடுஞ்சேரலாதனைப் போலவே கடப்ப மரத்தைக் காவல் மரமாக உடைய கூட்டத்தாரை வென்றான் (சிலப். 17, பூவைநிலை; உள்வரி வாழ்த்து 3, 25 : 1-187, 28 : 135, 29 : ஊசல்வரி, 1 : 3-5, 2 : 3-5, வள்ளைப்பாட்டு 3). இந்த வெற்றி தந்தை வெற்றியின் கூறுபாடாயிருக்கலாம். அல்லது இவனது ஆட்சிக் காலத்தில் மீண்டும் போர் மூண்டு அடைந்த வெற்றியாக இருக்கலாம்.*

## இரண்டாம் வடநாட்டுப் போர்

*முதலாம் வடநாட்டுப் போர் மேலே கூறப்பட்டுள்ளது. பின்னர்ச் செங்குட்டுவன் தன் தாயாரைக் கங்கையில் நீராட்டுவதற்காக வடநாடு சென்றான். அப்போது ஆரிய மன்னர் ஆயிரவர் இவனை எதிர்த்துத் தாக்கினர். செங்குட்டுவன் அவர்களைப் போரிட்டு வென்றான். இஃது இவனது இரண்டாம் வடநாட்டுப் போராகும் (சிலப். 25 : 160-164).*

## மூன்றாம் வடநாட்டுப் போர்

*பாண்டிய நாட்டில் தன் கணவனை இழந்து சேரநாட்டுக்கு வந்து விண்ணுலகை அடைந்த கண்ணகிக்குக் கோயில் எடுத்து வழிபட விரும்பிய தன் மனைவியின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென்று செங்குட்டுவன் விரும்பியதால், இம்மூன்றாம் வடநாட்டுப்போர் (பதிற். பதி. 5 : 4-10) நடைபெற்றது. கண்ணகிக்குச் சிலை செய்வதற்கு வேண்டிய கல்லை இமயமலையிலிருந்து எடுத்து வருவதென முடிவு செய்தான் (சிலப்.25 : 168-169).*

அவனது படைத் தலைவன் வில்லவன் கோதை வீர முழக்கம் செய்தான் (சிலப். 25 : 151)

வடநாடு செல்லும் வழியில் உள்ள மன்னர் எல்லாரும் அவன் வரும் வழியில் தமிழ்நாட்டுச் சின்னங்களாகிய வில், புலி, கயல் கொடிகளைப் பறக்கவிடவேண்டுமென்று ஓலை அனுப்பும்படி கூறினான். 'ஓலை அனுப்ப வேண்டா,' என்றும் வஞ்சி மாநகரில் உள்ள ஒற்றர்களே செய்தியை அறிவிப்பர் என்றும் அவனது மற்றொரு படைத்தலைவன் அழும்பில்வேள் கூறினான் (சிலப். 25 : 149 -177), வஞ்சியில் வடநாட்டுப் படையெழுச்சி குறித்துப் பறையறையப்பட்டது.

'வடநாட்டு மன்னர் தலையில் கண்ணகிக்குக் கல் ஏற்றிக்கொண்டு வராமல் மீள்வனேயானால் என்னைக் கொடுங்கோலன் என்று இகழ்க!' எனச் செங்குட்டுவன் வஞ்சினம் கூறினான். இவனது ஆசான் இவனைப் புகழ்ந்தான். கணியன் நல்ல நேரம் பார்த்துச் சொன்னான். படைகள் புறப்பட்டன. வஞ்சிப் போர் அவர்களின் நோக்கம். செங்குட்டுவன் சிவனையும் திருமாலையும் வழிபட்டான். வஞ்சியை விட்டு வந்து நீல மலையில் தங்கினான்.

நீலமலைப் (சிலப். 26 : 85; Nilgiris) பாடி வீட்டில் இருக்கும்போது கலை நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்தான். கொண்கான நாட்டவரும் குடகு நாட்டவரும் இந்தக் கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தி மகிழ்வூட்டினர். அப்போது சஞ்சயன் என்னும் தூதன் வந்தான். நூற்றுவர் கன்னராகிய தம் மன்னர், செங்குட்டுவன் சார்பில் சென்று இமயத்தில் கண்ணகிக்குக் கல்லெடுத்து வந்து தர விழைவதாக அவன் கூறினான். கல்லெடுப்பதோடு கனகவிசயர்க்குப் பாடம் கற்பிப்பதே தன் நோக்கமாகையால் தானே செல்ல விரும்புவதாகவும், நூற்றுவர்கன்னர் விரும்பினால் செங்குட்டுவன் கங்கையைக் கடக்க உதவி செய்யலாம் என்றும் அத்தூதனிடம் கூறினான்.

சஞ்சயன் போன பின் சட்டை அணிந்த தென்னவர் ஆயிரவர் செங்குட்டுவனுக்குத் திறை தந்து தம் அரசன் பாண்டியன் அளித்த வாழ்த்து மடலையும் தந்தனர்.

பின்னர்ச் செங்குட்டுவன் படை நடத்திச் சென்று கங்கை ஆற்றை அடைந்தான். ஆற்றைக் கடக்க நூற்றுவர் கன்னர் உதவினர். செங்குட்டுவன் தன் படையுடன் கங்கையின் வட கரையை அடைந்தான்.

வடநாட்டு அரசர்கள் கனக விசயர் தலைமையில் திரண்டனர். உத்தரம், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் ஆகியோர் அவ்வாறு திரண்டவர்களில் சிலராவர். இவர்கள் செங்குட்டுவனை எதிர்த்துத் தாக்கினர் (சிலப். 182-187).

கடும்போர் நிகழ்ந்தது. செங்குட்டுவன் தும்பை சூடி நூழில் போரில் ஈடுபட்டான். போர் மொத்தத்தில் 18 நாழிகைதான் (சுமார் 7 மணி நேரந்தான்) நடைபெற்றது. செங்குட்டுவன் வெற்றி பெற்றான். கனகவிசயர் கைது செய்யப்பட்டனர். அவர்களுடன் மற்றும் 52 பேர் போர்க்களத்தில் கைது செய்யப்பட்டனர். இந்த நிலையை அறிந்த ஏனைய வடநாட்டு அரசர்கள் துறவிக்கோலம் பூண்டு தப்பி ஓடினார்கள். இவன் தன் வஞ்சினத்தை முடித்துக் கொண்டான். இமயமலையில் கண்ணகிக்குக் கல் எடுத்தான்; கனகவிசயர் தலையில் சுமத்திக் கொண்டு வந்து கங்கையில் நீராட்டினான்.

தோற்ற ஆரிய அரசர்கள் கங்கை ஆற்றின் தென்கரையில் செங்குட்டுவனுக்குப் பாடிவீடு அமைத்துக் கொடுத்தனர். அந்தப் பாடி வீட்டில் இருந்துகொண்டு தன் வெற்றிக்கு உறுதுணையாய் இருந்த தனது வீரர்களுக்கெல்லாம் சிறப்புச் செய்தான். அப்போது தமிழ்நாட்டிலிருந்து வந்த மறையவன் மாடலனுக்குத் தன் எடைக்கு எடை பொன்னைப் பரிசிலாகக் கொடுத்தான் (சிலப். 27 : 175-176). நூற்றுவர் கன்னர்க்கு நன்றியுடன் விடை கொடுத்து அனுப்பினான்; பின்னர்த் தன் நாட்டுக்குத் திரும்பினான்.

செங்குட்டுவன் அறவேள்வி ஒன்று செய்தான். அப்போது தன் நாட்டுச் சிறையில் இருந்தவர்களையெல்லாம் விடுதலை செய்தான். மற்றும் தான் கைது செய்து வந்திருந்த கனகவிசயரையும் விடுதலை செய்தான். வஞ்சி நகருக்கு வெளியே பூஞ்சோலையில் இருந்த வேளாவிக்கோ மாளிகையில் அவர்களை விருந்தினர்களாகத் தங்க வைத்தான்.

கடவுள் பத்தினிக்குச் சிலை செய்து கோயில் கட்டி வழிபாடு செய்தான். அந்த வழிபாட்டு விழாவில் தமிழ்நாட்டு அரசர்களுடன் பிற நாட்டு அரசர்களும் கலந்து கொண்டனர். விடுதலை பெற்ற கனகவிசயரும், அவர்களுடன் சிறைபிடிக்கப்பட்டு விடுதலை பெற்ற வடநாட்டு அரசர் 52 பேரும் குடக நாட்டுக் கொங்கர், மாளுவ நாட்டு வேந்தர், இலங்கை அரசன் கயவாகு ஆகியோரும் விழாவில் கலந்து கொண்ட சிலர் ஆவர். இவர்கள் தம் நாட்டிலும் கண்ணகிக்குக் கோயில் அமைக்க இருப்பதாகவும் அமைத்து வழிபடும் காலை பத்தினித் தெய்வம் வந்திருந்து அருள் புரிய வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டனர்.

இவன் வஞ்சியில் இருந்து புறப்பட்டது முதல் வெற்றி பெற்று மீண்டது வரைகடந்து சென்ற காலம் 32 மாதங்கள் (சிலப். 27 : 149) ஆகும்.

## போர்ச் சிறப்பு

இவன் கடற் போரிலும் மலைப் போரிலும் ஈடுபட்டான். அப்பகுதிகளில் பல கோட்டைகளைக் கைப்பற்றினான்; பாசறைகளில் பல நாள்கள் தூங்காதிருந்தான். அப்போது இவனுக்குப் பால் உணர்வுகள் தோன்றுவதே இல்லை (பதிற். 50 : 23-26).

போரில் தான் கொன்று குவித்த வீரர் பிணங்களிடையே வெற்றிக் களிப்போடு தோள் கொட்டித் துணங்கைக் கூத்து ஆடினான் (பதிற். 45 : 11-12).

இவனது போர் வெற்றிகள் பலவற்றைச் சிறப்பித்து விறலியர் இவனது தொன்னகரான வஞ்சியில் இரவில் தெரு விளக்கொளியில் ஆடிப்பாடினர் (பதிற். 47 : 7-8).

இவனது போர் வீரர்கள் – இவன் கூறும் வஞ்சின மொழிகள் இவனுக்குக் கைக்கூடுமாறு செய்த 'ஒன்றுமொழி மறவர்' (பதிற். 41 : 18) – வீரக்கழலே அன்றிக் கொடைக் கழலும் அணிந்திருந்தனர்; அம்பு தைத்துப் புண் ஆறிய அழகிய மார்பினை உடையவர்கள். இவர்கள் தும்பைப் பூச்சூடியதில்லை. அதாவது, வலியச்சென்று போர்தொடுத்தது இல்லை; பனம் பூமாலையை அணிந்திருந்தனர் (பதிற். 42 : 1).

## கொடைத் தன்மை

போர் வெற்றியால் பகைவர்கள் நாட்டிலிருந்து இவனுக்குக் கிடைத்த பொருள்கள் (பதிற். 44 : 5), கடல் வாணிகத்தால் இவனுக்குக் கிடைத்த பொருள்கள் (பதிற். 48 : 4-5; புறம். 343 : 5-6) ஆகியவற்றை இவன் கொடையாக வழங்கினான்.

விறலியருக்கு ஆரம், பிடி முதலானவற்றை வழங்கினான்; (பதிற். 43 : 20-22, 48': 2, 49 : 2-4); பாணர்க்குப் பொன்னாலான தாமரையை வழங்கினான் (பதிற். 48 : 1); வீரர்களுக்குக் கள்ளும் மாவும் வழங்கினான் (பதிற். 42 : 12-15); கொண்டி மன்னர்களுக்குப் போர்க்களிறுகளை வழங்கினான் (பதிற். 43 : 25). அகலவர்களுக்குக் (குறிகூறுபவர்களுக்கு) குதிரைகளும் (பதிற். 43 : 28), பரிசில் நாடி வந்தவர்களுக்குக் களிறுகளும் இவன் வழங்கினான் (பதிற். 43 : 21-25).

பதிற்றுப்பத்தில் தன்னைப் பாடிச் சிறப்பித்த பரணர் என்னும் புலவர்க்கு உம்பற்காடு என்னும் பகுதியில் அரசுக்குக் கிடைத்த வருவாய் அனைத்தையும் கொடுத்தான். அதனுடன் இவனது அருமை மகன் குட்டுவன் சேரல் என்னும் பெயர் கொண்டவனைப் புலவர்க்குப் பணிவிடை செய்வதற்கென்று அனுப்பிவைத்தான் (பதிற். பதி. 5 : 3) வடநாட்டு வெற்றிக்குப் பின் கங்கையாற்றின் தென்கரையில்

பாடிவீடமைத்துத் தங்கியிருந்தபோது தமிழ்நாட்டிலிருந்து வந்த மடலன் என்னும் மறையவனுக்குத் தன் எடைக்கு எடை பொன் கொடுத்தான் என்ற செய்தியைச் சிலப்பதிகாரத்தால் அறியலாம்.

## பண்பு நலம்

இவன் பெருஞ்சினம் கொண்டவன் (பதிற். 49 : 17). போர் முழக்கத்தைக் கேட்பதில் பெரும் விருப்பினன் (பதிற். 43 : 9-10).

சினத்தீயைப் போலவே இவன் தண்ணிய சாயலையும் உடையவன். இவனதுஅருள் காவிரி நீர் போலவும், குமரி முனை நீர் போலவும் பயனும் புனிதத் தன்மையும் (பதிற். 50 : 6-7) உடையதாயிருந்தது.

## தோற்றப் பொலிவு

சந்தனம் பூசி அதன் மேல் வண்ணக் குழம்புகளால் வகைபெற எழுதி வண்டுகள் மொய்க்குமாறு பொலிவுடன் இவனது மார்பு விளங்கியது (பதிற். 48 : 11-12, 50 : 16-18). பொன்னாலாகிய மாலையையும் அணிந்திருந்தான் (பதிற். 43 : 11). கணையமரம் போன்ற வலிமை மிக்க விலா எலும்புக்கூட்டுடன் அகன்றிருந்தது அவன் மார்பாகும் ('எழுமுடி மார்பின் எய்திய சேரல்' – பதிற். 45 : 6). மன்னர்களின் ஏழு முடிகளைக் கோத்து அணிந்திருந்தான் எனக் கூறுவோரும் உளர் (பதிற். 45 : 6 உரை). இவன் பார்வைக்கு அடக்கம் உடையவனாகக் காணப்பட்டான். எனினும், யாருக்கும் வணங்காத ஆண்மை உடையவனாக விளங்கினான் (பதிற். 48 : 9). யானைமீதும் தேர்மீதும் இவன் ஏறிச்சென்றான் (பதிற். 41 : 7, 15 : 42 : 18-20).

## சிறப்புச் செயல்கள்

இவனது செயல்களில் சிறப்பு மிக்கனவாக இரண்டைக் குறிப்பிடலாம். அஃதாவது கற்பரசி கண்ணகிக்குச் சிலையமைத்துத் தெய்வமாக்கி வழிபட்டதும், காஞ்சியம் பெருந்துறை என்னுமிடத்தில் தன் ஆயத்தார் புடைசூழ நீர்விழாக் கொண்டாடியதும் (பதிற். 48 : 18; சிலப்பதிகாரம்) ஆகும்.

## மனைவி

இவனது மனைவி வேண்மாள் ஆவாள். இவளைச் சோழர் குடிப்பெண் என்பர். இவள் சிறந்த அழகியாவாள் (பதிற். 42 : 7). இவன் பிற மகளிரோடு மகிழ்ந்திருந்ததாகத் தெரிகிறது (பதிற். 50 : 18).

# ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

இவன் தந்தை நெடுஞ்சேரலாதன்; தாய் வேளாவிக் கோமான் பதுமன் மகள்; அண்ணன் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல். இவன் செங்குட்டுவனுக்கும் இளையவன் எனலாம்.[35]

## நாடு

பயன்படுத்த முடியாமல் அழியும் செல்வவளம் மிக்க நகரம் பந்தர் (பதிற். 55 : 4). இது கடற்கரையில் இருந்தது (பதிற். 53 : 4). இக்கடற்கரைப் பகுதி 'கானலம் பெருந்துறை' என்னும் பெயரைப் பெற்றிருந்தது. இப்பெருந்துறைப் பகுதியையும் அதனை அடுத்திருந்த வயல்வளம் மிக்க நன்னாட்டையும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் தன் தொடக்க காலத்தில் ஆண்டு வந்தான். இக் காலத்தில் பந்தர் இவனது தலைநகரமாகக்கூட அமைந்திருக்கக்கூடும். இது இவனது தந்தை நெடுஞ்சேரலாதன் குடநாட்டிலிருந்து ஆண்டு கொண்டிருந்த காலம்.

தென்னை வளம்மிக்க துறைமுகம் நறவு. இது குட்ட நாட்டின் வடபால் கொண்கான நாட்டில் இருந்தது. அப்பகுதியில் வாழ்ந்த இனத்தவரோடு இவன் மகிழ்ந்து வாழ்ந்து வந்தான் (பதிற். 60 : 10-12). கொண்கான் நாடு முல்லை வளம் மிக்க நாடு. அந்நாட்டு மக்கள் புன்புலத்தை உழுது விளையும் கதிர்மணிகளைப் பெற்று வாழ்ந்து வந்தனர். அந்த நாட்டு மக்கள் இவனது தலைமையை விரும்பி ஏற்றனர்.[36]

நெடுஞ்சேரலாதனுக்குப் பின் செங்குட்டுவன் தலைமையின் கீழ்ச் சேர நாட்டு ஆட்சி அமைந்தது. அப்போது இவன் தான் ஆண்டு கொண்டிருந்த நாட்டுக்குத் தெற்கிலிருந்த குடநாட்டு ஆட்சிப் பொறுப்பையும் ஏற்றான் (பதிற். 55 : 9 - 'குடவர்கோ').

இவனது ஆட்சிக் காலம் முழுவதும் நாடு காவல் பணியாய் அமைந்திருந்தது எனலாம்.

இவன் தன்னை அண்டி வாழ்ந்த மழநாட்டுக் குடிமக்களுக்குக் கவசம்போல் அமைந்து அவர்களைக் காத்து வந்தான் (பதிற். 55 : 8 'மழவர் மெய்ம்மறை'). தன் ஆட்சியை விரும்பாத மழவர்களை இவன் வென்று அவர்களின் தொகை குறையுமாறு செய்தான்.

மழவர்களுக்குக் கவசம் போல் விளங்கியது போலவே, இவன் குதிரை மலைப் பகுதியிலிருந்த வில்லோர் குடிமக்களுக்கும் பாதுகாவலனாய் விளங்கினான் (பதிற். 59 : 9-வில்லோர் மெய்ம்மறை').

## போர்

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் தன் முன்னோர் வென்ற நாடுகளையெல்லாம் தானும் வென்றான் (பதிற். 53 : 12-13). வேந்தர்தம் தார்ப்படை அழிந்து அலறுகையில் மலைநாட்டைக் கைப்பற்றினான் (பதிற். 55 : 17-18). வேந்தர்கள் போர்க்களத்தில் மெய்ம்மறந்தனர் (பதிற். 56 : 7). மனைவியைப் பிரிந்திருந்தவன் வேந்தர்களின் எயிலைப் பிரிந்திருக்கவில்லை (பதிற். 52 : 31) என்பது இவன் உழிஞைப் போரில் ஈடுபட்டிருந்த நிலைமையைக் காட்டும். இவனுக்கு நண்பர் அல்லாத ஏனைய மழவர் இவனது பகைவர்களுடன் சேர்ந்து கொண்டு இவனைத் தாக்கியபோது இவன் அவர்களைக் கொன்று அவர்களின் எண்ணிக்கையைக் குறைத்தான் (பதிற. பதி. 6 : 7-8). போர்களில் இவன் பல மன்னர்களைத் தோற்றோடும்படி செய்தான் (பதிற். பதி. 6 : 8). பகைவர்கள் இவனுக்குத் திறை தந்தபோது அதனை ஏற்றுக்கொண்டு அவர்களை அழிக்காமல் விட்டுவிட்டு மீண்டான் (பதிற். 53 : 10-13).

## தண்டாரணியப் போர்

இவையேயன்றி ஆறாம் பத்துப் பாடப்பட்ட காலத்திற்குப் பின் இவன் கரந்தைப் போரில் ஈடுபட்டு வெற்றி பெற்றான். தண்டாரணியத்தில் வாழ்ந்த மக்கள் இவனது குடநாட்டில் புகுந்து வருடை ஆடுகளைக் கவர்ந்து சென்றனர். ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் தண்டாரணியத்துக்கே படையெடுத்துச் சென்று அவர்கள் கவர்ந்து சென்ற ஆடுகளை மீட்டுக் கொண்டு வந்தான். அவற்றைத் தொண்டி நகருக்குக் கொண்டுவந்து ஆட்டுக்குரியாருக்குக் கொடுக்க ஏற்பாடு செய்தான் (பதிற். பதி. 6 : 3-4).

## படைச் செருக்கு

இவனது வெற்றிகளுக்கு உறுதுணையாய் அமைந்தவை போர்த் திறமும் இவனது படையின் ஆற்றலுமாகும்.

நாகப்பாம்பை இடி கொல்வது போலப் பகைவர்களைக் கொல்லும் ஆற்றல் மிக்கவன் இவன் (பதிற். 51 : 26-28). இவனது படை வீரர்கள் வாண்முகம் பொறித்த தழும்பினைப் பெற்றவர்களாய்ப் பயிற்சித் திறம் மிக்கு விளங்கினர் (பதிற். 57 : 1-3). தும்பை சூடித் தேரில் ஏறிவந்து இவனது நாட்டைத் தாக்கிய பகைவரின் தார்ப்படையை இவர்கள் போந்தை சூடி எதிர்த்து வென்று கொன்றனர் (பதிற். 51 : 31). இவனது படைகள் பகைவரின் யானைகளைக் கண்டு நிலைகொள்ளாது பாய்ந்தன (பதிற். 54 : 16-17).

## கொடைத் தன்மை

எல்லா வசதிகளையும் பெற்றவர்கள் செல்வர்கள். இவன் அத்தகைய வசதிகளையெல்லாம் பெற்றிருந்ததோடு அவற்றைப் பிறர்க்கு அளித்துச் செல்வர் செல்வனாக விளங்கினான். சேர்ந்தோரை யெல்லாம் பாதுகாக்கும் கோட்டை அரணாக இவன் விளங்கினான் (பதிற். 59 : 10). இரவலர்கள் யாரும் இவனை நாடி வாராத காலத்தில் இவன் தானே சென்று தேடிப்பிடித்துத் தேரில் ஏற்றிக்கொண்டு வந்து அவர்களுக்குப் பரிசில்கள் நல்கினான் (பதிற். 55 : 10-11). அவர்கள் ஆசைப்பட்ட மொழிகளைப் பேசி, பின் பேசியபடியே நடந்து தன் சொல்லை உண்மையாக்கினான் (பதிற். 55 : 12 – 'நசைசால் வாய்மொழி'). இரவலர்களுக்குப் பரிசில் நல்கியதோடு அமையாது அவர்கள் வாழ்ந்த ஊர்களையே வளம் பெருகச் செய்தான் ('இரவல் மாக்கள் சிறுகுடி பெருக, உலகம் தாங்கிய மேம்படு கற்பின்' – பதிற். 59 : 7-8).

இவன் இரவலர்கள் சிறு துன்பம் அடைவதைக் கண்டு பெரிதும் அஞ்சி அதனைப் போக்கினான் (பதிற். 57 : 14). இத்தகைய பண்புகள் நிறைந்த இவனைப் பலரும் 'வள்ளல்' என்று புகழ்ந்துரைத்தனர் (பதிற். 54 : 1).

இவனேயன்றி இவனது நாட்டு மக்களும், தம்மிடமிருந்த பல வகை வளங்களையும் பகுத்துண்ணும் பண்பினராய் விளங்கினர். அவர்கள் நெறி தவறாது அறம் புரிந்து வாழ்ந்து வந்தனர் (பதிற். 59 : 16).

இவன் பார்ப்பனர்க்குப் பசுக்களைக் கொடுத்ததோடு, தான் ஆண்ட குடநாட்டில் ஓர் ஊரை அவர்களின் நல்வாழ்வுக்கென்று ஒதுக்கிக் கொடுத்தான் (பதிற். பதி. 6 : 4-5).

இவனைக் காக்கைபாடினியார் நச்செள்ளையார் என்னும் புலவர் சிறப்பித்துப் பாடினார். அவர் பெண்பாற் புலவர். அப்புலவரைச் சிறப்பித்து அவன் பரிசில்கள் வழங்கினான்; அவர் நகை செய்துபோட்டுக் கொள்ள வேண்டி ஒன்பது கா நிறையுள்ள பொன் கொடுத்தான்; செலவுக்காக நூறாயிரம் காணம் பணம் கொடுத்தான். இவற்றிற்கு மேலாகத் தன் பக்கத்தில் அமர இருக்கை அளித்துப் பெருமைப் படுத்தினான் (பதிற். பதி. 6 கொளு).

## பண்பு நலம்

இவனது கை இரப்போர்க்குக் கொடுப்பதற்காகக் கவிந்ததேயன்றி, எதை விரும்பியும் மலர்ந்ததில்லை (பதிற். 52 : 11-12). பிறரை விரும்பி அவர்களுக்கு நலம் பயப்பனவற்றைச் செய்யும் நெஞ்சப் பாங்கு உடையவன் (பதிற். பதி. 6 : 10 – 'நாடல் சான்ற நயனுடைய நெஞ்சின்'). 'இன்று வாண்மறவர் வென்று கொடுத்த உணவை உண்டோம். நாளை

கோட்டை கடந்தபின்தான் உணவு!' என்று போர்க் காலத்திலும் பொய் கூறாது உண்மையையே பேசி வந்தான் (பதிற். 58 : 8-9). 'பகைவர் திறைதரின் அவற்றை ஏற்று அவர்களைப் பணிகொள்வாயாக!' என்று இவன் அறிவுரை கூறப்பட்டுள்ளான் (பதிற். 59 : 11-13). இதனைப் பார்க்கும்போது பகைவர் பணிந்தாலும் அவர்களை ஏற்காத பண்பினனாக ஒரு காலத்தில் விளங்கினான் என்பது பெறப்படும்.

## சிறப்புச் செயல்கள்

இவன் ஆடல் கலையில் தேர்ச்சி மிக்கவன்.[37] விழாக் காலத்தில் விளக்கொளியில் கோடியர் முழவு முழங்க மைந்தரும் மகளிரும் தழுவிக்கொண்டு ஆடும் துணங்கை ஆட்டத்தில் இவனும் தலைக்கை தந்து (தலைமையிடம் கொண்டு) நெளிந்து ஆடினான் (பதிற். 52 : 14, 56 : 3). வெற்றிக்குப் பின் போர்க்களத்தில் ஆடும் துணங்கை ஆட்டத்திலும் இவன் பங்கு கொண்டான் (பதிற். 57 : 4). இவ்வாறு ஆட்டத்தில் ஈடுபட்டுத் தன் மனைவியையும் மறந்து நீண்ட நாள் வெளியில் தங்கிவிட்டதும் உண்டு (பதிற். 51 : 11-15). அரசாட்சியை மறந்து தங்கிவிட்டதும் உண்டு (பதிற். 59 : 19).[38]

இவன் தனது நாட்டைக் குழந்தையைக் காக்கும் தாய்போலக் காத்து வந்தான் (பதிற். பதி. 6 : 2-10). நன்னடத்தைக்குப் பெருமதிப்பளித்துச் சான்றோர்களைப் பேணி வந்தான் (பதிற். 55 : 1).

## உருவத் தோற்றம்

ஒளிவீசும் அணிகலன்களை இவன் அணிந்திருந்தான். போர்ச் சின்னமாக அணியும் உழிஞைப் பூவையும் பொன்னால் செய்து அணிந்துகொள்ளும் அணிவேட்கையன் (பதிற். 56 : 5). வேங்கையை வென்ற களிற்றின் மீது ஏறிக்கொண்டு இவன் சென்றது உண்டு (பதிற். 53 : 18-21).

## சிறப்புப் பெயர்கள்

வானவரம்பன், (பதிற். 58 : 12; பதிற். பதி. 6 : 6), ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் (பதிற். பதி. 6 : 11) என்பன இவனது சிறப்புப் பெயர்கள். இவன் ஆடற்கலையில் சிறந்து விளங்கினான் என்று குறிப்பிட்டோம். இதனாலோ, வருடை ஆடுகளை மீட்டுக்கொண்டு வந்தமையாலோ இவன் 'ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்' என்று சிறப்பிக்கப்பட்டான்.

## மனைவி

இவன் மனைவி சிறந்த அறிவுநலம் வாய்க்கப்பெற்றவள் (பதிற். 55 : 1, 'ஆன்றோன் கணவ'). இவன் ஆட்டத்தில் ஈடுபட்டுப் பல நாள்

வெளியில் தங்கியிருந்தபோது அவனைப் பிரிந்து தனிமையில் இவள் வாழ்ந்து வர நேர்ந்தது. அவன் பல நாள் கழிந்து மீண்டும் இவளிடம் வந்தபோது இவள் ஊடினாள் (பதிற் : 52 : 14-24). பிற சேர வேந்தரின் மனைவியைப் போல ஆறிய கற்புடையவள் அல்லல்; கணவனை ஊடித் திருத்தும் சீரிய கற்பினள். இவளேயன்றி வேறு மனைவியரும் இவனுக்கு இருந்தனர்.

## உதியன் கால்வழி அரசர்கள் (திரண்ட நோக்கு)

உதியன் கால்வழி அரசர்கள் என்று தெளிவாகத் தெரியவருபவர் அறுவர் என்று கண்டு அவர்களது வரலாற்றைத் தனித்தனியே விரிவாக அறிந்தோம். போர்கள், சிறப்புச் செயல்கள் முதலானவற்றை ஒருங்கிணைத்துத் திரட்டி ஆய்வுக் கண்ணோட்டத்தில் நோக்குவோம்.

அடியில் காணும் பட்டியல் அவர்களது உறவு முறையினை விளக்கும்.

## உதியன் கால்வழி அரசர்களின் உறவு முறை (பதிற்றுப்பத்துப் பதிகத்தில் உள்ளபடி)

| | | | |
|---|---|---|---|
| உதியஞ் சேரற்கு | வெளியன்வேள் மான்(மகள்)நல்லிணி | ஈன்ற மகன் | இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் |
| இமயவரம்பன் | | தம்பி | பல்யானைச் செல்கெழு குட்டுவன் |
| ஆராத்திருவின் சேரலாததற்கு | வேளாவிக் கோமான் பதுமன் தேவி | ஈன்ற மகன் | களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் |
| குடவர்கோமான் நெடுஞ் சேரலாதற்கு | சோழன் மணக்கிள்ளி | ஈன்ற மகன் | கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன் |

| | | | |
|---|---|---|---|
| குடக்கோ நெடுஞ் சேரலாதற்கு | வேளாவிக் கோமான் தேவி | ஈன்ற மகன் | ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் |

முன் கண்ட அட்டவணைச் செய்தியைக்கொண்டு கீழ்க்காணும் உருவமைதியால் இந்த அரசர்களது உறவினை விளக்கலாம்.

உதியஞ் சேரல் *(நல்லினி)*

- இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் *(குடவர்சேரமான் நெடுஞ்சேரலாதன்)* *(குடக்கோ நெடுஞ்சேரலாதன்)* *(ஆராத்திருவின் சேரலாதன்)*
    - களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் *(தாய் வேளாவிக் கோமான் பதுமன் தேவி)*
    - கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன் *(தாய் சோழன் மணக் கிள்ளி)*
        - குட்டுவன் சேரல்
    - ஆடுகோட் பாட்டுச் சேர லாதன் *(தாய் வேளாவிக் கோமான் தேவி)*
    - *(இளங்கோ அடிகள்)* *(தாய் சோழன் மணக் கிள்ளி)*
- பல்யானைச் செல் கெழு குட்டுவன்

இந்த உறவுமுறையைச் செங்குட்டுவனை மையமாகக் கொண்டு காணின் செங்குட்டுவன் தலைமுறை, செங்குட்டுவனின் தந்தை தலை முறை, செங்குட்டுவனின் பாட்டன் தலைமுறை, செங்குட்டுவனின் மகன் தலைமுறை என்ற முறையில் நான்கு தலைமுறைகள் அமை கின்றன. இந்த நான்கு தலைமுறையினர் காலம் சுமார் 100 முதல் 150 ஆண்டுகள் என்று கொள்வது பொருத்தமான முடிவாய் அமையும்.

இலங்கைக் கயவாகு அரசன், செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை யமைத்து விழா எடுத்தபோது வந்திருந்தான் என்று கூறப்படுவதைக் கொண்டு விழா நடந்த காலம் கி.பி. 175 என்று கொள்ளலாம். செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுத்தபோது அவன் அரியணை

யேறி ஐம்பது ஆண்டு நிறைவுற்றிருந்தது. எனவே, செங்குட்டுவன் அரியணை ஏறியது கி.பி. 125 எனத் தெரிகிறது. செங்குட்டுவன் 55 ஆண்டு அரசு வீற்றிருந்தான் என்று பதிகம் கூறுகிறது. எனவே, அவன் அரசாண்ட காலம் கி.பி. 125-180 எனக் கருதலாம். இவன் கால இறுதியில் கயவாகு வேந்தன் (கி.பி. 174-196) இலங்கையில் அரசாண்டான் எனத் தெரிகிறது.

அண்ணன் தம்பியருக்கிடையே அகவை இடைவெளி ஐந்து என்று பொதுவகையாகக் கொள்வோமானால், செங்குட்டுவனின் அண்ணன் நார்முடிச் சேரல் கி.பி. 120இல் அரியணை ஏறினான் என்றும், செங்குட்டுவனது தம்பி கி.பி. 130இல் அரியணை ஏறினான் என்றும் கொள்ளலாம். இவ்வாறு கணிக்கும் போது நார்முடிச்சேரல் கி.பி. 120 முதல் 145 வரை அரசாண்டான் என்றும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் கி.பி. 130 முதல் 168 வரை அரசாண்டான் என்றும் முடிவதைக் காணலாம்.

தந்தைக்கும் மூத்த மகனுக்கும் இடைவெளி அதாவது, ஒரு தலைமுறை 25 ஆண்டுகள் என்று கொள்வோமானால் நார்முடிச் சேரலுக்கும் அவனது தந்தைக்கும் அரியணையேறிய தொடக்க ஆண்டுகள் முறையே கி.பி. 120, கி.பி. 95 என்று அமைவதைக் காணலாம். இந்த முறையில் 50 ஆண்டுகள் அரசாண்ட நெடுஞ்சேரலாதன் கி.பி. 95-145 ஆண்டுகளில் அரசாண்டான் எனலாம். இவனது தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன் கி.பி. 100-125 ஆண்டுகளிலும், இவர்களின் தந்தை உதியஞ்சேரல் கி.பி. 70-95 ஆண்டுகளிலும் அரசாண்டனர் என்று முடியும். இந்த அரசாட்சி முறையை அடுத்துள்ள அட்டவணையில் காணலாம். இது பிற சமகால அரசர்களை ஒப்புநோக்கி ஆராயப் பெரிதும் உதவும்.

இனி இவர்களது நாடு, தலைநகர், போர்களும் அவற்றின் முடிவுகளும் ஆகியவற்றை அடுத்துக் காணும் பட்டியலில் காணலாம்.

| அரசன் | நாடு | தலைநகர் | போரும் முடிவும் |
|---|---|---|---|
| உதியஞ்சேரல் | குட்டநாடு | வஞ்சி | நாட்டின் பரப்பை விரிவாக்கினான். முதியரை நண்பராக்கிக் கொண்டான். |
| இமயவரம்பன் நெடுஞ்சேர லாதன் | குடநாடு | மாந்தை | கடம்பறுத்தல், யவனரைக் கைது செய்துகொண்டு வரல், இமயம்வரை வெற்றி. |

| அரசன் | நாடு | தலைநகர் | போரும் முடிவும் |
|---|---|---|---|
| பல்யானைச் செல்கெழு குட்டுவன் | குட்டநாடு, பூழிநாடு, அயிரை மலை, இரு கடலையும் எல்லை யாகக் கொண்டது | வஞ்சி | மழவர்க்கு அடைக்கலம் தந்தான்; உம்பற் காட்டில் ஆட்சியை நிலைநாட்டினான்; அகப்பாக் கோட் டையை அழித்தான்; பரிவேள்வி செய்தான்; சோழ பாண்டியரை வென்றான். |
| நார்முடிச் சேரல் | குன்றநாடு, இது முதியர் குடி வழியினர் வாழ்ந்த நாடு | | நன்னனைக் கொன்று அவன் கைப்பற்றி யிருந்த பூழி நாட்டைத் தன்னாட்டுடன் சேர்த் துக் கொண்டான். நெடுமிடல், கொடு மிடல் ஆகியோரைக் கொன்றான். (இது பாண்டியனை வென் றது என்று கருதலாம்.) |
| செங்குட்டுவன் | பூழிநாடு, மலைநாடு | வஞ்சி | 1. மோகூர்ப் போரில் பழையனை வென்றான். 2. குராலம் பறந்தலைப் போரில் வென்றான். 3. நேரிவாயில் போரில் வென்று சோழக் குடியினர் ஒன்பதின்மரை வீழ்த்தித் தன் மைத்துனச் சோழ னுக்கு உதவினான். |

| அரசன் | நாடு | தலைநகர் | போரும் முடிவும் |
|---|---|---|---|
| | | | 4. வியலூர்ப் போரில் வென்றான். |
| | | | 5. கொடுகூர்ப் போரில் வென்றான் |
| | | | 6. சோழநாட்டு இடும்பில் போரில் வெற்றி கண்டான். |
| | | | 7. கொங்கு நாட்டை வென்று களவேள்வி செய்தான். |
| | | | 8. தக்கணப் போரில் ஈடுபட்டுக் கொங்கணர், கலிங்கர், கருநாடர், பங்களர், கங்கர், கட்டியர், வட சூரியர்முதலானோரை வென்றான். |
| | | | 9. கடல் பிறக்கு ஓட்டினான் |
| | | | 10. தகடூர்ப் போரில் வெற்றி கண்டான். |
| | | | 11. இமயத்தில் வில்லைப் பொறித்தான். |
| | | | 12. கடம்பு எறிந்தான். |
| | | | 13. இரண்டாம் முறையாக வடநாட்டுப் போரில் வென்று தன் தாயாரைக் கங்கையில் நீராட்டி வந்தான். |

| அரசன் | நாடு | தலைநகர் | போரும் முடிவும் |
|---|---|---|---|
| | | | 14. மூன்றாம் முறையாக வட நாட்டில் போரிட்டுக் கனகவிசயர் தலையில் கண்ணகி சிலைக்குக் கல் சுமத்திக் கொணர்ந்தான். |
| ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் | பொறை நாடு | தொண்டி, பந்தர், நறவு | மலை நாட்டை வென்றான். தண்டாரணியப் போரில் வெற்றி பெற்று வருடை ஆடுகளை மீட்டுவந்தான். |

# அந்துவன்

பதிற்றுப்பத்து நூலில் ஏழாம் பத்தின் தலைவனாகச் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளவன் செல்வக் கடுங்கோ வாழியாதன். இவனது தந்தை அந்துவன் என்னும் சேர அரசன் (பதிற். பதி. 7 : 2).

அந்துவனின் மனைவி 'பொறையன் பெருந்தேவி'. இவள் ஒரு தந்தை என்பவனின் மகள். பெருந்தேவி என்னும் வழக்கு பொதுவாக அரசியை உணர்த்தும். எனவே, இவளது பெயர் பொறையனுக்கு மனைவி என்று பொருள் தரும். இதனால், அந்துவன் பொறையர் குடி அரசன் என்பது தெளிவாகப் பெறப்படும். ஆகவே, புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள 'சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறை' (புறம் 13). இந்த அரசனே என்பது பெறப்படும்.

## நாடு

இவன் கருவூரைத் தலைநகராகக்கொண்டு நாடாண்டு வந்தான். கொங்கு நாட்டிலுள்ள கருவூரே இவனது கருவூர் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

## அந்துவனும் மோசியாரும்

உறையூர் ஏணிச்சேரி என்னுமிடத்தில் பிறந்து வளர்ந்த மோசியார் என்னும் பெயர் கொண்ட முடவனார், அந்துவனால் மதிக்கப்பட்ட புலவர். ஒரு நாள் அந்தப் புலவருடன் கருவூர் வேண்மாடத்தில் அரசன் அமர்ந்திருந்தபோது சோழ அரசன் முடித்தலைக்கோப்பெரு நற்கிள்ளி யானைமீது அமர்ந்தவண்ணம் கருவூர்த் தெருவில் செல்வதைக் காண நேர்ந்தது. அந்தக் காட்சி சோழ அரசன் சேரநாட்டின் மீது படையெடுத்து வருவதுபோன்று பொது வகையால் தோற்றமளித்தது; ஆனால், உண்மை அதுவன்று, சோழன் அமர்ந்திருந்த பட்டத்து யானைக்கு மதம் பிடித்துவிட்டது. அது சோழனது கட்டுப்பாட்டிற்குள் நில்லாது விருப்பம்போல் ஓடியது. இந்த நிலையில்தான் அந்த யானை கருவூர்த் தெருவில் ஓடி வந்தது. யானைமீது அரசன் இருந்ததால் அவனைக் காக்கும் பொருட்டுக் காவலர்கள் தொடர்ந்து ஓடி வந்தனர். யானையின் மதங்கொண்ட நிலையையும் சோழனின் அளித்தக்க நிலையும் வேண்மாடத்தில் சேர அரசனோடு இருந்த புலவர் உணர்ந்து சேர அரசனிடம் எடுத்துக் கூறினார். சேரன் முதலில் சோழன் படையெடுத்து வருவதாக எண்ணினான்போலும். புலவரின் இந்த உரையால் சேரன் தெளிவு பெற்றிருக்கலாம். சோழனை மதங்கொண்ட யானையிடமிருந்து மீட்க உதவியும் இருக்கலாம். சோழன் பிழைத்திருக்கலாம். இருவரும் நண்பர்களாகியிருக்கலாம். முடிவு என்னவாயிருந்தது என்பதற்குச் சான்றில்லை.

சோழன் கருவூர் வரவேண்டிய அளவுக்கு என்ன நிலை நேர்ந்தது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். எமன் போன்ற யானை மீதிருந்த சோழன் கவசம் சிதைந்த அம்புபட்ட அகன்ற மார்பை உடையவனாக விளங்கினான் என்று கூறப்படுகிறது (புறம் 13 : 1-4).[39] இதனால் இவன் பகைவரை எதிர்த்துப் போராடிய நிலையில் யானைமீது வந்திருந்தான் என்பது பெறப்படுகிறது. இவனது மார்பில் அம்புகள் எய்து காயப்படுத்திய பகைவர்கள் யார்?, போர் எங்கு நடைபெற்றது என்பனவற்றை அறிய இயலவில்லை. எனினும், இவன் சேரனைத் தாக்க வந்தபோது பகைவர்களால் காயப்படுத்தப்பட்டான் எனவும், யானை மதங்கொண்டு சோழனுக்கு அடங்காமல் திடீரென ஓடவே பகைவர் மேலும் இவனைத் தாக்கவில்லை எனவும், சோழனது வீரர் மன்னனைக் காக்க வாளேந்திய கோலத்துடன் யானையைப் பின்தொடர்ந்தார்கள் எனவும், போரின் தொடக்கம் சோழனுக்கும் சேரனின் படைத் தலைவனுக்கும் இடையில் நிகழ்ந்திருக்கலாம் எனவும் நாம் உய்த்துணர்வதற்கான குறிப்புகள் உள்ளன.

## முருகனைச் சிறப்பித்துப் பாடல்

அந்துவன் என்பவன் திருப்பரங்குன்றத்திலுள்ள முருகனைச் சிறப்பித்துப் பாடினான் என்று சங்க காலப் புலவர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார் (அகம் 59 : 10-12). இந்தக் கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் திருப்பரங்குன்றத்திலுள்ள சங்ககாலக் கல்வெட்டு ஒன்று உள்ளது. அஃது அந்துவன் என்பவனது பெயரைக் குறிப்பிடுகிறது. இந்த அந்துவன் நம் சேர அரசன் அந்துவனாக இருக்கலாம். நல்லந்துவனார் என்னும் புலவர் திருப்பரங்குன்றத்து முருகனைச் சிறப்பித்துப் பாடியுள்ள பாடல் பரிபாடலில் (8 : 21-28) இடம் பெற்றுள்ளது. இவர் நெய்தற்கலிப் பாடல்களையும் மற்றும் சில பாடல்களையும் பாடியவர் (கலி. 119). நம் சேர அரசன் அந்துவன் இந்த நல்லந்துவனார் என்னும் புலவர் என்று கருதவும் இடம் உண்டு.

அந்துவஞ்சாத்தன் (புறம் 71 : 13), அந்துவன் கீரன் (புறம் 3 : 59) ஆகிய பெயர்களுக்கும் இவனுக்கும் உறவு முறையில் தொடர்பு இருந்திருக்கவும் கூடும். அந்துவஞ்செள்ளை என்னும் பெயரும் இத்தகையதே (பதிற். பதி. 9 : 2).

## பண்பு நலம்

அந்துவன் தன் நுண்மையான கேள்வி அறிவால் பகைவர்களையும் தன் நண்பர்களாகப் பிணித்து வைத்திருந்தான் (பதிற். பதி. 7 : 1-2).

இவன், புலவர் மோசியாரோடு வேண்மாடத்தில் மகிழ்வாக இருந்தான். இவனது பேரன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, மேலே கூறப்பட்ட மோசியாரின் மகன் என்று பெயர் அமைப்பால் கொள்ளக்கிடக்கும் புலவர் மோசிகீரனார்க்குக் கவரி வீசினான். இந்த நிகழ்ச்சிகள் புலவர்களிடம் இவர்கள் வைத்திருந்த நட்பையும் நன்மதிப்பையும் புலப்படுத்துகின்றன.

## மகன்

இவனது மகன் செல்வக்கடுங்கோ வாழியாதன் ஆவான்.

# செல்வக்கடுங்கோ வாழியாதன்

ஒரு தந்தை என்பவனின் மகள் பொறையன் பெருந்தேவி. இவளுக்கும் அந்துவஞ்சேரலிரும்பொறைக்கும் பிறந்த மகன் செல்வக்கடுங்கோ வாழியாதன்.

## நாடு

இவன் தொடக்க நிலையில் பூழி நாட்டை ஆண்டு வந்தான் (புறம் 387 : 28, 'பூழியர் பெருமகன்'). பூழி நாடு நேரிமலையைத் தன்னகத்தே கொண்டது (பதிற். 67 : 22).[40] செருப்பு மலையும் அயிரையும்கூட இப்பூழிநாட்டிலேதான் இருந்தன (பதிற். 21 : 23, 29). பூழி நாட்டிலிருந்த செருப்பு மலைப் பகுதியைப் பல்யானைக் குட்டுவன் ஆண்டு கொண்டிருந்தபோதுதான், வாழியாதன் அதே நாட்டிலிருந்த நேரிமலைப் பகுதியை ஆண்டுகொண்டிருந்தான். இந்த இருவர் நாட்டுப் பகுதிகளிலும் மணிக் கற்கள் கிடைத்தன (பதிற். 21 : 22, 58 : 17-18). நேரிமலைப் பகுதியில் பலாப்பழம் மிகுதி (பதிற். 61 : 1).

இவனைப் பாடிய புலவர் கபிலர்; இவன் நறவு என்னும் ஊரில் இருந்தபோது பாடினார். இனிய சுனைகளையும் செல்வ வளச் செழுமையையும் கொண்ட பக்க மலைகள் பல சூழ்ந்த நாட்டுப் பகுதியில் அந்த 'நறவு' என்னும் நகரம் இருந்தது (பதிற். 85 : 6-8) என்று கூறப்படுவதால், இவனது தொடக்க கால ஆட்சி பூழி நாட்டுப் பகுதியில் அமைந்திருந்தாலும் இவனது பல வெற்றிகளுக்குப் பின் மேலைக் கடற்கரையில் இருந்த நறவுப் பட்டினமும் இவனது ஆட்சிக்கு உட்பட்டது எனலாம்.

'வில்லோர் மெய்ம்மறை' என்று இவன் குறிப்பிடப்படுகிறான். 'வில்லோர்' குடியினர் குதிரைமலைப் பகுதியில் வாழ்ந்து வந்தனர்.[41] அவர்களுக்கு இவன் மார்புக் கவசம் போல் பாதுகாவலாய் விளங்கினான்.[42]

தன் தந்தைக்குப் பின் இந்த வாழியாதன், அவன் ஆண்டு கொண்டிருந்த கொங்குநாட்டுக் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வரலானான் (புறம். 387 : 34 - 'பொருநை').[43]

## வெற்றிகள்

இவன் எந்த நாட்டோடு, யாரோடு போரிட்டான் என்னும் செய்திகள் பாடல்களில் குறிப்பிடப்படவில்லை. எனினும், பகை வேந்தரின் செம்மாப்பைத் தொலைத்தான் (பதிற். 70 : 10); அவர்களின் காவற்காட்டில் தன் முரசு முழங்க யானைப்படையை நடத்திச் சென்றான் (புறம். 387 : 19-22); உழிஞைப் பூச்சூடி மதிலை முற்றுகையிட்டு ஒரே முற்றுகையில் இருவரைத் தோற்றோடும்படி செய்தான் (பதிற். 63 : 8-11); படையுடன் வளைத்து எயிலை முற்றுகை இட்டான் (பதிற். 62 : 4); இவனது வீரர்கள் பகைவேந்தர்கள் ஊர்ந்துவந்த பட்டத்து யானையின் தந்தத்தைக் கொண்டு வந்து தாம் உண்ட கள்ளுக்கு விலையாகக்

கொடுத்தனர் (பதிற். 68 : 9-11) என்னும் செய்திகள் இவன் பகை வேந்தரின் மதிலை முற்றுகையிட்டு வென்றதைக் குறிப்பிடுகின்றன.

பல்யானைக் குட்டுவன் அகப்பாக் கோட்டையை அழித்தான். பாண்டியனையும் அவனைச் சார்ந்தோரையும் வென்றான். இந்தப் போரில் பல்யானைக் குட்டுவனுக்குத் துணையாக வாழியாதன் போரிட்டிருக்க வேண்டும். இந்தப் போர் நிகழ்ச்சிகளே மேற்கண்ட செய்திகளில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். துணையாக நின்று இவன் போரிட்டமையால் வெற்றிகள் இவனுக்குரியன என்று வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை. இவன் உன்னமரத்தின் பகைவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளான் (பதிற் 61 : 6). இந்த உன்ன மரம் அகப்பா மன்னனின் காவல் மரமாகவோ வேறொருவனுடையதாகவோ இருக்கலாம். யாருடையதாக இருப்பினும் இவன் அந்த உன்ன மரத்தை வெட்டிச் சாய்த்தான் என்பது மட்டும் தெளிவாகிறது.[11] அகப்பாப் போரில் துணையாய் நின்றதோடு மட்டுமன்றி வேறு சில போர்களிலும் இவன் ஈடுபட்டு வெற்றி கண்டான்.

செருப்பல கடந்தான் (பதிற். பதி. 7 : 5), பகைவரை ஓட்டினான் (பதிற். பதி. 7 : 4), பகைவர் குழுவை நொறுக்கினான் (பதிற். 66, 4-5), ஞாயிற்றின் முன் விண்மீன் மறைவதுபோல இவன் முன் நிற்க மாட்டாது பகைவர் மறைந்தனர் (பதிற். 64 : 12-13) என்னும் செய்திகள் அவ்வெற்றிகளைத் தெரிவிக்கின்றன.

தோற்ற மன்னர்கள் இவனுக்குத் திறை தந்தனர் (புறம் 387 : 12). யானைகள் அத்திறைப் பொருள்களில் அடங்கியிருந்தன (பதிற். 66 : 7). தன் பகையைத் தேடிக்கொள்வதால் விளையும் தீங்கை, பகைவர்கள் நாட்டை அழிப்பதன் வாயிலாக வெளிப்படுத்திப் பகைநாட்டுக் குடிமக்களையும் உணரும்படி செய்தான் (பதிற். 69 : 11-14). இதனால், மன்னன் விரும்பாவிட்டாலும் பகைநாட்டு மக்கள் தாமே முன்வந்து இவனுக்கும் இறை (வரி) செலுத்திய துண்டு (பதிற். 62 : 12).

இவனது வெற்றிக்கு உறுதுணையாய் அமைந்தது இவனுடைய படை. இவனது நாற்படை போரில் தேர்ச்சி பெற்றிருந்தது (பதிற். 69 : 15-18). இவனது வேல், வாள் வீரர்கள் வெற்றி உறுதி தோன்றத் தம் படைக்கருவிகளில் தம் குடிச்சின்னமாகிய போந்தைக் கண்ணியையும் போர் வெற்றிச் சின்னமாகிய வாகைப் பூவையும் தொடக்கத்திலேயே அணிந்து கொண்டு போருக்குச் சென்றனர் (பதிற். 66 : 15). உடம்பெல்லாம் வாள்பட்ட தழும்பு வரிகளும் மார்பில் வேல் பாய்ந்த விழுப்புண் தழும்புகளும் உடையவர்கள் அவர்கள் (பதிற். 66 : 13-14). போர் தொடங்கினால் இடையில் உணவைப் பற்றிக்கூட அவர்கள் கவலைப்படமாட்டார்கள். பகைவேந்தர் பட்டத்து யானையின் தந்தம்,

தாம் உண்ட கள்ளுக்கு விலையாகக் கொடுக்கும் அளவுக்கு அவர்களுக்கு எளிய பொருள் (பதிற். 68 : 11).

## கொடைத் தன்மை

இவன் சிறந்த வள்ளல்; தன் நாண்மகிழ் இருக்கையில் கொடைவிழாக் கொண்டாடிப் பரிசிலர்களுக்கு வேண்டியனவெல்லாம் கொடுத்தான் (பதிற் 65 :13). சேரநாட்டுப் பந்தர்த் துறைமுகத்தில் கிடைத்த முத்து (பதிற் 67 : 2, 5), களிறு, மா, ஆநிரை, கதிரடித்துக் குவித்துள்ள களம் (புறம், 387 : 22-25) முதலானவை அவன் வழங்கிய கொடைப் பொருள்கள்.

அக்கொடைப் பொருள்களை அவன் மழையைக் காட்டிலும் மிகுதியாகக் கொடுத்தான்; பாலைப் பண்ணில் பையுள் இசைத் திறத்தைக் கட்டினால் செவிகளில் பாயும் அருளின்பம் போலப் பரிசிலர் உள்ளம் இன்புறும்படி நல்கினான் (பதிற். 65 : 11-16); அலர்ந்த நெய்தல்போல் மலர்ந்த முகத்துடன் கொடுத்தான் (பதிற். 64 : 16-17); பெற்றவர்கள் கனவோ என்று மருளும்படி நனவில் கொடுத்தான் (புறம் 387 : 16); ஏற்றவரின் வறுமையெல்லாம் நீங்கும்படி அளித்தான் (புறம் 387 : 12-13); கொடுக்கும்போது பெறுபவர்களின் சிறுமையை அளவுகோலாக இவன் கொண்டதில்லை. தன் பெருமையின் தகவையே அளவுகோலாகக் கொண்டான் (புறம் 387 : 29-32).

பரிசில் நாடிவரும் வயிரியர்களைத் தன் அரண்மனைக்கு வெளியில் கண்ட பொழுதே குதிரைகளுக்கு அணிகலன்களைப் பூட்டிப் பரிசிலாக அனுப்பிவைத்தான். பாசறையிலும் போர்க்களத்திலும் இருந்தபோதும் கொடுத்தான் (பதிற். 64 : 8-10, 67). நாண்மகிழ் இருக்கையில் நடந்த கொடைப்போரில் பாடினிக்கே வெற்றி (பதிற். 61 : 15-16).[45]

இவ்வாறு இவன் கொடை நல்கியபோதெல்லாம் முன்பு கொடுத்த வற்றை நினைத்துப் பார்த்ததில்லை; இவ்வளவு கொடுக்கிறோமே என்று பெருமித உணர்வு தோன்றி மகிழ்வதுமில்லை. கொடுக்கும் போதெல்லாம் பெருவள்ளல் (பதிற். 61 : 8).

மற்றும் இவன் வேள்வி செய்து கொடை வழங்கினான் (பதிற். பதி. 7 : 6-7). அவ் வேள்வியில் அந்தணர்களுக்குப் பெறற்கரிய அணிகலன்களைத் தாரை வார்த்துக் கொடுத்தான் (பதிற். 64 : 4-5); கடவுளர்க்கு உணவூட்டினான்; அதனால் ஐயர்கள் இன்புற்றனர் (பதிற். 70 : 18-19). வேள்வி செய்த திருமால் வழிநின்ற புரோகிதனுக்கு ஒகந்தூர் என்னும் நெல் மிகுதியாக விளையும் ஊரையே கொடுத்தான் (பதிற். பதி. 7 : 9).

தன்னைப் பாடிச் சிறப்பித்த புலவர் கபிலர்க்கு நூறாயிரம் காணம் பணமாகக் கொடுத்தான். 'நன்றா' என்னும் குன்றின் மீது ஏறிநின்று தன்

கண்ணிற்கண்ட இடமெல்லாம் அவருக்குக் காட்டி அவற்றையெல்லாம் அவருக்குப் பரிசாகக் கொடுத்தான் (பதிற். கொளு).

## பண்பு நலன்

வள்ளன்மைப் பண்புடன் மற்றும் சிலவும் குறிப்பிடத்தக்கனவாய் இவனிடம் அமைந்திருந்தன. இவன் வளமான உள்ளம் படைத்தவன் (பதிற். 7 : 11). பார்ப்பார்க்கல்லது பணியாமை, நட்டோர்க்கல்லது கண் அஞ்சாமை, மகளிர்க்கல்லது மார்பு மலராமை, உலகமே பிறழ்ந்தாலும் சொன்ன சொல் தவறாமை ஆகிய பண்புகள் இவனிடம் குடி கொண்டிருந்தன (பதிற். 63 : 6-7).

## சிறப்புச் செயல்கள்

பகைவரை வென்று கிடைத்த கொண்டிப் பொருளை இவன் தமிழ் வளர்க்கும் பணிக்குச் செலவிட்டான் (பதிற். 63 : 9–'கொண்டி மிகைப்படத் தண்டமிழ் செறித்து').

இவன் பல ஊர்களைத் தோன்றுவித்து, நாடோடிகளாகத் திரிந்துவந்த மக்களை நிறைபெற்று வாழும்படி செய்தான் (பதிற். பதி. 7 : 4; 'நாடுபதி படுத்து').

## தோற்றப் பொலிவு

இவன் சிறந்த அணிகலன்களைத் தன் மார்பில் அணிந்துகொண்டு பொலிவுடன் தோற்றமளித்தான் (பதிற். 65 : 12). கழலும் தொடியும்கூட இவன் அணிந்திருந்தான் (பதிற். 64 : 15).

## சிறப்புப் பெயர்கள்

செல்வக்கோ (பதிற். 63 : 16), செல்வக்கோமான் (பதிற். 67 : 23), வாழியாதன் (பதிற். 63 : 21), செல்வக்கடுங்கோ வாழியாதன் (பதிற். பதி. 7 :12), சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக்கடுங்கோ வாழியாதன் (புறம் 387 : 30), கோ ஆதன் செல்லிரும்பொறை (புகளூர்த் தமிழிக் கல்வெட்டு) முதலான பெயர்களால் இவன் குறிப்பிடப்படுகிறான். ஆதன் என்பது இவன் பெயர். வாழி என்பது இக்காலத்தில் திரு என்று குறிப்பிடுவது போன்று சங்க காலத்தில் மன்னர்களுக்குத் தந்த அடைமொழியாயிருக்கக்கூடும். வெற்றிச் செல்வ மிகுதி, மன்னர்களின் அடைக்கல மிகுதி, (பதிற். 63 : 8-12), தம்மைச் சேர்ந்தோர்க்குச் செல்வம்போல் பயன்பட்ட தன்மை (பதிற். 65 : 5 – 'சேர்ந்தோர் செல்வ' 65 : 11 – 'பரிசிலர் வெறுக்கை) முதலான தன்மைகளின் அடிப்படையில் 'செல்வ' என்னும் அடைமொழி இவனது பெயரில் சேர்ந்திருக்கலாம்.

மழைமேகங்களைக் காட்டிலும் மிகுதியாகக் கொடைவழங்கிய இவனது தன்மையாலும் (பதிற். 64 : 18) 'செல்' என்னும் அடைமொழி (புகளூர்க் கல்வெட்டுப் பெயரில் உள்ளது) தோன்றியிருக்கலாம்.

## காலம்

இவனைப் பாடிய கபிலர், பாரி இறந்த பின், இவனிடம் வந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். எனவே, பாரி காலத்திற்குப் பின் இவன் வாழ்ந்தான் என்பது தெளிவாகிறது. பதிற்றுப்பத்து ஏழாம் பத்தில் இவன் கருவூரை ஆண்ட செய்தி குறிப்பிடப்படவில்லை. ஆனால், பாடலிலேயே அச்செய்திக்கான குறிப்பு உள்ளது. எனவே, ஏழாம் பத்து இவன் பூழி நாட்டில் ஆண்டு கொண்டிருந்தபோதே, அதாவது அவனது தந்தை கருவூரில் ஆண்டு கொண்டிருந்தபோதே பாடப்பட்டது என்பது தெளிவாகிறது. பல்யானைக் குட்டுவன் அகப்பாக் கோட்டையை அழித்த போரில் இவன் உதவினான் என்பது முன்பே குறிப்பிடப்பட்டது. எனவே, இவன் பல்யானைக் குட்டுவன் அரசாண்ட அதே 25 ஆண்டுக்கால எல்லையில் 25 ஆண்டுகள் அரசாண்டான் எனலாம். இவன் சிக்கற்பள்ளி என்னுமிடத்தில் இறந்து போனான் (புறம் 387 கொளு).

## முன்னோர்

இவன் 'சேரலர் மருகன்' என்று குறிப்பிடப்படுகிறான் (பதிற். 63 : 16). இதனால் இவன் சேரர் குடியில் தோன்றியவன் என்பது தெளிவாகிறது.

இவனது முன்னோர் தம் கொள்கையில் உறுதிப்பாடு உடையவர். அவர்கள் தம் குடிமக்கள் தளர்ச்சியடையா வண்ணம் நல்லாட்சி புரிந்தனர்; நிலம் நல்ல பயனைத் தரும் வகையில் வேளாண்மைக்கு உதவினர். வெயிலின் கொடுமை நீங்க ஆங்காங்கே மண்டபங்கள் கட்டி உதவினர். பருவமழை தவறாது பொழியக் காடுகளைப் பாதுகாத்து வந்தனர். நாற்றிசையும் வென்று இவ்வாறு நல்லாட்சி புரிந்தனர்.

## குடிப்பூ

சேர மன்னர்களின் குடிப்பூவாகிய போந்தைக்கண்ணி இவனது போர்ப்படைக் கருவிகளுக்குச் சூட்டப்பட்டது என்று கூறப்படுவதால் (பதிற். 70 : 6) அஃது அவனது குடிப்பூ என்பது தெளிவாகிறது.

## மனைவி

வேள் ஆவிக்கோமான் பதுமன் என்பவனின் பெண்மக்கள் இருவருள் ஒருத்தியை வாழியாதனும் மற்றொருத்தியை இமயவரம்பனும் மணந்திருந்தனர். வாழியாதன் மணந்தது இளையவளை எனலாம்.

காமர் கடவுளும் (காமனும்) கண்டு தனக்கும் கிடைக்கவில்லையே என்று எண்ணும் வகையில் பேரழகும் கற்பும் உடையவளாக இவள் விளங்கினாள் (பதிற். 65 : 9). இவள் தன் கணவனிடம் நகைச்சுவையாகப் பேசியபோதும் பொய்மொழி புனைந்ததில்லை (பதிற். 70 : 12). வாழியாதன் பல மகளிரைத் தழுவி மகிழ்வது உண்டு (பதிற். 68 : 18-19). இதுபற்றிப் பிறர் கூறிய புறஞ்சொற்களை இவள் பொருட் படுத்தியதில்லை (பதிற். 70 : 12). பெண்மை, மடமை, கற்பு (பதிற். 70 : 14-15). செல்வக்கடுங்கோவின் அரண்மனைக்கேற்ற நல்லோளாக இவள் விளங்கினாள் (பதிற். 61 : 4).

### அரண்மனை

இவனது அரண்மனையில் ஓவியங்களும் சிற்ப வேலைப்பாடுகளும் நிறைந்திருந்தன (பதிற். 61 : 3).

#### மக்கள்

இவனுக்கு இரண்டு ஆண் மக்கள் இருந்தனர். இவர்களைக் கொண்டு வாழியாதன் முதியர் குடியினரைப் பேணிவந்தான். முதியர் குடியினர் சேரர் சார்பாளர். அவர்களைப் பேணுதல் சேரர்களின் கடமையாகத் தொன்றுதொட்டு அமைந்து வந்தது (உதியஞ்சேரல் பேணியது காணலாம்). இவன் தன் மக்களின் வழியே தன் தொல்லோர் கடமையை நிறைவேற்றினான் (பதிற். 70 : 20-23).

இரண்டு மக்களுள் மூத்தவன் எட்டாம் பத்தின் தலைவன், இளையவன் 8ஆம் பத்துத்தலைவனின் தந்தை. (இவர்களைப் பற்றித் தொடர்புள்ள வரலாற்றுப் பகுதிகளில் காணலாம்.)

## தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை

இவனது தந்தை செல்வக்கடுங்கோ வாழியாதன். தாய் பழனி மலைப் பகுதியை ஆண்ட பதுமன் என்பவனுக்கு மகளாய்ப் பிறந்து செல்வக் கடுங்கோ வாழியாதனை மணந்தவள் (பதிற். பதி. 8 : 1). இவளது உடன்பிறந்தாள் ஒருத்தி நெடுஞ்சேரலாதனை மணந்தாள் என்பதை நினைவு கூரலாம்.

### நாடு

பெருஞ்சேரலிரும்பொறை தொடக்க காலத்தில் ஆண்டு கொண்டிருந்த நாடு இன்னதெனத் தெரியவில்லை. எனினும், அந்த நாடு

பகன்றைப் பூக்களைக் குடிப்பூவாகச் சூடும் உழவர்கள் வாழ்ந்த நெல் வளம் மிக்க நாடு என்று தெரிகிறது (பதிற். 76 : 12).

## வளர்ந்த இடம்

இவன் 'புகார்ச் செல்வன்' என்று கூறப்பட ,றான் (பதிற். 73 : 9). அவ்வாறு இவன் கூறப்படும்போது புகார் நாட்டு உயர்திணை மகளிரும் (செல்வச் சீமாட்டியர்) வயலில் நாரைகளை ஓட்டும் மகளிரும் (உழைக்கும் பெண்டிர்) இரவும் பகலும் பாசிழை களையாது இணைந்து குரவை ஆடும் இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக்குறிப்பு இத்தகைய பெண்டிர்க்கிடையே இவன் வளர்ந்தவன் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. இதனால், இவன் புகார் நகரத்தில் இளமையில் வளர்ந்துவந்தான் எனலாம்.

## நாடு காத்தல்

'பூழியர் மெய்ம்மறை' என்று இவன் கூறப்படுகிறான். பூழி நாட்டு மக்களுக்குக் கவசம் போன்று விளங்கினான் என்பது இதன் பொருள். இவன் தொடக்க காலத்தில் ஆண்டு கொண்டிருந்த நாட்டுக்கு அண்மையில் பூழிநாடு இருந்தது. அந்நாட்டைக் காக்கும் பொறுப்பும் இவனிடம் இருந்தது (பதிற். 73 : 9).

## காமூர்ப் போர்

கழுவுள் (அகம். 135 : 12, 135 : 13; பதிற். 71 : 17, 72 : 7) என்பவன் காமூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன். இந்தக் காமூர் தோட்டிமலையில் இருந்தது. ஆழமான அகழி, குறுகிய ஞாயில் உறுப்புகளைக்கொண்ட மதில் ஆகிய அரண்களை உடையது அந்த ஊர். அவ்வூர் மக்கள் பசு வளர்த்த இடையர்கள். அரசனது போர்வீரர்களாக வாழ்ந்த அவ்வூர் இடையர்கள் பிற நாடுகளுக்குச் சென்று வெட்சிப்போர் செய்து ஆநிரைகளைக் கவர்ந்துவந்த ஆற்றல்மிக்க வீரர்கள்.

பெருஞ்சேரல் இரும்பொறை கழுவுள் மன்னனது கோட்டையைத் தாக்கினான். வென்று காமூரைத் தீக்கிரையாக்கினான். அதில் எழுந்த தீப்புகை, திசைகளையும் மதில்களையும் மறைக்கும் அளவுக்கு மிகுந்து உயர்ந்தது. இந்தப் போர் காலையில் தொடங்கி மாலையில் முடிவுற்றது. தன் தோல்வியை எண்ணிய கழுவுள், மறுநாள் விடியுமுன்பே காமூரைவிட்டு ஓடிவிட்டான். தலைவனை இழந்த காமூர் மக்கள் கலங்கினர்; மேலும் போர் செய்யாமலிருக்கும்படி பெருஞ்சேரலை வேண்டிக் கொண்டனர்; கைம்மாறாகப் போர் யானைகளையும் அணிகலன்களையும் தந்தனர். அவர்கள் தந்த திறைப்பொருளைப்

பெற்றுக்கொண்டு பெருஞ்சேரல் மேலும் அவர்களைப் போரிட்டுக் கொல்லாது விட்டுவிட்டு மீண்டான். கையூட்டு வாங்கிக்கொண்டு உயிரைக் கொல்லாது விட்டுவிட்டுச் செல்லும் எமன்போல அவன் மீண்டான் என்று கூறப்படுகிறது.

இந்தப் போரில் பெருஞ்சேரல் இரும்பொறையோடு 14 வேளிர் தலைவர்கள் சேர்ந்திருந்தனர் எனத் தெரிகிறது.[46] இந்த வேளிர் தலைவர்கள் தாய்வழி உறவினரான பழனிமலை வேளிர், மனைவிவழி உறவினரான மையூர் வேளிர், இந்த வேளிர்களுக்கு உறவினரான பிற வேளிர் ஆகியோர் சேர்ந்த குழுவினர்.[47]

இந்தப் போரில் கழுவுள் மடமை அதாவது, அறியாமை காரணமாகப் பெருஞ்சேரலை எதிர்த்துள்ளான் என்பதை எடுத்துக் கூறி (பதிற். 71 : 17, 72 : 7, 73 : 1), போருக்குப் பின் இருவரையும் ஒன்றுசேர்க்க அரிசில்கிழார் முயன்றுள்ளார் எனத் தெரிகிறது. இவரது முயற்சி கைகூடியிருக்கலாம்.

## கொல்லிமலைப் போர்

கொல்லிமலையில் நீர்கூர் என்பது பண்டைக்காலத்தில் இருந்த ஓர் ஊர். கழுவுளை வெற்றிகண்ட பெருஞ்சேரல் இரும்பொறை கொங்கு நாட்டில் ஊடுருவி அதியமானை இந்த ஊரில் தாக்கினான் (பதிற். பதி : 8 : 3-5). பெருஞ்சேரலின் செல்வாக்கைக் குலைக்க விரும்பிய சோழனும் பாண்டியனும் அதியமானுடன் சேர்ந்துகொண்டனர். போர் கடுமையாக நடைபெற்றது. பெருஞ்சேரல் வெற்றி பெற்றான்; பகையரசர்களின் முரசு, குடை, அணிகலன்கள் முதலானவற்றைக் கைப்பற்றிக் கொண்டான்.

தன் வெற்றிக்கு அறிகுறியாகப் போர்க்களத்திலேயே களவேள்வி ஒன்று செய்தான். வெற்றிக்கு உதவியவர்களுக்கு வேண்டியவற்றைப் போர்க்களத்திலேயே நல்கல் களவேள்வி எனப்படும்.

மகளிர் வருந்தும் வண்ணம் அவர்கள் முன்னிலையிலேயே பகைவர்களை இவன் கொன்றான் (பதிற். பதி. 8 : 8–'மகளிர் இரங்கத் துப்பறுத்து'). இத்தகைய கொடுமையை வீரம் என்று கருதியது வியப்பே.

'புகார்ச் செல்வன்' என்று இவன் கூறப்படுவது புகார் நகரில் வளர்ந்தமை நோக்கி என்று முன்னமே கூறியுள்ளோம். புகார் நாட்டை வென்றதால் இவன் இவ்வாறு கூறப்பட்டான் என்று இதற்குப் பொருள் கொள்வாரும் உளர். இப்பொருள் சிறப்பின்று. எனினும், கொல்லிமலைப் போரில் அதியமானுக்குத் துணையாக வந்த இரு வேந்தர்களுள் சோழனும் ஒருவன். ஆகையால், அவனை வென்றமை நோக்கி இவ்வாறு கூறப்பட்டான் எனக் கொள்ளுதலும் ஒருவகையில் அமையும். அவ்வாறாயினும் சோழ நாட்டைத் தாக்கி வென்றான்

என்றோ அதனால் புகார் நாட்டைத் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான் என்றோ கூறுவது பொருந்தாது.

## தகடூர் வெற்றி

அதியமானின் மகன் எழினி (புறம் 230 : 6), அதியமான் கொல்லிமலைப் போரில் சேரனிடம் தோற்றபின் பசும்பூட் பாண்டியனது படைத் தலைவனாக அமர்ந்துவிட்டான்.[44] கொல்லிமலைப் போரில் வெற்றிபெற்ற பெருஞ்சேரல், அதியமானின் தலைநகரான தகடூரைத் (தர்மபுரி) தாக்கினான். தன் தந்தை அதியமானுக்குத் துணையாகக் குதிரைமலைப் பகுதியில் ஆட்சி செய்துகொண்டிருந்த எழினி, தன் தந்தையின் தலைநகரைக் காக்க விரைந்து வந்து போரிட்டான்.

தாமரைப் பூக்களையும், நெய்தல் பூக்களையும் வீசி மகளிர் கிளிகளை ஓட்டும் வளம் மிக்க பகுதிகளை உடையதாக அக்காலத் தகடூர் விளங்கியது, அத்தகடூரைச் சுற்றிக் காவற்காடு இருந்தது. இந்தக் காட்டரண் போர் வீரர்களின் பயிற்சிக் களமாக விளங்கியது. தேர்ச்சிபெற்ற வீரர்களின் காவலையும் அது உடையதாக இருந்தது. பெருஞ்சேரல், தகடூரை அரசன் இல்லாதபோது தாக்கியதால் எளிதில் கைப்பற்றிக் கொண்டான்; கோட்டையை அழித்துக் கைப்பற்றிக் கொண்டான். கோட்டை அழிந்ததைக் கண்டமறவர்கள் பாதுகாவல் நாடி ஓடிவிட்டனர்.

எழினி தன் தந்தையின் தலைநகரை மீட்கப் போராடினான்; ஆனால், போரில் கொல்லப்பட்டான்.

குட்டுவன் தகடூரைத் தாக்கிக் கொளுத்தினான் என்றும், அப்போது அவனை எதிர்த்துப் போராடுவதற்கு ஆள் இல்லை என்றும் பரணர் குறிப்பிடுகிறார் (அகம் 212 : 16-17). பெருஞ்சேரல் தகடூரைத் தாக்கியபோது அவனுக்குத் துணையாக (அல்லது செங்குட்டுவனுக்குத் துணையாகப் பெருஞ்சேரல்) வேந்தன் செங்குட்டுவனும் வந்திருந்து தகடூரை வென்ற செய்தியையே பரணர் இவ்வாறு கூறியுள்ளார். செங்குட்டுவன் தகடூரை அழித்துவிட்டு எதிர்ப்போர் இன்றி மீண்டான். பெருஞ்சேரல் கோட்டையில் தங்கியிருந்து ஆட்சி செய்யத் தொடங்கியபோது எழினி தாக்கிய போர் மூண்டது என்றும், எனினும் சேரரே வெற்றி பெற்றனர் என்றும் கொள்வது பொருத்தமானது.

சேரன் செங்குட்டுவன், பெருஞ்சேரல் இரும்பொறை, அதியமான் ஆகியோர் சமகாலச் சேரர் குடியினர். இவர்கள் மூவரும் பனம்பூ மாலை அணிபவர். செங்குட்டுவன் தந்தை நெடுஞ்சேரலாதனும் பெருஞ்சேரல் தந்தை செல்வக்கடுங்கோவும் பழனிமலைப் பகுதியில் ஆண்ட வேள் ஒருவனின் இரண்டு பெண் மக்களைத் திருமணம் செய்துகொண்டதால்

இவர்களிடையே உறவு நெருக்கமாயிருந்தது. எனவே, இருவரும் சேர்ந்து தம்மோடு உறவு நெருக்கம் இல்லாதவனும், தம் பகை வேந்தரான சோழ பாண்டியரோடு தொடர்பு கொண்டிருந்தவனுமாகிய அதியமானை - சேரரின் கிளைக்குடியைச் சேர்ந்த அதியமானை ஒழிக்கத் திட்டமிட்டு வெற்றிகண்டனர். செல்வக்கடுங்கோ வாழியாதனுக்கு இரண்டு ஆண்மக்கள் இருந்தனர் என்று குறிப்பிட்டோம். அவர்களுள் மூத்தவன் இங்குக் கூறப்பட்ட பெருஞ்சேரல் இரும்பொறை. இளையவன் ஒன்பதாம் பத்தின் தலைவனான இளஞ்சேரல் இரும்பொறையின் தந்தை. அவன் பெயரை ஒன்பதாம் பதிகம் 'குட்டுவன் இரும்பொறை' என்று குறிப்பிடுகிறது. பரணர் தகடூரில் பொருமுரண் பொறாது திரும்பிய குட்டுவன் என்று குறிப்பிடுவது இவனையோ என்ற ஐயுறவுக்கும் இடமுண்டு. இந்த ஐயறவு வேண்டியதில்லை. பரணர் குறிப்பிடும் குட்டுவன், குட்டுவன் இரும்பொறை அல்லன். பரணர் குறிப்பிடும் குட்டுவன் தகடூரில் பொருமுரண் பொறாது வென்று கடலை முற்றுகையிட்டுக் கடல் அலை விலகும்படி நல்ல துறைமுகம் அமைக்கும் பணியில் ஈடுபட்டான். இதனாலோ, கடற்போர் வெற்றியாலோ கடல் பிறக்கோட்டினான் என்று அவன் குறிப்பிடப் பட்டுள்ளான். எனவே, நாம் மேலே கூறியவாறு சேரன் செங்குட்டுவனே அதாவது, கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனே பெருஞ்சேரல் இரும்பொறைக்கு உதவியாக இருந்தான் என்று கொள்ளவேண்டும்.

இவனது போரைக் குறிப்பிடும்போது புலியைக் கொன்று விட்டுப் பின் யானை ஒன்றைக் கொல்லும் அரிமா (பதிற். 75 : 1-2) இவனுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. இஃது இவன் இரண்டு அரசர்களைக் கொன்ற செய்தியைக் குறிப்பிடுகிறது எனலாம். எழினி இவனால் கொல்லப்பட்ட செய்தி தெளிவு. இவனால் கொல்லப்பட்ட மற்றோர் அரசன் பெயர் தெரியவில்லை.

## பகைவர் நிலை

இவனைத் துன்புறுத்தியவர் தானியச் சேமிப்புக் களஞ்சியத்தை உடைத்த சிறுவர்கள்போலத் துன்புற்றனர் என்றும் (பதிற். 71 : 7), இவனது பகைவர்கள் இவனது ஆற்றலைப் புலவர்கள் கூறும்போது உணர்வதில்லை, இவனது சான்றோர் (படைவீரர்) செயல் படும்போது உணர்வார்கள் என்றும் (பதிற். 72), வேந்தரும் வேளிரும் பிறரும் ஒன்றுசேர்ந்து வந்தாலும் பணிந்து இவன் வழியில் நடக்காவிட்டால் அவர்களது நாடு இவனால் வெள்வரகு விதைக்கப்பட்டுப் பாழாகும் என்றும் (பதிற். 75 : 11) புலவர் கூறுவது இவனது பேராற்றலையும் பகைவரின் எளிமையையும் உணர்த்துவனவாக உள்ளன.

பகைவரின் முரசை அறுத்தும், பகைவரின் பட்டத்து யானைக் கொம்புகளை வெட்டியும், அரியணை செய்து அமர்ந்து, குருதிக் கலப்பில்லாத உணவுப் படையலை ஏற்காத இவனது அயிரை மலைக் குலதெய்வம் போலக் கேடில்லாப் புகழுடன் வாழவேண்டும் என்றும் (பதிற். 79 : 18-19), போர் முறையில் பகைவரிடம் திறைபெற்று வாழ வேண்டும் என்றும் (பதிற். 80 : 9-10) இவன் வாழ்த்தப்படுகிறான்.

## படை

இவனது யானைப் படை கொங்கர்களின் பசுக் கூட்டம்போல் பெரியது. அந்த நாட்டு (தகடூர் நாட்டு) ஆட்டு மந்தைபோல் குதிரைப்படை பெரியது. தேர்ப்படைகளும் காலாட் படைகளும் எண்ணில் அடங்காதவை. இவனது படை வீரர்களில் வேற்படையினர் மிகுதி (பதிற். 76 : 1-2).

## கொடைத் தன்மை

படைவீரர், தம்மிடம் வந்து இரந்தவர், இரக்க இருப்பவர், விறலியர் முதலானவர்களுக்கு இவன் கொடை வழங்கினான். கனவிலும் புலவர்கள் பிறரைக் கருதாவண்ணம் மிகுதியாக வழங்கினான். மழைபோல் வரையாது வழங்கினான் (பதிற். 76 : 9-10, 79 : 4-5).

பெருஞ்சேரல் இரும்பொறை தன்னைச் சிறப்பித்துப் பாடிய அரிசில் கிழார் என்னும் புலவருக்குத் தன் அரண்மனையை அரசுரிமையோடு பரிசாகக் கொடுத்தான். தானும் தன் மனைவியும் அரண்மனைக்கு வெளியே வந்து நின்று கொண்டு அவற்றைப் புலவருக்குக் கொடுத்தான். அவற்றுடன் தன் சொந்தப் பணமாக இருந்த ஒன்பது நூறாயிரம் காணம் பணத்தையும் அவருக்குக் கொடுத்தான். புலவர் அவற்றை ஏற்றுக் கொண்டார். பின்னர்த் தாம் பெற்ற பொருள்களை அவனே ஏற்றுக்கொண்டு ஆளவேண்டுமென்று இரந்து வேண்டினார். பெருஞ்சேரல் புலவரின் வேண்டுகோளை நிறைவேற்றி மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். புலவர் அரிசில்கிழார் அது முதல் அவனுக்கு அமைச்சராக விளங்கி வந்தார்.

## வேள்வி

இவன் நல்லோர் உரைகளைக் கேட்டுப் படிவ நோன்பு தவறாது இருந்து வேள்விகள் செய்தான் (பதிற். 74 : 1-2). இந்த வேள்வியால் உயர்ந்தோர் (உயர்நிலையிலிருந்த பார்ப்பனர்) மகிழ்ந்தனர். இந்த வேள்வி வேட்டலில் இவனது மனைவி வேறுபட்ட கருத்துடையவளாய் இருந்தாள். (வேள்விக்கு ஒப்பவில்லை). இவர்களுக்கு நாடாளத்தக்க ஓர்

ஆண் குழந்தை பிறந்தது. அவனைக் கொண்டு இவ்வுலகில் உள்ள மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை எல்லாம் இவன் செய்தான். அதாவது, இவன் மகன் அரசனாகவும் மக்கள் தொண்டனாகவும் விளங்கினான். இந்த நிகழ்ச்சி மனைவி இல்லாமல் கணவன் மட்டுமே வேள்வி செய்து மனைவி குழந்தையைப் பெற்றெடுத்த நிகழ்ச்சி ஆகையால், அரிசில்கிழார் என்னும் தமிழ் நெறியறிந்த புலவர்க்கு வியப்பை உண்டாக்கவில்லை. காரணம், வேள்விக்கும் குழந்தைப் பேற்றிற்கும் தொடர்பில்லை. புலவர்க்கு வியப்பை உண்டாக்கியது. வேறொன்று இருந்தது. அது அவனிடமிருந்து நரைமூதாளனை அறிவு, தெளிவு பெறச் செய்ததேயாகும்.

பெருஞ்சேரல் இரும்பொறை பார்ப்பானைக் கொண்டு வேள்வி செய்தானல்லனோ? அப்போது அந்த வேள்வியால் பயனில்லை என்பதைத் தானே உணர்ந்திருந்தான். எனினும், நரை மூதாளனாய் உலகியல் முழுதும் உணர்ந்தவன் போல் அவனிடம் வாழ்ந்த பார்ப்பானின் மகிழ்ச்சிக்காகவே வேள்வி செய்தான். தன் படிவ நோன்புகளால் சித்து முறையில் இருந்து குழந்தைப் பேற்றைப் பெற்றான். இந்தப் 'படிமைச் சித்துத் தவம்' உடையோர் கொடை, மாண்பு, உடல் உள்ள செல்வ வளம், எச்சமாகிய குழந்தைப் பேறு, தெய்வத் தன்மை ஆகிய யாவும் கைவரப் பெறலாம் என்பதைத் தெளிவுப்படுத்தினான். இவனிடம் தோற்ற நரைமூதாளப் பார்ப்பான் சேர நாட்டை விட்டே ஓடிவிட்டான். இந்தச் செயல் புலவரை வியப்புக்கு உள்ளாக்கியது.

## பண்பு நலம்

இவனது பண்புகள் குறித்து அரிசில்கிழார் (பதிற். 72 :5-7, 74 : 25-28, 79 : 1-3) கூறுகிறார். இவன் போரை விரும்பும் உடல்வலிமை மிக்கவன். பிறர்க்கு இவன் துணையாவானே அன்றிப் பிறர் துணையை வேண்டுவதில்லை என்னும் அளவுக்குத் தன்னிகரில்லாதவன் (பதிற். 73 : 1-3). பகைவர்களுக்கு மடங்கல் தீப்போன்றவன்; சினம் மிக்கவன் (பதிற். 72 : 5-16); போரில் இவன் தன் உயிரைப் போற்றுவதில்லை; பெரியோரைப் பேணுவான்; சிறியோரை அளி செய்து காப்பாற்றுவான் (பதிற். 79 : 3); புகழ்தரும் கல்வி நலம் சான்றவன் (பதிற். 80 : 17); செம்மையான நாநலம் படைத்தவன் (பதிற். 79 : 5); அளக்க முடியாத நற்பண்புகள் மிக்கவன் (பதிற். 79 : 6).

இவனது ஆண்மை நலம் (பதிற். 79 : 6) கண்டு உலகிலுள்ள ஆண்களின் ஆண்மை தேய்வுற்றது. தோளில் பூமாலையணிந்து மகிழ்வுடன் இவன் வாழ்ந்தான் (பதிற். 79 : 7). பொன்மாலை அணிவதும் உண்டு (பதிற். 75 : 3). புரவி பூட்டின நேரில் போர்க்களம் செல்வதும், (பதிற். 80 : 13) கொடி

பறக்கும் தேரில் பிற இடங்களுக்குச் செல்வதும் (பதிற். 73 : 15) இவன் வழக்கம். பல வேற்படைகளைத் தாங்கிச் செல்வதும், யானைமீது செல்வதும் உண்டு (பதிற். 75 : 2-3).

## மனைவியின் மாண்பு

இவனது மனைவி அந்துவஞ்செள்ளை. அவள் மையூர் (மைசூர்)க் கிழான் என்னும் வேளிர் தலைவனின் மகள். அறல் போன்ற அழகிய நீண்ட கூந்தலை உடையவள் இவள் (பதிற். 74 : 3).

## மனைவியர்

இவன் தன் மலர்மாலை குழைய மகளிர் பலரைத் தழுவி மகிழ்ந்தான் என்று கூறப்படுகிறது (பதிற். 79 : 6-7). இதனால் அந்துவஞ் செள்ளையாகிய பட்டத்தரசியே அன்றிப் பிற மனைவியரும் இவனுக்கு உண்டு எனத் தெரிகிறது.

## மகன்

பெருஞ்சேரல் சில காலம் மகப்பேறின்றி இருந்து தன் சித்துப் படிமைத் தவநெறியால் தன் பட்டத்தரசியின்பால் மகனைப் பெற்றான். அவன் நாடாளும் மன்னனாகவும் மக்கள் தொண்டனாகவும் விளங்கினான் (பதிற். 74 : 19-21). இவன் பெயர் என்ன வென்று தெரியவில்லை. நாட்டாண்ட செய்தி பற்றி வேறு குறிப்பும் இல்லை. ஒருவேளை நாடாளத் தொடங்கும்போதே போரில் ஈடுபட்டு மாண்டிருக்க வேண்டும்.

## பாடின புலவர்

அரிசில்கிழார் என்னும் புலவர் இவனைப் பாடியுள்ளார். அரிசில் என்பது காவிரியின் கிளை ஆறாய்ச் சோழநாட்டில் பாயும் ஆறு. புகார் நாட்டில் இவன் வளர்ந்தபோது இப்புலவர் இவனுக்கு ஆசிரியராய் விளங்கியிருக்கக்கூடும்.

## ஆட்சி ஆண்டு

பெருஞ்சேரல் இரும்பொறை 17 ஆண்டுகள் அரசாண்டான் (பதிற். பதி. 8).

# இளஞ்சேரல் இரும்பொறை

பதிற்றுப்பத்து அமைப்பைக் காணும்போது இவன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறைக்குப் பின் அரசாண்டவன் எனத் தெரிகிறது.

## பெற்றோர்

இவனது தந்தையின் பெயர் குட்டுவன் இரும்பொறை; தாயின் பெயர் அந்துவஞ்செள்ளை (பதிற். பதி. 9 : 1-2). செள்ளை என்னும் சொல்லுக்குத் தாய் என்றும் பொருள் உண்டு. எனவே, அந்துவஞ்செள்ளை என்னும் பெயர் அந்துவனது தாய் என்னும் பொருளுடையதாக இருக்குமோ என்று எண்ண வேண்டியுள்ளது. ஆயின், இளஞ்சேரல் இரும்பொறைக்கு அந்துவன் என்னும் பெயர் கொண்ட மகன் ஒருவன் இருந்தான் என்றும், அவன் தன் பெயரில் தாயைக் குறிப்பிட்டு வழங்கும் அளவுக்குப் பெரும் புகழுடன் விளங்கினான் எனவும் கொள்ள வேண்டிவரும். இந்த அந்துவன் பற்றிய செய்தி எதுவும் கிடைக்கவில்லை.

இந்த அந்துவஞ்செள்ளையின் தந்தை மையூர்க்கிழான். மையூர்க்கிழான் என்பது மையூர் (மைசூர்) மக்களின் தலைவன் என்று கொள்ளக்கிடப்பது. இவன் இளஞ்சேரல் இரும்பொறைக்கு அதாவது, தன் மருமகனுக்கு அமைச்சனாகவும் விளங்கினான்.

தன் அமைச்சுப் பணியில் மையூர்க்கிழான் உண்மையைப் பெரிதும் போற்றிக் கடைப்பிடித்து ஒழுகிவந்தான் ('மெய்யூர் அமைச்சியன் மையூர்க் கிழானைப் புரையறு கேள்விப் புரோசு மயக்கி' – பதிற். பதி. 9 : 11-12). இவனை இளஞ்சேரல் இரும்பொறை நல்ல அறிவுரை கூறிக் குறுநிலத் தலைவனாக விளங்கும்படி செய்தான்.

தனக்குத் துணையாகக் குறுநிலத் தலைவனாக விளங்கும்படி இவனைச் செய்ய நன்கு அறிவுரை கூறப்பட்டது என்ற செய்தி இவன் முன்பு இளஞ்சேரல் இரும்பொறைக்கு எதிராக நடந்து கொண்டிருக்க வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றது. எனவே, இளஞ்சேரல் இரும்பொறை இவனுக்குத் தக்க அறிவுரைகூறித் தனக்குத் துணையாகக் குறுநிலத் தலைவனாக ஆக்கிக்கொண்டான். இவனது தந்தை இவனது மகளை மணந்துகொண்டதன் வாயிலாக உறவை வலுப்படுத்திக் கொண்டான்.

மையூர்க்கிழானின் அமைச்சு இளஞ்சேரல் அரசாட்சியிலா, மையூர் அரசாட்சியிலா என்பது தெரியவில்லை. யாண்டைய தாயினும் இவன் அமைச்சன் என்பது மட்டும் உறுதி (எருமையூரன் வரலாற்றை ஈண்டு நினைவு கூர்தல் நலம்).

இளஞ்சேரல் இரும்பொறையின் மனைவி கொல்லிமலையில் மலர்ந்திருந்த காந்தள் மலரைச் சூடிக்கொண்டாள் (பதிற். 81 : 22). நறவுத் துறைமுகப் பகுதியில் இவனது நாண்மகிழ் இருக்கை இருந்தது (பதிற். 85 : 8). மகளிர் நீராடும் வானியாற்று நீரைக்காட்டிலும் இவன் இனிய தண்ணளி உடையவன் (பதிற். 86 : 12-13). கொங்கர் கோ (பதிற். 88 : 19, 90-25), தொண்டியோர் பொருநன் (பதிற். 88 : 21), மரந்தையோர் பொருநன் (பதிற். 90 : 28), குட்டுவர் ஏறு (பதிற். 90 : 26), பூழியர் மெய்ம்மறை (பதிற். 90 : 27), பூழியர்கோ (பதிற். 84 : 6), விரவுமொழிக் கட்டூர்வயவர் வேந்து (பதிற் 90 : 30) என்றெல்லாம் கூறப்படும் இவனைப்பற்றிச் செய்திகள் கொல்லிமலைப்பகுதி, நறவுத் துறைமுகம், வானியாற்றுப்படுகை, கொங்கு நாட்டுப் பகுதி, தொண்டித் துறைமுகப் பகுதி, மாந்தைத் துறைமுகப் பகுதி, குட்ட நாட்டுப் பகுதி, பூழி நாட்டுப் பகுதி; கட்டூரைச் சூழ்ந்த பகுதி ஆகியவை இவனது நாட்டில் அடங்கியிருந்தன என்பதைப் புலப்படுத்தும். இந்தப் பரப்பளவு சேர நாட்டின் வடபகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

## விச்சி மலைப் போர்

இப்போது பச்சைமலை என வழங்கும் விச்சிமலைப் பகுதியை ஆண்டவன் 'விச்சிக்கோ' (பதிற். பதி. 9 : 4) எனப்பட்டான். இவன் அம்மலைப் பகுதியில் 'ஐந்தெயில்' என வழங்கப்பட்ட கோட்டையில் இருந்துகொண்டு அரசாண்டு வந்தான். இளஞ்சேரல் இரும்பொறை அந்தக் கோட்டையைத் தாக்கினான். விச்சி அரசனுக்கு உதவியாக இரண்டு அரசர்கள் சேர்ந்து கொண்டனர். அவர்கள் யார் எனத் தெரியவில்லை. பொதுவகையால் பாண்டியனும் சோழனும் சேரனுக்கு எதிராகப் போரிட்டனர் என்று கூறுவது வழக்கமாக இருந்துவருகிறது. போரில் 'ஐந்தெயில்' கோட்டை அழிந்தது. சேரன் வெற்றி பெற்றான். விச்சி அரசன் போரில் மாண்டான்.

## பெருஞ்சோழன் வீழ்ச்சி

பெருஞ்சோழன் (பதிற். பதி. 9 : 6) என்பவன் கோப்பெருஞ்சோழன் என்று கொள்ளலாம். இவன் பொத்தியை[a] ஆண்டவன். இவனைச்சேரன் வஞ்சினம் கூறி வென்றான் என்று கூறப்படுகிறது. இவ்வாறு சேரன் இவன்மீது வஞ்சினம் கூறக் காரணம், இச்சோழன் விச்சிக்குத் துணையாக நின்றமையால் விளைந்திருக்க வேண்டும் என்று உய்த்துணரக்கிடக்கின்றது. சோழன் விச்சிக்குத் துணையாக இந்தச் சேரனை எதிர்த்து நின்றதை மேலே கண்டோம். பதிற்றுப்பத்துப்

பாடலில் (பதிற். 35 : 2-3) இந்தச் சோழன் 'பெரும்பூண் சென்னியர் பெருமான்' என்று குறிப்பிடப்படுகிறான். போர் நடந்தபோது இந்தச் சோழனைத் தன்முன் கொண்டு வந்து நிறுத்துமாறு இளஞ்சேரல் இரும்பொறை தன் படைக்கு ஆணையிட்டான். படைவீரர்கள் முயன்றனர். சோழர் படையினர் அப்போது தம் வேல்களைப் போர்க்களத்திலேயே போட்டுவிட்டுத் தப்பி ஓடிவிட்டனர். இவ்வாறு ஓடியவர்களின் வேல், கபிலர், நன்றா என்னும் குன்றின் மீதேறிக் - கண்ணிற்கண்ட ஊர்களையெல்லாம் பரிசாகப் பெற்றாரே, அதனைக் காட்டிலும் அதிக எண்ணிக்கை உடையனவாம்.

## பாண்டியன் மாறன் வீழ்ச்சி

'மாறன்' என்று பெயர் முடிவதைக்கொண்டு இளம்பழையன் மாறன், பாண்டியன் என்பது விளங்கும் (பதிற். பதி. 9 : 7). இந்தப் பாண்டியன் வித்தை என்னும் ஊரை ஆண்டவன். சோழனை வென்றது போலவே இந்த மாறனையும் இளஞ்சேரல் இரும்பொறை வஞ்சினம் கூறிப் போராடி வென்றான். எனவே, இவனும் விச்சிக்குத் துணை நின்றவன் என்பது உய்த்துணரக் கிடக்கின்றது.

முற்கூறியதுபோல விச்சி அரசன் போரில் மாண்டான். கோப் பெருஞ்சோழனும், இளம்பழையன் மாறனும் சிறைப்பிடிக்கப்பட்டனர். இவர்கள் வஞ்சி மூதூருக்குக் கொண்டு வரப்பட்டனர். காவிரிப் பூம்பட்டினத்திலிருந்த சதுக்கப் பூதத்தை இவன் வஞ்சிக்குக் கொண்டு வந்து சாந்தி விழா நடத்தினர்ன்.

(செங்குட்டுவன் வடநாட்டுக் கனக விசயரைச் சிறைப்படுத்திக் கொண்டு வந்தான். இவனோ தமிழ்நாட்டு வேந்தரைச் சிறைப்பிடித்துக் கொண்டுவந்தான். இருவரும் வஞ்சிக்குத்தான் கொண்டுவந்தனர். செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை அமைக்க இமயத்திலிருந்து கல் கொண்டு வந்தான். இளஞ்சேரல் இரும்பொறையோ காவிரிப் பூம்பட்டினத்திலிருந்த சதுக்கப் பூதத்தைக் கவர்ந்து சென்றான். இருவரும் விழா நடத்தினர். செங்குட்டுவன் சோழ பாண்டியரை அரவணைத்துக் கொண்டவன். இவனோ பகைத்துக் கொண்டவன்.)

இவனது போர் பற்றிப் பொதுவகையில் பல செய்திகள் தரப்படுகின்றன. இவன் வேற்று நாட்டின் மீது படையெடுத்துச்சென்று அங்குத் தங்கியிருந்தான் (பதிற். 81 : 18). அப்போது அவன் யானைப் படையுடன் பாசறையில் தங்கினான் (பதிற். 84 : 4-5). கொல்லக் கொல்லக் குறையாத தானையில் யானை, மா, மறவர், தேர், தோல் படைகள் இருந்தன (பதிற். 82 : 13, 83 : 3-4). இவன் பல நாடுகளை அழித்து அந்நாட்டுச் செல்வங்களைத் தன் நாட்டுக்குக் கொண்டுவந்தான்

(பதிற். 83 : 6-7). இவனால் அழிக்கப்பட்ட கோட்டைகள் எண்ணற்றவை (பதிற். 84 : 7-8). யானைக் காலில் மூங்கில் முளைகள் நசுங்கி அழிவது போல் இவனுக்குச் சினமூட்டியவர் நசுக்கப்பட்டனர் (பதிற். 84 : 11-12). இவனது படைகள் அணிவகுத்துச் செல்வது கண்ணுக்கினிய காட்சி யாயினும் பகைவர்க்கு அது இன்னாதது (பதிற். 83 : 3-6). இவனது படையில் பல மொழி பேசும் மக்களும் வீரர்களாய் விளங்கினர் (பதிற். 90-30). அவர்கள் பகைவர்களைக் காஞ்சியாக்கும் (நிலையாமை யாக்கும்) பண்பினர் (பதிற். 84 : 19). இவன் பாசறையில் தங்கியிருந்த போது வேந்தர்கள் இரவு பகலாய்த் தூங்காமல் நடுங்கிக் கொண்டிருந்தனர் (பதிற். 81 : 35-37). இவ்வாறு போர் வல்லமை உடையவனாக இவன் திகழ்ந்தான்.

## கொடை

இவன் இசைவாணர்களைப் பேணிப் பாதுகாத்து வந்தான் ('பாடுநர் புரவலன்' – பதிற் : 86 : 8). இசை பாடும் பெண்களுக்கு அரிய நல்ல அணிகலன்களை அளித்துச் சிறப்பித்தான் ('பாடினி நன்கலம் பெறுகுவை'–பதிற். 87 : 1). வறுமையில் வாடியவர்களுக்கு அவர்களது துன்பம் நீங்கும் அளவுக்குக் கொடுத்தான் ('இல்லோர் புன்கண் தீர நல்கும்' – பதிற். 86 : 6). போர் வெற்றியில் கிடைத்த செல்வங்களை யெல்லாம் வஞ்சி மூதூருக்குக் கொண்டு வந்து பிறர்க்கு உதவும் வகையில் நல்கினான் (பதிற். பதி. 9 : 9).

பெருங்குன்றூர்க்கிழார் இவன் போர்ப் பாசறையில் இருந்தபோது கண்டு பாடினார் (பதிற். 82 : 2). அவரது பாடலைப் போற்றி இளஞ்சேரல் இரும்பொறை 33 ஆயிரம் காணம் பணமாகக் கொடுத்தான். பெருங் குன்றூர்க்கிழார் பாடல் திறத்தைக் கண்டு, வியந்து போற்றாதவர்களுக்கு இந்தச் செல்வத்தை அளித்துப் புலவர் பிறரை வியக்கச் செய்யவேண்டும் என்று கூறி அந்தச் செல்வத்தைக் கொடுத்தான் ('மருளில் லார்க்கு மருளக்கொடு வென்று' – பதிற். பதி. 9 கொளு). புலவர் இந்தப் பணத்தைப் பிறருக்குக் கொடுத்த பின் அவரது வாழ்க்கைக்கு உதவும் பொருட்டு ஊர்களும், வளமனைகளும், அவ்வீட்டில் வாழ்வதற்கு வேண்டிய பொருள் வளமும், வேளாண்மை செய்வதற்காக ஏர் வளமும், இன்பமாக வாழ்வதற்கு வேண்டிய பிற வசதிகளும், எண்ணிலடங்கா அணிகலச் செல்வமும் அவருக்குக் கொடுத்ததோடு அச்செல்வங்களை யெல்லாம் முறையாக நிர்வகித்து உதவும் வகையில் ஏற்பாடும் செய்து கொடுத்தான் (பதிற். பதி. கொளு).

பெருஞ்சேரல் இரும்பொறையே அன்றி அவனது நாட்டில் இருந்த செல்வர்களும் தம்மை நாடி வந்தவர்களுக்கெல்லாம் வாரி வழங்கும் வள்ளல்களாக விளங்கினர் (பதிற். 81 : 22-23).

## குறிப்பிடத்தக்க செயல்கள்

இளஞ்சேரல் இரும்பொறையின் செயல்களில் குறிப்பிடத் தக்கவை சில உள்ளன. அவை வருமாறு:-

## சதுக்கப் பூதரை வஞ்சிக்குக் கொண்டுவரல்

பெருஞ்சதுக்கத்து அமர்ந்திருந்த பூதங்களைக் கொண்டுவந்து வஞ்சி நகரில் நிலை நாட்டினான் (பதிற். பதி. 9 : 13-14). இவன் கொண்டு வந்தவை பூதச் சிலைகள் எனக் கொள்ளலாம். இவன் எங்கிருந்து இந்தப் பூதச் சிலைகளைக் கொண்டு வந்தான் என்பது தெரியவில்லை. எனினும், சோழனை வென்ற இவன் சோழ நாட்டுப் புகார் நகரிலிருந்த பூதச் சிலைகளைக் கவர்ந்து வந்தான் என்று உய்த்துணரப்படுகிறது. மணக்கிள்ளி என்ற சோழ அரசன் பீலிவளை காரணமாக இந்திர விழாக் கொண்டாட மறந்ததனால், காவிரிப்பூம்பட்டினம் கடல்கோளுக்கு இரையானதற்கும், இவன் புகார் நகரத்துப் பூதச் சிலைகளைக் கவர்ந்து வந்ததற்கும்கூடத் தொடர்பிருக்க வாய்ப்பு உண்டு.

இவ்வாறு இளஞ்சேரல் இரும்பொறை நிலைநாட்டிய சிலைக்குச் சாந்தி வேள்வி செய்தான். சாந்தி வேள்வி என்பது நடுகல் விழாவாகும்.

## மந்திர மரபில் தெய்வம் பேணல்

தெய்வ வழிபாடு தமிழ்நாட்டில் தொடர்ந்து நிலவி வந்த வழக்கமே ஆகும். ஆனால், இந்த இளஞ்சேரல் இரும்பொறை மந்திரம் சொல்லிக் கடவுளை வழிபாடு செய்யும் புதிய வழக்கத்தை உண்டாக்கினான் (பதிற். பதி. 9 : 10). மந்திரம் என்பது வடமொழி மந்திரம். சேர நாட்டில் இவனது காலத்திற்கு முன் அரசாண்ட இவனது முன்னோர்களில் சிலர் பார்ப்பார்க்கு உயர்வு தந்து வேள்வி செய்தார்கள் என்பது நாம் அறிந்த ஒன்றே. எனினும், அவர்கள் பார்ப்பனரைக் கடவுளுக்கு மந்திரம் சொல்லும்படி செய்து தாம் பின்னின்று வழிபாடு செய்யவில்லை. இவன்தான் அந்த நிலையை முதன் முதலில் உண்டாக்கியவன் போலும்.

மந்திரம் என்பது வடமொழி மந்திரம் அன்று. திருமந்திரம் என்னும் வழக்கினைக் கொண்டு தமிழில் மந்திரம் இருந்தது என்றும், அதுபோன்ற தமிழ் மந்திரங்களைச் சொல்லிக் கடவுள் வழிபாடு செய்ய இவன் ஏற்பாடு செய்தான் என்றும் கொள்ளலாம். எப்படியாயினும் இவனது காலத்திலேதான் கோயிலில் மந்திரம் சொல்லும் வழக்கம் தோன்றியது என்றும், அதற்கு முன் மக்கள் தம் விருப்பம்போல் தாமே கடவுளின் முன்பு நின்று தம் குறைகளைப் போக்க வேண்டிக் கொண்டனர் என்றும் கொள்ளவேண்டிவரும்.

எது எப்படி ஆயினும் இவன் காலத்தில்தான் வழிபடுவோன் சார்பில் மற்றொருவன் நின்று கடவுளை வேண்டும் இடைத்தரகு நிலை தோன்றியது என்று எண்ணும்படி வரலாற்றுச் சான்று அமைந்துள்ளது.

## இன்னிசை முரசு

செங்குட்டுவனின் பாட்டன் உதியஞ்சேரல் 'இன்னிசை முரசின் உதியஞ்சேரல்' என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளான். அதுபோலவே, இவனும் 'இன்னிசை முரசின் இளஞ்சேரல் இரும்பொறை' என்று குறிப்பிடப்பட்டுள்ளான். பொதுவாக மணமுரசு, மறமுரசு, கொடை முரசு என முரசு முழக்கத்தைப் பொருட்பயன் நோக்கிப் பகுத்துக் காட்டுவது வழக்கம். ஆனால், இங்குக் கூறப்பட்ட 'இன்னிசை முரசு' (பதிற். பதி. 9 : 17) என்னும் தொடர் இசைத்தன்மையை நோக்கி அளிக்கப்பட்டதாகத் தெரிகிறது. முத்தமிழில் ஒன்றாகிய இசையை, முரசு முழக்கி இசைவழிப் போற்றியதால் இவன் இவ்வாறு அழைக்கப்பட்டான்.

## செங்கோலாட்சி

இவனது ஆட்சி 'மன்னுயிர் காத்த மறுவில் செங்கோல்' என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது (பதிற். பதி. 9 : 16). இதனால் இவன் மக்களைப் போலவே பிற உயிரினங்களையும் மாண்புடன் காத்துச் செங்கோலோச்சி வந்தான் என்பது பெறப்படுகிறது. இவனது செங்கோலாட்சியால் நாட்டுவளம் பெருகிற்று என்றும் கூறப்படுகிறது.

## தோற்றம்

இவன் குதிரைமேலும் யானைமேலும் உலாச்சென்ற காட்சி மக்களின் உள்ளத்தைக் கவர்ந்திருக்கிறது.

## மனைவியின் மாண்பு

ஒளி பொருந்திய நெற்றி, நீண்ட கண்கள், சீவிப்படிந்த கறுகறுத்த தலைமுடி, அழகே உருவான முகம், வண்டுகள் மொய்க்கும் கூந்தல், காதிலே குழை, கையிலே ஒளிரும் வளையல் முதலானவற்றுடன் இவனது மனைவி பொலிவுடன் விளங்கினாள். அவள் பெருந்தகைமைப் பண்பு உடையவள். அந்தப் பண்புக்கேற்ப அவளது வாயிலிருந்து வரும் மொழிகள் எப்போதுமே மென்மையானவையாய் விளங்கின. அதாவது, அரசி என்ற ஆணவச் சொற்கள் அவளது வாயிலிருந்து வரவில்லை. கொள்கையில் அடக்கமுள்ளவளாயும் கணவன் தன் அகவாழ்வில் தவறு செய்தாலும் அதைப் பொருட்படுத்தாது தன் கடமையைச் செய்யும்

ஆறிய கற்பு உடையவளாயும் அவள் விளங்கினாள் (பதிற். 90 : 48-50). இவளது கற்பு (அருந்ததி) மீனொடு ஒப்ப வைத்து எண்ணக்கூடிய அளவுக்குச் சிறந்தது என்றும் கூறப்பட்டது. தெளிவான இவளது நற்பண்பின் புகழ் ஓங்கியிருந்தது (பதிற். 89 : 19).

இவளைச்சுற்றி ஆயத்தார் எப்போதும் இருந்தனர். அவர்கள் ஒளிமிக்க அணிகலன்களை மிகுதியாக அணிந்திருந்தனர். இவளும் மார்பில் சந்தனம், நெற்றியில் பொட்டு, பூமாலை, கச்சுப் போன்ற பூண்வகைகள், மணி பதித்த அணிகலன்கள் முதலானவற்றை அணிந்து கொண்டு பொலிவுடன் விளங்கினாள்.

பாவை போல் அழகிய ஆயத்துப் பெண்களுக்கு நடுவே, ஓவியம்போல் சிறப்பாகக் கட்டப்பட்ட அந்தப்புர மாளிகையில் இவள் வாழ்ந்து வந்தாள்.

## அந்துவன் கால்வழி அரசர்கள்
## (திரண்ட நோக்கு)

அந்துவன் கால்வழியில் தோன்றி அரசாண்ட அரசர்கள் என்று தெளிவாக நமக்குத் தெரிய வருபவர் நான்கு பேர். அவர்களது வரலாற்றைத் தனித்தனியே முன்பு கண்டோம். இனி, அவர்களது உறவு முறைகள், அவர்கள் ஆண்ட நாடு, அவர்கள் செய்த போர்கள் முதலானவற்றை ஒருங்கிணைத்து ஆய்வுக் கண்ணோட்டத்தில் நோக்க வேண்டும். அடுத்துத் தரப்பட்டுள்ள அட்டவணை அவர்களுடைய உறவு முறையைத் தெளிவாக்கும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அந்துவற்கு | ஒரு தந்தை ஈன்ற மகன் | பொறையன் | பெருந் தேவி | ஈன்ற மகன் | செல்வக் கடுங்கோ வாழி யாதன் |
| செல்வக்கடுங் கோவுக்கு | | வேளாவிக் கோமான் பதுமன் | தேவி | ஈன்ற மகன் | பெருஞ் சேரல் இரும் பொறை |
| குட்டுவன் இரும் பொறைக்கு | | மையூர்க் கிழான் | வேண்மாள் அந்துவஞ் செள்ளை | ஈன்ற மகன் | இளஞ் சேரல் இரும் பொறை |

இந்தப் பட்டியலின் வேளாவிக் கோமான் பதுமன் தேவியை அதாவது, பதுமனது மகளைச் செல்வக்கடுங்கோ மணந்தான் என்பதை அறிகிறோம். முன்பு உதியன் கால்வழி அரசர்களது வரலாற்றைத் திரட்டி நோக்கியபோது வேளாவிக்கோமான் பதுமன் தேவியை (அதாவது, பதுமனது மகளை) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மணந்தான் என்று அறிந்தோம். எனவே, பதுமனின் பெண்மக்கள் இருவரை முறையே நெடுஞ்சேரலாதனும் செல்வக்கடுங்கோ வாழியாதனும் திருமணம் செய்து கொண்டார்கள் என்பது தெரிய வருகிறது. இதனால் இவர்கள் இருவரும் சமகாலத்தவர் என்பது தெளிவாகும்.

முன்பு செங்குட்டுவனது காலத்தை அடிப்படையாகக் கொண்டு உதியன் கால்வழியில் தோன்றி அரசாண்ட அரசர்களது காலத்தை அட்டவணை விளக்கத்தில் வரையறுத்துக் கண்டோம். அந்த அட்டவணையில் இங்கு நாம் கண்ட அந்துவன் கால்வழியில் தோன்றிய அரசர்களது ஆட்சிக் காலமும் காட்டப்பட்டுள்ளது. அங்கு நாம் வரையறுத்துக் கொண்டது போலவே ஒரு தலைமுறைக்கும் மற்றொரு தலைமுறைக்கும் இடையிலுள்ள காலம் இருபத்தைந்து ஆண்டுகள் என்றும், அண்ணனுக்கும் தம்பிக்கும் அல்லது அக்காளுக்கும் தங்கைக்கும் இடையிலுள்ள காலம் ஐந்து ஆண்டுகள் என்றும் வைத்துக் கொண்டு இவர்களது காலத்தையும் நாம் விளக்கமாகக் காணலாம்.

உதியன் கால்வழி அரசர்களை மூத்த தலைமுறை என்றும், அந்துவன் கால்வழி அரசர்களை இளைய தலைமுறை என்றும் பொதுவாக அறிஞர்கள் கருதுகின்றனர். எனவே, உதியன் கால்வழியைச் சார்ந்த நெடுஞ்சேரலாதனை மணந்தவள் அக்காள் என்றும், அந்துவன் கால்வழியைச் சார்ந்த செல்வக்கடுங்கோவை மணந்தவள் தங்கை என்றும் நாம் உய்த்துணருதல் பொருத்தமுடையதாகும். அக்காள் தங்கையருக்கிடையே ஐந்து ஆண்டு இடைவெளி என்னும் கோட்பாட்டை நாம் கொண்டிருப்பதால் அக்காளை மணந்த நெடுஞ்சேரலாதன் அரியணை ஏறிய பின் தங்கையை மணந்த செல்வக்கடுங்கோ வாழியாதன் ஐந்து ஆண்டுகள் கழித்து அரியணை ஏறினான் என முடியும்.

நெடுஞ்சேரலாதன் கி.பி. 95இல் அரியணை ஏறினான் என்று பார்த்தோம். எனவே, செல்வக்கடுங்கோ வாழியாதன் கி.பி. 100இல் அரியணை ஏறினான் எனலாம். நம் கோட்பாடுப்படி செல்வக் கடுங்கோவின் தம்பி அந்துவன், அவனுக்கு 25 ஆண்டுகட்கு முன்பு (அதாவது, கி.பி. 75-100 ஆண்டுகள்) அரசாண்டான் எனத் தெரியவரும். 25 ஆண்டுகள் அரசாண்டான் என்று பதிற்றுப்பத்துப் பதிகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செல்வக்கடுங்கோ வாழியாதன் கி.பி. 100-125 கால இடைவெளியில் அரசாண்டான் எனவும், 17 ஆண்டுகள் அரசாண்ட

பெருஞ்சேரல் கி.பி. 125-142 ஆண்டு இடைவெளியில் அரசாண்டான் எனவும் நாம் கொள்ளலாம். பெருஞ்சேரல் ஆண்ட காலத்திற்கும் இளஞ்சேரல் ஆண்ட காலத்திற்கும் இடையிலுள்ள காலத்தில் இளஞ்சேரலின் தந்தையும் வேறு சிலரும் ஆண்டிருக்கக்கூடும். ஆதலால், இளஞ்சேரல் இரும்பொறை கி.பி. 150-171 (16 ஆண்டுகள்) இடைவெளியில் அரசாண்டான் என்பது தெரியவரும்.

இனி அவர்கள் ஆண்ட நாடு, போர் முதலியவற்றைத் திரட்டி நோக்கலாம்.

| அரசன் | ஆண்ட நாடு | செய்த போர் |
|---|---|---|
| அந்துவன் | கொங்குக் கருவூர் | முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளி மதங்கொண்ட யானைமீது இவனது கருவூரில் நுழைதல் |
| செல்வக் கடுங்கோ வாழியாதன் | கொங்குக் கருவூர், பூழிநாடு நேரிமலைப் பகுதி, செருப்புமலைப் பகுதி, நறவுத் துறைமுகத் தைச் சூழ்ந்த நாடு, வில்லோர் (குதிரை மலைப் பகுதி) நாடு | வேந்தர் செம்மாப்பைத் தொலைத்தான். |
| பெருஞ்சேரல் இரும்பொறை | புகார் நாட்டில் வளர்ந்தான் பூழி நாடு | 1. கழுவுளின் காமூரைத் தீக்கிரையாக்கினான். 2. அதியமானோடு நீர் கூரில் போரிட்டுச் சோழரையும் பாண்டி யரையும் உடன் வென்றான். 3. எழினியோடு தகடூரில் போரிட்டு வென்றான். |
| இளஞ்சேரல் இரும்பொறை | கொல்லிமலைப் பகுதி, வானியாற்றுப்படுகை, நறவுத் துறைமுகப் பகுதி, கொங்கு நாடு, | 1. விச்சியோடு போர். 2. பெருஞ்சோழனோடு போர் 3. இளம்பழையன் |

| | |
|---|---|
| தொண்டித் துறைமுகப் பகுதி, குட்டநாட்டுப் பகுதி, பூழிநாட்டுப் பகுதி, காட்டூரைச் சூழ்ந்த பகுதி. | மாறனோடு போர் |

முன் கண்ட அட்டவணையில் ஒவ்வோர் அரசரும் ஆண்ட நாட்டுப் பகுதிகளையும் அவர்கள் பிற நாட்டு அரசர்களோடு நடத்திய போர்களையும் ஒப்புநோக்கி எண்ணிப் பார்க்கும்போது அந்துவன் கால்வழி அரசர்களின் செல்வாக்குப் படிப்படியாக உயர்ந்தும் தாழ்ந்தும் வந்திருப்பதை நாம் காணமுடியும். அந்துவன் சேரல் இரும்பொறை கருவூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டு வந்தவன் என்பது மட்டும் தெரிகிறது. இந்தக் கருவூர் கொங்கு நாட்டுக் கருவூர். கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் பெயர்கொண்ட அரசன் முதன் முதலாகக் கொங்கு நாட்டுக் கருவூருக்கு வந்து சேரர் ஆட்சியை நிலைநாட்டினான் என்று அவனது பெயரால் தெரிகிறது (பிற சேர அரசர்கள் என்னும் தலைப்பின் கீழ்க் காணலாம்). இந்தக் கோப்பெருஞ்சேரல் இரும்பொறையை அடுத்தோ சில தலைமுறைகளுக்குப் பின்போ அந்துவன் சேரல் அரியணை ஏறிக் கருவூரைச் சேர்ந்த ஒரு சிறு நாட்டுப் பகுதியை ஆண்டு வந்தான்.

இவன் மகன் செல்வக்கடுங்கோ வாழியாதன் காலத்தில் நாடு பெரிதும் விரிவு உடையதாகக் காணப்படுகிறது. இவனுக்குப் பின் அரியணை ஏறிய பெருஞ்சேரல் இரும்பொறை காலத்தில் செல்வக்கடுங்கோவின் ஆட்சியின் கீழ் இருந்த நாட்டுப் பகுதிகள் சிலவற்றில் போர் மூண்டிருக்கிறது. எனவே, இவனுடைய நாட்டுப் பரப்புச் சற்றுக் குறைந்து போயிற்று எனத் தெரிகிறது.

இவனுக்குப் பிறகு இவனது மகன் இளஞ்சேரல் இரும்பொறை காலத்தில் முன்பு இல்லாத அளவுக்கு நாடு மிகப் பெரிய பரப்புடையதாக விளங்கி இருந்தது. இவனது பெரியப்பன் பெருஞ்சேரல் இரும்பொறை, அதியமானோடு கூட்டுச் சேர்ந்து தன்னை எதிர்த்த சோழரையும் பாண்டியரையும் வென்றான். இவனோ தனித்த முறையில் கோப்பெருஞ்சோழன் என்னும் சோழ அரசனோடும் இளம்பழையன் மாறன் என்னும் பாண்டிய அரசனோடும் போரிட்டு வெற்றி பெற்றிருக்கிறான். இந்த வகையில் இவனது நாடு மிகப் பரந்த எல்லையை உடையதாக விளங்குகிறது.

இளஞ்சேரல் இரும்பொறைக்குப் பின் நாடாண்ட சேர அரசன் யார் என்பது தெரியவில்லை. ஒருவேளை நமக்குக் கிடைக்காமல் போன

10ஆம் பதிற்றுப்பத்துத் தலைவன் இவனுக்குப் பின் அரியணை ஏறி அரசாண்டிருக்கலாம். இவனை அடுத்துச் சேர நாடு சிதறுண்டு பல குறுநில மன்னர்களின் ஆட்சிக்குக் கீழோ சேர அரசர்கள் பலரது ஆட்சிக்குக் கீழோ வந்திருக்கலாம்.

## 2. பிற சேர அரசர்கள்

பல்வேறு புலவர்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்களில் பாடிய பாடல்கள் நானூறு கொண்டது புறநானூறு. அவற்றுள் 267, 268 எண்ணுள்ள பாடல்கள் சிலவற்றில் சில அடிகள் கிடைக்கவில்லை. சில பாடல் களைப் பாடியவர் இன்னார் என்று தெரியவில்லை. சில பாடல் கள் யார்மீது பாடப்பட்டவை என்னும் குறிப்புச் சிதைந்து போயிற்று.

இந்த நானூறு பாடல்களையும் தொகுத்தவர் யார் என்று தெரிய வில்லை. தொகுத்தவர் ஒவ்வொரு பாடலுக்கும் சுருக்கக் குறிப்பு ஒன்று தந்துள்ளார். அக்குறிப்புகளை அறிஞர்கள் 'கொளு' என்று குறிப்பிடுகின்றனர். யாரை யார் பாடினார் என்னும் குறிப்பு அதில் சிறப்பிடம் பெறுகிறது. சில பாடல்களுக்குப் பாடப்பட்ட சூழலும் கூறப்பட்டுள்ளது.

சில அரசர்கள் பெயருக்கு இந்தக் கொளுக் குறிப்புச் செய்த தொகுப்பாசிரியர் மட்டுமே பொறுப்பாளி. எடுத்துக்காட்டாக ஒன்று குறிப்பிடலாம். சேரமான் மாரிவெண்கோ என்ற அரசன், சோழ அரசன் ஒருவனோடும் பாண்டிய அரசன் ஒருவனோடும் சேர்ந்திருந்தபோது ஔவையார் பாடியதாகக் கொளுக் குறிப்பிடுகிறது. பாடலில் அவர்கள் பெயர் குறிப்பாலும் உணர்த்தப்படவில்லை. இதுபோன்ற குறிப்புத் தவறாகவும் இருக்க முடியும் என்பதை 389ஆம் எண்ணுள்ள பாடல் தெரிவிக்கின்றது. இந்தப் பாடலில் புலவர் தாம் பாடிவந்த அரசனிடம் (யார் என்று தெரியவில்லை) ஆதனுங்கன் போலப் பரிசில் தரவேண்டும் என்று வேண்டுவதைக் காண்கிறோம். பாடலில் கொளுக் குறிப்பு ஆதனுங்கனையே பாடியுள்ளதாகக் குறிப்பிட்டு விட்டது. இது பொருந்தாக் கூற்று. இது போன்ற நிலைகள் இருப்பதால் கொளுக் குறிப்பினால் மட்டும் தெரியவரும் செய்திகளை அப்படியே முழுமையான உண்மைகள் என்று நாம் எடுத்துக்கொள்ள முடியாது.

பதிற்றுப்பத்துச் சேர அரசர்களைப்பற்றிய வரலாற்றில் அவர்களோடு தொடர்புடைய செய்திகள் பிற நூல்களில் எங்கு இருந்தாலும் உடன் எடுத்துக் கூறப்பட்டதுபோல் புறநானூற்றில் சிறப்பாகக் காணப்படும் அரசர்களின் வரலாற்றைக் காணும்போது பிற நூல்களில் கிடைக்கும் செய்திகளும் ஒருங்கு இணைத்துக் கொள்ளப்படுகின்றன.




# சேரமான் வஞ்சன்

வாய்மொழி வஞ்சன் (புறம் 398 : 8) என்னும் திருத்தாமனாரின் தொடரால் இவனைப் பற்றி அறிகிறோம்.

## நாடு

அருவிகள் பாயும் மலை பாயல் மலை. அந்த மலைப் பகுதியைக் கொண்ட நாட்டுக்கு இவன் அரசனாக விளங்கினான்.

மக்களை மகிழ்விப்போராகிய கூத்தர், பாணர், புலவர்கள் இவனது ஊரில் நுழையலாமே அன்றி, இவனது பகைவர்களால் அவ்வூரை நெருங்கவும் முடியாது. பகைவர்களுக்கு அந்த ஊர் புலிக்கூட்டங்கள் தூங்கும் குகை போன்றது. கட்டுகளால் மாட்சிமைப்பட்ட கடி அரண் ஒன்றில் வாழ்ந்து வந்தான். இங்ஙனம் கூறப்படுவதால் கோட்டையது வலிமையும், இவனைச் சார்ந்தவர்களின் ஆற்றலும் பெறப்படும். இவனது வீரமும் உய்த்துணரப்படும்.

## கொடைத் தன்மை

இவன் தன்னை நாடிவந்த புலவர்களுக்கெல்லாம் பரிசில் வழங்கினான். அதிலே ஒரு தனிச்சிறப்பாக இவன் வழங்கினான். பரிசில் பெற வந்தவர்களிடையே உயர்வு தாழ்வு காணாது முன் வந்தவர்களுக்கு முன்னும், பின் வந்தவர்களுக்குப் பின்னும் வரிசை முறைப்படி வழங்கினான்.

திருத்தாமனார் என்னும் புலவர் இவனைப் பாடிச் சென்றார். அவரை இவன் சிறப்பித்த பாங்கில் தனிச்சிறப்பு உண்டு. மான்கறி வறுவலும், கொக்கின் நகம் போலும் நெல்லரிசிச் சோறும் கொடுத்து விருந்து படைத்தல் வியப்பன்று. தூசு படிந்த அவரது கிழிந்த உடையை நீக்கிவிட்டுப் புத்தாடை உடுத்தது வியப்பன்று. இவன் தன் உடையின் மேல் பகட்டுக்காக ஓர் உயர்ந்த ஆடை அணிவது வழக்கம். புகை விரிந்தாற்போல் பொங்கித் தோன்றும் பட்டாடை அது. இவனுக்கே உரித்தான ஒரே ஓர் ஒப்புயர்வற்ற ஆடை அது. அந்த ஆடையை இவன் புலவர்க்கு அணிவித்து மகிழ்ந்தான்.

## ஒப்பு நோக்கம்

அதியமான் தனக்கு எதிர்பாராமல் கிடைத்த நாவல்கனியை அவ்வைக்கு ஈந்து மகிழ்ந்தான். வஞ்சனோ தன்னிடம் இருந்ததையே புலவர்க்கு அளித்து மகிழ்ந்தான்.

## பண்பு நலம்

இவன் எப்போதும் சொன்ன சொல் தவறியதில்லை. கோசர்கள் 'வாய்மொழிக் கோசர்' எனச் சிறப்பிக்கப்படுகின்றனர். அவர்கள் வாய்மொழிக்கும் இவனது வாய்மொழிக்கும் வேறுபாடு உண்டு. கோசர்கள் போரில் வஞ்சினம் கூறுவர். கூறிய மொழி பொய் போகாது சூழ்ச்சி செய்தேனும் செயலை நிறைவேற்றிக் கொள்வர். இந்த வகையில்

அவர்களது வாய்மொழி வஞ்சின வாய் மொழியாகும். வஞ்சன் வாய்மொழியோ கொடையில் வாய் மொழி. தருவதாகக் கூறி, கூறிய சொல் தவறாமல் நல்குவான். பிறர் புகழ்ந்து கூறினும் அவர்கள் மொழி பொய்போகாதவாறு வழங்குவான். இதுவே இவன் பண்பாகும்; தெய்வ நம்பிக்கை மிக்கவன்; இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் வல்லவன்; எவராலும் வெல்ல இயலாத வீரத்தையுடையவன்.

### தோற்றப் பொலிவு

இவன் மார்பு மலை போன்றதாகும். அதில் அரவு போன்ற ஆரம் உள்ளது. அதில் வையகம் விளங்கும் மணிக்கல் பதித்துள்ளது. இந்தக் கோலத்தில் அவனது மேனியே ஒரு பூவாகப் பூத்திருந்தது.

### வஞ்சமன் கூடல்

இவன் காலத்தில் கொங்குநாட்டைச் சேர்ந்த கரூர், சேரர்க்குச் சேர்ந்திருந்தது. கருருக்கு எட்டு கி.மீ. தொலைவில் உள்ள தேவாரப் பாடல் பெற்ற வெஞ்சமக்கூடல் என்னும் சிவ தலத்தைக் கருங்கற்களால் கட்டினான். அவ்வூர் அவனது பெயரால் வழங்கி வந்தது. வஞ்சமன் கூடல் என்பது பேச்சு வழக்கில் வஞ்சமாங்கூடல் - வெஞ்சமாங்கூடல் என மருவி வழங்கப்படுகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தலத்தைப் பற்றித் தேவாரம் பாடியுள்ளார். அப்பாடலைப் பார்த்தால் சேரமான் வஞ்சன் காலத்தில் அவ்வூர் சிறப்புற்று விளங்கியது என்பது தெரிகின்றது. அவ்வூர் சிற்றாற்றின் கிழ்க்கரையில் உள்ளது.

## சேரமான் மாரிவெண்கோ

சேரமான் மாரிவெண்கோ, (புறம் 367, கொளு) சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, பாண்டியன் கானப் பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதி ஆகிய சேர, சோழ, பாண்டிய அரசர்கள் ஓரிடத்தில் மகிழ்ந்து நட்புறவோடு கூடியிருந்ததாகக் கொளுக் குறிப்பிடுகிறது. பாடலில் 'கொடித்தேர் வேந்தர்' என்று விளித்து ஔவையார் அறிவுரை கூறி யுள்ளார். அவர்கள் 'முத்தீ'ப் போல் இருந்ததாக அவர் குறிப்பிடுவதால் மூன்று அரசர்கள் என்பதும் உறுதியாகிறது. மூன்று அரசர்கள் இன்னார் என்று கொள்வதற்குப் பாடலில் சான்று இல்லை.

பார்ப்பார்க்கும் இரவலர்களுக்கும் கொடை வழங்கவேண்டும் என்றும், மகளிரோடு மதுவருந்தித் திளைத்து வாழவேண்டுமென்றும் அந்த மூவரையும் ஔவையார் வாழ்த்துகிறார்.

## மூவேந்தர் கூட்டாட்சி

சமயத்திற் கேற்றாற்போல் மூவேந்தர்களில் இருவர் ஒன்று சேர்ந்துகொண்டு மற்றொருவனை எதிர்த்து நிற்றல் சங்ககால வரலாற்றில் பொதுநிகழ்ச்சி. ஆனால், மூன்று அரசர்களும் உணர்வால் ஒன்றி உடலால் நெருங்கியிருந்து தமிழ்நாடு முழுவதையும் ஒருமைப்பாட்டு உணர்வுடன் ஆளமுனைந்தது இவன் காலத்தில்தான். இந்த நிகழ்ச்சி தமிழக வரலாற்றில் கிடைக்கும் சான்றுகளில் முதல் அரசியல் ஒருமைப்பாட்டு நிகழ்ச்சியாகத் திகழ்கிறது.

# சேரமான் பெருஞ்சேரலாதன்

சேரமான் பெருஞ்சேரலாதனுக்கும் (புறம் 65; அகம் 55 : 10-11) கரிகால் பெருவளத்தானுக்கும் போர் மூண்டது. போர், வெண்ணி என்னும் ஊரில் நடைபெற்றது. இது சோழனுடைய ஊர்.[50] எனவே, இந்தச் சேர அரசன் படையெடுத்துத் தாக்கினான் எனத் தெரிகிறது. போரில் கரிகால் வளவன் வெற்றிபெற்றான். எனினும், முடிவு எல்லா மக்களுடைய உள்ளத்தையும் உருக்கும் அவலமாக முடிந்தது.

போர்க் களத்தில் இரண்டு அரசர்களும் நேருக்கு நேர் நின்று போரிட்டனர். கரிகாலன் வலிமையுடன் வேல் வீசினான். அந்த வேல் சேரலாதனின் மார்பில் பாய்ந்து முதுகில் கழன்றோடிவிட்டது. இதனால் தன் முதுகில் காயம்பட்டதை அறிந்த சேரலாதன் போரிடுவதை நிறுத்திவிட்டான். போர்க்களத்திலேயே வடக்குத் திசையை நோக்கி அமர்ந்து உயிர் துறந்தான்.

தமிழர்கள் மார்பில் படும் காயம் ஒவ்வொன்றையும் தமக்குக் கிடைத்த பேறு என்று கருதுவர் ('விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள் வைக்குந்தன் நாளை எடுத்து' – குறள் 776). முதுகில் எதிர்பாராது காயம் பட்டாலும் அப்புண் தம்மைப் புறமுதுகு காட்டியவர் என்று சிலரையேனும் எண்ணத்தூண்டும் என்று எண்ணி அப்புண்ணை ஆற்றிக்கொள்ளாமலேயே மாய்வர். நெடுஞ்சேரலாதன் தன் முதுகில் பட்ட புண் தானே ஆறித் தான் பிழைத்துவிட்டால் என்ன செய்வது என்று எண்ணிப் போர்க் களத்திலேயே வடக்கிருந்தான். புறப்புண்ணோடு தன் நாட்டுக்குச் செல்ல விரும்பாமல் போர்க் களத்திலேயே வடக்கிருந்தான். தன் மானத்திற்கு இழிவு நேர்ந்த அப்பொழுதிருந்தே தன் உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாக மாய்த்துக் கொண்டான். வடக்கிருத்தல் என்பது வடக்கு நோக்கி அமர்ந்து உண்ணாமல் உயிர் துறப்பது. தன் வாளைத் தனக்கு எதிரே ஊன்றி வைத்துவிட்டு வடக்கிருக்கும் பழக்கத்தால் அது 'வாள் வடக்கிருத்தல்' (புறம் 65 : 11) எனப்பட்டது.

## மக்கள் அவலம்

எந்த இசைக்கருவியும் முழங்கவில்லை. வீரர்கள் கள் உண்ணவில்லை; உறவினர்கள் தேறல் அருந்தவில்லை; உழவர்கள் தம் கடமை ஆற்றும்போது சோர்வை மறைக்க எழுப்பும் ஓசையை எழுப்பவில்லை; ஊர்களிலே மகிழ்ச்சி நடமாட்டம் இல்லை. இவ்வாறு எங்கும் அவலம். சேரனுக்காகச் சோழ நாட்டிலேயே இத்தகைய அவலம். படையெடுத்துத் தாக்கிய பகைவன் சாகிறான் என்பதில்கூட அவலம். இது சோழநாட்டு மக்கள் நிலை (புறம் 65 : 1-5).

## சான்றோர் அவலம்

சேரலாதன் நிலைமைபற்றிய செய்தி சான்றோரிடையே பரவியது. கேட்ட சான்றோர் ஆங்காங்கே தாமும் வடக்கிருந்தனர்; உயிர் துறந்தனர் (அகம் 55 : 11-15).

## புலவர் கருத்து

இவன் இறந்துவிட்டபின் ஞாயிறு தோன்றிப் பயன் இல்லை; பகலும் இரவுதான் (புறம் 65 : 12). இவ்வாறு கூறுகிறார் கழாத்தலையார்.

வெண்ணியக் குயத்தியார், வென்ற கரிகாலனிடம் கூறுகிறார் (புறம் 66). 'வென்ற சோழனுக்கு வெற்றிப் புகழ், தோற்ற சேரனுக்கோ வீரப்புகழ். வெற்றிப் புகழைக் காட்டிலும் வீரப் புகழ் நல்லதாம்.'

இவ்வாறெல்லாம் பெருஞ்சேரலாதனின் மீது, அதாவது, படையெடுத்துத் தாக்கியவன்மீது எல்லாருக்கும் இரக்கம் தோன்றக் காரணம் என்ன? கரிகாலன் செய்த கொடுமை. பகைவன் மார்பில் வேலைப் பாய்ச்சியது கொடுமையா? இல்லை. அது அவன் கடமை. பின் என்ன? அவன் வலிமையிலே சோர்வு. மார்பில் பாய்ந்து முதுகில் வெளிவரும்படி எய்த அவனது பெருவலிமையிலா சோர்வு? இல்லை இல்லை. பகைவனுக்குப் போரிட வாய்ப்பு நல்குவது தமிழர் போர்த் துறைகளிலே தலைமையான பண்பு. படைக்கலம் இல்லாதவனோடு படைக்கலம் தந்து போரிடுவான். இறுதித் தாக்குதலில் அன்றி எடுத்த எடுப்பிலேயே, திடீரென்று கொன்றுவிடமாட்டான். கரிகாலன் செய்த பிழை அதுதான். எடுத்த எடுப்பிலேயே முதல் வீச்சிலேயே அரசனை வீழ்த்திவிட்டான். இந்த நிகழ்ச்சியைக் கொடிய சூழ்ச்சி, மோசமான சூழ்ச்சி என்று எல்லோரும் கருதினர். கரிகால் வளவன் இளைஞன். அவனிடம் சூழ்ச்சி இல்லை. ஏதோ இளமைத் துடுக்கு நிகழ்ந்துவிட்டது. அரசன் செயலை மக்கள் உள்ளம் ஏற்றுக் கொள்ளவில்லை; குறைகூறவும் இடமில்லை. விளைவு, பகைவன்மீது இரக்க உணர்வு; மரியாதை நிகழ்ச்சி. நாட்டுத் தலைவர்களை இழக்கும்போது இப்போது நாம்

துக்கம் கொண்டாடுவதில்லையா? அது போல அன்று மக்கள் துக்கம் கொண்டாடினர். பகைவர் இறந்ததற்காகத் துக்கம் கொண்டாடினர்.

கொல்லிமலைத் தலைவன் ஓரியைக் காரி கொன்றான். அப்போது ஓரிக்காக அவன் நாட்டு மக்கள் துக்கம் கொண்டாடினார்கள். இந்தத் துக்க நிகழ்ச்சிகளை யெல்லாம் விஞ்சிய துக்க நிகழ்ச்சி பெருஞ் சேரலாதனுக்காகக் கொண்டாடப்பட்ட துக்க நிகழ்ச்சி.

ஒல்லையூர் நாட்டில் பெருஞ்சாத்தன் மாய்ந்தான். அப்போது அவனால் நலமடைந்தோர் துக்கம் கொண்டாடினார்கள். இந்தத் துக்க நிகழ்ச்சிகளை விஞ்சிய துக்க நிகழ்ச்சி பெருஞ்சேரலாதனுக்காகக் கொண்டாடப்பட்ட துக்க நிகழ்ச்சி.

### ஞாயிறும் திங்களும்

நிறைமதி நாள் மாலை நேரத்தில் ஒரு சுடர் மறைகிறது; ஒரு சுடர் எழுகிறது. சேரலாதன் மறைகிறான்; கரிகால் வளவன் எழுகிறான். ஆற்றல் மிக்க ஞாயிறு சேரலாதன். ஒளிமிக்க திங்கள் கரிகால் வளவன் (புறம். 65). இந்த உவமையால் பெறப்படுவது என்ன? வெண்ணிக் குயத்தியார் கூறுவதுபோல் (புறம் 66 : 4-8) சேரன், சோழனைக் காட்டிலும் நல்லவன்; வல்லவன்.

### வேறு பெயர்

'சேரமான் பெருந்தோளாதன்' என்னும் பெயரும் இவனுக்கு வழங்கி வந்ததாகத் தெரிகிறது (புறம் 65 கொளு).

# சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்

### நாட்டுப் பரப்பு

வங்காளக் குடாக்கடலும் அரபிக்கடலும் இவனுடைய (புறம் 2) கடல்கள் என்று சொல்லும்படி இவனது நாட்டுப் பரப்பு தமிழகத்தின் தென்பகுதி முழுவதும் பரவியிருந்தது.

### வானவரம்பன்

இவனே வானவரம்பன் என்னும் சிறப்புப் பெயரை முதன் முதலில் பெற்றவன் என்று தெரிகிறது. ஞாயிறு இவனது கிழைக்கடலில் தோன்றி இவனது மேலைக்கடலில் மறைந்தது என்று சான்று கூறுகிறது. வடக்கில்

இருந்த நாடுகள் இவனைப் புகழ்ந்து கொண்டிருந்தமையால் ஒருவகையில் இவனுக்கு அடங்கியவை. தென்புறம் கடலாகும். எனவே, இவனது நாட்டுக்கு எந்த வகையில் வரம்பு (எல்லை) கூறுவது? மேலே உள்ள வானத்தைக் கூறுவதைத் தவிர வேறுவழியில்லை. எனவே, 'வானவரம்பன்' என்று இவனைப் பலரும் சிறப்பித்துக் கூறி மகிழ்ந்தனர்.

இந்தப் புகழ்ச்சிகளைப் பொருள் நுட்பத்தோடு கேட்டறிந்த முரஞ்சியூர் முடிநாகராயர் அவனை நேரில் கண்டபோது, அதே சிறப்புகளைப் பெருமிதத்தோடு வியப்பும் மகிழ்வும் தோன்றக் கூறி மகிழ்ந்தார்.

## போரும் சோறும்

ஐவருக்கும் நூற்றுவருக்கும் போர் நடந்தது. ஐவர் என்பவர் பஞ்ச பாண்டவர். நூற்றுவர் என்பவர் துரியோதனன் முதலானோர். இருவருக்கும் நடந்த போர் பாரதப் போர். இப்போரில் ஈடுபட்டவர் களுக்கெல்லாம் இவன் சோறு வழங்கினான்; பெருஞ்சோற்றுவிழா நடத்திச் சிறப்பாக வழங்கினான்; நண்பர், பகைவர் என்று வரையறுத்துக் கொள்ளாது (வரையாது) எல்லோருக்கும் வழங்கினான்.

பாண்டியரின் பஞ்சவர், கௌரியர் என்போர் கிளைக் குடியினர் ஆவர். இந்தக் கிளைக்குடியினர்க்கிடையே போர் நடந்தபோது இவன் இவ்வாறு நடந்துகொண்டான் என்று அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி கருதுகிறார். 'பொலம்பூண் ஐவர்' (மதுரைக். 775) எனச் சங்கப் பாடல் குறிப்பொன்று கூறுகிறது. அது பாண்டியரைக் குறிப்பிடுகிறது. எனவே, பாண்டியரும் ஐவர் எனத் தெரிகின்றது. நூற்றுவர் என்பார், ஈரைம்பதின்மரைக் கொள்ளலாம். எனவே இது கௌரியர் என்னும் துரியோதனன் முதலானோரைக் குறிக்காமல் பாண்டியரில் ஒரு குடியினராகிய 'கவுரியலரை'க் குறிப்பிட்டிருக்கலாம். பாண்டிய நாட்டில் உள் நாட்டுப்போர் நிகழ்ந்தபோது இவன் இரு படைக்கும் உணவு வழங்கியிருக்கலாம் என்று கருதவும் வாய்ப்புண்டு.

## பண்பு நலன்

பகைவர் செயல்களைப் பொறுத்துக்கொள்வதில் இவன் நிலம் போன்றவன்; சூழ்ச்சித் திறன் அகலத்தால் வானத்தைப் போன்றவன்; வலிமையில் காற்றைப் போன்றவன்; பகைவரை அழிப்பதில் தீப்போன்றவன்; கொடையில் நீரைப் போன்றவன்.

## சுற்றம்

பால் புளித்தாலும், பகல் இருண்டாலும், வேதநெறி திரிந்தாலும் இவனோடு உறவில் திரியாத தன்மை உடையது இவனது சுற்றம்.

இத்தகைய சுற்றத்துடன் இமயமலையும் பொதியமலையும் போல அசைவின்றி வாழ வேண்டும் என்று இவன் வாழ்த்தப்படுகிறான். ஆட்சிப் பரப்பு பொதியத்திலும், புகழ்ப் பரப்பு இமயத்திலும் விளங்கியமை நோக்கி இவன் இவ்வாறு வாழ்த்தப்படுகிறான்.

உதியஞ்சேரல் – சேரமான் பெருஞ்சோற்று
உதியஞ்சேரலாதன் இருவரும் வெவ்வேறு அரசர்கள்

| | உதியஞ்சேரல் | சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் |
|---|---|---|
| 1. | செங்குட்டுவனுக்குப் பாட்டன் | பாரதப்போர் நடந்த காலத்தவன் கால் வழி தெரியவில்லை |
| 2. | பேய்க்குப் பெருஞ்சேறு அளித்தான் | வீரர்களுக்குப் பெருஞ்சேறு அளித்தான் |
| 3. | பாடிய புலவர் கடைச்சங்க காலத்தவர் | பாடிய புலவர் தலைச்சங்க காலத்தவர் (களவியல் உரை) |
| 4. | பகைவர்களை வென்றான் | பகைவர்க்கும் நண்பர்க்கும் நடுநிலையாளனாய் விளங்கினான் |

## இளங்கோ கருத்து

இவன் சேர அரசன், பாரதப்போரில் சோறு அளித்தான், சேரர் குடியில் சேரன், பொறையன், மலையன் என்னும் பெயருடன் வரும் கிளைக் குடிகள் உண்டு. அந்தக் குடிகளில் இவன் எந்தக் குடியைச் சேர்ந்தவனானாலும் இவன் சேரர் குடியினன். இவனால் சேரர் குடிக்கே பெருமை (சிலப். 29, ஊசல்வரி).

பெயர் ஒப்புமை, வள்ளன்மை ஆகியவற்றின் அடிப்படையில் இந்த இருவரையும் ஒருவர் என்று கூறுகின்றார். இந்த ஒப்புமை மேம்போக்கானது. ஆழ்ந்த நோக்கில் வேற்றுமைகளே மிகுதி. எனவே, இருவேறு அரசர்கள் என்று கொள்வதே சரியானது.

பாரதப் போரே கட்டுக்கதை என்பது சிலர் துணிபு. இஃது உண்மையாயின், இவன் அப்படையினருக்கு உணவு கொடுத்தான் என்று கூறுவது வரம்பிகழ்ந்த புகழ்ச்சி. பாரதப் போர் நிகழ்ந்தது உண்மையாயின், இவன் அப்படையினர்க்குச் சோறு வழங்கியதும் உண்மை.

# சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை

*இந்த அரசனின் பெயரைப் புறநானூற்றுக் கொளுக் குறிப்பிடுகிறது (புறம் 5). பாடலில் பெயர் இல்லை.*

## நாடு

இவன் கானக நாடன் என்றும் பாடலில் குறிப்பிடப்படுகிறான். எருமை போன்ற கருங்கற்களுக்கிடையில் ஆடுமாடுகள் மேய்வது போல யானைகள் மேயும் கானக நாடு அந்த நாடு என்று பாடல் கூறுகிறது. உம்பல் என்னும் சொல்லுக்கு யானை என்பது பொருள். உம்பற்காட்டில் (இக்காலத்து ஆனைமலைப் பகுதி) யானைகள் மிகுதி. பாடல் குறிப்பால் இவன் தொடக்க காலத்தில் ஆனைமலைப் பகுதியில் அரசாண்டு கொண்டிருந்தான் என்று கருதலாம்.

கொங்கு நாட்டில் ஒரு கருவூர் உண்டு. இவ்வூர் சேரநாட்டுக் கருவூர் நினைவாகப் பெயர் சூட்டப்பெற்றது என்பது வரலாற்றாசிரியர்களின் கருத்து. காவிரிக் கரையிலுள்ள முசிறியும் தாராபுரத்திற்கு வழங்கிவந்த வஞ்சி என்னும் பெயரும் இந்த முறையில் சேரர்களால் நினைவுச் சின்னப் பெயர்களாக வழங்கப்பட்டவை.

உம்பற் காட்டில் ஆட்சி செய்து கொண்டிருந்த கோப்பெருஞ்சேரல் இரும்பொறை இந்தக் கொங்கு நாட்டுக் கருவூருக்கு வந்து அரியணையேறி அரசு புரியலானான். ஒருவேளை இவனே இக்கருவூர் வந்து ஆளத்தொடங்கிய முதல் சேர அரசனாக இருக்கலாம். ஆனது பற்றி இவனுக்குக் 'கருவூர் ஏறிய' என்னும் சிறப்பு அடைமொழி கொடுக்கப்பட்டிருக்கலாம். இந்தச் சிறப்பு அடைமொழியில் 'ஒள்வாள்' என்னும் அடைமொழியும் உள்ளது. இந்த அடைமொழி இவன் வாட்போரில் கொங்குநாட்டில் பெற்ற வெற்றியைக் குறிப்பதாக இருக்கலாம்.

நரிவெரூஉத்தலையார் என்னும் புலவர் இவனைக் கண்டு பாடினார். அன்பும் அருளும் இல்லாதவர்களோடு சேராமல் நாட்டைக் குழந்தையைப்போல் பேணி வளர்க்கவேண்டும் என்று அவனுக்கு அறிவுரை கூறினார். இஃது அவன் புதிதாகக் கைப்பற்றிய நாட்டில் நடந்து கொள்ள வேண்டிய முறையைக் கூறியதாகக் கொள்வது பொருத்தம்.

புறநானூற்றுப் பாடலில் கொளுக் குறிப்பு ஒரு கதையை உருவாக்கியுள்ளது.

இந்தப் புலவரின் தலை, பிணம் தின்னும் நரிகளே வெருண்டு ஓடும்படி அமைந்திருந்தது. இந்த நிலை அவருக்கு ஒரு சாபக்கேட்டால் அமைந்தது. சாபம் கொடுத்தவர் அவருக்குச் சாப விடுதியும் குறிப்பிட்டிருந்தார். சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ் சேரல் இரும்பொறையைக் கண்டபோது சாபக்கேடு நீங்கிப் புலவர் தம் உடம்பு மீண்டும் கைவரப் பெறுவார் என்பது அந்தச் சாப விடுதி. புலவர் அவ்வாறே கண்டார். தம் உடம்பு கைவரப் பெற்றார். கண்டவன் இன்னான் என உணர்ந்து பாடினார். இந்தக் கதைக்குக் கொளு இட மளிக்கிறது; பாடலில் இடமில்லை. நிகழக்கூடிய நிகழ்ச்சியும் அன்று.

புலவரின் பெயர் நரிவெரூஉத்தலையார் என்று குறிப்பிடப்படுகிறது. இவர் தமது பாடல் ஒன்றில் 'நரைமுதிர் திரை' என்று பாடியுள்ளார் (புறம் 195). 'அணில் ஆடு முன்றி'லைப் பாடியவர் அணிலாடு முன்றிலார் என்றும், 'செம்புலப் பெயல் நீர் போல' என்று பாடியவர் செம்புலப் பெயல் நீரார் என்றும் பெயர் பெற்றிருப்பது போல, 'நரைமுதிர் திரை' என்று பாடியுள்ள இவர் நரைமுதிர் திரையார் என்று பெயர் பெற்றிருக்கலாம். இந்தப் பெயர் நாளடைவில் மருவி நரிவெரூ உத்தலையார் என்று அமைந்திருக்கலாம்.

முதன்முதலில் கருவூருக்கு வந்த சேர அரசனாக இவன் இருப்பதால் பதிற்றுப் பத்தில் குறிப்பிடப்படும் அந்துவஞ்சேரலுக்கும் இவன் காலத்தால் முற்பட்டவன் என்று ஆகிறது. எனவே, புறநானூறு தொகுக்கப்பட்ட காலத்திற்கும் இவன் காலத்திற்கும் இடைவெளியாக ஐந்தாறு தலைமுறைகளேனும் இருக்கவேண்டும். இந்த நிலையில் பெயரின் திரிபு வழக்கு இயல்பே. திரிபு வழக்கால் எழுந்த கற்பனைக் கருத்து மிகுதி. இதில் ஓரளவு உண்மை இருக்குமானால் அஃது இந்த அரசனைக் கண்ட மகிழ்ச்சியால் புலவர்க்குத் தோன்றிய புத்துணர்வை உணர்த்துவதாய் இருக்கும்.

# சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ[51]

## நாடு

தண்பொருநை ஆறு பாயும் விறல் வஞ்சி நகர்க்கு இவன் வேந்தன் (புறம் 11. 5-7). இப்போதுள்ள தாராபுரம், வஞ்சி என்னும் பெயர் பெற்றிருந்தது. அந்தப் பகுதியில் இருந்துகொண்டு இவன் அரசாண்டான் எனத் தெரிகிறது.

## வெற்றிகள்

இவன் கோட்டைகள் பலவற்றைக் கடந்தான் (புறம். 11 : 8-3). அக் கோட்டையிலிருந்த வலிமைமிக்க வீரர்களைப் புறங்கண்டான். எந்தக் கோட்டையை வென்றான் என்பது தெரியவில்லை.

## கொடை

இவன் தன் வெற்றி மகிழ்ச்சியில் பாணர்களுக்குப் பொன்னால் தாமரைப் பூக்கள் செய்து வெள்ளி நாரால் தொடுத்துப் பரிசில்களால் வழங்கினான். இவனது வெற்றிப் புகழை அதாவது, மறப்புகழைப் பாடிய பாடினிக்குக் கழஞ்சு எடை கொண்ட பொன் இழைகள் செய்து வழங்கினான்.

## புலமை நலம்

இவன் பாலைத் திணையைச் சிறப்பித்துப் பாடுவதில் வல்லவன். இவனது பாடல்களில் ஒன்று மட்டும் மருதம் (குறுந். 231). பிற யாவும் பாலைத் திணைமேலன.

பாடல்களில் உவமை நயங்களும் பிற நயங்களும் மிகுதி. எடுத்துக்காட்டாக ஒன்றைக் காணலாம்.

வேனில் காலத்தில் மரங்கள் தழைத்திருப்பதை இவன் கூறுகிறான். சோம்பல் இல்லாதவனிடம் செல்வம் தழைப்பதுபோல் மரங்கள் தழைக்கின்றன. அவனது செல்வத்தின் பயனைப் பலரும் துய்ப்பதுபோல் மரக்கொம்புகளில் வண்டுகள் படிந்து உண்கின்றன. சில மரங்கள் மாயவளின் மேனி போல் கரும் பச்சையான தளிர்களை ஈனுகின்றன. அவள் மேனியிலே சுணங்கு இருப்பது போன்று அத்தளிர்களின்மீது பூந்தாதுகள் உதிர்ந்துள்ளன (கலி. 35 : 1-4).[52]

## கல்வெட்டுச் சான்று

கருவூரை அடுத்த புகளூரில் சங்காலத்துக் கல்வெட்டு உள்ளது. தாமிழி எழுத்துகளாலான அக்கல்வெட்டில் 'கோ ஆதன் செல்லிரும்பொறை மகன் பெருங்கடுங்கோ' என்னும் குறிப்பு வருகிறது. இந்தக் குறிப்பு நம் பாலை பாடிய பெருங்கடுங்கோவையே குறிக்கும் என்று நம்பப் படுகிறது. ஆயின், இவனது தந்தையின் பெயர் செல்வக்கடுங்கோ வாழியாதன் என்று முடியும்.

செல்வக்கடுங்கோ வாழியாதனுக்குப் பெருஞ்சேரலிரும்பொறை, குட்டுவன் இரும்பொறை என்னும் பெயரைக் கொண்ட இரண்டு ஆண்மக்கள் இருந்தனர் என்பதை முன்பே கண்டோம். இந்தச் செய்திகள்

செல்வக்கடுங்கோ வாழியாதனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர் என்னும் நிலையை உண்டாக்கும். இவனுக்கு இரண்டு பிள்ளைகள்தாம் இருந்தனர் என்று பாடல் ஒன்று கூறுகிறது ('இளந்துணைப் புதல்வர்' – பதிற். 70 : 21). எனவே, மூவர் என்று கூறுவது பொருந்தாது. குட்டுவன் இரும்பொறை என்னும் பெயர் நம் பாலை பாடிய பெருங் கடுங்கோவுக்கு வழங்கப்பட்ட பெயராக இருக்கலாம். இவன் தானே புலவனாக விளங்கியதனால் இவன்மீது வேறு ஒரு புலவர் பதிற்றுப்பத்துப் பாடல்கள் பாடிச் சிறப்பிக்கவில்லை போலும்.

புகழூர்க் கல்வெட்டு பெருங்கடுங்கோ மகன் இளங்கடுங்கோ என்று குறிப்பிடுகிறது. பதிற்றுப்பத்துப் பதிகம் குட்டுவன் என்பவனின் மகன் இரும்பொறை என்று குறிப்பிடுகிறது. இந்தச் செய்திகளும் ஒன்றோடொன்று தொடர்பு உள்ளவைபோல் காணப்படுகின்றன. பொறையன், கடுங்கோ ஆகிய பெயர்கள் ஒரே அரசனுக்கு அழங்கிய நிலையும் உண்டு என்பதை 'மாந்தரம் பொறையன் கடுங்கோ' என்பவனது வரலாற்றில் காணலாம்.

இந்தச்செய்திகளையெல்லாம் திரட்டி நோக்கி இந்தப் பாலை பாடிய பெருங்கடுங்கோவை ஒன்பதாம் பதிற்றுப் பத்துத் தலைவனான இளஞ்சேரல் இரும்பொறையின் தந்தை என்றும் கருதலாம்.

# சேரமான் குடக்கோச் சேரல் இரும்பொறை

## நாடு

குடநாட்டிலிருந்து ஆட்சி செய்துகொண்டிருந்தவன் இவன் என்பது இவனது பெயரிலிருந்து பெறப்படும் உண்மையாகும்.

## போர்

இடி போன்று போர் முரசு முழங்கப் பெரும் படையுடன் படையெடுத்துச் சென்று, எதிர்த்த அரசர்கள் அழியும்படி வெற்றி கொள்ளும் வல்லமை பெற்றவன் இவன் (புறம் 210 : 13-14). ஒருமுறை இவன் பகை அரசனை அழித்தபோது பகைவர்கள் கையற்று வருந்தினர் (புறம் 211 : 5-6). இந்தச் செய்திகள் ஏதோ எல்லோரையும் பொதுப்படக் கூறுவது போல் கூறப்பட்ட செய்திகளாக உள்ளன. சிறப்பாக இவனது போரைப் பற்றிக் குறிப்பிட ஒன்றுமில்லை.

## கொடை

பெருங்குன்றூர்க்கிழார் இவனிடம் பரிசில் பெற வந்தார்; வள்ளல் என்று இவனைப் புகழ்ந்து பாடினார். தாயிடம் பால் இல்லாமையால் பாலுண்ண மறந்த தன் குழந்தையின் நிலையைக் கூறித் தன் வறுமை நிலைமையையும், பக்கத்து வீடுகளுக்குச் சென்றேனும் உண்டு வாழும் எலிகூட உணவின்றிச் செத்து மடிந்துள்ள தன் வீட்டுச் சுவரைக் கூறித் தன்னைச் சூழ்ந்துள்ள வறுமையையும் கூறிப் பரிசில் நல்குமாறு வேண்டினார். அவன் முதல் நாள் பரிசிற் பொருளைக் காட்டி நல்குவதுபோல் பாசாங்கு செய்தான். புலவர் மறுநாளும் பாடினார். தரவில்லை. மூன்றாம் நாளும் பாடினார். முடிவு தெரியவில்லை; கொடுத்திருக்கலாம்.

# மாந்தரன்

மாந்தரன் என்னும் பெயர் தனித்தும் பல்வேறு அடைமொழிகளுடனும் காணப்படுகிறது. மாந்தரன் (பதிற். 90 : 13), மாந்தரம் பொறையன் கடுங்கோ (அகம் 142 : 4-5), சேரமான் மாந்தரஞ் சேரல் இரும்பொறை (புறம் 125), சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை (புறம் 22), சேரல் மாந்தரஞ் சேரல் இரும்பொறை (புறம் 53), கோச்சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை (புறம் 229).[53] இவ்வாறு ஆறு வேறு தொடர்மொழிகளால் குறிப்பிடப்படும் மாந்தரன் எத்தனை பேர் என்பது தெரியவில்லை. எனவே, தனித்தனியே இவர்களைப் பற்றிய செய்திகளை முதலில் காண்போம்.

# மாந்தரன்

ஒன்பதாம் பத்துத் தலைவனான இளஞ்சேரல் இரும்பொறை மாந்தரனின் வழிவந்தவன்.

## நல்லாட்சி

இந்த மாந்தரன் அறக்கடவுள் வாழ்த்தும்படி நல்லாட்சி புரிந்தவன். இவனது ஆட்சியில் கோள்நிலை திரியவில்லை. வானம் பருவமழை தவறாமல் பொழிந்தது. மக்களுக்கு அச்சம் என்பதே இல்லை. இவனது நாட்டிலிருந்த பொருள்களுக்குப் பாதுகாப்பு மிகுதி. மக்களிடம் அறியாமை என்பது இல்லை. சமூக வாழ்வில் இன்பம்

பெருக்கெடுத்திருந்தது. கல்வி பல்வேறு துறைகளில் பல்வேறு அறிஞர்களிடம் துறைபோகிக் கிடந்தது.

### திறை பெறல்

வாள்வேந்தர்கள் பலர் இவனுக்குக் களிறும் கலமும் பரிசிலாகத் தந்து இவன் சொன்னபடி செயலாற்றி வந்தனர்.

## மாந்தரம் பொறையன் கடுங்கோ

### நாடு

இவன் பெயரில் 'மாந்தரன்' என்று வாராமல் 'மாந்தரம்' என்று வருவதால் இது நாட்டின் பெயர் என்பது பெறப்படுகிறது.

பொறையன் என்பது பொறை நாட்டோடு தொடர்பு உடையது. கடுங்கோ என்பது 'இருங்கோ', 'இளங்கோ' என்பன போல் அரசன் பெயராகும்.

### புகழ்

பரிசில் வேண்டிச் சென்றவர்களின் கொள்கலம் நிறையும்படி கொடை வழங்கினான். இவனது வள்ளன்மையைப் புலவர்கள் போற்றிப் பாடினார்கள். அவர்கள் செந்நா மேலும் சிவப்புறும்படி பாடினார்களாம்.

### படை

வெல்லுதற்கு அரிய படை இவனிடம் இருந்தது என்று கூறப்படுவது பொதுப் புகழ்ச்சியாகப்படுகிறது.

## சேரமான் மாந்தரஞ் சேரல் இரும்பொறை

புறநானூற்றைத் தொகுத்தவர், இவனுக்கும் சோழ அரசன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளிக்கும் நடந்த போரைக் குறிப்பிடுகிறார் (புறம் 125 : 13-17). போரில் இவன் தோற்றான். சோழன் வென்றான். சோழனது வெற்றிக்குக் காரணம் சோழனது ஆற்றல் அன்று. சோழனுக்குத் துணையாகத் தேர்வண் மலையன் என்னும் சிற்றரசன்

இருந்ததே ஆகும். இந்தச் செய்தி பாடலிலும் கூறப்பட்டுள்ளது. பாடலில் அரசர்களுடைய பெயர் குறிப்பிடப் படவில்லையே அன்றிப் பாடலில் உள்ள செய்தியும் புறநானூற்றைத் தொகுத்தவர் கொளுவில் தரும் செய்தியும் ஒன்றே. எனவே, இவனைப்பற்றிக் கூறப்படும் போர்ச்செய்தி ஐயத்திற்கிடமின்றி உண்மை எனத் தெரிகிறது.

# சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை

யானையைப் போல் கூர்மையான பார்வையும் முருகனைப் போன்ற அழகும் உடையவனாக இவன் விளங்கியமையால் இவனது பெயரில் 'யானைக்கண்', 'சேய்' என்னும் அடைமொழிகள் முறையே அமைந்தன. பாடலில் 'வேழ நோக்கின் விறல் வெஞ்சேய்' என்று இந்த அடைமொழி குறிப்பிடப்பட்டுள்ளது (புறம் 22).

## நாடு

மரந்தை அல்லது மாந்தைத் துறைமுகத்தைத் தலைநகராகக் கொண்ட நாடு மாந்தர நாடு. இந்த நாட்டுக்கு இவன் அரசன் என்பது இவனது பெயரால் விளங்கும் உண்மையாகும்.

## வெற்றிகள்

வயலும் மலையும் மணலும் கழியும் கானலும் தன்னகத்தே கொண்ட தொண்டி நகரில் இருந்தவர்களோடு இவன் போரிட்டு அவர்களை அழித்து வென்று சிலகாலம் தங்கி அரசாண்டான் (புறம் 17 : 27).

## கொல்லி வெற்றி

தொண்டி நகரில் போரிட்டு வென்று சிலகாலம் அங்குத் தங்கி அரசாண்டது போலவே கொல்லியிலும் சிலகாலம் தங்கி அரசண்டான் (புறம் 22 : 20-28).

## சிறைப்பட்டு மீளல்

இவன் மேலே கூறியவாறு பல வெற்றிகள் பெற்று ஆளுகையில் பாண்டிய அரசன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் பகையைத் தேடிக் கொண்டான். இந்த நெடுஞ்செழியன் இவனைத் தந்திரமாகக் கைது செய்து சிறையில் அடைத்தான். யானை பொய்க் குழியில் விழுந்தது இவன்

சிறைப்பட்டதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளபடியால் பாண்டியன் இவனைப் போரில் வென்று கைது செய்யவில்லை; தந்திரமாகக் கைது செய்தான் என்பது தெரிகிறது.

குழியை அழித்துவிட்டு யானை தப்பிச் சென்று தன் கூட்டத்தோடு சேர்ந்துகொண்டது, இவன் சிறையிலிருந்து தப்பிச் சென்ற செயலுக்கு உவமையாகக் கூறப்பட்டிருப்பதால் இவன் பிறருடைய உதவியின்றித் தானே சிறையைத் தகர்த்தெறிந்துவிட்டுத் தப்பிவிட்டான் என்பது தெரிகிறது (புறம் 17).

## பகையரசர் பணிவு

இவனை அண்டினால் தாம் இழந்த நாட்டையும் செல்வத்தையும் திரும்பப் பெறலாம் என்று சில அரசர்கள் இவனைப் பணிந்தனர் (புறம் 17 : 30-34). இவன் சினந்தால் தம் கோட்டையை அழித்துவிடுவான் என்று சிலர் இவனைப் பணிந்தனர். வேந்தர்கள் பணிந்து திறை கொடுத்தனர்.

## படை

இவனது தோல் படை மேகக் கூட்டம் போன்றது. யானைப் படை மலைபோல் உயர்ந்த யானைகளைக் கொண்டது. இவை கடல்போல் பெரியன (புறம் 17 : 34-36).

இவனது வீரர்கள் பனம்போழைச் செருகிக்கொண்டு வெறிக்குரவை ஆடினர்.

## கொடைத் தன்மை

இவன் முரசு முழக்கி இரவலரை அழைத்துக் கொடை நல்கினான் என்பது குறிப்பிடத்தக்கது.

இவனிடம் பரிசில் பெற்ற பின் வேறொருவரிடம் சென்று பெறவேண்டிய நிலை இல்லாதவாறு இவன் மிகுதியாகக் கொடுத்தான். தனக்கு வேண்டுமென்று எதையும் வைத்துக்கொள்ளாது கொடுத்தான் (புறம் 229 : 25-27).

## ஆட்சி

இவனது நாட்டு மக்கள் சோறு ஆக்கும் தீ அன்றி வேறு தீ அறியார்; வெயில் அல்லது வேறு சூடு அறியார்; வானவில் அன்றிக் கொலை வில் அறியார்; உழுபடை அன்றிக் கொல்படை அறியார். இவன் நாட்டு மண்ணைக் கருவுற்ற பெண்கள் விரும்பி உண்ணுதல் அன்றிப் பகைவர் கொள்ளார். இவனது கோட்டையிலே அம்புகள் பயன்படுத்த

வாய்ப்பின்றிக் கிடந்தன. நாட்டிலே அறம் தூங்கியது. மக்களுக்கு நல்ல நிமித்தம் கெட்ட நிமித்தம்பற்றிக் கவலையே இல்லை (புறம் 20 : 7-21). விறுவிறுப்பு இல்லாத அமைதியான இன்பமான வாழ்க்கையாகும். இவன் பாதுகாக்கும் நாடு தேவர் உலகம்போல் இன்பத்தையே துய்த்தது.

## முன்னோர் ஆட்சி

குமரி முதல் இமயம் வரை மேற்கிலும் கிழக்கிலும் இரு கடல்களுக்கிடையில் ஆண்ட அரசர்கள் எல்லாம் ஒன்றுபட்டு இவனது முன்னோருக்கு வழிமொழிந்து வாழ்ந்தனர். இவனது முன்னோர் கொடியவற்றை நீக்கிச் செங்கோலோச்சினர். காடுகளைத் திருத்தி விளைநிலமாக்கினர் (புறம் 17 : 1-8).

## பண்பு நலம்

கடலின் ஆழம், நானிலத்தின் பரப்பு, திசையின் நீளம், வானத்தின் உயரம் இவற்றையெல்லாம் அளந்துவிட்டாலும், இவனது அறிவு, ஈரம், இரக்க உணர்வு ஆகியவற்றை அளக்க முடியாது என்று கூறுவதால் (புறம் 20 : 1-6) இவன் நல்ல பண்பாளன் என்பதை அறியலாம்.

## ஐங்குறுநூறு தொகுப்பித்தல்

அகத்துறையில் அரிய நூல் ஒன்றைத் திறமையாளர்களைக் கொண்டு உருவாக்கவேண்டுமென்று இவன் விரும்பினான். அறிவில் சிறந்து விளங்கிய புலவர் கூடலூர்க்கிழாரிடம் அப்பணியை ஒப்படைத்தான். அவர் ஐந்து திணைகளையும், ஐந்து புலவர்களிடம் பகிர்ந்தளித்தார். ஒவ்வொருவரும் 100 பாடல்கள் பாடவேண்டும் என்றும் அந்த நூறும் பத்துப் பத்தாகத் தனித்தனித் தலைப்பின் கீழ் அமையவேண்டும் என்றும் அவர் வரையறை கூறியிருந்தார். அவர் கூறியபடி ஓரம்போகியார் மருதத்திணைப் பாடல்களைப் பாடினார். அம்மூவனார் நெய்தல், கபிலர் குறிஞ்சி, ஓதல் ஆந்தையார் பாலை, பேயனார் முல்லை என்ற முறையில் பிற திணைக்குரிய பாடல்களும் பாடப் பெற்றன. அவை கூடலூர்க் கிழாரால் தொகைநூலாக உருவாக்கப்பட்டன. தலைப்புக்குப் பத்துப் பாடல், திணைக்குப் பத்துத் தலைப்பு என்ற நிலையைக் காணும்போது இது திட்டமிட்டுப் பாடிய தொகுப்பு நூல் என்பது புலனாகிறது.

# சேரல் மாந்தரஞ் சேரல் இரும்பொறை

## விளங்கில் வெற்றி

*விளங்கில் என்பது மாடமாளிகைகள் நிறைந்த ஊர். 'தெற்றி' என்னும் ஒரு வகை விளையாட்டு அங்குள்ள மக்களுக்குச் சிறப்பு விளையாட்டாகும். இவன் அந்த ஊரைத் தாக்கினான். அதன் சிறப்புகளைத் தன் வாட்படை கொண்டு அழித்தான் (புறம் 53 : 3-5).*

## காலம்

*இவன் தனது விளங்கில் வெற்றியைப் புலவர் ஒருவர் நன்கு சிறப்பித்துப் பாட வேண்டும் என்று விரும்பினான். கபிலர், செல்வக்கடுங்கோ வாழியாதனைச் சிறப்பித்துப் பத்துப் பாடல்கள் பாடியது அவன் நினைவுக்கு வந்தது. அப்போது கபிலர் இல்லை; இறந்துவிட்டார். அவர் இருந்தால் நலமாயிருக்குமே என்று எண்ணி ஏங்கினான். இந்த ஏக்கத்தை நிறைவு செய்யப் பொருந்தில் இளங்கிரனார் என்ற புலவர் தாமே முன்வந்தார். கபிலரைப் போல் இவர் இவன்மீது பத்துப் பாடல்கள் பாடியிருக்கக்கூடும். பதிற்றுப் பத்தைத் தொகுத்தவர் ஏதோ காரணத்தால் இதை விட்டிருக்கக்கூடும்.*

*இவன் தன் காலத்தில் கபிலர் இல்லை எனக் கூறுவது இவனது காலத்தை வரையறுக்க உதவி செய்யும். செல்வக்கடுங்கோவை அடுத்து அரியணை யேறியவன் பெருஞ்சேரல் இரும்பொறை ஆவான். சேரல் மாந்தரஞ்சேரல் இரும்பொறை இந்தப் பெருஞ்சேரல் இரும்பொறையைப் பாடிய அரிசில்கிழாரைப் பற்றி எண்ணவில்லை. எனவே, இவனது காலம் செல்வக்கடுங்கோ வாழியாதனுக்கும் பெருஞ்சேரல் இரும்பொறைக்கும் இடைப்பட்டது என்பது தெரிகிறது.*

*வானவன் வரலாற்றில் இவனைப்பற்றி மேலும் காணலாம்.*

# கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை[54]

*இவனது வரலாற்றைப் புறநானூற்றுக் கொளுக் குறிப்பு ஒன்று சுட்டுகிறது.*

## மனைவி

இவன் ஒருத்தியை மணந்து உவகையுடன் வாழ்ந்தவன் எனத் தெரிகிறது. இறந்தவன் தெய்வப் பெண்களுக்குத்துணையாகச் சென்றான் என்று கூறப்படும்போது தன் துணை (மனைவி), ஆயம் இவற்றை மறந்தான் என்று கூறப்படுவதால் அதை உணரமுடிகிறது.

## கொடைத் தன்மை

அளந்து கொடுத்து அறியாதவன்; அளக்காமல் அள்ளி அள்ளிக் கொடுத்தவன்.

## தோற்றப் பொலிவு

'மணிவரை அன்ன மாயோன்' என்று இவன் கூறப்படுவதால் கறுகறுத்த இவன் பொலிவு வெளிப்படுகிறது. யானைக்கண் என்பதனோடும் இந்த நிற ஒருமைப்பாடு தொடர்புகொண்டுள்ளதை நாம் உணர முடிகிறது.

கூடலூர்க்கிழார் வானியலில் வல்லவர். சில கோள்நிலைக் குறிகளால் இந்த அரசன் இன்ன நாளில் இறந்துபடுவான் எனக் கணித்து அறிந்தார். ஆனால், தம் கணிப்புப்படி நடவாதிருக்க வேண்டுமென்று விரும்பி அரசன் நோயற்று இருக்க வேண்டுமென வாழ்த்தினார். வாழ்த்துப் பலிக்கவில்லை; கணிப்புப் பலித்தது. கணித்த நாளில் அவன் இறந்தான். இறந்தது கண்டு புலவர் வருந்திப் பாடினார்.

## இறந்த நாள்

மேழ ஓரை, கார்த்திகை நாள் அந்த நாளில் முதல் கால் பகுதியாகும். அது பாதி இரவாகும். முடப்பனையின் (அனுடம்) நிலை அடிவெள்ளி, கடைக்குளத்தின் (புனர்பூசம்) நிலை கடை வெள்ளி. இந்த எல்லையில் பங்குனி மாதத்து முதல் பதினைந்து நாளில் உச்சம் உத்தரமீன். அந்த உத்தரமீன் உச்சியிலிருந்து சாய்ந்தது. அதற்குப் பின் எட்டாம் மீனாகிய மூலம் அதற்கு எதிரே எழுந்தது. அந்த உத்தரத்திற்கு முன் எட்டாம் மீனாகிய மிருகசீரிடம் துறையிடத்தே தாழ்ந்தது. அப்போது ஓர் எரிமீன் கீழ்த்திசையிலோ வடதிசையிலோ செல்லாது நிலத்திற்கு விளக்காக விழுந்தது. இந்த நிகழ்ச்சி நடந்த ஏழாம் நாள் அவன் இறந்தான் (புறம் 229 : 17).

மேலே தனித்தனியே கண்ட வரலாற்றில் வரும் செய்திகள் ஒன்றோடொன்று தொடர்புடையவையாக உள்ளன. அன்றியும் குறுங்கோழியூர்க்கிழாரால் பாடப்பட்ட மூன்று பாடலுக்கு நான்கு

வகையான தொடர் அமைப்புகள் உள்ளன. எல்லாமே புறநானூற்றைத் தொகுத்தவரால் குறிப்பிடப்பட்டவை. எனவே, நால்வேறு பெயர்களில் கூறப்பட்டுள்ளவரும் ஒருவனே எனக் கருதலாம்.

## வானவன்

வானவன் யார்? ஒருவனா? பலரா? என்பனவற்றைத் தெரிந்து கொள்வதற்கு அவனது செயல்களையும் இருப்பிடங்களையும் தெளிவாகத் தெரிந்துகொள்ளவேண்டும் *(அகம் 33 : 14, 77 : 15, 143 : 10, 159 : 15, 213 : 15, 309 : 10, 381 : 12).*

### இமயத்தில் வில் பொறித்தவன்

வஞ்சி நகரில் இருந்த வானவன் ஒருவன் இமயத்தில் வில்லைப் பொறித்தான் *(புறம் 39 : 15-17, 126 : 14).* இவன் 'மாண்வினை நெடுந்தேர் வானவர்' என்று கூறப்பட்டுள்ளான். இந்த வானவனுக்கும், சோழ அரசன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுக்கும் போர் நடந்தது. வஞ்சி நகரில் நடந்த அந்தப் போரில் இந்த வானவன் மாண்டான். வஞ்சி நகரம் வருத்தத்திற்கு உள்ளாகியது.

இமயத்தில் வில்லைப் பொறித்தவன் நெடுஞ்சேரலாதன் என்னும் சேர அரசன் ஆவான். இந்தச் செயலில் அவனுக்குத் துணையாக இருந்தவர்கள் இருவராவர். ஒருவன் அவனது மகன் செங்குட்டுவன்; மற்றொருவன் அவன் காலத்தில் கொங்கு நாட்டுப் பகுதியில் சிறப்புற்று விளங்கிய மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர அரசனாவான் *(புறம் 39).*

நெடுஞ்சேரலாதன், (வேல்பஃறடக்கை) பெருநற்கிள்ளியோடு போரிட்டு எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. எனவே, கிள்ளிவளவனோடு போரிட்டு இறந்தவன் மாந்தரஞ்சேரல் இரும்பொறையே என்பது தெளிவாகிறது. இந்தக் கருத்தை மேலும் சில சான்றுகள் உறுதி செய்கின்றன.

வானவன் கொல்லிமலைப் பகுதியை ஆண்டு வந்தான் *(அகம் 33 : 14, 213 : 15).* மாந்தரஞ்சேரல் கொல்லிமலை நாட்டைத் தாக்கிப் போரில் வென்று அங்குத் தங்கி அரசாண்டபோது குறுங்கோழியூர்க்கிழார் இவனை நேரில் கண்டு பாடியுள்ளார் *(புறம் 22).* இவை வானவன் என்று குறிப்பிடப்படுபவனும், மாந்தரஞ்சேரல் இரும்பொறையும் ஒருவரே என்பதை மேலும் உறுதிப் படுத்துகின்றன.

இந்த வானவனின் படைத் தலைவன் பிட்டன் ஆவான் *(அகம் 77 : 16, 143 : 12).* மாந்தரஞ்சேரல் இரும்பொறைக்கு 'மாந்தரம்பொறை

கடுங்கோ' என்னும் பெயரும் உண்டு. புகழூரில் உள்ள சங்ககாலத்துக் கல்வெட்டு கடுங்கோ அரசனையும்,[55] பிட்டனையும் குறிப்பிடுகிறது. எனவே, வானவன் என்பவன் மாந்தரஞ்சேரல் இரும்பொறையே என்பது கல்வெட்டுச் சான்றாலும் உறுதி செய்யப்படுகிறது.

இவனைச் செல்வக்கடுங்கோ வாழியாதனின் மகன் என்று அந்தச் சங்ககாலக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

செல்வக்கடுங்கோவின் மக்கள் இரண்டு பேர். ஒருவன் பெருஞ்சேரல் இரும்பொறை (தகடூரை வென்றவன்). அவன் எட்டாம் பத்தின் தலைவனாவான் (பதிற். பதி. 8 : 10). மற்றொருவன் குட்டுவன் இரும்பொறை. இவன் ஒன்பதாம் பத்துத் தலைவனின் தந்தை ஆவான் (பதிற். பதி. 9 : 1). மாந்தரஞ்சேரல் தொண்டி நகரில் போர் தொடுத்து வென்று அங்கும் சில காலம் தங்கி அரசாண்டான் (புறம் 17 : 13). தொண்டி, குடநாட்டில் இருந்த துறைமுகம். குடநாட்டை அடுத்திருந்த குட்டநாட்டில் இவன் முதன்முதலில் தன் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினான் எனல் பொருந்தும். இதனால் இவன் குட்டுவன் இரும்பொறை என்றும் கூறப்பட்டான். இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து எண்ணும்போது குட்டுவன் இரும்பொறை, மாந்தரஞ்சேரல் இரும்பொறை, வானவன் என்ற பெயரால் குறிப்பிடப்படுவோர் அனைவரும் ஒருவரே என்று ஐயம் திரிபு இல்லாமல் தெரிந்துகொள்ளலாம். இவன் பதிற்றுப்பத்து எட்டாம் பத்துத் தலைவனின் தம்பியாவான். சங்ககாலக் கட்டுவெட்டு இவனைப் 'பெருங்கடுங்கோ' என்று குறிப்பிடுகிறது என்பதைக் கண்டோம். இந்தப் பெருங்கடுங்கோ, பாலை பாடிய பெருங்கடுங்கோ வஞ்சி நகரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தவன் என்பதை நகரில் இருந்து கொண்டு அரசாண்டதும் இதுவும் ஒன்றாய் அமைந்து இவர்களுடைய வரலாறுகள் எல்லாமே ஒன்றுக்கொன்று எள்ளளவும் முரண்பாடு இல்லாமல், குழப்பம் இல்லாமல் தெளிவாய் அமைவதைக் காண்கின்றோம்.

இந்த முடிவுகள் எல்லாம் மேலும் ஆய்வுக்குரியவை. சோழ அரசர் இருவரோடு இவன் போராடினான். முதலில் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியோடு போரிட்டுத் தோற்றான் (புறம் 125 : 16). பின்பு, கிள்ளிவளவனோடு போரிட்டு மாண்டான் (புறம் 39 : 16-17).

## குடகடலில் நாவாய் ஓட்டல்

தொண்டி, மாந்தை ஆகிய மேற்குக் கடற்கரைத் துறைமுகங்கள் இவனுக்கு உரித்தாயிருந்தன. இவன் கடல் வாணிகத்தில் கவனம் செலுத்தினான். இவனது கப்பல்கள் அரபிக் கடல் வழியே

மேலைநாடுகளுக்குச் சென்று பொன்னைக் கொண்டுவந்தன. கப்பல் வாணிகத்தில் இவனோடு போட்டியிட எவராலும் முடியவில்லை. எனவே, இவனது கப்பல்கள் வாணிகத்தில் ஈடுபட்டதிலிருந்து அரபிக்கடலில் பிறரது கப்பல்கள் செல்லவில்லை (புறம் 126 : 14-16).

### கொடைத் தன்மை

யாழ் இசையில் வல்ல 'கோடியர்' எனும் மக்கள் இவனை நாடிச் சென்றனர். அவர்கள் இவனிடம் பரிசில் பெற்றார்கள் எனலாம் (அகம் 309 : 9).

### சிறப்புப் பெயர்கள்

'வெல்போர் வானவன்' (அகம் 33 : 14, 143 : 10, 159 : 15, 213 : 15), 'நற்போர் வானவன்' (அகம் 309 : 10) ஆகிய தொடர்கள் இவனது போர் ஆற்றலையும், வெற்றியையும் உணர்த்துகின்றன. 'சினமிகுதானை வானவன்' (புறம் 126 : 14), 'பொருந்தார் முனையரண் கடந்த வினைவல் தானை வானவன்' (அகம் 381 : 13-15) ஆகிய தொடர்கள் இவனது படையின் ஆற்றலை விளக்குகின்றன.

'வில்கெழு தடக்கை ......வானவன்' (அகம். 159 : 15), 'பெரும்படைக் குதிரை ....வானவன்' (அகம் 309 : 10) ஆகியவை இவனது போர்க் கோலத்தைக் காட்டுகின்றன.

'தேனிமிர் நறுந்தார் வானவன்' (அகம் 381 : 15), 'நெடுந்தேர் வானவன்' (புறம் 39 : 16) ஆகியவை இவனது தோற்றப் பொலிவை நன்கு புலப்படுத்துகின்றன.

## சோழிய ஏனாதி திருக்குட்டுவன்

குட்டுவன் என்னும் பெயர் இவன் சேரர் குடியைச் சேர்ந்தவன் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது (புறம் 394). அதனை வலியுறுத்தும் சான்றாக அவனைப் பாடிய புலவர், அவனது தந்தை வஞ்சி நகரத்தவன் என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, சேரர் குடியினன் என்பது தெளிவு.

### இவன் நாடு

இவன் வெண்குடை என்னும் ஊரில் இருந்துகொண்டு அரசாண்டு வந்தான். அந்த ஊர் வயல்கள் நிறைந்த ஊர். இவன் தந்தை வஞ்சி நகரத்தவன்.

## தோற்றம்

மார்பிலே சந்தனம், தோளிலே வில், வலிமைமிக்க கைகளில் கூர்மையான வாள். இந்தக் கோலத்துடன் இவன் காட்சியளித்தான்.

## கொடைத் தன்மை

குமரனார் என்னும் புலவர் மதுரையில் வாழ்ந்தவர். அவரது தந்தை கோனாட்டு எறிச்சலூரில் வாழ்ந்த மாடலன். இந்தக் குமரனார் இந்தக் குட்டுவனை வள்ளல் என்று பலரும் புகழ்வதைக் கேட்டிருந்தார். வெண்குடை நகருக்குச்சென்று இந்தக் குட்டுவனின் தந்தை நகரான வஞ்சியைச் சிறப்பித்துப் பாடினார். கேட்ட இந்தக் குட்டுவன் பெரிதும் மகிழ்ந்து கொல்லும் போர் யானை ஒன்றைப் பரிசிலாக வழங்கினான். புலவர் யானையைக் கண்டு அஞ்சி ஒதுங்கினார். புலவர் பரிசில் சிறியது என்று எண்ணி ஒதுங்கினார் என்று எண்ணினான். முன்பு அளித்ததைக் காட்டிலும் மிகப் பெரிய மற்றுமொரு யானையைப் பரிசிலாக அளித்தான். இதனால், புலவர் நடுநடுங்கிப்போய் அவனிடம் பரிசில் கேட்பதையே நிறுத்தி விட்டாராம்.

இவ்வாறு அவனது கொடைத் தன்மை அமைந்திருந்தது.

## ஏனாதிப் பட்டம்

'ஏனாதி' என்னும் பட்டம் படைத் தலைமை பூண்டு சிறப்புடன் போராடியவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பட்டம். வேளாண்மையில் சிறந்தவர்களுக்குக் 'காவிதி'ப் பட்டமும் வாணிகத்தில் சிறந்தவர்களுக்கு 'எட்டி'ப் பட்டமும் இவ்வாறு சிறப்புக் கருதித் தமிழ்நாட்டில் வழங்கப்பட்ட பட்டங்களாகும். இந்தக் குட்டுவனுக்கு அளிக்கப்பட்ட இந்தப் பட்டத்தில் 'சோழிய' என்னும் அடைமொழி உள்ளது. இதனால், இந்தப் பட்டத்தை அளித்தவன் சோழ அரசன் என்பது தெளிவாகத் தெரிகிறது. சோழன் சேரனுக்கு இத்தகைய பட்டம் அளித்துச் சிறப்பிக்கக் காரணம் என்ன?

இந்தக் குட்டுவன் சோழரது படைத்தலைமை பூண்டு சிறப்புடன் போராடிச் சோழனுக்கு வெற்றியைத் தேடித் தந்திருக்க வேண்டும். இதனால் இவன் இந்தச் சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருக்கவேண்டும். இந்தப் படைப்பணியை இவன் தனது இளமைக் காலத்தில் ஆற்றியிருக்கலாம். சோழன் பாராட்டிப் பட்டம் வழங்கியதோடு தன் சார்பாக அல்லது தனக்குத் துணையாக வெண்குடையில் இருந்துகொண்டு ஆளும்படி அமர்த்தியிருக்கலாம். வெண்குடை மக்கள் அவனது நற்பண்புகளை எண்ணி அவனைத் தம் ஊர் 'கிழவோன்' என்று ஏற்றுக்கொண்டிருக்கலாம். இவ்வாறு இவன் 'வெண்குடை கிழவ'னாக

விளங்கினான். இந்தப் பட்டத்தை இவனுக்கு வழங்கிய சோழன், சேட்சென்னி (இலவந்திகைப் பள்ளியில் இறந்தவன்) என்பதை ஏனாதி திருக்கிள்ளி வரலாற்றில் காணலாம்.

## 3. சேர அரசப் புலவர்கள்

பிற புலவர்களால் பாடப்பெற்றுள்ள சேர அரசர்கள் வரலாற்றை இதுவரை கண்டோம். இவர்களே அன்றித் தாம் பாடிய பாடல்களால் சங்க நூல்களில் இடம் பெற்றுள்ள சேர அரசர்களும் உண்டு.

1. கருவூர்ச் சேரமான் சாத்தன்
2. சேரமான் இளங்குட்டுவன்
3. சேரமான் எந்தை
4. சேரமான் கணைக்கால் இரும்பொறை
5. சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை
6. பாலை பாடிய பெருங்கடுங்கோ
7. மருதம் பாடிய இளங்கடுங்கோ
8. முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன்

'சேரமான்' என்னும் சொல் சேரர் குடிமகன் என்னும் பொருளைத் தரும். இது சேரர் குடியினர் அனைவர்க்கும் உரியது. சேரர் குடி, சேர நாட்டை அரசாண்ட குடி; சேர நாட்டுக் குடிமக்கள் அன்று.

சேரர் குடியைச் சேர்ந்த அரசன் ஒருவனின் மகன் எத்தனை பேர் இருந்தாலும், அத்தனை பேரும் ஆங்காங்கே சிறு பகுதிக்கேனும் அரசர்களாக விளங்கிய நிலைமையை அவர்களது வரலாற்றில் நாம் காண்கிறோம். எனவே, சேரமான் என்னும் அடைமொழி பெற்றுள்ள அனைவரும் ஒரு சிறு பகுதிக்கேனும் அரசர்களாக விளங்கினார்கள் என்று கொள்வது பொருத்தமானது. இந்த வகையில் பிறரால் பாடப்படாவிட்டாலும் தாம் பாடல்கள் பாடிச் சங்கப் பாடல்களில் இடம் பெற்ற புலவர்கள் – 'சேரமான்' என்னும் அடைமொழியுடன் சங்க நூல்களைத் தொகுத்தோரால் குறிப்பிடப் பட்டுள்ள புலவர்கள் – சேர அரசர்கள் என்றே கொள்ளத்தகும்.

மற்றும் பாலை பாடிய பெருங்கடுங்கோ, மருதம் பாடிய இளங்கடுங்கோ ஆகிய பெயர்களில் 'கோ' என்னும் சொல் அவர்கள் அரசர்களே என்பதை உணர்த்துகின்றன, 'முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன்' என்னும் பெயரில் 'சேரல்' என்னும் குடிப்பெயர்,

இவன் அரசன் என்பதை உணர்த்துகிறது. அந்துவன் என்னும் பெயர், பெயர் ஒப்புமையால் தோன்றக்கூடிய உய்த்துணர்வு.

## கருவூர்ச் சேரமான் சாத்தனார்

காதலன் யாமத்தில் வந்திருக்கிறான்; வெளியில் காத்திருக்கிறான். தோழி அவனுக்குக் கேட்கும்படி காதலியிடம் கூறுகிறாள். 'வா என்றும் சொல்ல முடியவில்லை. போ என்றும் சொல்ல முடியவில்லை. என்ன செய்வோம்?' என்பது அவளது கூற்று. இந்தக் கருத்தமைந்த பாடலை அவன் பாடியுள்ளான் (குறுந். 268).

## சேரமான் இளங்குட்டுவன்

காதலி காதலனுடன் சென்று விட்டாள்; தாய் தந்தையருக்குந் தெரியாமல் சென்றுவிட்டாள். செய்தி அறிந்த செவிலித் தாய் அவளை வளர்த்த தாய்க்கு வருந்திக் கூறுகிறாள். தான் ஆயத்தாரோடு பந்தடிக்கும்போதே கன்றும் அவளது காலடிகள், வெயில் காயும் காட்டில் எப்படி நடந்து சென்றனவோ என்பது அவளது ஏக்கம். இந்தக் கருத்தமைந்த பாடலை இவன் பாடியுள்ளான் (அகம் 153).

## சேரமான் எந்தை

காதலன் தன்னை விட்டு விட்டுச் செல்கிறான் என்று கவலைப்படுகிறாள் காதலி; கண்ணீர் வடிக்கிறாள். தோழி அவளைத் தேற்றுகிறாள். இந்தக் கண்ணீரோடு உன்னை விட்டுவிட்டு யார் செல்வார்; மராமரம் வேனில் காலத்தில் பூத்திருக்கும் தேமூர் போன்ற அழகி நீ. உன்னையும் உடன்கொண்டு செல்வார் என்பது அவளது ஆறுதல் மொழி. இந்தக் கருத்தமைந்த பாடலை இவன் பாடியுள்ளான் (குறுந். 22).

### நாடு

தலைவியின் அழகைத் தேமூர் என்னும் ஊரின் அழகோடு ஒப்பிட்டு இவன் பாடியுள்ளான். எனவே, தேமூரில் தங்கி இவன் ஆட்சிபுரிந்து வந்தான் எனலாம்.

(தேமூர் ஒண்ணுதல் என்பதற்குத் தேமல் ஊர்ந்து ஒளிவீசும் நெற்றி என்றும் பொருள் கொள்ள இடம் உண்டு.)

# சேரமான் கணைக்கால் இரும்பொறை

இவன் தான் பாடிய பாடலில் விழுப்புண்பட்டு இறக்க வழியின்றிக் கட்டிப்போட்ட நாய்போல் கிடக்கும் நிலையை வெளிப்படுத்துகிறான். பிறர் முயற்சியால் கிடைத்த நீரை வயிற்றுத் தீத்தணிய இவ்வுலகில் உண்பவர் உண்டோ? இல்லை என்கிறான் (புறம் 74).

புறநானூற்றைத் தொகுத்த ஆசிரியர் தம் கொளுக் குறிப்பில் விளக்கமான வரலாற்றைத் தருகிறார்.

சோழ அரசன் செங்கணான் என்பவனோடு இவன் போரிட்டான். போர் 'திருப்போர்ப்புறம்' என்னுமிடத்தில் நடைபெற்றது. போரில் சேரன் பிடிபட்டான். குடவாயில் (குடவாசல்) என்னும் ஊரில் ஒரு கோட்டம். அந்தக் கோட்டத்தில் ஒரு சிறை. அந்தச் சிறையில் இவன் அடைக்கப்பட்டான். சிறையில் அடைபட்டுக் கிடக்கையில் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டான்; கிடைக்கவில்லை. காலம் தாழ்ந்து வேறொருவன் முயற்சியால் தண்ணீர் கிடைக்கப்பெற்றான். அதனைக் கையிலே வாங்கினான். உண்ண மனம் வரவில்லை. மேலே கண்ட கருத்தமைந்த பாடலைப் பாடினான். தண்ணீரைக் குடிக்காமலேயே மாண்டு போனான்.

களவழி என்னும் நூலுக்கும் இந்தப் போருக்கும் தொடர்பு உள்ளதாகக் கூறப்படுகிறது. சோழன் செங்கணான் வரலாற்றில் இதனைத் தெளிவாகக் காணலாம்.

## தோற்றம்

கணைய மரம்போல் வலிமை மிக்க கால் இருந்தமையாலோ, கணுக்காலுக்கும் கீழ் இல்லாத காலை உடையவனாக இருந்தமை யாலோ, கணைகள் தாக்கிய விழுப்புண்களைத் தழும்புகளாகக் கொண்டிருந்தமையாலோ, பிற எதனாலோ, இவனது பெயரோடு கணைக்கால் என்னும் அடைமொழி அமைந்துள்ளது.

# மருதம் பாடிய இளங்கடுங்கோ

குடும்பத் தலைவன் குடும்பத் தலைவியை விட்டுவிட்டு வேறொருத்தி நலத்தைத் துய்க்கும் கொடுமையை விளக்கும் மருதத் திணைப் பாடலை இவன் பாடியுள்ளான் (நற். 50).

மகனைப் பெற்ற பின்னும் கணவனைக் காணாது வாழ்கிறாளே அவள் 'என்ன கடத்தளோ' (எத்தகைய கடப்பாட்டாளோ) என்று இவன் குறிப்பிடுகிறான் (அகம் 176 : 21).

இவன் பருவூர்ப் போர்க் களத்தில் சோழனுக்கும், சேர பாண்டியர்க்கும் நடந்த போரில் சேர பாண்டியரைப் போரில் கொன்று, 'அஃதை' என்னும் பெண்மணியின் தந்தை வெற்றி பெற்றதைக் குறிப்பிட்டுள்ளான் (அகம் 96 : 10-15).

## முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன்

காதலனுக்குக் காதலியின் தோழி அறிவுரை கூறுகிறாள்.

'துறைவ, ஒரு நாள் வந்து, உன் வண்ணம் எப்படி என்று கேட்டுவிட்டுச் சென்றால் உன் பெருமைக்குக் குறைவு வந்து விடுமோ' என்பது அவள் கூற்று. திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்பதை இவ்வாறு நயமாகக் கூறுவதாகப் பாடியுள்ள இவனது புலமைத் திறம் பாராட்டுதலுக்கு உரியது (அகம் 30).

இவன் எங்கு முடங்கிக் கிடந்தான்? ஏன் முடங்கிக் கிடந்தான்? முடப்பட்டுக் கிடந்தானா என்பன போன்ற வினாக்கள் இவன் பெயரிலுள்ள அடைமொழியில் தோன்றும்; விடைக்குச் சான்று இல்லை.

# குறிப்புகள்

1 Inscriptions of Sri Vira Rajendra (Rajakesari Varman) S.II./ Vol. III, No.20.

2 ஒப்புநோக்குக: வேம்பு , வேம்பன்; முருகனைக் கடம்பன் என்று அழைப்பது வழக்கம், இவன் அந்தக் கடவுள் முருகன் அல்லன்.

3 காவல் மரத்தின் அடிப்படையில் குடிமக்களுக்குப் பெயர் அமைந்தமைக்கான சான்றுகள் இல்லை. பாண்டியர் காவல் மரம் வேம்பு. அவர்களை வேம்பர் என்று குறிப்பிடும் வழக்கம் இல்லை. இவ்வாறே புன்னை, அத்தி, பனை முதலான மரங்களைக் காவல் மரமாக உடைய நாட்டு மக்களும், அவ்வகை மரப் பெயரால் அழைக்கப் படுவதில்லை. 'கடம்பர்' என்னும் சொல் நமக்கு யாண்டும் ஆட்சியில் இல்லை. தக்கணத்தில் இருந்த கதம்பர் வேறு. அரபிக்கடல் தீவுகளில் கடப்ப மரத்தைக் காவல் மரமாகக் கொண்டிருந்த அரசு வேறு. பாடல்களில் கடம்பு வெட்டப்பட்டது என்று மட்டுமே உள்ளது. அறிஞர்கள் கடம்பர்களை ஓட்டினான் என்று குறிப்பிடுகின்றனர். இவர்கள் கடற்கொள்ளைக்காரர்கள் என்றும், மேலைநாட்டு வாணிகக் கப்பல்களை வழிப்பறி செய்து வந்தனர் என்றும், வழிப்பறியைத் தடுக்கும் முயற்சியில் நெடுஞ்சேரலாதன் இப்போரில் ஈடுபட்டு வெற்றி பெற்றான் என்றும் கூறுகின்றனர். இவற்றிற்குச் சான்றுகள் இல்லை. ஆய்வுக்குரியன.

4 தமிழர்கள் போர்க் கைதிகளை எவ்வாறு நடத்தினார்கள் என்பதை விரிவாகக் குறிப்பிடத்தக்க சான்றுகள் இல்லை. எனினும், கனகவிசயர் வரலாறும், கரிகாலன் காவிரிக்குக் கரை அமைத்த வரலாறும் போர்க் கைதிகள், வெற்றி பெற்றவரின் ஆக்கப் பணிகளைச் செய்ய, அழைத்துவரும் வழியிலும் அழைத்து வந்த பின்னரும் பயன்படுத்தப்பட்ட நிலைமையைக் காட்டுகின்றன. கணையன், கணைக்காலிரும்பொறை, பெருஞ்சேரலிரும்பொறை ஆகியோர் சிறைவைக்கப்பட்ட வரலாறுகளும் உண்டு.

5 இக்காலத்தில் இலக்கத்தீவுகள் என வழங்கப்படுகின்றது.

6. 'அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு அமையார்த் தேய்த்த அணங்குடை நோன்றாள்' (பதிற். பதி. 2 : 10-12).

7 'தும்பைப் பகைவரின் போர்ப்பீடு அழித்த' (பதிற். 14 : 8-9).
'மன்மருங்கு அறுத்த' (பதிற். 15 : 5).

8 பதிற். 12 : 25; 'மகிழ்' – மகிழ்ச்சியான வாழ்வு.

9 20 + 1 + 1 + 20 = 42ஆம் ஆண்டு.

10 பதிற். 30 : 34– 'அருந்திறல் மரபிற் கடவுட் பேணியர்'.
பதி. 3 : 8 – 'அயிரை பரைஇ'.

11 பதிற். 21 : 26; இது மயிலை சீனி. வேங்கடசாமியின் கருத்து.

12 கோபி வட்டம்

13 பதிற். பதி. 3 : 4 'மதியுறழ் மரபின் முதியர்'
மதி = திங்கள் குலத்தவராகிய பாண்டியர்; உறழ் = முரண்பாடு.

14 பதிற். 22 : 15-16 – 'கொங்கர் நாடகப் படுத்த வேல்கெழு தானை வெருவரு தோன்றல்.' இதனைக் கொங்கர் நாட்டை அகப்படுத்திய பல்யானைக் குட்டுவன் என்று பிரித்துப் பொருள் கொண்டு, கொங்கு நாட்டைத் தன் ஆட்சிக்குக்கீழ்ப் பல்யானைச் செல்கெழு குட்டுவன் கொண்டுவந்தான் என்று சிலர் கூறுகின்றனர். இவ்வாறு பொருள் கொள்வது சமகால அரசர்களின் வரலாற்றை ஒப்பு நோக்குகையில் ஒத்து வரவில்லை. இவனது காலத்துப் பாண்டிய வேந்தன் பசும்பூட்பாண்டியன் என்று வழங்கப்பட்டவனான நெடுஞ்செழியன் ஆவான். இவன் கொங்கர்களை வென்ற செய்தியை அவனது வரலாற்றில் காணலாம். அன்றியும் கொங்கு நாட்டுக் குடிமக்களாகிய மழவர்களுக்கு (பதிற். 21 : 24 – 'குவியற் கண்ணி மழவர் மெய்ம்மறை') இவன் கவசம் போல் விளங்கினான் என்பதோடு மாறுபாடாய் அமையும். மேலும், பாடலில் கூறப்பட்ட இந்த நிகழ்ச்சி பதிகத்தில் கூறப்படவில்லை. இது பல்யானைக் குட்டுவனின் வெற்றியாயின் பதிகத்தில் விடுபடக் காரணமில்லை.

15 'மைந்துமலி பெரும்புகழ் அறியார் மலைந்த
போர்எ திர் வேந்தர் தார்அழிந்து ஒராஅலின்' (பதிற். 23 : 16-17)
'பணைகெழு வேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து' (பதிற். 30 : 30).

16 பதிற். 30 : 44; ஒப்புநோக்குக: 'பாடினிவேந்து' (பதிற். 17 : 14).

17 பதிற். 26 12-14; முருகன் என்னும் நற்பேர் கொண்ட அரசன் பொதினி மலையை ஆண்டுவந்ததும், இவனுக்கு நெடுவேளாவி எனச் சிறப்புப் பெயர் இருந்ததும், இவன் மழவர் இனத்தவரைப் புறங்கண்டோடச் செய்து அவர்களின் நாட்டை விட்டு விரட்டினான் என்பதும் மாமூலனார் அகம் 1 இலும், இவனது சீற்றத்தைப்

பாண்டரங்கண்ணனார் புறம் 16 இலும் கூறுவது இவ்விடத்துக் கருதத்தக்கது.

18 பதிற். 21 : 37 – 'இவள்' என்னும் சுட்டுக்குறிப்பை நோக்குக.

19 மலையாளம் தோன்றக் காரணமாயிருந்த திரிசொற் கொச்சை மொழி அக்காலத்து அரும்பியதுபோல் உள்ளது. அதனை அவள் பேசாது செந்தமிழ் பேசியது கண்ட புலவர் வியந்து இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

20 செல் = கார்மேகம்.

21 இந்த நிலையை மையமாகக் கொண்டு டாக்டர் ச.சோ. பாரதி சேரநாட்டில் 'மருமக்கள் தாயமுறை' வழக்கத்தில் இருந்தது என்று வேறு வகையில் விளக்கம் கூறுகிறார். இந்த முடிவு வேறு பிற சான்றுகளைக் கொண்டு முடிவு செய்ய வேண்டியதாகும்.

22 குட்ட நாட்டுக்கும் வேணாட்டுக்கும் இடையில் கிழக்குப் பகுதியில் இருந்த நாடாகும்.

23 துரைசாமிப் பிள்ளை, ஔவை. சேர மன்னர் வரலாறு, ப. 151.

24 இந்த மோகூர் இப்போது மதுரை வட்டத்தில் மோகர் என்னும் பெயருடன் வழங்கும் ஊர் என்றும், நாமக்கல் வட்டத்தில் மோகனூர் என்னும் பெயருடன் வழங்கும் ஊர் என்றும் பலவாறு கருதப்பெறுகிறது. 'மோகர்' என்பது பொருத்தமெனத் தோன்றுகிறது.

25 துரைசாமிப் பிள்ளை, ஔவை. மு.கு.நூ., ப.160.

26 கோவிந்தன், புலவர், கா., சேரர், ப. 46.

27 கொண்கான தேயத்தவர். சேர நாட்டுக்கு வடக்கிலும், கருநாடகத்திற்கு மேற்கிலும் இருந்தது கொண்கான நாடு.

28 கலிங்க நாட்டவர்.

29 கருநாடகத்தில் செல்வாக்குப் பெற்றவர்.

30 வங்க நாட்டிலிருந்து வந்தேறி வாழ்ந்தவர்.

31 கங்கக் குடியைச் சேர்ந்தவர்.

32 கட்டிக் குடியைச் சேர்ந்தவர்.

33 வடநாட்டு ஆரியர், தென்னாட்டு ஆரியராகிய தமிழரிட மிருந்து வேறுபட்டவர்.

34 'வண்டமிழ் மயக்கம்' என்னும் சிலப்பதிகாரத் தொடர் இவர்களை எதிர்த்துப் போரிட்டவர்கள் அனைவரும் தமிழ் மொழி பேசுபவர் என்று குறிப்பிடுவதால் இவர்களைத் தமிழ் மொழியைத் தாய் மொழியாக உடையவர் அல்லவர் எனக் கொள்வது பொருத்தமாய் அமைகிறது.

35 பதிற்றுப் பத்தில் இவனது பத்து, ஆறாம் பத்தாக வைத்திருப்பது ஒன்றுதான் இதற்கு அடிப்படை.

36 பதிற். 58 : 19 – 'நாடுகிழவோன்'; ஒப்புநோக்குக: கொண்கானங்கிழான்.

37 ஒப்பு நோக்குக: ஆட்டனத்தி.

38 பதிற். 59 : 19, 'நாடு புறந்தருதல், நினக்குமார் கடனே' என்ற அறிவுறுத்தப்படுவதால் இது விளங்கும்.

39 'இவனே
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்
மறலி யன்ன களிற்றுமிசை யோனே' (புறம் 13 : 1-4).

40 பதிற். 67 : 22; நன்னனைக் கொன்றுவிட்டு நார்முடிச்சேரல் இங்குத் தங்கி இருந்த இடத்தையும் இவ்விடத்து நினைவு கூரலாம். (பதிற். 40 : 14-16).

41 'வில்லோர்குடி' வரலாறு காண்க.

42 குதிரைமலைப் பகுதியை அஞ்சியும் எழினியும் ஆண்டபோது, அவனது ஆட்சியை விரும்பாத வில்லோர் சிலர் இவனுக்கு எதிராய் இவனது துணையையும் நன்னனது துணையையும் பெற்றனர். அவ்வாறே புன்னாட்டுக் கொங்கரும் பெற்றனர். இவற்றை அவ்வப் பகுதியில் காணலாம்.

43 ஆன்பொருநை, அமராவதி என்றும் வழங்கப்படுகிறது.

44 உன்ன மரம் தன் இலையை உதிர்த்து மன்னனுக்கு நேரவிருக்கும் தீங்கை முன்கூட்டி அறிவிக்கும் மரம் என்றும், அம்மரம் காட்டிய தீக்குறியையும் பகைத்து வெற்றி பெற்றான் – ஊழையும் உப்பக்கம் கண்டான் – என இதற்கு விளக்கம் பெறலாம்.

45 ஒப்புநோக்குக: சேரலாதனின் கோட்டையை வயிரியர் அழித்து உண்டனர் (பதிற். 20 : 17-20).

46 14 வேளிர், கழுவுளின் காமூரை அழித்த போரைப் பாணர் பாடியுள்ளார். பெருஞ்சேரல் இரும்பொறை, கழுவுள் தலைமறைந்து ஓடும்படி போரிட்டதை அரிசில்கிழார் குறிப்பிடுகிறார். இரண்டு பாடல்களிலும் மன்னர் கலங்கிய நிலை தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, இரு போரும் ஒன்றென்றே கொள்ளத்தகும்.

47 இவ்வாறு 11 வேளிரும், சேர, பாண்டியரும் ஒன்றுகூடிக் கரிகால் வளவனோடு வெண்ணியில் போரிட்டுத் தோற்றதை அகநானூறு 246 இல் காணலாம்.

48 அந்தப் பாண்டியனுக்காக நன்னனை எதிர்த்துப் போராடி மாண்டதை அவனது வரலாற்றில் காணலாம்.

49 பொத்தனூர் என்னும் ஊரை ஆண்டவன். இவ்வூர் சேலம் மாவட்டம், வேலூரை அடுத்துக் காவிரி ஆற்றங்கரையில் உள்ளது.

50 'கோயில்வெண்ணி' என்பது இவ்வூரின் வழக்கு.

51 புகழூர்த் தாமிழிக் கல்வெட்டு 11.

52 'மடியிலான் செல்வம்போல் மரன்நந்த அச்செல்வம்
படியுண்பார் நுகர்ச்சிபோல் பல்சினை மிஞிறு ஆர்ப்ப,
மாயவன் மேனிபோல் தளிர்சன அம்மேனித்
தாய சுணங்குபோல் தளிர்மிசைத் தாதுஉக' (கலி. 35 : 1-4).

53 ஐங்குறுநூறு தொகுப்பித்தவனைப் பற்றிய குறிப்பு. 'கடுங்கோ' என்பதும் ஒரு நாட்டின் பெயர்.

'பொருந' என்று அரசனைக் குறிப்பிடுகையில், அவன் பொருந்தி அதாவது, தங்கி அரசாண்டதை எல்லா இடங்களிலும் உணர்த்தும் வகையில் சங்கப் பாடலில் ஆட்சி உள்ளது.

'கோ' என்பது அரச சாதியையும், சேரமான் என்பது குடியையும், யானைக்கண் என்பது வடிவையும், சேய் என்பது இயற்பெயரையும், மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்பது சிறப்புப் பெயரையும் உணர்த்துகிறது என்பது பரிமேலழகர் கருத்து (குறள் 355 உரை).

54 இவனும் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறையும் ஒருவராக இருக்கலாம்.

55 இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் கடுங்கோ, பாலை பாடிய பெருங்கடுங்கோ ஆவான். இவன் ஒன்பதாம் பத்தின் தலைவனாகிய இளஞ்சேரல் இரும்பொறையின் தந்தை குட்டுவன் இரும்பொறையே ஆவான்; எட்டாம் பத்தின் தலைவனான பெருஞ்சேரல் இரும்பொறையின் தம்பி ஆவான். இவன் குட்ட நாட்டில் சிறப்புப் பெற்றுப் பொறையர் குடி அரசனாய் விளங்கியது போலச் சேரமான் குடக்கோச் சேரல் இரும்பொறை குடநாட்டில் சிறப்புற்று விளங்கிய பொறையர் குடி அரசன் ஆவான்.

★★★

# சோழர்

## முன்னுரை

சங்காலத்தில் தமிழ்நாட்டில் அரசோச்சிய மூவேந்தராகிய சேர, சோழ, பாண்டியர்களுள், பாண்டிய அரசர்களுடைய வரலாறு மிகுதியாகவும் தெளிவாகவும் கிடைக்காததாலும், மிகுதியாகவும் தெளிவாகவும் கிடைக்கும் சேர அரசர்களுடைய வரலாற்றுக்கு அடிப்படையாக உள்ள பதிற்றுப் பத்து என்னும் நூல் ஒருவரால் பாடப்பெற்றிருக்குமோ என்று ஐயுறக் கிடக்கும் நிலை சிலரிடையே இருந்துவருவதாலும், ஓரளவு தெளிவான வரலாற்றுடன் கரிகாலன் முதலான பேரரசர்களது வரலாற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள சோழர் வரலாறு ஒரு வகையில் முக்கியத்துவம் பெற்றதாகும். சோழ நாட்டைப்பற்றி அறிவதற்குத் தக்க சான்றுகளாகச் சோழர் காலத்தில் தொல்கதைகளும், சங்ககால இலக்கியங்களும், அயல்நாட்டுக் குறிப்புகளும், கல்வெட்களும் இன்றைய அகழ்வாராய்ச்சிகளும் பெரிதும் நமக்குத் துணைபுரிகின்றன.

'சோழநாடு' என்னும் பகுதியில், சோழ நாட்டின் நிலவியல் அமைப்பு, எல்லைகள், முக்கிய ஆறுகள், பட்டினங்கள், மக்களினங்கள், அரசர்களின் வழிமுறைகள், போர்கள், ஆட்சிமுறை முதலானவற்றைக் காணலாம்.

# சோழ நாடு

## எல்லைகள்

சோழநாடு தமிழ்நாட்டின் கிழக்குக் கடற்கரை ஓரமாக இருந்தது. கிழக்குக் கடல் இக்காலத்தில் வங்காளக் குடாக் கடல் என்று பெயர் பெற்றிருக்கிறது. இந்தக் கடல் சங்ககாலத்தில் குணகடல் (குணக்கு - கிழக்கு) என்று பெயர் பெற்றிருந்தது. கடைச்சங்க காலத்தின் இறுதியில் கி.பி. முதலாம் நூற்றாண்டு, இரண்டாம் நூற்றாண்டுகளில் தமிழகத்தோடு வாணிகம் செய்த யவனர் (கிரேக்கரும் உரோமரும்) குடகடலை எரித்திரையக் கடல் (செங்கடல்) என்று கூறினார்கள்.[1]

கடலைக் கிழக்கு எல்லையாகவும், கோட்டைக்கரையை மேற்கு எல்லையாகவும், வெள்ளாற்றைத் தெற்கு எல்லையாகவும் ஏணாட்டை வடக்கு எல்லையாகவும் கொண்டு 24 காதம் விரிந்து கிடந்தது சோழநாடு என்று பழம் பாடல் ஒன்று தெரிவிக்கிறது.[2]

இவற்றுள் வெள்ளாறு[3] என்பது இப்போது புதுக்கோட்டைப் பகுதியில் பாயும் ஆறு. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கொடும்பாளூர், சோழ நாட்டுக்கும் பாண்டிய நாட்டுக்கும் எல்லையில் அமைந்திருந்தது என்று கூறப்படும் கருத்தும் இதனோடு தொடர்புடையது.

கோட்டைக்கரை (பேட்டைவாய்த்தலை?), ஏணாடு ஆகியவை பற்றித் தெளிவாகத் தெரியவில்லை. மேலும், இந்த எல்லையைக் கூறும் பாடல் சங்க காலத்திற்குப் பிந்தியது. எனவே, சங்ககாலச் சோழநாட்டின் எல்லை இது என்று அறுதியிட்டுக் கூறுவதற்குப் போதிய சான்று இல்லை. எனினும் இப்போதுள்ள குளித்தலை வட்டம்வரை சங்ககாலச் சோழநாடு மேற்கில் பரவியிருந்தது என்று கொள்ள இடமுண்டு.[4] வடக்கில் இதன் எல்லை சங்ககாலத்தில் காவிரி ஆற்றுச் சமவெளியைத் தாண்டிச் செல்லவில்லை என்றே எண்ணவேண்டியுள்ளது. (தென்) பெண்ணையாறு அருவா நாட்டின் தெற்கு எல்லை என்று கூறப்படும் கருத்தும் இதனோடு தொடர்புடையதாக அமைந்துள்ளது.

## காவிரியாறு

சோழநாட்டின் முக்கிய ஆறு காவிரி ஆகும். காவிரியாற்றின் நீர்வளத்தினால் சோழநாடு செழிப்பும் செல்வமும் பெற்று விளங்கிற்று. நெல்லும் கரும்பும் மற்றும் காய்கறித் தோட்டங்களும், தெங்கஞ் சோலைகளும், கமுகஞ் சோலைகளும் சோழ நாட்டில் செழித்திருந்தன. இதற்கு முதல் காரணமாக இருந்தது காவிரி ஆறேயாகும். 'சோழ நாடு சோறுடைத்து' என்னும் பழமொழியை நிலைபெறச் செய்தது காவிரி ஆறே. காவிரி ஆற்றுக்குப் 'பொன்னி' என்னும் சிறப்புப் பெயரும் உண்டு.

காவிரி ஆறு கடலில் கலக்கிற இடத்தில் உலகப் புகழ் பெற்ற காவிரிப்பூம்பட்டினம் (புகார்) என்னும் துறைமுக நகரம் இருந்தது.

## உறையூர் (உறந்தை)

சோழநாட்டின் தலைநகரம் உறையூர் என்றும், உறந்தை என்றும் வழங்கப்பட்டது. இது உள்நாட்டில் காவிரி ஆற்றின் தென்கரையில் இருந்தது. ஆழமான அகழியும், அகழியைச் சூழ்ந்து மிளைக்காடும் இருந்தன. உறையூருக்குக் 'கோழி' என்றும் ஒரு பெயர் உண்டு. உறையூர்க் கோட்டைக்குள்ளே சோழ அரசனுடைய அரண்மனை இருந்தது. உறையூர்த் தெருக்களில் ஒன்றன் பெயர் ஏணிச்சேரி (சேரி- தெரு). முடமோசியார் என்னும் புலவர் அந்தத் தெருவில் வாழ்ந்திருந்தார். உறையூருக்கு எதிர்க்கரையில் திருவரங்கம் இருந்தது. உறையூருக்குக் கிழக்கே திருச்சிராப்பள்ளி மலை இருந்தது ('உறந்தைக் குணாது நெடும்பெருங் குன்றம்' – அகம் *4 : 14-15*). தாலமி (Ptolomy) என்னும் யவனர் ஓர்தொவுர (Ortheura) என்று குறிப்பிடுவது இந்த உறையூர்தான். ஓர்தொவுர சோர் நகரின் (சோழ நகரின்) தலைநகரம் என்று தாலமி கூறுவது சிந்திக்கத்தக்கது. சோழர் நாகர் இனத்தைச் சேர்ந்தவர் என்று அவர் கருதுகின்றார். உறையூரை உரகபுரம் என்று வடமொழியாளர் கூறியுள்ளனர்.

## காவிரிப்பூம்பட்டினம்

காவிரியாறு கடலில் புகுமிடத்தில் வடகரையின்மேல் காவிரிப் பூம்பட்டினம் இருந்தது. உலகப் புகழ்பெற்றிருந்த இப்பட்டினம், புகார் என்றும் பெயர் பெற்றிருந்தது. இதனைப் பௌத்த நூல்கள் கவீரப் பட்டினம் என்று கூறுகின்றன. இது பட்டினப்பாக்கம், மருவூர்ப்பாக்கம் என்று இரண்டு பிரிவாக இருந்தது. மருவூர்ப்பாக்கம் கடற்கரையை அடுத்து இருந்தது. மருவூர்ப் பாக்கத்தில் மீன்பிடிக்கும் பரதவரும், கொல்லர், குருமார், கன்னார், தச்சர், பொற்கொல்லர், இசைவாணர்

முதலான தொழிலாளரும் நடுத்தர மக்களும் வாழ்ந்தனர். பல பொருள்களை விற்கும் கடைவீதிகள் மருவூர்ப்பாக்கத்திற்கும் பட்டினப்பாக்கத்திற்கும் இடையில் இருந்தன. மருவூர்ப்பாக்கத்துக்கு மேற்கே பட்டினப்பாக்கம் இருந்தது. பட்டினப்பாக்கத்தைச் சூழ்ந்து நாற்புறமும் கோட்டை மதில்கள் இருந்தன. மதில்களுக்கு வெளியே அகழி இருந்தது. கோட்டைக்குள் இருந்த பட்டினப்பாக்கத்தில் செல்வரும் பெருங்குடி மக்களும் வாழ்ந்தனர். சோழ அரசருடைய அரண்மனை ஆற்றங்கரைப் பக்கமாகப் பட்டினப்பாக்கத்தில் இருந்தது.

காவிரிப்பூம்பட்டினத்தின் துறைமுகம் உலகப் புகழ் பெற்றிருந்தது. இந்தத் துறைமுகத்திற்குப் பாரத நாட்டின் பல திசைகளிலிருந்தும் கடல் வாணிகர் வந்தனர். யவன வாணிகரும் இங்கு வந்தனர். பெரிபுளூஸ் (Periplus) என்னும் கடற்பயண நூல் இத்துறைமுகத்தைக் 'கமரா' (Kamara) என்று கூறுகிறது. தாலமி என்னும் யவனர் இதனைச் 'சபரிஸ்' (Chaberis) என்று கூறுகிறார். காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றிச் சங்கப்பாடல்கள் கூறுகின்றன. இங்கு நடந்த ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களையும், வாணிகத்தையும் பற்றிப் பட்டினப்பாலை கூறுகிறது. மணிமேகலை, சிலப்பதிகாரக் காப்பியங்களிலும் இதன் சிறப்புக் கூறப்படுகிறது. கடல் வாணிகர்களும் (மாநாய்கர்), தரை வாணிகர்களும் (மசாத்துவர்) இந்நகரத்தில் வாணிகம் செய்தார்கள். சங்ககாலத்தில் காவிரிப்பூம்பட்டினம் தலையாய துறைமுகமாகவும்[5] பெரிய வணிக நகரமாகவும் இருந்தது.

## குடந்தை

சோழ நாட்டில் சங்ககாலத்தில் இருந்த ஊர்களில் குடந்தையும் ஒன்று. குடந்தை இக்காலத்தில் கும்பகோணம் என்று வழங்கப்படுகிறது. சோழரின் பெருநிதி இவ்வூரில் சேமித்து வைக்கப்பட்டிருந்தது (அகம் 60 : 13-14). குடந்தையைச் சூழ்ந்து கோட்டை மதில் இருந்தது. மதிலைச் சூழ்ந்து அகழி (கிடங்கு) இருந்தது. அகழியில் நீலப் பூக்கள் மலர்ந்திருந்தன (நற். 379 : 7-9). குடந்தைக்கு அருகில் இருந்த குடவாயில் என்னும் ஊரில் குடவாயில் கீரத்தனார் என்னும் புலவர் வாழ்ந்தார். குடவாயிலில் சோழர் சிறைச்சாலை அமைத்திருந்தனர் எனத் தெரிகிறது.[6]

## ஆர்க்காடு

ஆர்க்காடு என்னும் பெயர் ஆத்தி மரத்தினால் வந்த பெயர். 'ஆர்' என்றால் ஆத்தி மரம். ஆத்திப்பூ மாலையைச் சோழர் அணிந்தனர். பழங்காலத்தில் மரங்களின் பெயரையே ஊர்ப் பெயராக வைத்தனர். ஆலங்காடு, வேற்காடு, கடம்பங்காடு என்பனபோல ஆர்க்காடு என்பதும் மரங்களினால் வந்த பெயர்.

சோழநாட்டில் ஆர்க்காட்டுக் கூற்றம் என்னும் பிரிவு சங்ககாலத்திலும் பிற்காலத்திலும் இருந்தது. ஆர்க்காட்டுக் கூற்றத்தின் தலைநகரம் ஆர்க்காடு. ஆர்க்காடு நகரம் சங்ககாலத்தில் பெரிய நகரமாக இருந்தது (நற். 227 : 5-6). 'அழிசி' என்னும் சோழன் ஆர்க்காட்டில் இருந்தான் (குறுந். 258 : 7; நற். 190 : 4 : 6). 'தாலமி' என்னும் யவனர் சோரையரின் (சோழரின்) தலைநகரம் (Sorai) அர்கொடஸ் (Arkatos) என்று கூறுவது இந்த ஆர்க்காட்டையே. இந்தச் சோழ நாட்டு ஆர்க்காடு தொண்டைநாட்டு ஆர்க்காடு அன்று. இது வேறு; அது வேறு. சோழ அரசன் உள்ளிட்ட எழுவரைப் பாண்டியன் நெடுஞ்செழியன் தலையாலங்கானம் என்னுமிடத்தில் வென்றான் என்பது வரலாறு. இந்த ஆலங்கானம் சோழநாட்டு ஊர் என்று நம்பப்படுகிறது.

## பிடவூர்

சோழநாட்டில் இருந்த இவ்வூர் உறையூருக்குக் கிழக்கில் இருந்தது. இங்கு இருந்த வேள் அரசர் பிடவூர்க்கிழார் என்று பெயர் பெற்றிருந்தனர். பிடவூர்க்கிழான் மகன் பெருஞ்சாத்தன் என்பவனை நக்கீரர் பாடியுள்ளார் (புறம் 395).

## நெய்தலங்கானல்

இது சோழநாட்டில் காவிரியாறு கடலில் கலக்கும் இடத்தில் தென்வடலாகக் கடற்கரை ஓரத்தில் இருந்த நீண்ட கடற்கரைப் பகுதி ஆகும். இங்கு இளஞ்செட்சென்னி என்னும் சோழன் இருந்தான். ஆகையால், அவன் 'சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி' என்று கூறப்பட்டான். நெய்தலங்கானலில் உப்பளங்கள் இருந்தன (மணிமே. 24 : 27). பரதவர் (மீன் பிடிப்போர்) இருந்த குப்பங்களும் இருந்தன. நெய்தலங்கானல், பிற்காலத்தில் சோழ மண்டலக் கரை என்று பெயர் பெற்றிருந்தது. ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் 'கும்பினி'யார் இதைக் 'கொரமாண்டல் கோஸ்ட்' (Cormandal Coast) என்று கூறினார்கள்.

## குராப்பள்ளி

இவ்வூரில் குராப்பள்ளி என்று பெயர் பெற்ற சோழர் அரண்மனை இருந்ததாகத் தெரிகிறது. கிள்ளிவளவன் என்னும் சோழன் இங்கு இறந்து போனான். ஆகவே அவன் 'குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன்' என்னும் பெயர் பெற்றான்.[7]

## கழார்

சோழநாட்டில் காவிரிக்கரையில் இருந்த கழார் என்ற ஊருக்கு (நற். 281 : 3) மத்தி என்பவன் தலைவனாக இருந்தான் (அகம் 6 : 20). 'மத்தி'

பரதவர் (நெய்தல் நிலத்து மக்கள்) கோமான் (அகம் 226 : 7-8). காவிரியில் நீர்ப்பெருக்கு வரும்போது கழார்ப் பெருந்துறையில் நீராட்டுவிழா நடந்தது (அகம் 225 : 5). அந்த நீராட்டு விழா மிகச் சிறப்பாக நடந்ததாகத் தெரிகிறது. சோழன் கரிகாலன் அந்த விழாவுக்குத் தன்னுடைய சுற்றத்தோடு வந்து கண்டு மகிழ்ந்தான் (அகம் 376 : 4-10).

போர் (போரூர், போர்வை)

இவ்வூர் போரூர் என்றும், போர்வை என்றும், திருப்போர் என்றும் கூறப்பட்டது. இது சோழநாட்டில் காவிரி ஆற்றங்கரை மேல் இருந்தது. இவ்வூரில் கொங்குச் சேரருக்கும் சோழருக்கும் வெவ்வேறு காலத்தில் பல போர்கள் நடந்தன. இவ்வூரில் பழையன் என்னும் சிற்றரசன் ஆண்டுவந்தான் (அகம் 186 : 15). இவன் சோழ அரசர் சார்பில் நாடு காவல் பணி பூண்டிருந்தவனாவான்.

## பொத்தி

இது சோழநாட்டிலிருந்த ஓர் ஊராகும். பெருஞ்சோழன் என்பவன் இவ்வூரை அரசாண்டான். இவ்வூரில் இருந்த புலவர் பொத்தியார் என்று பெயர் பெற்றார். பெருஞ்சோழன் வடக்கிருந்து (உண்ணா நோன்பிருந்து) உயிர்விட்டபோது அவனுடைய நண்பரான இந்தப் பொத்தியாரும் அவனுடன் வடக்கிருந்து உயிர்விட்டார் (புறம் 217, 220, 221, 222, 223; சேலம் மாவட்டம் காவிரியின் வடகரையிலுள்ள பொத்தனூர் இந்த ஊராயிருக்கலாம்.)

## தலைச்செங்காடு

தலைச்செங்காடு என்னும் இவ்வூர் தலைச்செங்கானம் என்றும் கூறப்படும். காவிரிப் பூம்பட்டினத்துக்குத் தென்மேற்கே இது உள்ளது. இவ்வூரில் மாடலன் என்னும் மறையவன் இருந்தான். அவன் உலகியலை நன்கு அறிந்தவன். காவிரிப்பூம்பட்டினத்தில் கோவலன் இருந்த காலத்தில் அவனையும் அவனுடைய குடும்பத்தையும் மாடலன் நன்கு அறிந்திருந்தான். குமரி, காசி (கங்கை) முதலான ஊர்களுக்குச் சென்று இவன் நீராடி மீண்டான். சேரன் செங்குட்டுவனுக்கும் இவன் நண்பனாக இருந்தான். கோவலன், கண்ணகியுடன் மதுரைக்குச் சென்று, கவுந்தியடிகளுடன் இருந்தபோது, மாடலன் குமரியில் நீராடிச் சோழநாட்டுக்குத் திரும்பிவரும் வழியில் மதுரையில் தற்செயலாக அவர்களைச் சந்தித்தான். கண்ணகிக்குச் செங்குட்டுவன் பத்தினிக் கோட்டம் அமைத்து விழாச் செய்தபோது அவ்விழாவுக்கும் சென்றிருந்தான்.

## சாய்க்காடு

இக்காலத்தில் இது திருச்சாய்க்காடு என்று கூறப்படுகிறது. இதற்குச் சாயாவனம் என்னும் பெயரும் உண்டு. 'நெடுங்கதிர்க் கழனித் தண்சாய்க் கானம்' (அகம் 220 : 18) என்றும் 'செந்நெலஞ் செறுவின் அன்னந் துஞ்சும், பூக்கெழு படப்பைச் சாய்க்காடு' என்றும் (நற். 73 : 8-9) இது சிறப்பிக்கப்பட்டுள்ளது.

## வல்லம்

இது சோழநாட்டிலிருந்த ஊர். இவ்வூர் கோட்டை மதிலினால் சூழப்பட்டு, மதிலுக்கு வெளிப்புறத்தில் மிளைக்காடுகளால் அரண் செய்யப்பட்டிருந்தது. வல்லத்துக் கோட்டையை ஆரியப்படைதாக்கிப் போர் செய்தது. அப்போது வல்லத்து வீரர்கள் அவர்களைத் தாக்கினார்கள். தாக்குதலுக்கு எதிர்நிற்க முடியாமல் ஆரியப்படை சிதறி ஓடிப்போயிற்று (அகம் 336 : 22-23). வல்லத்தின் தலைவனாக இருந்தவன் சோழர் குலத்தைச் சேர்ந்த நல்லடி என்பவன்.

## வெண்ணி

இவ்வூர் இக்காலத்தில் கோயில்வெண்ணி என்று கூறப்படுகிறது. இது, தஞ்சாவூருக்குக் கிழக்கே இருபத்து நான்கு கி.மீ. தொலைவில் இருக்கிறது. இந்த ஊரில் சில போர்கள் நடந்துள்ளன. பாண்டியனும் சேரனும் பதினோரு வேள் அரசரோடு வந்து போர் செய்தபோது, கரிகாற்சோழன் அவர்களை வென்றான் (அகம் 55 : 10-11; புறம் 66 : 3-4; பொருநர். 143-148). கரிகாற்சோழனுடைய இந்த வெற்றியைப் பாடிய வெண்ணிக்குயத்தியார் இந்த ஊரிலிருந்த புலவர்.

# சோழர் குடியின் தொன்மை

## இலக்கியச் சான்று

பன்னெடுங் காலமாகத் தமிழகத்தை மூவேந்தர்கள் ஆட்சி செய்து வந்தனர். 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்' என்று தமிழகத்தைத் தொல்காப்பியர் சுட்டியுள்ளார் (தொல். பொருள். செய். 75 : 3). மற்றும், சோழர் குடியின் அடையாளச் சின்னமாக ஆத்திப் பூமாலையை (தொல். பொருள் புறத். 5 : 4) அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழ் இலக்கியத்துள் காலத்தால் முந்தியது தொல்காப்பியம். சற்றேறக்குறைய கி.மு. நான்காம் நூற்றாண்டு அளவில் இந்நூல் இயற்றப்பட்டிருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.[6] இந்த

இலக்கியச் சான்றுகளால், சோழர்குடி மிகவும் தொன்மையானது என்பது புலனாகிறது. நெடுங்காலமாக ஆட்சி செய்துவந்த அரசகுடி எனும் பொருளிலேயே 'படைப்புக் காலந் தொட்டு' இந்நாட்டை ஆண்டுவரும் குடி என்று நம் முன்னோர்கள் போற்றியுள்ளனர் (குறள் 955, பரிமே. உரை).

வடமொழி இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றுள் சோழ அரச மரபைப் பற்றிச் சில குறிப்புகள் காணப்படுகின்றன. பாணினியின் இலக்கணத்திற்குக் காத்தியாயனார் உரை எழுதியுள்ளார். ஓர் இலக்கண விதிக்கு எடுத்துக்காட்டாகச் 'சோழர்' என்னும் பெயரை அவர் எடுத்துக்காட்டியுள்ளார்.[9] அவருடைய காலம், மௌரியப் பேரரசர்க்கு முற்பட்ட நவநந்தரின் ஆட்சிக் காலம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அக்காலத்திலேயே (கி.மு. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதி) சோழ அரசமரபு புகழ்பூத்து விளங்கியமை இதனால் புலனாகின்றது.

## கல்வெட்டுச் சான்று

மௌரியப் பேரரசன் அசோகனுடைய (கி.மு. 272-232) கல்வெட்டுகளில் தமிழக வேந்தர்களைப்பற்றிய குறிப்புகள் உள்ளன. அவற்றுள் சோழ அரசமரபே முதலாவதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.[10] மௌரியப் பேரரசனுடைய ஆதிக்கத்திற்குட்படாது, தன்னுரிமைத் தனியரசுகளாகச் சோழ, பாண்டிய, சேர அரசுகள் விளங்கியமையும் தெரியவருகிறது. இக்குறிப்புகளால் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு அளவிலேயே சோழப் பெருவேந்தரின் குடி, வட இந்திய மக்களின் கருத்தைக் கவரத்தக்க நிலையில் பெருவாழ்வு பெற்றிருந்தமை தெளிவாகத் தோன்றுகிறது.

## அயல்நாட்டார் குறிப்பு

கிறித்துவ நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றப்பட்ட கிரேக்கக் கடலோடிகளின் பயணக் குறிப்பேடுகளில் தமிழ்நாட்டின் பல பகுதிகளைப் பற்றிய செய்திகள் பதிவு செய்யப்படுகின்றன. அவற்றுள் சோழரைப் பற்றியும், அவர்களுடைய நாட்டைப் பற்றியும், அவர்களுடைய பட்டினங்களைப் பற்றியும் புகழ்மிக்க குறிப்புகள் காணப்படுகின்றன.

## சோழ மன்னரைப் பற்றிய பழங்கதைகள்

சங்க காலத்தின் பிற்பகுதியில் (கி.பி. 200-300) சோழ மன்னர்களைப் பற்றிய பல பழங்கதைகள் வழக்கிற்கு வந்துள்ளன. அக் கதைகள் எல்லாம் வரலாற்றுக் காலச் சோழர்களுக்கு முற்பட்ட சில மன்னர்களைச்

'சோழர் குடியின் மூதாதையர்' என்று அறிவிக்கின்றன. அச்சோழ அரசர்கள் தெய்விகத் தன்மையுடையவர்களாகவும், அற்புதச் செயல்கள் பலவற்றைப் புரிந்தவர்களாகவும் போற்றப்படுகின்றனர். இத்தகைய பழங்கதைகள் பெரிதும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களில் பயின்று வழங்குகின்றன. எட்டுத்தொகை நூல்களுள் இவை அருகிய வழக்குடையனவாகவே உள்ளன. எனவே, இக்கதையைச் சோழரைப் பற்றிய பழங்கதைகள் எனக் கொள்ளுவதே பொருத்தமாகும். இக்கதைகளால் அறியப்படும் சோழ மன்னர்களின் வரலாற்றைக் காண்போம்.

## காந்தமன்

காந்தமன் என்னும் சோழ அரசன் காவிரி ஆற்றைச் சோழ நாட்டில் பாயச் செய்தான் என்னும் புராணக் கதையை மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது. காந்தமன் குடகுமலையில் இருந்த அகத்திய முனிவரிடம் சென்று, அவரை வேண்ட, அவர் தம்மிடமிருந்த கமண்டலத்து நீரைக் கவிழ்த்தாராம். அந்த நீர் காவிரி ஆறாகப் பாய்ந்து சோழ நாட்டில் புகுந்து வந்ததாம். இந்தக் கதையை மணிமேகலைக் காப்பியப் பதிகங் கூறுகிறது (மணிமே. பதி. *9 : 12*).

சோழன் காந்தமனைப் பற்றிய இன்னொரு புராணக் கதையையம் மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது. காந்தமன் காலத்தில், பரசுராமன் அரசர் குலத்தை எல்லாம் அழித்துக் கொண்டு வந்தபோது, சோழ நாட்டுக்கும் வந்தான். அப்போது கன்னித் தெய்வம் (கொற்றவை) அரச பதவியை விட்டுச் சில காலம் எங்கேனும் போயிருக்கும்படி காந்தமனுக்கு யோசனை கூறிற்றாம். அந்த யோசனைப்படி காந்தமன் தன்னுடைய கணிகையின் மகனான சுகந்தன் என்பவனிடம் ஆட்சியைக் கொடுத்துவிட்டுத் தான் திரும்பிவருமளவும் ஆட்சி செய்யுமாறு கூறிச் சென்றுவிட்டானாம். பரசுராமன் வந்தபோது அரச குலத்தவன் அல்லாத ஒருவன் ஆட்சி செய்வதைக் கண்டு சுகந்தனைக் கொல்லாமல் போய்விட்டானாம். பரசுராமன் போன பிறகு காந்தமன் திரும்பி வந்து சோழ நாட்டை அரசாண்டானாம் (மணிமே. *4 : 25-28*).

## சுகந்தன்

இவன் சோழர் குலத்து மன்னன் அல்லன். மேலே கூறப்பட்ட காந்தமன் என்னும் சோழனுடைய காதற் கணிகையின் மகன். மேலே கூறப்பட்ட காரணத்தினாலே இவன் சோழ நாட்டைச் சில காலம் அரசாண்டான். இவன் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து அரசாட்சி செய்தபோது இரண்டு நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. இவ்வரசனுடைய இளைய மகன், காவிரியாற்றில் நீராடி வீடு திரும்பிச்சென்ற மருதி

என்பவளைக் கண்டு அவளைத் தன்னுடன் வரும்படி அழைத்தான். அவள் மனம் நொந்து பூதசதுக்கத்தில் உள்ள காவல் பூதத்தின் கோயிலில் சென்று சுகந்தன் மகனுடைய தகாத செயலைக் கூறி முறையிட்டாள். அதற்கு அந்தப் பூதம், 'அரசன் இந்தக் குற்றத்துக்குத் தண்டனை கொடுக்கா விட்டால், பிறகு நான் முறை செய்வேன்; நீ உன் இல்லத்துக்குப் போ!' என்று கூறிற்று. பிறகு சுகந்த அரசன் தன்னுடைய மகன் செய்த தகாத செயலையறிந்து விசாரித்துத் தன் மகனை வாளினால் வெட்டிவிட்டான். இதனை மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது (மணிமே. 22 : 40-79).

இது நடந்த பிறகு சில காலம் கழித்துச் சுகந்தனுடைய மூத்த மகன் தன்னுடைய தம்பியின் மரணத்துக்குக் காரணமாயிருந்த அந்த மருதி வீதி வழியே சென்றபோது, தன்னுடைய குடுமியில் சூடியிருந்த பூமாலையை எடுத்து அவள் கழுத்தில் இடுவதற்குக் கையை அவன் உயர்த்தியபோது, அந்தக் கை உயர்த்தியபடியே (தாழாமல்) நின்றுவிட்டது. தன்னுடைய மகன் செய்யக் கருதிய தகாத செயலை அறிந்த சுகந்தன் அந்த மகனையும், மகனென்று கருதாமல், வாளால் வெட்டிவிட்டான் என்று மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது (மணிமே. 22 : 146-158).

## சிபிச் சோழன் (செம்பியன்)

சிபிச் சோழன் அரசாண்ட காலத்தில் ஒரு நாள் வல்லூறு என்னும் பறவை ஒன்று தீனிக்காகப் பறந்து அலைந்தது. அப்போது அது ஒரு புறாவைக் கண்டு அதை அடித்துத் தின்று பசியாற எண்ணி, அப்புறாவின்மேல் பாய்ந்தது. உயிர்தப்பிப் பிழைக்க அந்தப் புறா, தனக்குப் புகலிடம் கிடைக்காமல் சிபிச்சோழனிடம் வந்து அடைக்கலம் புகுந்தது. வல்லூறும் அவனிடம் வந்து தன்னிடம் புறாவைக் கொடுக்கும்படி கேட்டது. சிபி அதற்கு இணங்காமல் புறாவின் எடைக்குச் சமமாகத் தன்னுடைய உடம்பிலிருந்து தசையை அறுத்துக் கொடுப்பதாகக் கூறினான். அவன் தராசு கொண்டுவரச் சொல்லி, அதில் ஒரு தட்டில் புறாவை வைத்து, மற்றொரு தட்டில் தன்னுடைய உடம்பிலிருந்து தசையை அறுத்து வைத்து நிறுத்தான்; ஆனால், புறாவின் எடை அதிகமாக இருந்தபடியால், தானே தராசில் அமர்ந்தான். அப்போது தராசு சம எடையாக இருந்தது. உடனே தெய்வம் தோன்றி அவனுக்கு வரங்கள் கொடுத்து, அவனுடைய உடம்பை முன்பு இருந்தது போலச் செய்ததாம். இந்தக் கதை புத்த ஜாதகக் கதையில், சிபி ஜாதகத்தில் கூறப்படுகிறது. அதே கதை, இந்தச் சிபிச் சக்கரவர்த்தியைப்பற்றியும் கூறுகிறது. சங்க காலத்துப் புலவர்களும் இந்தக் கதையைக் கூறியுள்ளனர் (புறம் 37 : 5-6, 39 : 1-3, 43 : 5-7).

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடிய மாறோக்கத்து நப்பசலையார், அவன் சிபிச்சோழனுடைய பரம்பரையில் வந்தவன் என்று கூறுகிறார். இந்தச் சோழனைப் பாடிய கோவூர்க்கிழாரும் இவ்வாறே கூறுகிறார் (புறம் 46 : 1-2). இவன் செம்பியன் என்ற பெயராலும் குறிப்பிடப்படுகிறான்.

சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தானைப் பாடிய தாமப்பல் கண்ணனார், அந்தச் சோழன் சிபிச் சோழனுடைய பரம்பரையில் வந்தவன் என்று கூறுகிறார் (புறம். 43 : 4-8). சிலப்பதிகாரமும் சிபிச் சோழன் கதையைக் கூறுகிறது. (சிலப். 27 : 166-169). மேலும், சிலப்பதிகாரத்தில் வழக்குரை காதையிலும் (51-52), கட்டுரை காதையிலும் (55) வரந்தருகாதையிலும் (அம்மானை வரி) இந்தக் கதை கூறப்படுகிறது.

## முசுகுந்தன்

தேவலோகத்தில் இந்திரனுக்கும் அவுணர்க்கும் போர் நடந்ததாம். அந்தக் கடும்போரிலே சோழன் முசுகுந்தன் தேவலோகத்துக்குப் போய் இந்திரன் சார்பாக அவுணரோடு போர் செய்து வெற்றி பெற்றானாம். மகிழ்ச்சியடைந்த இந்திரன், 'உமக்கு வேண்டும் வரத்தைக் கேள்,' என்று கூற, தனக்குப் போரில் உதவிசெய்த பூதத்தைத் தன்னுடைய சோழ நாட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று முசுகுந்தன் விரும்பிக் கேட்டானாம். இந்திரனும் அந்தப் பூதத்தை அனுப்ப, சோழன் அந்தப் பூதத்தைக் காவிரிப்பூம்பட்டினத்தில் நகர்க் காவலுக்காக இருக்கச் செய்தானாம். அந்தப் பூதம் இருந்த இடம் பூத சதுக்கம் என்று பெயர் பெற்றிருந்தது என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இதற்கு உரையையும் விளக்கத்தையும் அடியார்க்கு நல்லார் தருகிறார். மிக்க வேகத்தினையுடைய அசுரர் கூட்டமாக வந்து நெருங்கி இந்திரனது நகரைக் காத்த புலி போன்று வலிமையுடைய முசுகுந்தனுக்குத் தோற்றுப் பின்பு தம்மில் ஒத்துக்கூடி அம்முசுகுந்தனது நெஞ்சமும் இருள்கூரும்படி செலுத்திய அத்திரத்தைப் போக்கிய பெரிய பூதத்தை அவ்வண்ணல் பொருட்டு இந்திரனேவலால் போந்து அப் புகாரிலிருந்து அது பலியுண்ணும் நாளங்காடியிடம் தங்கியது (சிலப். 5 : 65-67; 6 : 7-13).

''என் சொல்லியவாறோ வெனின், அங்ஙனம் விட்ட அம்பு கண்ணையும் மனத்தையும் புதைத்தலாற் போர்த்தொழிலொழிந்து நின்ற முசுகுந்தற்கு அவ்விருளுடைதற்குக் காரணமானதோர் மந்திரத்தை யருள அதனால் வஞ்சங்கடித்த அவுணரைக் கொன்று குவித்து நின்றானைக் கண்ட இந்திரன், அவரை எங்ஙனம் வென்று குவித்தாயென்றாற்கு இவன் இப்பூதத்தின் செயலெனக் கேட்ட இந்திரன், அப்பூதத்தை

அவன்பொருட்டு மெய்க்காவலாக ஏவுதலின் ஆங்கு நின்றும் போந்து ஈங்குப் புகாரினுள்ளிலிருந்து பலியுண்ணும் நாளங்காடியிடம்'' (சிலப். : 29, அம்மானை வரி 1) தங்கியது. மணிமேகலைக் காப்பியமும் இந்த முசுகுந்தனைக் கூறுகிறது (மணிமே. 1 : 4; 19-20).

# மனுச் சோழன்

மனுச் சோழன் சோழ நாட்டுத் திருவாரூரில் நீதி தவறாமல் அரசாண்டான்; ஏழை எளியவரும் நீதி பெறுவதற்காக ஆராய்ச்சி மணியொன்றைக் கட்டி வைத்தான்; அந்த மணியில் நீண்ட கயிற்றைக் கட்டி அரண்மனை வாயிலிலிருந்து இழுத்து மணி அடிக்க வாய்ப்பாகக் கட்டிவைத்தான். இவன் நடு நிலைமையோடு நீதியாகச் செங்கோல் செலுத்திய காலத்தில், இவனுடைய ஒரே மகன், தேரை ஓட்டிக்கொண்டு தெருவில் செல்லும்போது, பசுவின் இளங்கன்று ஒன்று துள்ளியோடித் தேர்ச் சக்கரத்தில் அகப்பட்டு இறந்துவிட்டது. அதைக் கண்ட தாய்ப்பசு கதறி அழுது, அரண்மனை வாயிலுக்கு வந்து ஆராய்ச்சி மணிக் கயிற்றை இழுத்தது. அதனால், மணியோசை கேட்க, அரசன் வந்து பார்த்து பசுவின் இளங்கன்று தன் மகனுடைய தேர்ச்சக்கரத்தில் அகப்பட்டு இறந்ததை அறிந்து தன் அமைச்சரிடம் தன் மகனைத் தேர்ச் சக்கரத்தில் மடியும்படி செய்ய ஆணையிட்டான். அமைச்சர் அதனைச் செய்ய மனமின்றித் தற்கொலை செய்து கொண்டார். அதனை அறிந்த மனுச்சோழன் தானே தேரைச் செலுத்தி அதன் சக்கரத்தில் தன் மகனை அகப்படுத்திக் கொன்றான் (புறம் 39 : 5-6). இதைக் கண்டு வியந்த தேவர்கள், அவனிடம் வந்து மெச்சிப், புகழ்ந்து, இறந்து போன அமைச்சரையும் அரச குமாரனையும் உயிர்ப்பித்துக் கொடுத்தனர் என்பது இவனைப்பற்றியும் புராணக் கதை. இந்தப் புராணக் கதையைப் பெரிய புராணத்தில் காணலாம் (திருநகரச் சிறப்பு).

கி.மு. முதல் நூற்றாண்டில் இலங்கையை அநுராதபுரத்திலிருந்து அரசாண்ட சோழ நாட்டுத் தமிழனாகிய ஏலேலசிங்கனும் மனுச் சோழனைப் போலவே தன் மகன் பசுவின் கன்றைத் தேர்ச் சக்கரத்தில் அகப்படுத்திக் கொன்ற குற்றத்திற்காகத் தானே தன்னுடைய தேரின் சக்கரத்தில் தன்னுடைய ஒரே மகனை அகப்படுத்திக் கொன்றான் என்று மகாவம்சம் என்னும் நூல் கூறுகிறது. ஆனால், தேவர்கள் வந்து இறந்து போன மகனை உயிர்ப்பித்துக் கொடுத்ததாக அந்நூல் கூறவில்லை.[11]

மனுச் சோழனின் புராணக் கதையைச் சிலப்பதிகாரம் கூறுகிறது (சிலப். 20 : 53-55, 29 : அம்மானை வரி 2). மணிமேகலைக் காப்பியம் 'மகனை முறைசெய்த மன்னவன்' (மணிமே. 22 : 210) என்று கூறுகிறது.

# தொடித்தோட் செம்பியன்

## தூங்கெயில் எறிந்த

வானம் என்பது ஓர் ஊர். (இந்த ஊர் வானியாற்றுப் பகுதியில் இருந்தது என்று பெயரமைதி நோக்கிக் கொள்ளலாம்.) அவ்வூரில் கடவுள் அஞ்சி என்பவன் ஒரு கோட்டை கட்டியிருந்தான். அந்தக் கோட்டையின் கதவு மேலிருந்து தொங்கும்படி அமைக்கப்பட்டிருந்தது (இக்காலத்துச் சுருள் கதவு போன்றது). அதனால், அது தூங்கும் எயிற்கதவம் எனப்பட்டது ('தூங்கெயில் கதவம்' – பதிற். 31 : 19). இதனை வண்டன் என்னும் பெருஞ்செல்வன் காவல் புரிந்து வந்தான். (இந்தக் கோட்டை அரசக் கருவூலப் பாதுகாப்பாக அமைந்திருந்தது எனலாம்.) 'தூங்கு எயிற்கதவம்' என்பது 'தூங்கெயில்' என்று சுருக்கமாக வழங்கப்பட்டது.

தொடித்தோட் செம்பியன் என்று சிறப்பித்துக் கூறப்பட்ட சோழ அரசன் இந்தத் தூங்கெயில் கோட்டையைத் தாக்கி அழித்தான். இதனால், 'தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்' என்று வழங்கப்பட்டான். இவன் இக் கோட்டையை அழித்தது இவனது பேராற்றலை வெளிப்படுத்தும் செயலாகும் (புறம் 39 : 6).

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் இந்தச் செம்பியனின் வழிவந்தவன் என்று குறிப்பிடப்படுகிறான்.

தூங்கெயில், 'தூங்கெயில் கதவம்' என்று விளக்கிக் காட்டப் பட்டுள்ளது. இக்கோட்டைக் கதவை அழித்த இச்சோழன், 'நற்றேர்ச் செம்பியன்' என்றும் வழங்கப்பட்டான் (சிறுபாண். 81-82). இவன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அரசன் (நற். 236 : 8). செம்பியன் என்னும் அரசன் கழுமலம் என்னும் ஊரைத் தாக்கி வென்றான் (நற். 234 : 7).

அகப்பா என்னும் கோட்டையை அழித்துப் பகற்பொழுதிலேயே தீக்கிரையாக்கிய சோழன் ஒருவன் பெயரும் செம்பியன் ஆகும் (நற். 14 : 4-5).

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனிடம் தோற்றுப்போன எழுவருள் ஒருவன் செம்பியன் (அகம் 36 : 13-16).

புறாவுக்காகத் தன்னையே நிறுத்துத் தந்த சோழனது பெயரும் செம்பியன் என்று கூறப்படுகிறது (புறம் 37 : 5-6). கழுமலப் போரில் சேரனை வென்ற சோழனது பெயரும் செம்பியன் என்று கூறப்படுகிறது (களவழி. 6 : 5-6, 23 : 4-5, 33 : 4-5, 38 : 3-4).

தொடித்தோட் செம்பியன் எறிந்த தூங்கெயில் மூன்று என்றும், அவை உயர்விசும்பில் இருந்தன என்றும் கூறப்படுவது (சிலப். 29 : அம்மானை வரி 1) வியப்பேயாகும். மூன்று என்பது வானம், கழுமலம், அகப்பா என்னும் ஊர்களிலிருந்த மூன்று கோட்டைகளைக் குறிப்பதாகலாம்.

தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் புகாரில் இந்திர விழாவினை முதன் முதலாகத் தொடங்கி வைத்தான் என்றும் கூறப்படுகிறது (மணிமே. 1 : 4). இவனது வேண்டுகோளின்படி விண்ணவர் தலைவனான இந்திரன் புகார் நகரில் இந்திர விழா நடைபெறும் 28 நாளிலும் வந்திருந்து பூசனையை ஏற்றுக் கொண்டானாம்.

இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கும்போது,

1. புறாவுக்காகத் துலைபுக்க செம்பியன்

2. தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்

3. அகப்பா எறிந்த செம்பியன்

4. கழுமலம் எறிந்த செம்பியன்

5. களவழித் தலைவன் செம்பியன்

என்னும் 5 நிலைகளைக் காணலாம். இந்த 5 பெயர்கள், எத்தனை அரசர்களைக் குறிப்பன என்பது தெரியவில்லை.

செம்பியர் குடியைப் பற்றிய குறிப்பும் உண்டு (புறம் 228 : 9, சிலப். 28 : 95).

# சோழர் குடிப் பெயர்

'சோழர்' எனும் பெயர் உணர்த்தும் பொருள் யாது எனும் ஐயம் தோன்றலாம். 'சோழர்' என்பது பன்மைப் பெயர். 'சோழன்' எனும் சொல்லிற்கு விளக்கம் பன்னிருபாட்டியல் (76) எனும் இலக்கண நூலில் தரப்பட்டுள்ளது. 'சோழன்' என்பது ஒரு குடிக்கண் பிறந்தாரைச் சுட்டும் குடிப்பெயர் என்பது அந்நூலினால் அறியப்படுகிறது.

## சோழர் – சொல்லும் பொருளும்

இந்த அரச மரபிற்குச் 'சோழர்' என்னும் பெயர் எவ்வாறு வந்தது என்பதை இன்றைய நிலையில் எளிதில் அறிய இயலவில்லை. இதனை, இயற்பெயராகவே பண்டை அறிஞர்கள் கருதினர். ஆனால், இக்கால அறிஞர்கள் அச்சொல்லின் பொருளைக் காண முயன்றுள்ளனர். கர்னல் ஜெரினி[12] என்பார், வடமொழியில் 'கருமை' எனப் பொருள் படும் 'காள' என்னும் சொல்லோடும், 'கோல' என்னும் சொல்லோடும்

தொடர்புபடுத்தி இச்சொல்லின் பொருளை விளக்க முயன்றுள்ளார். திராவிடருக்கு முற்பட்ட பழங்குடி மக்கள் கோலர் (Kols) என்பவராவர். அவர்கள் கரிய நிறம் வாய்ந்தவர்கள். அவர்களுடைய ஒரு கிளையினரே 'சோழ'ராக இருந்திருக்கலாம் என்பது அவருடைய கருத்தாகும். இக்கருத்து மொழியியல் அடிப்படையிலோ, மானிடவியல் அடிப்படையிலோ ஆராய்ச்சிக்குப் பொருந்தி வரவில்லை.

மற்றொரு சாரார், 'சோளம்' மிகுதியாக விளைந்த நாட்டினை ஆண்ட அரச மரபிற்குச் 'சோளர்' எனும் பெயர் அயலவரால் இடப்பட்டிருக்கலாம்; அப்பெயரில் உள்ள 'ளகரம்' நாளடைவில் 'ழகர'மாகத் திரிந்திருக்கலாம் என்பர். அல்லது 'திருடன்' எனப் பொருள் தரும் 'சோரன்' என்னும் வடமொழிச் சொல்லின் திரிபாகச் 'சோழர்' என்னும் பெயர் தோன்றி இருக்கலாம் என்று டி.ஆர். பந்தர்க்கர் கூறியுள்ளார்.[13]

முதலாவதாக 'ளகர'வொலி 'ழகர'வொலியாகத் திரியும் என்னும் ஒலியியல் விதியினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கருத்து இது. இந்த ஒலித்திரிபு முறையை நாம் உடன்படலாம். ஆனால், புன்செய்ப் பயிரான 'சோளம்' மிகுதியாக விளையும் நாட்டைச்சுட்டுவது என்பது, நீர்வளமிக்க சோழநாட்டை அறியாதவர் கூற்றாகும். 'சோழநாடு சோறுடைத்து' என்பது பழமொழி. 'சோளமுடைத்து' என்று இதுவரை யாரும் சொன்னதில்லை. மருத நிலமான சோழ நாட்டில், பன்னெடுங்காலமாக நெல்லே பயிரிடப்பட்டு வருகிறது. எனவே, 'உண்மை அறியாதார் கூற்று' என இதை ஒதுக்குவதைத் தவிர வேறு வழியில்லை.

மற்றும் 'திருடன்' என்று பொருள் கூறுவது தமிழினத்தவரை இழித்துப் பேச நினைப்போரின் இழிந்த தன்மையாகும். மேலும், வல்லின 'றகரம்'தான் 'ழகரம்' ஆகத் திரியுமே ஒழிய, இடையின 'ரகரம்' ழகரமாகத் திரியாது. இது தமிழ்மொழியின் இயல்பினை அறியாதவரின் விழைவார்ந்த விருப்பமாகத் தோன்றுகிறது.

உறையூருக்குக் 'கோழியூர்' என்று மற்றொரு பெயருமுண்டு. கோழியூரை ஆண்டவர் 'கோழியர்' எனப்பட்டனர். புறநானூற்றுப் பழைய உரையாசிரியர், 'கோழி' என்னும் சொல்லிற்கு, 'உறையூர்' என்றே உரை எழுதியுள்ளார். 'கோழியர்' என்னும் சொல்லில் உள்ள பின்னண்ண ஒலியாகிய 'ககர' ஒலி, இடையண்ண ஒலியாகிய 'சகர'மாகத் திரியும் இயல்பு திராவிட மொழிகளில் காணப்படுகிறது. எனவே, 'கோழியர்' என்னும் சொல்லில் இருந்து 'சோழியர்', 'சோழர்' என்னும் சொற்கள் பிறந்திருக்கலாம் என்பது மற்றோர் அறிஞரின் கருத்து.[14] இந்த அறிஞர் கூறுவதற்குச் சான்றாக, இவ்வாறு திரிந்து

வழங்கும் வேறு சொற்களைக் காட்டி இருந்தால், ஓரளவிற்கு இதனை ஒப்புக்கொள்ள இயலும்.

மற்றொரு மொழியியல் அறிஞர் தந்துள்ள விளக்கம் நம் சிந்தனையைத் தூண்டுவதாக உள்ளது. திராவிட மொழிகளில் 'உகரம்', 'ஒகர'மாகத் (உலக்கை – ஒலக்கை) திரிவது இயற்கை. இவ்வொலித் திரிபினை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்தால், 'சூழ்' என்னும் வேர்ச்சொல்லடியாகச் 'சோழர்' என்னும் சொல் தோன்றி இருக்கலாம் என்பார். 'சூழ்வோர்' என்பது காலப் போக்கில் 'சோழர்' எனத் திரிந்திருக்கலாம் என்பது அவருடைய கருத்தாகும்.[15]

சூழ்வோர் என்பதற்குச் 'சுற்றியிருப்பவர்', 'ஆராய்வோர்', 'கருதுவோர்' என்பன போன்ற பல பொருள்கள் உண்டு. இவற்றுள் எப்பொருளும் பொருத்தம் உடையதாகத் தோன்றவில்லை. எனவே, 'சோழர்' என்னும் குடிப்பெயரை, இடுகுறிப் பெயராகவே இன்று கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

## பல்வகைப் பெயர்கள்

பண்டைக் காலத்திய சோழ வேந்தர்கள், பல்வேறு வகையான குடிப்பெயர்களால் சுட்டப்பட்டனர். செம்பியன், சென்னி, கிள்ளி, வளவன் என்பன அவற்றுள் பெருவழக்குடைய பெயர்களாகும். 'சிபிச் சக்கரவர்த்தியின் மரபிலேயே வந்தவர்கள் சோழர்' என்னும் பழங்கதையின் வழி, 'செம்பியன்' என்னும் பெயரானது சோழ மன்னர்களுக்கு வழங்கிய பொதுப் பெயராகவே தோன்றுகிறது. 'சென்னி' என்னும் பெயர் 'சென்னியர்' எனப் பன்மையிலே வழங்குகிறது.[16] 'சென்னி' என்பதற்குத் 'தலை' அல்லது 'முடி' என்பது பொருள். சோழர் குடியில், முடிசூட்டிக் கொண்டு நாடாளும் உரிமை பெற்ற மூத்தமகன் வழிவந்த கிளைக்குடியை இது குறிப்பதாகலாம். 'கிள்ளி' என்னும் பெயர், 'பகைவரை முளையிலேயே கிள்ளி எறிவதில் வல்லவர்' எனும் பொருளில் வழங்கப்பட்ட சிறப்புப் பெயராகலாம். நிலத்தைக் கிள்ளிச் (உழுது) செய்யப்படும் பயிர்த்தொழிலைச் சிறப்புறச் செய்தவர்கள் எனவும் இதற்குப் பொருள் கொள்ளலாம். இதுவும் ஒரு கிளைக்குடிக்குரிய பெயராக வழங்கி இருத்தல்கூடும்.

'வளவன்' என்னும் பட்டப்பெயர், நிலவளமும் நீர்வளமும் மிக்க நாட்டின் தலைவர் எனும் காரணத்தால் வழங்கிய பெயராகலாம். தமிழ்நாட்டினை வளமிக்க நாடாகச் செய்தவன் கரிகால் பெருவளத்தான். 'காடு கெடுத்து நாடாக்கிக் குளந்தொட்டு வளம் பெருக்கிய' காரணத்தாலேயே, கரிகாலனைப் 'பெருவளத்தான்' என்று புலவர்கள் போற்றினர். கரிகாலனுக்குப் பிறகு அவனுடைய குடியில் வந்த சோழ

அரசர்களுக்குரிய சிறப்புப் பெயராக 'வளவன்' என்னும் பெயர் வழங்கலாயிற்று. திருமாவளவன். மாவளத்தான், கிள்ளிவளவன் என்னும் பெயருடைய சோழ அரசர்கள் கரிகாலனுக்குப் பிறகு சிறப்புற்று விளங்கியவராவர்.

# 1. கரிகாலனுக்கு முற்பட்ட சோழ வேந்தர்கள்

வேளிர்குடி அரசனான தித்தன் உறையூரில் இருந்துகொண்டு அரசாண்டபோது போர்வைக் கோப்பெருநற்கிள்ளி என்னும் அரசன் போரில் ஈடுபட்டு வெற்றி வாகை சூடிக்கொண்டிருந்தான் என்பதும், இந்த வெற்றி நிகழ்ச்சிகளைக் கண்டு தித்தன் பொறாமை கொண்டிருந்தான் என்பதும் தித்தன் வரலாற்றில் குறிப்பிடப்படும்.

மற்றும் இரண்டாம் வெளியனிடமிருந்து உறையூர் ஆட்சியைக் கைப்பற்றியவன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளியாக இருக்கலாம் என்பது உய்த்துணரத்தக்கதாக உள்ளது.

## (அ) (பெருநற்) கிள்ளி மரபினர்

இந்த உய்த்துணர்வுகள் 'பெருநற்கிள்ளி' என்னும் பெயர் கொண்ட அரசர்கள் செல்வாக்குப் பெற்று வளர்ந்ததைக் காட்டுவது ஆகும்.

பெருநற்கிள்ளி என்னும் பெயர் கொண்ட அரசர்களின் பெயர்கள் நான்கு வெவ்வேறு அடைமொழிகளுடன் காணப்படுகின்றன:

1. போரவைக் கோப்பெருநற்கிள்ளி (பெருநற்கிள்ளி -1)
2. முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி (பெருநற்கிள்ளி - 2)
3. வேல்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி (பெருநற்கிள்ளி - 3)
4. இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி (பெருநற்கிள்ளி - 4)

என்பன அந்தப் பெயர்கள். இவர்களது அடைமொழிகள் வெவ்வேறாக அமைந்திருப்பதால், இவர்களை வெவ்வேறு அரசர்கள் என்று கொள்வதே பொருத்தமானது.

மேலே கண்ட வரிசை காலக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் நாம் அமைத்துக்கொண்டதாகும். இந்தக் காலக் கண்ணோட்டத்துக்கு அடிப்படையாய் அமைந்த செய்திகள் அடுத்துள்ள அட்டவணையிலும் அதனை அடுத்த விளக்கத்திலும் தரப்படுகின்றன.

| அரசர் | பாடிய புலவர் | பாடல் |
|---|---|---|
| போரவைக்கோப் பெருநற்கிள்ளி | சாத்தந்தையார் | புறம் 80, 81, 82 |
| | நக்கண்ணையார் | 83, 84, 85 |
| முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி | உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் | புறம் 13 |
| வேல்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி | கழாத்தலையார் | புறம் 368 |
| இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி | உலோச்சனார், | புறம் 377 |
| | ஔவையார், | புறம் 367 |
| | பாண்டரங்கண்ணனார், | புறம் 16 |
| | பேரிசாத்தனார் | புறம் 125 |

மேலே கண்ட அட்டவணையில் ஒருவனைப் பாடிய புலவர் மற்றொருவனைப் பாடிய தொடர்புச் செய்தி காணப்படவில்லை. இந்த நிலையில் இவர்களைக் கால வரிசைப்படுத்த வேறு சான்றைத்தான் தேடவேண்டியுள்ளது.


மேலே கண்ட எட்டுப் புலவர்களால் பாடப்பட்ட வேறு அரசர்களை நினைவுகூர்வோம்.

| புலவர் | அரசர் | பாடல் |
|---|---|---|
| சாத்தந்தையார் | தித்தன், | புறம் 80 |
| | ஆமூர் மல்லன், | புறம் 80, 81, 82 |
| | பொருநன் | புறம் 82 |
| நக்கண்ணையார் | அழிசி | நற். 87 |
| உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் | அந்துவஞ்சேரல், | புறம் 13 |
| | ஆய்அண்டிரன் 247, 374, 375 | புறம் 127, 135 |
| கழாத்தலையார் | குடக்கோ நெடுஞ் சேரலாதன், | புறம் 62, 368 |
| | பெருஞ்சேரலாதன், | புறம் 65 |
| | கரிகாலன் | புறம் 65 |

| புலவர் | அரசர் | பாடல் |
|---|---|---|
| உலோச்சனார் | பெரியன் | அகம் 100 |
| | நற். 131 | |
| பாண்டரகண்ணனார் | . . . | . . . |
| பேரிசாத்தனார் | மாந்தரஞ்சேரல், | புறம் 125 |
| | மலையன், | புறம் 125 |
| | நன்மாறன் (இலவந், திகைப்பள்ளித் துஞ்சியவன்) | புறம் 198 |
| ஔவையார் | மாரிவெண்கோ, | புறம் 367 |
| | பசும்பூட்பொறையன், | அகம் 303 |
| | உக்கிரப் பெருவழுதி (காணப் பேரெயில் கடந்தவன்), | புறம் 367 |
| | அதியமான், | பல பாடல்கள் |
| | தொண்டைமான், | புறம் 95 |
| | நாஞ்சில் வள்ளுவன், | புறம் 140 |
| | பாரி, | அகம் 303 |
| முடியன் | நற். 390 | |
| | வெள்ளிவீதி, | அகம் 147 |
| | பரணர் | புறம் 99 |

மேலே கண்ட அட்டவணைகள் நமக்கு ஓர் உண்மையைத் தெளிவு படுத்துகின்றன. பெருநற்கிள்ளி என்னும் பெயர்கொண்ட சோழ அரசர்களைப் பாடிய புலவர்களையோ, அந்தப் புலவர்களால் பாடப்பட்ட பிற அரசர்களையோ அடிப்படையாகக் கொண்டு இந்தச் சோழ அரசர்களை நேர்முறையில் காலநிரல்படுத்த முடியவில்லை. எனவே, மேலும் சில படிகள் செல்ல வேண்டியுள்ளது.

சேர அரசர்களான அந்துவஞ்சேரலும், மாந்தரஞ்சேரலும் முறையே காலத்தால் முந்தியவரும் பிந்தியவரும் ஆவர் என்பது அவரது வரலாறுகளினால் தெரிகிறது. எனவே, அவர்களோடு தொடர்புடைய பெருநற்கிள்ளிகளான முடித்தலைக்கோவும், இராசசூயம் வேட்டவனும் முறையே காலத்தால் முற்பட்டவனும் பிற்பட்டவனும் ஆவர். எஞ்சியுள்ள இருவரில் போர்வைக்கோ, தித்தன் காலத்தவன் என்பது




தெளிவாகத் தெரியும் சான்று. ஆதலால், முடித்தலைக்கோ மேற்கண்ட தித்தனின் மகனான வெளியனிடமிருந்து நாட்டைக் கைப்பற்றினான் என்பது நாம் முன்பு கூறியதுபோல் உய்த்துணரக் கிடப்பதாலும், போர்வைக்கோவை முடித்தலைக்கோவிற்கு முந்தியவன் என்று கொள்கிறோம். எஞ்சியுள்ளவன் வேல்பஃபறடக்கைப் பெருநற்கிள்ளி. இவன் நெடுஞ்சேரலாதனோடு போரிட்டு மாண்டவன். சேர அரசர்களான அந்துவனும் உதியனும் சமகாலத்தவர் ஆதலால், உதியனின் மகனான நெடுஞ்சேரலாதனோடு போரிட்டு மாண்ட வேல் பஃறடக்கைப் பெருநற்கிள்ளியை முடித்தலைக்கோவுக்கு அடுத்த தலைமுறையினனாகக் கொள்ளலாம்.

இந்த முறையில் நாம் மேலே கண்ட காலநிரல் அமைவதைக் காணலாம். இனி இவர்களது வரலாறுகளைத் தனித்தனியே நோக்குவோம்.

# பெருநற்கிள்ளி - 1

சோழ மன்னருள் காலத்தால் மிகவும் முற்பட்டவனாகத் தோன்று கிறான். உறையூரை ஆண்ட முதல் சோழ அரசானக இவன் விளங்கினான்.

## போர்கள்

ஆமூர் முக்காவல் நாட்டின் தலைநகர். இந்த ஊரில் ஆமூர் அரசன் மல்லனுக்கும், போர்வை அரசன் (கோ) பெருநற்கிள்ளிக்கும் போர் நடந்தது.

இந்தப் போரில் சோழன் மல்லனைத் தாக்கினான்; மல்லனது ஊரிலேயே தாக்கினான். சோழன் போரிட்ட காட்சி கண்ணுக்குப் பெருவிருந்தாய் அமைந்திருந்தது. பசியால் பனைமரத்தை முரிக்கும் யானைபோல அவன் போரிட்டான். ஒடியும் பனைமரம்போல் மல்லனது படை இரு பகுதியாகச் சிதைந்தது. சிதைந்த படை பின்புறமும் வளைத்துக் கொண்ட சோழனைத் தாக்கியது. சோழன் மண்டியிட்டுக் கொண்டு முன்னும் பின்னும் திரும்பித் தாக்கிப் போரிட்டான்; பகைவர்களைக் கொன்று குவித்தான். இது ஆமூரில் நடந்த போர் (புறம் 80).

போர்வை அரசன் பெருநற்கிள்ளி மற்றொரு போரில் ஈடுபட்டான். அந்தப் போர் ஊரைக் கைப்பற்ற வந்த பொருநனோடு நடத்திய போர் (புறம் 82). ஊரைக் கைப்பற்ற வந்த பொருநன் யார்? எந்த ஊரைக் கைப்பற்ற வந்தான்? எங்குப் போர் நடை பெற்றது என்பதைத் தெளிவாக உணர்த்தக் கூடிய சான்று இல்லை. இந்தப் போர் ஆமூரில் நடைபெறவில்லை என்பது மட்டும் உறுதி. ஆமூர் இந்தச் சோழனின் நாடு அன்றாகையால் இந்த உறுதி பெறப்படுகிறது.

பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் இவன் நிகழ்த்திய போர் ஒன்றைக் கண்டு பாடியிருக்கிறார் (புறம் 85 : 6). எனவே, அவர் கண்ட போர் பெருங்கோழியூரில் நடைபெற்றது என்பது தெளிவாகிறது. உறையூருக்குக் கோழியூர் என்ற பெயரும் உண்டு. பேரரையும் சிற்றரையும் என்பன ஓர் ஊரின் பகுதிகளாய் விளங்கியமை போலப் பெருங் கோழியூர் என்பது கோழியூரின் ஒரு பகுதியாய் விளங்கி யிருக்கலாம். இந்த வகையில் இப்போர் உறையூரில் நடந்தது என்று கொள்கிறோம்.

. உறையூரைக் கைப்பற்ற வந்தவன் யார்? 'பொருநன்' என்று பாடல் கூறுகிறது (புறம் 82 : 5).

தலையாலங்கானத்துப் போரில் நெடுஞ்செழியனை எதிர்த்த எழுவருள் ஒருவன் 'பொருநன்' என்னும் பெயர் கொண்டவன் (அகம் 36 : 19-20). இந்தப் பொருநன்தான் இந்தத் தாக்குதலைச் செய்தவனா என்று எண்ண இயலாது. தலையாலங்கானத்து நெடுஞ்செழியன் காலத்தால் மிகவும் பிற்பட்டவனாவான்.

உறையூரில் அப்போது ஆட்சி செலுத்தி வந்தவன் தித்தன் என்பவன் (புறம் 80 : 6). பொருநன் உறையூரைத் தாக்கியபோது தித்தனுக்குப் போர்வை அரசன் பெருநற்கிள்ளி உதவ முன்வந்தான். இந்த உதவியைத் தித்தன் விரும்பவில்லை (புறம் 80 : 5-9) ஆமூர்ப் போர்). எனினும் சோழ நாட்டைக் காப்பாற்றவேண்டுமென்பது கிள்ளியின் விருப்பம்.

பொருநனுக்குச் சோழர் குடியைச் சேர்ந்த வேறொருவன் நண்பன். அவன் பெயர் செம்பியன் (அகம் 36 : 15). இந்தச் செம்பியனுக்கும் இந்தப் போருக்கும் தொடர்பு இல்லை. என்றாலும் அந்தச் செம்பியனுக்குச் சோழ நாட்டுத் தலைமையை அளிக்க அவன் செய்த முயற்சியே, இந்த உறையூர்ப் போராய் இருக்குமோ என்று எண்ணவேண்டியுள்ளது.

போரில் பெருநற்கிள்ளியின் கைகள் விரைந்து செயற்பட்டன (புறம் 82 : 3-4). இவன் போர்க்களம் புகுவான் என்று யாரும் எதிர் பார்க்கவில்லை. எதிர்பாராமல் இவன் போர்க்களத்தில் தோன்றினான். பொருநனின் போர் வீரர்கள் வெருண்டு ஓடினர் (புறம் 84 : 3-5).

பெருநற்கிள்ளிக்கு உறையூர் சொந்த ஊர் அன்று. (அவனது சொந்த ஊர் போர்வை). எனவே, உறையூரில் இருந்தவர்களில் சிலர் போர்வை அரசன் வெற்றி பெற்றான் என்று கூறினர். சிலர் தம் அரசன் தித்தனே வெற்றி பெற்றான் என்பாராய், போர்வை அரசன் பெற்றது வெற்றி அன்று என்று கூறினர். உண்மையில் வென்றவன் போர்வை அரசனே ஆவான் (புறம் 85 : 7-8).

## நாடு

'போர்வைக்கோ' என்னும் அடைமொழியுடன் இவன் கூறப் படுவதால் போர்வை என்பது இவன் ஆட்சிபுரிந்த நாடு எனத் தெரிகிறது. போர்வை நாட்டின் தலைநகர் போர் என்பதும், போர் நகரின் புறப்பகுதி போர்ப்புறம் என்னும் பெயர் பெறும் என்பதும், அது திரு என்னும் அடைமொழி பெற்றுத் திருப்போர்ப்புறம் என அமையும் என்பதும் சொல் ஒப்புமையால் பெறப்படும் பொருத்தமான முடிவுகள்.

போர், சோழனின் படைத்தலைவன் பழையன் இருந்து அரசாண்ட ஊர். போர்ப்புறம், வேல்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும் குடக்கோ

நெடுஞ்சேரலாதனும் போரிட்டு மாண்ட ஊர். திருப்போர்ப்புறம் செங்கணானுக்கும், கணைக்கால் இரும்பொறைக்கும் போர் நடைபெற்ற இடம். இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இடம் காவிரி ஆறு பாயும் பகுதியில் இருந்தது என்பதைப் பழையன் வரலாற்றில் காணலாம். இப்போதுள்ள திருப்பூர் மேலே குறிப்பிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஊராய் இருக்கலாம் என்பது அறிஞர் கருத்து.

## தோற்றப் பொலிவு

கழல் காலில் விளங்கியது; கறுகறுத்த மீசை முகத்தில் விளங்கியது (புறம் 83 : 1); சோழர் குடிக்குரிய ஆத்தி மாலையை அவன் அணிந்திருந்தான் (புறம். 82 : 6). போர்க் காலங்களில் அவனுக்கு நல்ல உணவுகூடக் கிடைக்கவில்லை; புல்லரிசிச் சோறுதான் கிடைத்தது. எனினும் அவனது போர்த்திறம் குறையவில்லை (புறம் 84 : 1).

## காதல்

கடல் வாணிகர் 'நாய்கன்' என்று குறிப்பிடப்பட்டனர். கண்ணகியின் தந்தை பெயர் 'மாநாய்கன்' இதற்கு ஒரு சான்று. பெருங்கோழியூரில் (உறையூரில்) வாழ்ந்த கடல்வாணிகன் ஒருவன் 'பெருங்கோழி நாய்கன்' என்று அறிமுகமாகியிருந்தான். அவனது மகள் நக்கண்ணையார். கண்ணின் சிரிப்பைக் காட்டும் கண்ணகி என்னும் பெயரைப் போன்றதே கண்ணின் நலத்தை காட்டும் நக்கண்ணையார். போர்வை அரசன் பெருநற்கிள்ளி, பொருநன் படையை எதிர்த்துப் போரிடுகையில் கண்டு அவன்மீது காதல் கொண்டாள். கிள்ளி போரில் கண்ணும் கருத்துமாய் இருந்தான். இவளுடைய நிலை அவனுக்குத் தெரியாது.

உறையூர்ப் போர் முடிந்ததும் ஆமூரின் போர் தொடங்கிவிட்டது. உறையூர் போர்வைக்கோவின் ஊர் அன்மையால், அவன் திரும்ப உறையூருக்கு வரவும் இல்லை. எனவே, நக்கண்ணையார் காதல் என்றும் ஒருதலைக் காதலாய் முடிந்துவிட்டது; இருதலையும் (ஆணிடத்திலும் பெண்ணிடத்திலும்) தோன்றி மணக்க வாய்ப்பின்றி முடிந்தது.

## தித்தன் உறவு

தித்தன் உறையூர் அரசன். இவன் போர்வைக்கோவின் உதவியை நாடவும் இல்லை; அவன் உதவுவதை விரும்பவும் இல்லை. எனினும் பொருநனை முறியடிப்பதில் தானே வலிய வந்து போர்வைக்கோ உதவினான். இந்த உதவியை வெற்றிக்குப் பின்னரும் பாராட்டவில்லை. உறையூர் போருக்குப் பின் ஆமூர்ப் போர் மூண்டது. இந்தப் போர் தித்தன், மல்லனைத் தாக்கிய போர். போர்வைக்கோ முன்புபோலவே தித்தன் பக்கம் வலிய வந்து நின்று போராடினான். இவன் போரிட்ட

பாங்கு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. 'இதனையேனும் தித்தன் காண்பானாக! விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் காண்பானாக!' என்று புலவர் பாடியுள்ளார். தித்தன் புலவர் கூற்றைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

தித்தனுக்கும் போர்வைக்கோவுக்கும் இத்தகைய முரண்பட்ட உறவையே நாம் காண்கிறோம். சிலர் போர்வைக்கோவைத் தித்தனின் மகன் என்று கூறுகிறார்கள். அவர்கள் கூற்றுக்குப் பொருத்தமான சான்று இருப்பதாகத் தெரியவில்லை. இருப்பின் தந்தை மகனிடையே இருந்த இந்த மனமுறிவு கோப்பெருஞ்சோழனுக்கும் அவனது மக்களுக்கும் இடையே தோன்றிய மனமுறிவை ஒப்பிட்டு எண்ண வைக்கும். கோப்பெருஞ்சோழன் வரலாற்றில் மக்கள் (மகன்மார்) தவறு செய்கிறார்கள். தித்தன் வரலாற்றில் தந்தை தவறு செய்கிறான் என முடியும்.

# பெருநற்கிள்ளி - 2

இவன் மதம்கொண்ட யானைமீது நமக்கு அறிமுகமாகிறான். மதங்கொண்ட யானையை அடக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது அந்த யானை கருவூர்த் தெருவழியாக, சோழனது கட்டுக்கு அடங்காமல் ஓடியது. அப்போது கருவூர் வேண்மாடத்தில் இருந்த உறையூர் ஏணிச்சேரி முடிமோசியார் கண்டு அருகில் இருந்த சேர அரசன் அந்துவனிடம் நிலைமையை விளக்கினார். அவன் யானை மீதிருந்து படையெடுத்து வருவது போலத் தோற்றமளித்தாலும் அவன் உண்மையில் படையெடுத்து வரவில்லை என்பதையும் விளக்கினார் (புறம் 13). முடிவு என்ன ஆயிற்று என்பது தெரியவில்லை. சேரனும் யானையின் மதத்தை அடக்க உதவி செய்திருக்கலாம். சோழன் பிழைத்துத் திரும்பி யிருக்கலாம். இதற்கு மாறாகவும் நிகழ்ந்திருக்கலாம்.

நாடு

முடித்தலை என்னும் நாட்டை ஆண்டமையால் இவன் 'முடித்தலைக் கோ' என்று கூறப்பட்டிருக்கலாம். முடித்தலை என்பது இப்போதுள்ள 'கொடுமுடி' எனலாம். இந்தக் கொடுமுடிக்கும் கருவூருக்கும் இடையில் உள்ள தூரம், கருவூருக்கும் உறையூருக்கும் இடையில் உள்ள தூரத்தை நோக்க மிகக் குறைவு. எனவே, மதங்கொண்ட யானைமீது ஏறிக் கருவூரில் நுழைந்த நிகழ்ச்சி இயல்பாக முடிகிறது. எனினும் உறையூர் ஏணிச்சேரியில் வாழ்ந்த புலவர் முடமோசியாருக்கு இந்தச் சோழன் நன்கு அறிமுகமாகியிருத்தலை எண்ணும்போது இவனை உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அரசன் என்று கொள்வதே பொருத்தம்.

ஆயினும், இவனது தொடக்க கால ஆட்சி, அதாவது அரியணையேறும் முதல் நிகழ்ச்சி இளவரசன் என்ற நிலையிலேனும் கொடுமுடியில் நிகழ்ந்திருக்கக் கூடும்.[17]

## பெருநற்கிள்ளி – 3
## (வேல்பஃறடக்கை)

### கழாத்தலையார்

சேர அரசன் நெடுஞ்சேரலாதனுக்கும் இவனுக்கும் போர் நடைபெற்றது. போர்ப்புறம் என்ற இடத்தில் நடைபெற்ற அந்தப் போரில் இரண்டு அரசர்களும் போர்க்களத்திலேயே மாண்டனர் (புறம் 368). இவனைப் 'பெருநற்கிள்ளி' என்றும் 'பெருவிறற்கிள்ளி' என்றும் சுட்டுவது மரபு.

### போரும் வீழ்ச்சியும்

சேர அரசன் குடக்கோ நெடுஞ்சேரலாதனுக்கும் இவனுக்கும் போர் நடந்தது. இந்த நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன் தந்தை என்பதை அவனது வரலாற்றில் காணலாம். போர், 'போர்ப்புறம்' என்னுமிடத்தில் நடந்தது.[18]

போர் அவலக் காட்சியில் முடிந்தது. யாருக்கும் வெற்றியில்லை; தோல்வியும் இல்லை; நாற்படையும் களத்தில் அழிந்தன. தம் படை அழிந்தமை கண்டு இரண்டு பெரு வேந்தர்களும் தாமே நேரடிப் போரில் ஈடுபட்டனர். போர்ப்பறை முழங்க இருவருக்கும் கடுமையான போர் நடந்தது. இறுதியில் இருவரும் போர்க்களத்திலேயே மாண்டனர் (புறம் 62 : 7-9).

இவர்களுடைய மனைவிமார் கைம்மைக் கோலத்துடன் பச்சைக் கீரையை மட்டும் தின்றுகொண்டு, தண்ணீரிலேயே குளித்துக்கொண்டு வாழ விரும்பாமல் போர்க்களம் வந்து தம் கணவர் மார்பைத் தழுவியவராய் மாய்ந்தனர் (புறம் 62 : 14-15). எங்கும் அவலம்.

## (ஆ) கோப்பெருஞ்சோழன்

சோழர் வரலாற்றில் கோப்பெருஞ்சோழன் தனித்துக் காணப்படுகிறான். அவனுடைய சமகாலத்தியப் பாண்டிய அரசன் அறிவுடைநம்பி என்பவனாவான். அவனைப் பாடிய புலவர்களும் நம்பியைத் தவிர வேறு யாரையும் பாடவில்லை. உறையூரில் இருந்து

இவன் ஆட்சி செய்ததனால், கரிகால் பெருவளத்தானுக்குக் காலத்தால் முற்பட்டவனாக இருத்தல் கூடும். இவனைப் பாடிய பிசிராந்தையார் எனும் புலவரின் பெயர், மிகப் பழங்காலத்தில் வழங்கிய பெயருமாகும். எனவே, கோப்பெருஞ்சோழனைப் பழைய அரசனாகக் கொள்ளலாம்.

கோப்பெருஞ்சோழன், சோழ நாட்டை ஆண்டு வந்தான். அவனது தலைநகரம் உறையூர் ஆகும். அவ்வூரில் மாடமாளிகையோடு கூடிய அவனது அரண்மனை இருந்தது.

பதிற்றுப்பத்தைத் தொகுத்த ஆசிரியர் இவனைப் 'பொத்தி ஆண்ட பெருஞ்சோழன்' (பதிற். பதி. 9 : 6) என்று குறிப்பிடுகிறார். இதில் 'பொத்தி' என்னும் சொல் பொத்தியார் என்னும் புலவரை உணர்த்துவாக அறிஞர்கள் கருதுகின்றனர். பொத்தியாருக்கும் இவனுக்கும் இடையே இருந்தது நட்புறவே அன்றி ஆண்டான் அடிமை என்ற நிலை இல்லை. எனவே, பொத்தியாரை இவன் ஆண்டான் என்பது பொருந்தாது. இவன் பொத்தியாரை மட்டும்தான் ஆண்டானா ஏனையோரை ஆளவில்லையா என்று வினவுவதற்கும் இடம் உண்டாகிறது. ஆதலின், இவன் பொத்தி என்னும் இடத்தை ஆண்டான் என்று கொள்வதே பொருத்தமாய் அமைகிறது. இந்த இடம் எது? அந்த இடத்தை இவன் ஆண்டான் எனல் இயல்பாக அமைகிறதா என்பனவற்றை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

காவிரியின் வடகரையில் பொத்தனூர் என்னும் ஊர் ஒன்று உள்ளது. அது மிகப் பழமையான ஊர். அந்த ஊரின் பழம் பெயர் அல்லது மருவிய பெயர் 'பொத்தி' என்பதாக இருக்கலாம். கோப்பெருஞ்சோழன் தொடக்ககாலத்தில் இவ்வூரில் தன் ஆட்சியைத் தொடங்கியிருக்கலாம். அப்போது உறையூரை ஆண்ட சோழ அரசனைச் சார்ந்தவனாக இவன் இவ்விடத்தில் ஆட்சியைத் தொடங்கியிருக்கலாம். பின் செல்வாக் கினைப் பெற்று உறையூர்க் கோட்டையைத் தாய உரிமை முறையிலோ வேறு முறையிலோ கைப்பற்றியிருக்கலாம். இந்தப் பொத்தனூருக்குக் கிழக்கிலுள்ள இடையாற்றுப் பகுதியில் கரிகாலனின் ஆட்சி நடைபெற்றிருக்கக் கூடும் என்பதை அவனது வரலாற்றில் காண்போம். திருப்பூர்ப் பகுதியில் பெருநற்கிள்ளி ஒருவனின் (போர்வைக்கோ) ஆட்சி தொடங்கப் பெற்றிருக்கலாம் என்று அவனது வரலாற்றில் கண்டோம். எனவே, இந்தப் பொத்தனூரில் கோப்பெருஞ்சோழனின் ஆட்சி தொடங்கியிருக்க முடியும்.

## சேரனோடு போர்

சேர அரசன் இளஞ்சேரல் இரும்பொறைக்கும் கோப் பெருஞ் சோழனுக்கும் போர் மூண்டது. போரில் சோழன் தோற்றான் (பதிற். பதி. 9 : 3-6).

சங்க காலத்தில் காவிரிக்குத் தெற்கேயிருந்த கொங்குநாட்டுப் பகுதி (தென்கொங்கு)யைப் பொறையர் குடியைச் சேர்ந்த சேர அரசர்கள் ஆண்டுவந்தனர். அவர்களது தலைநகர் கருவூர் (திருச்சி மாவட்டம்), வஞ்சிமுற்றம் (கோவை மாவட்டம்) ஆகியவை. இவர்கள் காவிரிக்கு வடக்கில் இருந்த வட கொங்கு நாட்டிலும் தங்களது செல்வாக்கைப் பரப்ப முயன்றனர். இந்த முயற்சியின் விளைவுதான், சோழர்களோடும் அதியமானோடும் நடத்திய போர்கள். இவற்றை ஆங்காங்கே விரிவாகக் காணலாம். இவற்றையெல்லாம் நாம் இங்கு நினைவுகூர்வதன் நோக்கம் இந்தப் பொத்தனூர் எங்கு அமைந்திருந்தது எனத் தெளிவதற்கும், போரின் காரணங்களை உய்த்துணர்வதற்குமே ஆகும்.

## மகன்மார்மீது போர் தொடுத்தல்

கோப்பெருஞ்சோழனுக்கு ஆண் மக்கள் இருவர் இருந்தனர். அவர்கள் மீது இவனுக்குக் கசப்பு உணர்வு தோன்றியது. கசப்பு உணர்வுக்குக் காரணம் புலப்படவில்லை. சிற்றினச் சேர்க்கையால் அறிவு பேதுற்று, தந்தைபால், பகைமை கொண்டு போருக்கு எழுந்தனர் போலும் (புறம் 213 : 4). இந்தக் கசப்பு உணர்வு படையெடுப்பில் முடிந்தது. இரண்டு மகன்மாரும் இருவேறு இடங்களில் இருந்து கொண்டு அரசாண்டு அரசியலில் பயிற்சி பெறும்படி அமர்த்தப் பட்டிருக்க வேண்டும் என்பதை இவர்கள் மீது கோப்பெருஞ்சோழன் போர் தொடுத்தான் என்பதிலிருந்து அறியலாம்.

தந்தை தன் மக்கள் இருவரையும் எதிர்த்துப் போர் தொடுப்பதை, நாட்டின் நல்லாட்சியை விரும்பிய சான்றோர்கள் விரும்பவில்லை. புல்லாற்றூர் எயிற்றியனார் என்னும் புலவர் இத்தகைய எண்ணத்தோடு கோப்பெருஞ்சோழனை நேரில் கண்டு, போரைக் கைவிட்டுவிடும்படி அறிவுரை கூறிப் பாடினார்.

போரில் மக்கள் வெற்றி பெற்றுவிட்டால் தந்தை எண்ணம் நிறைவேறாது. தந்தையின் அரசாட்சி மக்களுக்குக் கிடைக்கும். மக்கள் தோற்றுவிட்டால், தந்தை தான் வென்ற அரசாட்சியைத் தனக்குப் பின் யாருக்குத் தரமுடியும்? தோற்ற அந்த மக்களுக்குத்தாமே தரவேண்டும். இது பிற அரசர்கள் பழிக்க ஏதுவாகும் என்னும் கருத்துகளைப் புலவர் எடுத்துரைத்தார். கோப்பெருஞ்சோழன் புலவரது அறிவுரைகளை ஏற்றுப் போரைக் கைவிட்டான். இதற்குப் பின் தன் மகன்மாருக்கு எதிராகத் தான் தொடர்ந்து ஆட்சி புரிவதையும் அவன் விரும்பவில்லை. அவன் வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தான்.

## வடக்கிருத்தல்

வடக்குத் திசையை நோக்கி அமர்ந்து உண்ணாநோன்பிருந்து உயிர்துறப்பது வடக்கிருத்தல் ஆகும். கோப்பெருஞ்சோழன் இவ்வாறு வடக்கிருந்தான்.

ஆற்றின் இடையே இருந்த நிலப்பகுதியில், புள்ளிபுள்ளியாக இருந்த அருநிழலில் உட்கார்ந்துகொண்டு அவன் வடக்கிருந்தான் (புறம் 219 : 1-2).[19]

இவன் வடக்கிருப்பதற்கு ஓர் இடம் அமைக்கப்பட்டிருந்தது. அதில் வந்து அமர்ந்த அரசன் மற்றும் ஓர் இடம் தன் நண்பர் பிசிராந்தையாருக்கு அமைத்து ஒதுக்கவேண்டும் என்று கூறினான் (புறம் 216 : 11-12). பிசிராந்தையார் பாண்டிய நாட்டின் தென்கோடியில் வாழ்ந்து வந்தார். எனவே, சான்றோர் சிலர் பிசிராந்தையார் வரமாட்டார் என்று கூறினர். கோப்பெருஞ்சோழன் கட்டாயம் வருவார் என்றே நம்பினான். 'நான் செல்வம் துய்க்கும்போது வரவில்லை என்றாலும், நான் அல்லல் படும்போது வராமல் இருக்கமாட்டார்' என்று அவன் கூறினான் (புறம் 215 : 10-12).

அவன் கூறியபடியே பிசிராந்தையார் வந்து சேர்ந்தார் (புறம் 217 : 7-8). இதற்குமுன் அவன் பிசிராந்தையாரைப் பார்த்ததில்லை. அவரது அகவை முதலியவற்றால் சான்றோர்கள் இவ்வாறு இருப்பார் என்று கற்பனை செய்து வைத்திருந்தனர். அவர்களது கற்பனைப்படி பிசிராந்தையார் நரைதிரை உடையவராகத் தோன்றவில்லை. மாறாகக் கறுகறுத்த முடி இருந்தது. இதனைச் சுட்டிக்காட்டிக் காரணம் கேட்டார்கள். அமைதி நிறைந்த இனிய வாழ்க்கையே இதற்குக் காரணம் என்பதைப் புலவர் விளக்கினார் (புறம் 191).

கோப்பெருஞ்சோழன் வடக்கிருப்பதைக் கண்ட சான்றோர் பலர் தாமும் அவனுடன் உயிர்விடத் துணிந்து வடக்கிருந்தனர் (புறம் 219 : 2-4).

இவ்வாறு வடக்கிருக்க அமர்ந்த சான்றோர்களில் ஒருவர் பொத்தியார் என்பவர். அவரை அப்போது வடக்கிருக்க வேண்டா என்று கோப்பெருஞ்சோழன் தடுத்துவிட்டான். பொத்தியாரின் மனைவி முதல் முறையாக நிறைமாதமாய் இருந்தாள். பொத்தியார் சோழனின் நெருங்கிய நண்பர். அதனால், அவன் அவரது குடும்ப நிலையை உணர்ந்திருந்தான். எனவே, அவரை இல்லத்திற்குத் திரும்பிச் சென்று, அவருக்கு மகன் பிறந்த பின் வரலாம் என்று கூறிவிட்டான். பொத்தியார் வேறு வழியின்றி உறையூர் மீண்டார். உறையூரில் இருந்த மன்றம் (அரசவை) கோப்பெருஞ்சோழன் இல்லாமல் வெறுமனே கிடக்கும் காட்சியைக் கண்டு கலங்கி அவர் பாடினார் (புறம் 220 : 5-7).

சில நாள்களில் கோப்பெருஞ்சோழன் இறந்தான். அவன் இறந்ததும், அவனை அவ்விடத்தில் புதைத்து அடையாளக்கல் நட்டுவிட்டனர். பொத்தியாருக்கு மகன் பிறந்து விட்டான். மகனைக் கண்டு மகிழ்ந்துவிட்டு, நண்பனைக் கண்டு நண்பனோடு அமர்ந்து உயிர்துறக்க எண்ணி ஓடோடி வந்தார் பொத்தியார். கோப்பெருஞ்சோழன் இல்லை. அவனது நடுகல்தான் இருந்தது. கல்லைக் கண்டபோது, கல்லாகி நின்ற கோப்பெருஞ்சோழனின் நற்பணிகள் அவர் நினைவிற்கு வந்தன; எண்ணி உருகிப் பாடினார் (புறம் 221).

தனக்கு இடம் தரும்படி அந்தக் கல்லைக் கேட்டார் (புறம் 222 : 5-6). நடுகல் தனக்கு இடங்கொடுத்துவிட்டதாகக் கருதினார். கல்லாகிய பின்னும் சோழன் தனக்கு இடம் கொடுத்தான் என்று அவர் கருதினார்; வடக்கிருந்தார் (புறம் 223 : 3-4); உயிர் துறந்தார்.

## தோற்றப் பொலிவு

இவன் பெண்களைப்போல் மென்மையான மேனி நலம் (சாயல்) கொண்டவன். எனினும், வலிமையில் ஆண்களுக்கெல்லாம் தலைவன் என்னும்படி மிக்க வலிமை படைத்தவன் (புறம் 221 : 5).

## கொடைத் தன்மை

'பாணர் பசிப்பகை' என்று இவன் கூறப்படுகிறான் (புறம் 212 : 6-7). இதனால் பாணர்களுக்கு இவன் கொடை வழங்கியமை பெறப்படும். அன்றியும் பாடுநர் ஆடுநர், புலவர் முதலானோர்க்கும் இவன் கொடை வழங்கியுள்ளான். நண்பனிடமிருந்து வருவதாக அறிந்தால் பறவைகள் ஆயினும் மக்கள்போல் மதித்து அணிகலன்கள் வழங்குவான் என்று பிசிராந்தையார் இவனைப்பற்றிக் குறிப்பிடுகிறார் (புறம் 67 : 13-14). இதில் கொடை மாண்பைக் காட்டிலும் நட்பின் மாண்பு சிறந்து நின்றமையையே காண்கிறோம். இவ்வாறே இவன் கல்லாகிய பின்னும் இடங்கொடுத்ததாகப் பொத்தியார் கூறுவதும் அமைகிறது.

## இவன் பாடல்கள்

இவ்வரசனே ஒரு புலவனாகவும் விளங்கினான். இவன் பாடல்களில் இவனது நட்பின் பண்பு வெளிப்படுகிறது. முயற்சிக்குத் தக்க பயன் உறுதியாகக் கிடைக்கும் என்று இவன் கூறுவது இவன் உழைப்பில் நம்பிக்கை உடையவன் என்பதைக் காட்டுகிறது. பிறர் கூற்றாக அமைந் தாலும் 'பேதைச் சோழன்' என்று இவன் தன்னையே குறிப்பிட்டுக் கொள்வது இவனது அடக்க உணர்வை வெளிப்படுத்துகிறது.

## பெயர்களும் அடைமொழிகளும்

*'கோப்பெருஞ் சோழன்' (புறம் கொளு, 212 : 8), 'பெருஞ்சோழன்' (பதிற். பதி. 9 : 6), 'பெருங்கோக்கிள்ளி' (புறம் 67 : 11), 'பொலந்தார்த் தேர்வண் கிள்ளி' (புறம் 220 : 5-6), 'அடுமான் தோன்றல்' (புறம் 213 : 8)* ஆகிய பெயர்களும், பெயர் அடைமொழிகளும் இவனுக்கு வழங்கப் பட்ட பல்வேறு பெயர்களையும் போர்க் கோலத் தோற்றத்தையும் புலப்படுத்துகின்றன.

# (இ) சென்னி மரபினர்
# இளஞ்சேட்சென்னி – 1
## (நெய்தலங்கானல்)
## (பாமுள்ளூர் எறிந்தவன்)

'சென்னி' எனும் சோழர் குடியைச் சேர்ந்த இரு அரசர்கள், கரிகால் பெருவளத்தானுக்கு முன்னர் ஆட்சி செய்துள்ளனர். அவர்கள் பாமுள்ளூர் எறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி (இளஞ்சேட்சென்னி–1), செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி எனும் உருவப்பஃறேர் (இளஞ்சேட்சென்னி–2). இவர்களுக்கு இடையே இருந்த உறவு முறை யாதென்பது தெரியவில்லை. பாட்டனும் பேரனுமாக இவர்கள் இருப்பார்களானால், இவர்களுக்கிடையே வேறோர் அரசன் ஆட்சி செய்திருக்கவேண்டும். அவன் யார் என்பதை அறிய இயலவில்லை. இவர்கள் இருவரும் சம காலத்தில் அரசாண்டவர் எனக் கொள்ளுவோரும் உண்டு.

கிள்ளி மரபினருக்கும் சென்னி மரபினருக்கும் இடைப்பட்ட நிலையில் கோப்பெருஞ் சோழன் விளங்குகிறான். அவனுடைய இயற்பெயர் தெரியாததனால். சிறப்புப் பெயராலேயே அவனைச் சுட்டியுள்ளோம்.

செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி உறையூரிலிருந்து அரசாண்டுகொண்டிருந்த காலத்தில், இவன் புகார்நகரப் பகுதியில் இருந்துகொண்டு சோழநாட்டின் ஒரு பகுதியை அரசாண்டான்.

நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியின் பெயர் 'சேரமான் பாமுள்ளூர் எறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி' என்று புறநானூற்றுக் கொளுவில் காணப்படுகிறது. இதில் சேரமான் என்னும் அடைமொழி வேறு எந்தப் பெயர்த் தொடரிலும் காணப்படாத

முறையில், கூறப்படும் அரசனுக்கு அடைமொழியாய் அமையாமல் அடைமொழியாகிய 'பாமுள்ளூர்' என்பதற்கு அடைமொழியாய் அமைந்துள்ளது. இதனால் இந்தப் பெயர்த் தொடரில் ஏதோ தவறு இருக்கிறது என்று எண்ண வேண்டியுள்ளது. அல்லது இவனது வரலாற்றில் மேலும் குழப்பம் இருக்கிறது என்று எண்ண வேண்டியுள்ளது.

### போர்

பாமுள்ளூர் என்ற ஊரை இவன் தாக்கி அழித்தான் என்பது இவனது பெயருக்கு அடைமொழியாகப் புறநானூற்றைத் தொகுத்த ஆசிரியர் 'பாமுள்ளூர் எறிந்த' என்பதைக் கொடுத்ததிலிருந்து தெரிகிறது.

### கொடை

இவன் பாணர்களுக்குப் பகைவர் கோட்டைகளைப் பரிசிலாகக் கொடுத்தான். கோட்டை பகைவர்களின் கைவசம் இருக்கும்போதே தான் கைப்பற்றப்போகும் உறுதிநோக்கிப் பரிசிலாகக் கொடுத்தான் (புறம் 203 : 9-11).

## இளஞ்சேட் சென்னி – 2
## (செருப்பாழி எறிந்தவன்)

'ஊன்பொதி பசுங்குடையார்' என்னும் சிறப்புப் பெயரால் அறியப்படும் புலவர் இவனைப்பற்றிப் புறநானூற்றில் (370, 378) பாடியுள்ளார். இடையன் சேந்தங்கொற்றனார் என்னும் புலவர் அகநானூற்றில் (375 : 10-15) 'சோழர் பெருமகன் இளம்பெருஞ்சென்னி' என்று சுட்டியுள்ளார்.

### செருப்பாழிப் போர்

எழிமலைப் பகுதியில் பாழி என்பது ஒரு நகரம். நன்னன் இதனைத் தலைநகராகக் கொண்டு ஒரு காலத்தில் ஆண்டு வந்தான். இந்தப் பாழி நகரத்தில் வேளிர் குடியினரும் வாழ்ந்தனர். இந்நகரில் அடிக்கடி போர் மூண்டது. காரணம் இது வடநாட்டிலிருந்து மேற்குக் கடற்கரை வழியே தமிழ்நாட்டில் கிழக்கு நோக்கி நுழைவார்க்கு வாயிலாய் அமைந்திருந்ததே ஆகும். அடிக்கடி போர் நிகழ்ந்த காரணத்தால் இந்த நகரம் 'செருப்பாழி' (செரு நடக்கும் பாழி) என்று வழங்கப்பட்டது (பூழி நாட்டிலிருந்த செருப்பு மலை வேறு – பதிற். 21 : 23). செருப்பாழிப்

பகுதியில் வழிப்பறி மிகுதியாக இருந்தது. சோழ நாட்டு வாணிகர் தரைவழியே மேலைக் கடற்கரைக்குச் சென்ற வழி இது. எனவே, இங்கு நடந்துகொண்டிருந்த வழிப்பறியைத் தடுக்கவேண்டிய பொறுப்புச் சோழனுடையதாயிற்று ('குடிக்கடன்'). இந்தக் கடமையைச் செய்ய முன்வந்தான் இந்த இளஞ்சேட்சென்னி.

பாழி நகரில் செம்பை உருக்கி வார்த்த கோட்டை இருந்தது. இவன் அதனைத் தாக்கி அழித்தான். வம்ப வடுகர் அவனை எதிர்த்தனர். வம்ப வடுகர் என்பவர் வடநாட்டு வடுகர் (புறம் 378 : 2). மௌரியர் தமிழ் நாட்டில் நுழைய வழியமைத்துக் கொடுத்தவர். தமிழரோடு ஒன்றுபட்டு வாழ்ந்த எருமை நாட்டு வடுகர் போன்றவர் அல்லர். 'எருமை' அரசன் வரலாற்றில் இவர்களைப் பற்றிக் காணலாம். சோழன் வம்ப வடுகரைத் தரையில் சாய்த்து யானைக் காலால் துவட்டினான் (அகம் 375 : 13-15); வாட்போர் செய்து வென்றான் (புறம் 378 : 2). தோற்ற வடுகர்களில் சிலர் திரும்பி ஓடிவிட்டனர்.

## தென்பரதவரை அடக்கல்

தென்னாட்டுப் பரதவர் தம் வலிமையைக் காட்டிக் கலகம் செய்து வந்தனர். எனவே, இவன் தென்திசைப் போரில் ஈடுபட்டு இவர்களது கொட்டத்தை அடக்கினான்.

இவன் பகைவர் பிணங்களை நெல்லின் தாள் போல் உதறி, யானைகளை எருதுகள்போல் நடத்திப் போரடித்த காட்சி, புலவர் உள்ளத்தில் நிலைபெற்றது (புறம் 370 : 15-16, சிதைவு).

## கொடை

ஊன்பொதி பசுங்குடையார் என்னும் புலவர் தடாரி என்னும் இசைக் கருவியை முழக்கிக் கொண்டு போர்க் களத்திற்குச் சென்று அவனது வெற்றியைச் சிறப்பித்துப் பாடினார். அவனது பட்டத்து யானையைப் பரிசிலாகக் கேட்டார். சோழன் கொடுத்திருப்பான் என்று நாம் கருதலாம். இப்போர்களிற்றைப் பரிசிலாகப் பெற்றுக்கொள்வதன் மூலம் இனிமேல் கொடிய போர்களில் அவன் ஈடுபடக் கூடாது என்பதைப் புலவர் குறிப்பால் உணர்த்தினார் போலும் (புறம் 370 : 18-21).

# இளஞ்சேட்சென்னி – 3
# (உருவப்பஃறேர்)

## நாடு

*இவன் நாடு மழைவளம் குன்றினும் நீர்வளம் குறையாது.*

## போர்

*போர்களில் ஈடுபட்டதால் இவனது வாள் மழுங்கிக் குருதிக் கறைபடிந்திருந்தது. இவனது தாளிலிருந்த வீரக்கழல் போர்க்களத்தில் நடந்ததால் குருதிக்கறை படிந்திருந்தது. மார்புக் கவசம் பல துளைகளை உடையதாய் இருந்தது (புறம் 4 : 1-7). புலி போன்ற இவனது குதிரைகள் கடிவாளம் பூண்டு சிவந்த வாயை உடையன. எமன் போன்ற இவனது யானைகள் கதவைக் குத்திக் கோடுகளின் நுனி மழுங்கப் பெற்றிருந்தன. இவ்வாறு இவனது படைகள் கூறப்படுவதால் இவன் பல போர்களில் ஈடுபட்டான் எனத் தெரிகிறது.*

## கொடை

*பெருங்குன்றூர்க் கிழார் என்னும் புலவர், விருந்தினரைக் கண்டால் ஒளிந்துகொள்ள வேண்டிய நிலையிலிருக்கும் தன் வறுமை நிலையை விளக்கிக் கூறிப் பரிசில் தரும்படி இவனை வேண்டினார். இவன் பரிசில் நல்கினான் என்று கருதலாம் (புறம் 266 : 10-13).*

## தோற்றம்

*வெண்கொற்றக் குடையின் கீழ் இவன் காட்சியளித்தான் (புறம் 266 : 7); கடலிடையே தோன்றும் செங்கதிர்போலப் படைகளுக்கிடையே தானும் படைக்கலம் தாங்கிப் பொன்தேரின் மேல் பொலிவுடன் தோன்றினான் (புறம் 4 : 14-19).*

*இந்தக் காட்சி இவனது பெயரில் அமைந்துள்ள 'உருவப்பல்தேர்' என்னும் அடைமொழியை விளக்கும் சான்றாய் விளங்குகிறது.*

## மகன்

*'உருவப்பஃறேர் இளஞ்சேட்சன்னி' என்று புறநானூற்றுத் தொகுப்பாசிரியர் குறிப்பிடும் பெயர், அவன் மகன் காலத்துப் புலவரான முடத்தாமக்கண்ணியாரால் 'உருவப்பஃறேர் இளையோன்' என்று கூறப்படுகிறது (பொருநர். 130).*

பொருநராற்றுப்படையில் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ள கரிகாற் பெருவளத்தான் இவன் மகன்.

## இளஞ்சேட் சென்னி ஒப்புநோக்க முடிவு

இதுவரை புறநானூற்றுத் தொகுப்பாசிரியர் பெயர் சுட்டியுள்ளபடி மூன்று இளஞ்சேட் சென்னியரின் வரலாறுகளைத் தனித்தனியே பார்த்தோம். இனி அவர்கள் மூவர்தாமா, இருவரா, ஒருவரா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

செருப்பாழி எறிந்தவனையும் பாமுள்ளூர் எறிந்தவனையும் ஒருவனே என்று கொள்ள முடியவில்லை. அவர்களிடையே மூன்று வேற்றுமைகள் தெளிவாகத் தெரிகின்றன :

1. ஒருவன் செருப்பாழியை வென்றான். மற்றொருவன் பாமுள்ளூரை வென்றான்.

2. செருப்பாழியை வென்றவன் உறையூரிலிருந்துகொண்டு அரசாண்டான். பாமுள்ளூரை வென்றவன் நெய்தலங்கானலில் இருந்துகொண்டு (புகாரிலிருந்து கொண்டு) அரசாண்டான்.

3. செருப்பாழி எறிந்தவன் இளம்பெருஞ்சென்னி என்ற பெயரில் வேறுபாடு உடையவனாகக் காணப்படுகிறான் (அகம் 375 : 10-13).

இவற்றை ஒப்பிட்டு எண்ணும்போது, இளம்பெருஞ்சென்னி அண்ணன் என்றும், இளம்சேட்சென்னி தம்பி என்றும் கருதுவது மிகப் பொருத்தமான முடிவாய் அமைவதைக் காணலாம்.

உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி 'பொலந்தேர்மிசைப் பொலிவுடன் தோன்றினான்' என்றும், 'நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி இயல்தேர்ச் சென்னி' என்றும் தேரால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளனர். பொலந்தேர் என்பது பொன்னாலாகிய அழகிய தேர் ஆதலின் உருவப் (அழகிய) பல்தேர் என வழங்கப்படுதல் இயல்பாகும். இயல்தேரை உருவப் பல்தேர் என்று கொள்வது அத்துணைச் சிறப்பில்லை. எனவே, இயல்தேர்ச் சென்னி என்று குறிப்பிடப்படும் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி வேறு; உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி வேறு என்று நாம் கொள்கிறோம்.

இந்தக் கருத்தை வலியுறுத்தும் வகையில் இவர்களுடைய மக்களின் வரலாறும் அமைந்துள்ளமையை அடுத்துக் காணலாம்.

# கரிகால் பெருவளத்தான்

கரிகாலன் என்னும் பெயருடைய சோழ அரசன் சங்க காலத்தில் ஒருவன்தான் இருந்தான். அவனுக்குப் பல்வேறு வகையில் வழங்கிவந்த பெயர்களும், அவனது பல்வேறு செயல்களும் பல்வேறு பாடல்களில் பல்வேறு புலவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் திரட்டி ஒப்புநோக்கும்போது கரிகாலன் என்னும் அரசன் ஒருவன்தான் இருந்தான் என்பது பெறப்படுகிறது.

பத்துப்பாட்டு என்னும் தொகுப்பில் உள்ள பட்டினப்பாலை என்னும் பாட்டைப் பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார்; பொருநராற்றுப்படை என்னும் பாட்டைப் பாடியவர் முடத்தாமக்கண்ணியார். இவர்களது இந்தப் பாட்டுகள் கரிகாலன் ஒருவனே என்பதை அந்தப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ள அவனது பெயர்களை நோக்கி அறியலாம்.

'திருமாவளவன்' (பட்டினப். 299; பொருநர். வெண்பா; திருமாவளவனை இரண்டாம் கரிகாலன் என்பர்), 'கரிகாலன்' (பட்டினப். வெண்பா; பொருநர். வெண்பா), 'சோழன் கரிகாற் பெருவளத்தான்' (பட்டினப். கொளு; பொருநர். கொளு), 'பெருவளக் கரிகால்' (அகம் 125 : 18).

கொளுக்குறிப்பு, பத்துப்பாட்டைத் தொகுத்தவரால் தரப்பட்டது. இவர் அந்தப் பாட்டுகள் பாடப்பட்ட காலத்தவர் அல்லது நம் எல்லோரையும் காட்டிலும் பாட்டுகள் தோன்றிய காலத்தோடு நெருங்கிய தொடர்புடையவர். எனவே இவர் ஒரே பெயரை இரண்டு பாட்டுகளின் தலைவனுக்கும் குறிப்பிடுவதால் இவற்றில் கூறப்பட்டவன் ஒருவனே என்பது தேற்றம்.

கரிகாலனைப்பற்றிப் பாடப்பட்ட பாடல்கள் புறநானூற்றில் நான்கு உள்ளன. அவற்றைப் பாடிய புலவர்கள் மூன்று பேர். இந்த நான்கு பாடல்களுக்கும் தரப்பட்டுள்ள கொளுக்குறிப்பில் கரிகாலனது பெயர் சோழன் கரிகாற் பெருவளத்தான் என்றே உள்ளது. இந்தக் கோளுக் குறிப்பைத் தந்தவர் புறநானூற்றைத் தொகுத்த ஆசிரியர்.

புறநானூற்றைத் தொகுத்தவரும் பத்துப்பாட்டைத் தொகுத்தவரும் ஒருவரா, இரு வேறு அறிஞரா என்பது நமக்குத் தெரியாது. எப்படியாயினும் குறிப்புகள் எல்லாம் சோழன் கரிகாற் பெருவளத்தான் என்னும் ஒரே பெயரையே கையாளுகின்றன. கரிகாலனைப்பற்றிக் கருத்துகள் தரும் அறிஞர்கள் எல்லோரையும்விட இந்தக் கொளுக் குறிப்புத் தந்தவர் கரிகாலன் காலத்தோடு நெருங்கிய தொடர்புடையவர்.

எனவே, புறநானூற்றிலும், பத்துப்பாட்டிலும் குறிப்பிடப்பட்ட அரசன் ஒருவனே ஆவான். இவை பெயரால் தெரியவரும் உண்மை.

ஒரே பெயர் கொண்ட பலர் இருந்திருக்கலாம் அல்லவா என்றும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கரிகாலன் நடத்திய போர்களில் ஒன்று வெண்ணிப் போர். இந்தப் போர் பொருநராற்றுப்படை புறநானூறு, அகநானூறு ஆகிய மூன்று நூல்களிலும் குறிப்பிடப்படுகிறது. எனவே, ஒரே போரை நடத்திய கரிகாலனை வேறுவேறு அரசர்கள் என்று கொள்ள முடியவில்லை.

ஒரே ஊரில் வெவ்வேறு காலங்களில் போர் நடந்திருக்கலாம் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

வெண்ணிப் போரில் கரிகாலனை எதிர்த்துப் போரிட்டவர் பலர். அவர்களுள் சேர அரசன் ஒருவனும் பாண்டிய அரசன் ஒருவனும் இருந்தனர். அவர்கள் இரண்டு பேருமே அந்தப் போர்க்களத்தில் இறந்து போனார்கள் என்று பொருநராற்றுப்படை குறிப்பிடுகிறது. பரணரின் அகநானூற்றுப் பாடலும் (அகம் 246, 8-12) அதையே குறிப்பிடுகிறது. கழாத்தலையாரின் புறநானூற்றுப் பாடலும் (65 : 6-11) மாமூலனாரின் அகநானூற்றுப் பாடலும் (55 : 10-12) வெண்ணிக் குயத்தியாரின் புறநானூற்றுப் பாடலும் (66 : 6-8) அந்தப் போரில் சேர அரசன் இறந்த செய்தியைக் குறிப்பிடுகின்றன. இவ்வாறு வெண்ணிப் போரில் கரிகாலனை எதிர்த்த பகைவர்களும் ஒரே கூட்டத்தாராக உள்ளனர். அப்படியிருக்க வெண்ணியில் வேறுவேறு காலத்தில் நடைபெற்றவை என்று அந்தப் போரைக் கொள்ள முடியவில்லை. எனவே, சங்க காலத்து வெண்ணிப் போர் ஒன்றுதான்; நிகழ்ந்த காலமும் ஒன்றுதான்; இந்தப் போரில் ஈடுபட்ட கரிகாலனும் ஒருவன்தான். இதில் குழப்பத்திற்கு இடமில்லை.

கரிகாலன் என்னும் பெயர் கொண்ட அரசர் சங்க காலத்திலேயே பலர் இருந்தனர் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். அவர்களது கருத்துரையின் சாரம் இவனுடைய வரலாற்றின் இறுதியில் தரப்பட்டுள்ளது.

## நாடு

கரிகாலன் காவிரி ஆறு பாய்ந்த பகுதியை அரசாண்டான் என்பது அடிப்படைச் சான்றுகளில் வெளிப்படை. அவன் உறந்தையைத் தலைநகராகக் கொண்டிருந்தான் என்றும் பின்னர்த் தன் அரசச் சுற்றத்தாரோடு புகாருக்கு வந்து அமர்ந்து தன் தலைநகரை மாற்றிக் கொண்டான் என்றும் பட்டினப்பாலையில் குறிப்பிடப்பட்டுள்ளது (பட்டினப். 285). இதனால் இவன் கிட்டத்தட்ட சோழ நாடு

முழுவதையும் விரிவான பரப்பில் ஆண்டு வந்தான் என்பது தெளிவாகிறது. இவன் கழார்த் துறைக்குத் தன் குடும்பத்தாருடன் வந்திருந்து அத்தியின் நீர் விளையாட்டைக் கண்டு மகிழ்ந்ததாகவும் (அகம் 376 : 10-11), இடையாறு என்னும் பகுதி இவனது நாட்டில் இருந்ததாகவும் (அகம் 141 : 23) குறிப்பிடும் பாடல்களும் உள்ளன. கழார்த் துறையும் இடையாற்றுப் பகுதியும் இப்போதுள்ள தஞ்சை மாவட்டப் பகுதியில் அப்போது இருந்தவை. இப்போது நாமக்கல் வட்டத்தில் உள்ள இடையாறு என்னும் பழமைச் சிறப்பு வாய்ந்த ஊரும் காவிரிக் கரையில் உள்ளது. பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள இடையாறு என்று கொண்டாலும் எல்லா வகையிலும் பொருந்தும்.

## கரிகாலனின் முன்னோன்

கரிகாலனின் முன்னோன் ஒருவன் (புறம் 66 : 1-2) கடலில் தனது கப்பல்களை ஓட்டினான். அவை பாய்மரக் கப்பல்கள். காற்றின் விசையால் அவை முன்னும் பின்னும் வேண்டிய இடங்களுக்கு ஓட்டிச் செல்லப்பட்டன. இவனது காலத்திற்கு முன் கடலில் மரக்கலங்கள் துடுப்புகளின் உதவியைக் கொண்டு தள்ளியே ஓட்டப்பட்டன. இவன்தான் முதன்முதலில் பருவக்காற்றைப் பயன்படுத்தி அதன் விசையால் கப்பல்களைத் தாமே இயங்கும்படி செய்தான். இதனால் இவன் 'நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி வளிதொழில் ஆண்ட உரவோன்' என்று குறிப்பிடப்பட்டான்.

இவ்வாறு இவன் ஓட்டிச் சென்ற கப்பல்கள் வெளிநாட்டு வாணிகத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இவன் வழியே கரிகாலனது கப்பல்களுக்கும் புலி பொறித்த பண்டங்களுடன் சென்று வாணிகம் செய்திருக்கலாம் அல்லது இந்த உரவோனின் கப்பல் வெளிநாட்டுச் செலவுகட்குப் பயன்பட்டிருக்கலாம்.

சேர அரசன் வானவன் (புறம் 126 : 14) கப்பல் ஓட்டி வாணிகம் செய்ததையும் நெடுஞ்சேரலாதனின் கடற்போர் வெற்றிக்குக் கப்பல்கள் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும் என்பதையும் நாம் இங்கு நினைவுகூரலாம். சேரர் கப்பல்கள் அரபிக் கடலிலும் சோழர் கப்பல்கள் வங்காளக் குடாக் கடலிலும் மிதந்து மேலை நாடுகளோடும் கீழை நாடுகளோடும் வாணிகம் செய்துவந்தன. கரிகாலன் காற்று விசையைத் தன் கப்பலுக்குப் பயன்படுத்திய உரவோனின் வழிவந்தவன் என்று குறிப்பிடப்படுகிறான்.

## தந்தை

கரிகாலன் 'உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்' என்று குறிப்பிடப்படுகிறான் (பொருநர். 130). இதில் சிறுவன் என்பது மகன்

என்னும் பொருளைத் தருகிறது. இளையோன் என்பது இளஞ்சேட்சென்னி என்பவனைக் குறிக்கிறது என்பதை அப் பெயர்களுக்கு முதலிலுள்ள உருவப்பஃறேர் என்னும் அடைமொழியால் உணரலாம். இதனால் கரிகாலனது தந்தை உருவப்பஃறோர் இளஞ்சேட் சென்னி என்பது பெறப்படும்.

## அரியணை யேறல்

கரிகாலன் தாய் வயிற்றில் வளர்ந்துகொண்டிருந்தபோதே அவனது தந்தை இறந்துவிட்டான். எனவே, அரசாட்சிப் பொறுப்பு அப்போதே அவனுக்குக் கிடைத்துவிட்டது. இது 'தாய்வயிற்றிருந்து தாயம் எய்தி' என்று பொருநராற்றுப் படை (பொருநர். 132) குறிப்பிடுவதிலிருந்து தெரிகிறது.

இந்த நிலையில் இவன் சார்பாக இருந்து ஒருவன் ஆட்சிப் பொறுப்பினை மேற்கொண்டிருந்தான் என்று நம்பலாம். இவ்வாறு அரசுப் பொறுப்பினை மேற்கொண்டிருந்தவன் அவனது தாய்மாமன் என்று கூறப்படுகிறது. இதனையும் இயல்பென்று நாம் ஏற்கலாம். தாய்மாமன் பெயர் இரும்பிடர்த்தலையார் என்று கூறப்படுகிறது. இரும்பிடத்தலையார் என்னும் பெயர் கொண்ட ஒருவர் சங்ககாலத்தில் பாண்டிய அரசன் கருங்கை ஒள்வாட் பெரும்பெயர் வழுதியைக் கண்டு வாழ்த்திப் பாடி அறிவுரை கூறியுள்ளதைப் புறநானூற்றில் நாம் காண்கிறோம். இந்தப் புலவரின் இயற்பெயர் தெரியவில்லை. இவர் தம் பாடலில் 'இரும்பிடர்த்தலையிருந்து' என்னும் தொடரைக் கையாண்டுள்ளார். அதுகொண்டு இவரை இரும்பிடர்த்தலையார் என்று வழங்கிவருகின்றனர். இதுபோன்ற பெயர் அமைப்புகள் பல சங்ககாலப் புலவர்களுக்கு அமைந்துள்ளன. இந்த அமைப்பு நமக்கு ஓர் உண்மையை வெளிப்படுத்துகின்றது. நூலைத் தொகுத்தவருக்குப் பாடலைப் பாடிய ஆசிரியரின் பெயர் தெளிவாகத் தெரியாவிட்டால் அவர் ஏதோ தம் மனம் போல் குறிக்காமல் உண்மைக்கு முதலிடம் தந்து அவரது பாடலிலிருக்கும் சிறப்பான தொடரால் அவரது பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார் என்பதே அந்த உண்மை. இத்தகைய இரும்பிடர்த் தலையாரைத் தாய்மாமன் என்று ஒருவர் குறிப்பிடுவாரேயானால் அந்தக் குறிப்பு அவரது பெயர்க் குறியீட்டில் அமைந்த கற்பனை போலவே அமைந்தது என்று கொள்வதைவிட வேறு வழியில்லை.[20]

கரிகாலன் எவ்வாறு அரியாணை யேறினான் என்பதைப் பட்டினப்பாலை குறிப்பிடுகிறது (பட்டினப். 220 - 227). உவமையாலும் பொருள் விளக்கத்தாலும் அது தெளிவாகக் குறிப்பிடுகிறது.

குட்டி வரிப்புலி கூட்டில் வளர்வதுபோல் அவன் பிறருடைய காப்பில் வளர்ந்தான். பருவம் வந்ததும் இவன் வெளிப்பட்டான். போய்க்

குழியில் அகப்பட்டுக் கிடந்த ஆண்யானை அந்தக் குழியின் கரைகளைக் குத்திச்சரித்துவிட்டுத் தானே மேடேறிச் சென்று தன் பெண்யானையோடு சேர்ந்து கொள்வது போல இவன் இவனது காப்புக் கூட்டைச் சிதைத்து விட்டு அதாவது, தனக்குத் தானே விடுதலையை உண்டாக்கிக்கொண்டு வாளை உருவிக் கையிலேந்திய கோலத்துடன் வந்து தனது மரபுரிமையாகிய அரச பதவியைத் தானே எடுத்துக் கொண்டான். பட்டினப்பாலையில் கூறப்பட்டிருக்கும் இந்தச் சினக்கோலம் 'முருகற் சீற்றத்து உருகெழு குருசில்' என்று பொருநராற்றுப் படையிலும் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். இவனுக்குக் கிடைத்த அரச பதவி அமைதியானது அன்று. அது அச்சந்தரும் அரச பதவியாகும் ('உருகெழு தாயம்' – பட்டினப். 227). இவனும் அமைதியாக அரியணை யேறவில்லை. மேனியெல்லாம் கனல்பொறி பிறந்து சிவந்து தோன்றும் பேரச்சம் தரும் உருவோடு ('உருகெழு குருசில்' – பொருநர். 131) இவன் அரியணையேறிய வரலாறு இவ்வாறு தெளிவாக இருக்கும்போதே, பட்டத்து யானை மாலை சூட்டி அழைத்து வந்த கற்பனைக் கதைகள் வழங்கி வருவது வியப்பிற்குரியதாகும்.

## கரிகாலும் கால் நெருப்பும்

கரிகாலன் உறையூர்க் கோட்டையில் இரவில் உறங்கிக் கொண்டிருந்தபோது அவனது பகைவர்கள் கோட்டைக்குத் தீ மூட்டிவிட்டார்களாம். கரிகாலன் தீயிலிருந்து தப்பி வெளிவந்தபோது அவனது கால் கருகிப் போயிற்றாம். அது முதல் கரிகாலன் என்னும் பெயருடன் அவன் அழைக்கப்பட்டானாம் (பட்டினப். வெண்பா).

இந்தத் தீ நிகழ்ச்சியில் தப்பிப் பிழைத்த கரிகாலன் தன் தாய்மாமன் வீட்டில் வளர்ந்துகொண்டிருந்தானாம். மக்கள் அரசனைக் காணாது வருந்தித் தேடிமுயன்றும் கிடைக்காமையால் பட்டத்து யானையின் துணைகொண்டு தக்கான் ஒருவனைத் தேர்ந்தெடுக்க முயன்றார்களாம். அதன்படி அவர்கள் பட்டத்து யானையின் கையில் மாலையைக் கொடுத்து அனுப்பி அந்த மாலையை அது யாருக்குச் சூட்டிவிடுகிறதோ அவனையே அரியணையேற்றுவதென்று முடிவு செய்து யானையை அனுப்பினார்களாம். யானை தேடிச்சென்று கால் நெருப்புப் பட்டு அடையாளம் மாறியிருந்த கரிகாலனுக்கு மாலை சூட்டியதாம் (பழமொழி 230). மாலை சூட்டப்பட்டவன் உண்மையான அரசன் கரிகாலனே என்பதை உணர்ந்து மக்கள் பெரிதும் மகிழ்ந்து ஏற்றார்களாம்.

## வெண்ணிப் போர்

வெண்ணி[21] என்னும் ஊரின் வாயிலை அடுத்திருந்த வெளியில் கரிகாலன் அவனது பகைவர்களை எதிர்த்துத் தாக்கினான். ஊர் வாயிலில்

போர் நடைபெற்றதால் வெண்ணி வாயிலில் நடைபெற்றது என்றும் அந்த வாயில்வெளி போர்க்களமாகப் பயன்படுத்தப் பட்டதால் வெண்ணிப் பறந்தலையில் (போர் நடைபெற்ற முரம்பு நிலம்) போர் நடைபெற்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வெண்ணிப் போர் (பொருநர். 143-148; புறம் 65, 66 : 6; அகம் 55 : 10; 246 : 9-10) கரிகாலன் இளைஞனாய் இருந்தபோதே நடத்திய போர் என்பதைப் பொருநராற்றுப்படை தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

வெண்ணியில் கரிகாலனை எதிர்த்துத் தாக்கியவர்களுள் பதினொரு குலத் தலைவர்களும் இருபெரு வேந்தர்களும் அடங்கியிருந்தனர். இந்தப் பதினொரு வேளிர் யார், அவர்களுடன் சேர்ந்து போரிட்ட பாண்டியன் யார் என்பன தெளிவாகத் தெரியவில்லை. எதிர்த்துத் தாக்கிய சேர அரசன் பெயர் மட்டும் பெருஞ்சேரலாதன் என்பது தெரிகிறது.

போரின் முடிவு கரிகாலனுக்கு வெற்றியாய் முடிந்தது. அவனை எதிர்த்த சேரனும் பாண்டியனும் போரில் மாண்டனர். வேளிருள் பலரும் மாண்டிருக்கலாம்.

சேர அரசன் பெருஞ்சேரலாதன் முதுகில் புண்பட்டதையும் அதனால் அவன் போர்க்களத்திலேயே வடக்கிருந்து உயிர் துறந்ததையும் அதன் விளைவுகளையும் அவனது வரலாற்றில் கண்டோம்.

பட்டினப்பாலை கரிகாலனால் வெல்லப்பட்டவர்கள் என்று ஏழு பேரைக் குறிப்பிடுகிறது.

அவர்களுள் சிலரோ, அவர்களுள் அனைவருமோ இந்தப் போரில் ஈடுபட்டிருக்கலாம் என்று எண்ண இடமுண்டு. இவர்கள் இவன் நடத்திய வாகைப் பறந்தலைப் போரில் எதிர்த்துப் போராடியிருக்கவும் கூடும்.

## வாகைப் பறந்தலைப் போர்

வாகைப் பறந்தலை என்னுமிடத்தில் ஒன்பது மன்னர் கரிகாலனை எதிர்த்துப் போரிட்டனர் (அகம் 125 : 19). அந்தப் போர் கரிகாலன் தன் குதிரைப் படையைக் கொண்டு பகைவர் நாட்டைத் தாக்கிய போர். அந்தப் போரில் கரிகாலன் தானே போர்க் களத்தில் இறங்கிப் போரிட்டான். ஒன்பது மன்னர்களில் யாராலும் அவனை எதிர்த்து நிற்க முடியவில்லை. அவர்கள் அனைவரும் தம் வெண்கொற்றக் குடைகளைப் போர்க்களத்திலேயே போட்டுவிட்டு ஓடிவிட்டனர். கரிகாலன் வெற்றி பெற்றான்.

## பிற போர்கள்

பட்டினப்பாலை, கரிகாலனது வெற்றிப் புகழைப் பாடுங்கால், அவனுக்கு அடங்கியவர் என்று கொள்ளும் வகையில் இரண்டு அரசர்களையும் ஐந்து இனக்குழுத் தலைவர்களையும் குறிப்பிடுகிறது.

ஒளிநாட்டு மக்கள் ஒளியர் எனப்பட்டனர். அவர்களுள் பலர் இவனது பேராற்றலைக் கேள்விப்பட்டோ இவனோடு போராடித் தோற்றோ கரிகாலனைப் பணிந்து ஒடுங்கிக் கிடந்தனர் (பட்டினப். 274).

அருவா நாட்டு மக்கள் அருவாளர். இவர்கள் தொன்மையான குடியைச் சேர்ந்தவர்கள். அவர்களும் ஒளியர் போன்ற நிலையினராய்க் கரிகாலன் இட்ட கட்டளையை நிறைவேற்றும் ஏவலராய் மாறினர் (பட்டினப். 275).

சங்ககாலத்தில் தமிழ்மொழி பேசப்பட்ட எல்லைக்கு வடபால் வாழ்ந்தவர் வடவர். அவர்கள் இவனது தாக்குதலால் வாட்ட மடைந்திருந்தார்கள் (பட்டினப். 276).

குடநாட்டு மக்கள் குடவர் எனப்பட்டனர். கரிகாலானது வெற்றிகளை எண்ணி எண்ணம் சோர்ந்து கிடந்தனர் (பட்டினப். 276).

பொதுவர் என்னும் இனக் குழுவினர் சங்க காலத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் இன்னார் என்பது தெரியவில்லை. எனினும் பொதியமலைப் பகுதியில் வாழ்ந்த மக்கள் பொதுவர் எனப்பட்டனர் எனலாம். அவர்களின் கால்வழியை அழியும்படி கரிகாலன் அவர்களை வென்றான் (பட்டினப். 281).

இருங்கோவேள் கரிகாலனை எதிர்த்துப் போராடி மாண்ட அரசன் (பட்டினப். 282).

பாண்டிய நாட்டு அரசன் தென்னவன் என்று சுட்டப்படுகிறான். கரிகாலன் சீற்றம் கொண்டு தென்னவனின் கோட்டைகளைத் தாக்கி அழித்தான்; இதனால் தென்னவன் அரசாளும் ஆற்றலை இழந்தான் (பட்டினப். 277).

கரிகாலனது போர்ச் செயலைப் பற்றிச் சில பாடல்கள் பொதுவகையில் குறிப்பிடுகின்றன.

கரிகாலன் அரியணையேறியதும் பகைவர் கோட்டைகளைத் தாக்கி அழிக்கும் உழிஞைப் போர் நடத்திப் பகைவர் படைகளை அழித்தான் (பட்டினப். 235-239; புறம் 224 : 1). இவன் பகைவர்களது வளப்பம்மிக்க நாடுகளைப் பாழாகும்படி அழித்தான் (பட்டினப். 240-245). பகைவர் ஊர்களைத் தீயிட்டு கொளுத்தினான் (புறம் 7 : 7-8).

## இலங்கைப் போர்

இராசாவளி என்பது இலங்கையின் வரலாற்றைக் கூறும் பிற்கால நூலாகும். இந்த நூலில் கரிகாலனது செயலைப்பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. கரிகாலன் இலங்கையின் மீது படையெடுத்துச் சென்று 12 ஆயிரம் இலங்கை மக்களைச் சிறை செய்து தன் நாட்டுக்குக் கொண்டு வந்தானாம். அவர்களைக் கொண்டு தன்னாட்டில் பாயும் காவிரி ஆற்றுக்கு இரண்டு பக்கமும் கரைகள் அமைத்தானாம். இவ்வாறு கூறும் அந்த வரலாறு மேலும் சிலவற்றைக் கூறுகிறது. முதலாம் கயவாகு என்னும் இலங்கை அரசன் சோழ நாட்டுக்கு வந்து தன்னாட்டுக் கைதிகளை மீட்டுக்கொண்டு சென்றதோடு தமிழ்நாட்டிலிருந்து மேலும் 12 ஆயிரம் பேர்களைக் கைது செய்து தன்னாட்டுக்கு அழைத்துச் சென்றானாம். இவ்வாறு கூறப்படும் வரலாறுகளில் வரும் கைதிகளின் எண்ணிக்கை உயர்வு நவிற்சியாக இருக்கக்கூடும். ஆனால், நிகழ்ச்சியில் ஓரளவேனும் உண்மை இருக்கத்தான் செய்யும்.

கரிகாலனின் முன்னோன் கடலில் பருவக்காற்றின் துணைகொண்டு கப்பல் ஓட்டிச் சென்றான் என்பதை முன்பே கண்டோம்.

அவனது வழிவந்த இவனிடம் கடற்படை இருந்தது என்பது பொய்யாகாது. இந்தக் கடற்படையின் துணைகொண்டு இவன் இலங்கை நாட்டைத் தாக்கி வென்று கைதிகளைப் பிடித்து வந்திருக்கலாம். நெடுஞ்சேரலாதன் கடற்போரில் ஈடுபட்டுத் தன் நாட்டை அடுத்திருந்த தீவுகளை வெற்றிபெற்றது போலக் கரிகாலன் தன் நாட்டை அடுத்திருந்த இலங்கையைத் தாக்கி வெற்றி பெற்ற போர் இது என்று எண்ணவேண்டும். கரிகாலனுக்கும் இலங்கைக்கும் வாணிகத் தொடர்பு இருந்ததைப் பட்டினப்பாலை குறிப்பிடுகிறது. எனவே, கரிகாலனது இலங்கை வெற்றியை உண்மை எனக் கொள்ளலாம்.

## கொடை

கரிகாலன் பாணர்களுக்குக் கொடை வழங்கினான். உணவு உடை, யானை, தேர் முதலானவை அவன் கொடை வழங்கிய பொருள்களில் சில (பொருநர் 74-78, 158-171; புறம் 224). பாணர்க்குப் பொன் தாமரை செய்து அணிவித்ததும் நான்கு குதிரைகள் பூட்டிய தேர் நல்கியதும் அத்தேரை நல்கும்போது ஏழடி பின்சென்று மரியாதை செலுத்தி வழங்கியதும், பொருநர் தலையிலிருந்த ஈரையும் பேனையும் வாங்கிவிட்டதும், பொருநர்கள் தாம் செல்ல விரும்பியதைக் குறிப்பிட்டபோதும், இப்போதே செல்லவேண்டுமா இன்னும் சில நாளேனும் என்னுடன் தங்கலாகாதா என்னும் பொருள்பட 'அகறிரோ' என்று அன்புடன் அருள்கனியக் கூறியதும் இவனது கொடைப் பாங்கில் குறிப்பிடத்தக்கவை.

## ஆட்சி

இவனது ஆட்சி செங்கோலாட்சியாக அமைந்திருந்தது. அஃது அறத்தை அடிப்படையாகக் கொண்டது.

இவனது மேலாண்மையில் பல நாடுகள் இருந்தன. அவற்றிற்குத் தனித்தனி அரசுகள் இருந்தன. அவற்றையெல்லாம் தன்னுடைய ஒரு குடைக்கீழ் இவன் ஆண்டான். அரசுகள் எல்லாம் ஒருமைப்பாட்டு உணர்வுடன் இவன் தலைமையின் கீழ்த் திரண்டிருந்தன. அந்த அரசுகளுக்கிடையே அடிமைநிலை இல்லை; ஆதிபத்தியக் கோட்பாடே பின்பற்றப்பட்டது. பெருந்தன்மையுடைய நட்புறவே இருந்தது. இவ்வாறு இவன் பெருஞ்சிறப்புடன் அரசாண்டான் (பொருநர். 226-230).

## சிறப்புச் செயல்கள்

நாட்டு மக்களின் நலனுக்காக இவன் செய்த ஆக்கப்பணிகள் பல. மக்கள் நலனுக்காக உணவளித்து உதவும் அறம் செய்யும் அட்டில் சாலை (அன்னசத்திரம்) ஒன்றை இவன் புகார் நகரத்தில் அமைத்திருந்தான் (பட்டினப். 42-46).

இவனுடைய காலத்திற்கு முன்னர் நாட்டிலிருந்த குடிமக்களில் சிலர் பிழைப்புக்காக வெளியிடங்களுக்குச் செல்லும் நிலைமை இருந்தது. இவன் இந்த நிலைமையை மாற்றி இந்நாட்டிலேயே விருப்பமுடன் தங்குவதற்குரிய வசதிகளைச் செய்தான் (அகம் 141 : 22-24). பட்டினப்பாலையில் குறிப்பிடப்பட்ட காட்டைத் திருத்துதல், குளம் வெட்டுதல் போன்ற நாட்டை வளப்படுத்தும் செயல்கள், புதிய குடியேற்றங்களை அமைத்துத் தன் ஆட்சிப் பரப்பின் எல்லையை விரிவுபடுத்தியதைக் காட்டும்.

## வேளாண்மைக்கு உதவி

இவன் காடுகளை வெட்டி விளைநிலமாக மாற்றினான்; குளங்கள் வெட்டி வெள்ள நீரைத் தேக்கி வைத்துப் பாய்ச்சி நிலத்தை நீர்வளமுள்ளவையாக மாற்றினான் (பட்டினப். 283-284).

## காவிரிக்குக் கரை அமைத்தல்

இலங்கையில் கரிகாலன் வெற்றி பெற்றபோது 12 ஆயிரம் பேர் இலங்கை மக்களைச் சிறைப்பிடித்து வந்து, அவர்களைக் கொண்டு தனது நாட்டிலுள்ள காவிரி ஆற்றுக்கு இரண்டு பக்கமும் கரை அமைத்துக் கொண்டான் என்று இலங்கையின் கால்வழிச் செய்திக் கோவை ஒன்று குறிப்பிடுகிறது. இந்த நிகழ்ச்சியைத் தெலுங்கச் சோழர் கல்வெட்டுகளும்

குறிப்பிடுகின்றன. தெலுங்கச் சோழர்கள் தங்களைக் காவிரிக்குக் கரை அமைத்த கரிகாற் சோழன் வழிவந்தவர் என்று கூறிக்கொள்கின்றனர். இவர்கள் கூற்று கரிகாலன் காவிரிக்குக் கரை அமைத்தான் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

கல்லணை இந்தக் கரிகாலனால் கட்டப்பட்டது என்று ஒரு செவிவழிச் செய்தி உண்டு; தெளிவான அகச்சான்று கிடைக்கவில்லை. இராசராசனுடைய அண்ணனான ஆதித்த கரிகாலனே கல்லணையைக் கட்டியுள்ளான். அந்த அணையின் அடித்தளத் தொடக்கப் பணிகளேனும் கரிகாலன் காலத்தில் அமைக்கப்பட்டிருக்கக் கூடும் என்று எண்ண இடமுண்டு.

## கள வேள்வி

தன்னுடைய வெற்றிகளைக் கொண்டாடும் வகையில் இவன் களவேள்விகள் செய்தான் (புறம் 224 : 9). இதனைக் கருங்குழலாதனார் எனும் புலவர் பாராட்டியுள்ளார். இதனால் வைதிக சமயத்தவர் பெற்றிருந்த செல்வாக்குப் புலனாகிறது.

## வாணிகம்

புகார் நகரத்தில் கரிகாலன் காலத்தில் கடல் வாணிகமும் தரை வாணிகமும் மிகச்சிறப்பாக நடைபெற்றன (பட்டினப். 119-137, 184-193). இந்த வாணிகம் அரசின் மேற்பார்வையில் நடந்தது என்பதை வாணிகப் பொருள் மூட்டைகளின் மீது புலிச்சின்னம் பொறிக்கப்பட்டது என்று கூறப்படுவதிலிருந்து அறியலாம். அன்றியும் ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்கள் புலிச் சின்னம் பொறிக்கப்பட்ட கதவுகளை யுடைய காப்பகத்தில் வைக்கப்பட்டிருந்தன. அந்தக் கர்ப்பகத்தில் இடம் இல்லாமல் வெளியில் குவிக்கப்பட்டிருந்த பொருள்களுக்கும் அரசனின் காப்பு அமைக்கப்பட்டிருந்தது.

உயர்ந்த குதிரைகள், அரபிக் கடல் வாணிகத்தின் வழியே வந்திறங்கின. ஈழநாட்டு (இலங்கை) உணவுப் பொருள்களும் காழக நாட்டுச் செல்வமும் (தேக்கு) வங்காள விரிகுடா வழியே நடத்திய வாணிகத்தால் வந்து இறங்கியவை. மிளகு மூட்டைகள் சேரநாட்டுப் பகுதியிலிருந்து தரைவழியே வந்து இறங்கின.

வடமலையில் கிடைத்த மணி, பொன் ஆகியனவும் குட மலையில் கிடைத்த சந்தனம், அகில் ஆகியனவும் கங்கையாற்றுப் பகுதியில் கிடைத்த வளப்பம் நிறைந்த பொருள்களும் தரை வழியாகவும் கடல்வழியாகவும் இங்கு இறக்குமதி செய்யப்பட்டன. தென்கடலில் தோன்றிய முத்துகளும் குணகடலில் தோன்றிய பவளமும் தோன்றிய

இடத்திலிருந்து நேரே கொண்டு வரப்பட்டன. வெளிநாடுகளுக்குச் செல்லும்போது ஏற்றுமதி செய்வதற்காகக் காவிரி ஆற்றுப் பகுதியில் கிடைத்த சிறப்புமிக்க பொருள்கள் (கரும்பு, வெல்லம், இஞ்சி, மஞ்சள் முதலானவை) அங்குக் கொண்டு வந்து இறக்குமதி செய்யப் பட்டிருந்தன. இவற்றையெல்லாம் நாம் எண்ணும்போது கரிகாலன் வேளாண்மை வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் இருந்ததுபோலவே வாணிக மேம்பாட்டிலும் கண்ணும் கருத்துமாய் இருந்தான் என்பதை அறிய முடிகிறது.

## புதுப்புனல் விழா

தமிழ் நாட்டில் பல இடங்களில் ஆங்காங்கே சிறப்புமிக்க திருவிழாக்கள் நடந்தன (அகம் 376 : 3-10). புகார் நகரத்தில் நடைபெற்ற கடல் நீராடுவிழா, இந்திர விழா என்னும் பெயரைப் பெற்றிருந்தது. உறையூரில் நடைபெற்ற குளநீராடு விழா, 'பங்குனி முயக்கம்' எனப்பெயர் பெற்றிருந்தது. கழார் நகரின் காவிரித்துறையில் நடைபெற்ற விழா, புதுப்புனல் விழா (இதனைச் சேரநாட்டில் 'ஆறாட்டு' என்பர்). இந்த விழாவில் அரசனும் கலந்துகொள்ளுவது வழக்கம். ஆட்டன் அத்தி இந்த விளையாட்டில் சிறப்புற்று விளங்கியதை அவனது வரலாற்றில் காணலாம். இந்த ஆற்றுநீர்த் திருவிழாவுக்குக் கரிகாலன் தன் சுற்றுத்தாருடன் வந்திருந்தான் என்று கூறப்படுவதால், அரசன் என்ற நிலையில் மட்டுமின்றிச் சோழநாட்டுக் குடிமகன் என்ற முறையிலும் இவன் கலந்து கொண்டான் போலும்.

இந்த விழாவில் கரிகாலன் கலந்துகொண்டு சிறப்பித்த செய்தி சிலப்பதிகாரத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது (6 : 155 - 160). அரசிளங்குமரர், அரசனின் உரிமைச் சுற்றம், பரதவ குமரர் (கடல் வாணிகர்), பல்வேறு ஆயத்தார், ஆடும் பெண்கள் பாடும் பெண்கள் முதலானோர் கரிகாலனோடு விழாவில் கலந்துகொண்ட செய்தியை அது கூறுகின்றது.

## சிறப்புப் பெயர்கள்

திருமாவளவன் (பட்டினப். 299; பொருநர். வெண்பா) பெருவளத்தான் (பட்டினப். கொளு, பொருநர். கொளு) என்னும் பெயர்கள் இவனது செல்வ வளத்தைக் காட்டுவனவாய் உள்ளன. இயல்தேர் வளவன் (புறம் 7 : 10) என்னும் அடைமொழி இவன் தேரில் சென்ற காட்சியை நினைவூட்டுகிறது. 'முருகற் சீற்றத்து உருகெழு குருசில்' (பொருநர். 131) என்பது இவனது சினமிகுதியைக் காட்டுகிறது.

## தோற்றம்

இவனது கால்கள் களிறுகளை நடத்திப் பழக்கப்பட்டவை; அவற்றில் அவன் வீரக் கழல்களை அணிந்திருந்தான். கைகள் அம்புகள் எய்து வளம்பெற்றவை; அவை வில்லையும் அம்பையும் கொண்டிருந்தன. வேண்டாதபோது வில் அவனது மார்பிலே கிடந்தது. மலர்ந்த அவனுடைய மார்பை விட்டு நீங்கத் திருமகள் மறுத்துவிட்டாள். அந்த மார்பில் தோல் என்னும் பெயர் கொண்ட எறும் வன்மையுடையதாகப் பொத்திக் கட்டப்பட்டிருந்தது. இது இவன் போர்க்கோலம் பூண்டிருந்தபோது தோன்றிய உருவம்.

போர்க்கோலம் பூணாதபோதும் இவன் அரிமாவை (சிங்கத்தை)ப் போலக் காட்சியளித்தான். அவனது மார்பிலே ஒளிமிக்க அணிகலன்கள் விளங்கின; சிவந்த சந்தனம் பூசப்பட்டிருந்தது. மகளிர் தழுவவும் மைந்தர் ஏறி விளையாடவும் ஏதுவாய்ப் பரந்து விளங்கியது அது. போர்க்கோலம் பூண்டிருந்தபோது, அவன் மார்பிலே விளங்கிய வலிமை மிக்க தோல் என்னும் கவசம் இல்லை. மாறாக, வேறொரு கவசம் கலைநோக்குடன் செய்யப்பட்டு விளங்கியது. பகையரசர்கள் தலையில் சூடிய முடி மணிகள் அந்த மார்புக் கவசத்தில் பதிக்கப்பட்டிருந்தன (புறம் 7 : 1-6; பட்டினப். 293-299).

## கையறவு

கரிகாலன் உயிரோடு வாழ்ந்தபோது அவனது வெற்றிச் சிறப்புகளை வியந்து பாடிய கருங்குழலாதனார் அவன் இறந்த பின் அவனது மனைவியர் தம் இழைகளைக் களைந்துவிட்டு நின்ற அவலக் காட்சியைக் கண்டு வருந்திப் பாடியுள்ளார். இடையன் தன் ஆடுகளுக்காகப் பூத்துக் காய்த்து விளங்கிய வேங்கை மரத்தின் கிளைகளை மொட்டை மொட்டையாக வெட்டிச் சாய்த்த பின் மொட்டைக் கிளைகளுடன் நிற்கும் அடிமரம் போல் அவர்கள் அணிகலன்களைக் களைந்துவிட்டு பொலிவிழந்து நின்றார்களாம் (புறம் 224 : 14-17).

## மனைவியர்

இவன் இறந்தபோது இழை களைந்தவர் 'மெல்லியல் மகளிர்' என்று குறிப்பிடப்படுகின்றனர் (புறம் 224 : 17). கணவன் இறந்தால் அதற்காகத் தம் அணிகலன்களைக் களைந்துவிடுதல் தமிழர் பண்பாடு. இந்த வகையில் இழை களைந்தவர் எல்லாரும கரிகாலனது மனைவியர் என்பது பெறப்படும். இழை களைந்தவர் மகளிர்' என்று பன்மையால் குறிப்பிடப்படுவதால் கரிகாலனுக்குப் பல மனைவியர் இருந்தனர் என்பது புலனாகின்றது.

## மகள்

ஆதிமந்தி என்பவள் இந்தக் கரிகாலனின் மகள் என்று கூறப்படுகிறாள். சேர இளவரசன் ஆட்டன் அத்தியை மணந்து இவள் வாழ்ந்தாள். இவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைச் சேரர் வரலாற்றில் கண்டோம்.

# நலங்கிள்ளி
# (சேட்சென்னி)

சேட்சென்னி நலங்கிள்ளி சோழ நாட்டில் தங்கி அரசாண்டவன். அவனது தலைநகர் உறந்தை (புறம் 68 : 18).

## தந்தை முதலானோர்

இவனது பெயர் 'சேட்சென்னி நலங்கிள்ளி' என்று பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது (புறம் 225 : 9). இஃது இவன் சேட்சென்னியின் மகன் என்பதைக் காட்டுகிறது.

மாவளத்தான் என்னும் பெயர் கொண்ட ஒருவன் நலங்கிள்ளியின் தம்பி என்று குறிப்பிடப்படுகிறான். இவர்கள் இருவருடைய தந்தையின் பெயர் 'நலங்கிள்ளி சேட்சென்னி' என்று குறிப்பிடப்படுகிறது. எனவே, மாவளத்தானின் அண்ணன் நலங்கிள்ளி, சேட்சென்னிக்கு மூத்த மகனாய்ப் பிறந்து பாட்டன் பெயர் சூட்டப்பட்டான் எனக் கொள்வது பொருந்தும்.

## உறையூர் முற்றுகை

உறையூரில் நெடுங்கிள்ளி என்னும் அரசன் தங்கி அரசாண்டு வந்தான். நலங்கிள்ளி சோழநாடு முழுவதையும் தானே ஆள வேண்டுமென்று கருதினான். எனவே, நெடுங்கிள்ளியோடு போர் தொடுக்க வேண்டி உறையூரை முற்றுகையிட்டான்.

நெடுங்கிள்ளி, கோட்டைக் கதவுகளை அடைத்துக்கொண்டான்; நலங்கிள்ளியை எதிர்த்துப் போரிடவில்லை. இந்நிலையில் இளந்தத்தன் என்னும் புலவர் கோட்டைக்கு வெளியிலிருந்து உள்ளே சென்றார். அந்தப் புலவரை நெடுங்கிள்ளி தன் பகைவனான நலங்கிள்ளியின் ஒற்றன் என எண்ணிக் கொல்லப்புகுந்தான். உண்மையில் இளந்தத்தன் நலங்கிள்ளியின் ஒற்றன் அல்லன். நலங்கிள்ளி வேறு எந்த ஒற்றனையும் அனுப்பவில்லை. புலவர் கோவூர்க் கிழார் இந்த உண்மையை

நெடுங்கிள்ளியிடம் எடுத்துரைத்துப் புலவரைக் காப்பாற்றினார் (புறம் 47).

புலவர் கோவூர்க் கிழார் இந்த முற்றுகையின்போது அடைத்திருந்தவனையும் அடைக்கப்பட்டிருந்தவனையும் நேரில் கண்டு அறிவுரைகள் பல கூறினார். போரிடப்போகும் இருவரும் சோழர் குடியினராகையால் யாருக்குத் தோல்வி வந்தாலும் சோழர் குடிக்கே தோல்வி கிடைக்கும் என்றும், இந்தத் தோல்வி ஏனைய சேர, பாண்டிய அரசர்கள் ஏளனம் செய்ய ஏதுவாய் அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார். உண்மை உணர்ந்த சோழ அரசர்கள் போரைக் கைவிட்டனர். நெடுங்கிள்ளி இறுதியில் மாண்ட இடம் காரியாறு என்று குறிப்பிடப்படுவதால் மேலே குறிப்பிட்ட உறையூர்ப் போர் கைவிடப்பட்டது என்பதைத் தெளிவாக உணரலாம்.

## தம்பி வழியே போர்

நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தான் என்று அறிந்தோம். அவன்வழி இவன் போர் தொடுத்ததாகவும் தெரிகிறது. இந்தப் போர் ஆவூரில் நடைபெற்றது. மாவளத்தான் ஆவூர்க் கோட்டையை முற்றுகையிட்டான். நெடுங்கிள்ளி உள்ளே அடைந்திருந்தான். அங்குக் கோவூர்க் கிழார் அறிவுரை கூறினார். நெடுங்கிள்ளிக்கு மட்டும் கூறினார். அவன் மாவளத்தானுக்கு ஆவூர்க் கோட்டையை விட்டுக் கொடுத்து விட்டு வெளியேறினான்.

ஆவூர் முற்றுகை, உறையூர் ஆகியவற்றுள் எது முன்னர் நடைபெற்றது என்பதை அறியத்தக்க தெளிவான சான்று இல்லை. நெடுங்கிள்ளி காரியாற்றில் துஞ்சும்வரை உயிருடன் இருந்தான் என்று தெளிவாகத் தெரிகிறது. அக்காலம்வரை அவன் அரசனாய் விளங்கினான் என்றால் ஆவூர் முற்றுகை முதலில் நடைபெற்றது என்றும், அதில் நெடுங்கிள்ளி விட்டுக் கொடுத்தான் என்றும், உறையூர் முற்றுகை பின்னர் நடைபெற்றது என்றும் கொள்ள வேண்டும். முற்றுகையின் காலத்தை மாற்றிக் கொள்வோமானால் ஆவூரை விட்டுக் கொடுத்துவிட்டபின் நெடுங்கிள்ளி தான் காரியாற்றில் இறக்கும் வரை அரச பதவியை இழந்து வாழ்ந்தான் என்று கொள்ள வேண்டும்.

உறையூர்ப் போரைத் தவிர, இவன் ஈடுபட்ட போர் என்று குறிப்பிட்டுக் கூறத்தக்கது ஒன்றும் இல்லை. பொதுவாக இவனது போர் ஆற்றல்கள் புலவர்களால் புகழ்ந்து கூறப்படுகின்றன.

வங்காளக் குடாக் கடலைப் பின் பக்கமாவும் அரபிக் கடலை முன்பக்கமாகவும் கொண்டு வெற்றி வலம் வரும்போது இவனது குதிரைகள் தம் நாட்டுக்கும் வருமே என்று அஞ்சி வடநாட்டு அரசர்கள் இரவெல்லாம் தூங்காமல் இருப்பார்களாம் (புறம் 31 : 3-17).

தன் சுற்றத்தாரின் சோறு சமைக்கும் பானை நிறைவதற்காக இந்த நலங்கிள்ளி, வஞ்சி நகரையே பரிசாகத் தருவான்; விறலியருக்கு விலையாக மாடமதுரை நகரையே தருவான்; வாருங்கள் பாடுவோம் என்று புலவர் ஒருவர் இவனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார் (புறம் 32 : 1-6).

தென்னம் பொருப்பன் நன்னாட்டில் (பொதியமலைப் பகுதியில்) ஏழெயில் கதவம்கொண்ட கோட்டை ஒன்று இருந்தது. அதனை வென்று தன் புலிச்சின்னத்தைப் பொறிக்கும் ஆற்றல் உடையவன் இவன் (புறம் 33 : 7-9).

இவனது படை மிகப் பெரியதாகும் பிற அரசர்களின் வாயில்களில் யாராவது காலையில் வலம்புரிச் சங்கை ஊதினாலும் அதனை இவன் போர் தொடுக்கும் ஒலி என்று நினைத்துக் கொள்வானே என்றும், இதனால் போர் மூளுமே என்றும் ஒரு புலவர் வருந்திப் பாடியுள்ளார் (புறம் 225).

உலகமெல்லாம் நலங்கிள்ளிக்கு உரியது என்று மாற்றான் அவையில் தாம் பாடப்போவதாகவும் அதற்குக் கொடை வழங்க வேண்டும் என்றும் புலவர் ஒருவர் இவனைப் பாடுகிறார் (புறம் 68).

இவை எல்லாம், இவன் போர் ஆற்றலில் வல்லவன் என்பதைக் காட்டுகின்றன என்ற அளவில்தான் கொள்ள முடியும்.

## கொடை

இவனது கொடையில் சிறப்பித்துக் கூறத்தக்கவை சில உண்டு. பாசறையிலும் பாணர்களுக்கு நல்லுணவு அளித்தமை, இவனிடம் பரிசில் பெற்றவர் பிறரிடம் சென்று பின்னும் பரிசில் பெறவேண்டிய நிலை நேராவண்ணம் இவனே மிகுதியாக வழங்கியமை (புறம் 382 : 3-11) ஆகியவை குறிப்பிடத் தக்கவை. இவன் பொருநர்களுக்குப் பெருந்தலைவனாய் விளங்கினான். இவனது நாட்டு மக்களும் கொடை உள்ளம் (புறம் 2 : 9-20) நிரம்பியவர்களாக இருந்தனர்.

## பண்பு நலம்

மகளிரை வணங்குவதில் இவன் அவர்களைக் காட்டிலும் மென்மையானவன். ஆடவர்களைத் தன் கட்டுக்குள் அடக்கிக்கொண்டு வருவதில் இவன் மிக வன்மையுடையவன் (புறம் 68 : 6-7).

பகைவர் பணிவோடு வந்து தன்னிடம் இருந்தால் தன் அரசு முழுவதையும் அவர்களுக்குக் கொடுப்பதோடு தன் உயிரையும் கொடுப்பதற்கு அணியமாய் இருப்பதாக அவனே குறிப்பிடுகிறான். இதனால் இவனது கொடை உள்ளம் நன்கு வெளிப்படுகிறது.

*'பகைவரை வென்று அடக்காவிட்டால் தனது மார்பிலுள்ள மலர்மாலைகள் காதலின்றிக் காசுக்காகக் கட்டித் தழுவும் பெண்களிடம் குழைந்துபோகட்டும்!'* என்று இவன் வஞ்சினம் கூறியுள்ளான் *(புறம் 73 : 11-14)*. இதனால், தன் மனைவியைத் தவிரப் பிற மகளிரைத் தழுவாத நல்லொழுக்க நெறியினன் இவன் என்பது பெறப்படும்.

## வாணிகம்

இவன் காலத்தில் வாணிகக் கப்பல்கள் தமது கூம்புகளை உயர்த்திப் பாய்களை விரித்தபடியே புகார் நகரத்திற்குள் நுழைந்தன. கடல் வழியே சென்றபோது இடையிலிருந்த தீவுகளிலும் அவை பொருள்களை இறக்கி வாணிகம் செய்தன *(புறம் 30 : 10-14)*.

புகார் நகரமே அன்றி நல்லூர் என்னும் ஊரும் அவனது நாட்டிலிருந்த துறைமுகம் ஆகும். இது பாண்டிய நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் இடையே இருந்தது. (ஒரு காலத்தில் எவ்வி இதன் அரசன்). இந்த நல்லூரில் பாய்ந்த ஆற்றினூடேயும் பெரிய கப்பல்கள் (வங்கம்) நுழைந்து வந்தன. அந்தக் கப்பல்கள் அவ்வூரில் நாட்டப்பட்டிருந்த வேள்வித் தூண்களில் கட்டிவைத்து நிறுத்தப்பட்டன *(புறம் 31)*.

இவ்வாறு இவனது ஆட்சிக் காலத்தில் இரண்டு துறைமுகங்கள் வழியே கடல் வாணிகம் சிறப்புடன் நடைபெற்றது.

## வேந்தர் வழிப்படல்

அறத்தின் வழியே பொருளும் இன்பமும் செல்லும்; அது போல இவனது குடைநிழலின் வழியே ஏனைய இரு வேந்தர்களது குடைகள் சென்றனவாம் *(புறம் 31 : 1-3)*. இந்தச் செய்தி இவனது வெற்றியை உணர்த்துவது அன்று; சேர பாண்டியர்களோடு இவனுக்கு இருந்த நட்புறவை விளக்குவது என்று கொள்ளலாம்.

*'அணி இவுளி நலங்கிள்ளி', 'கடுமான் தோன்றல்'* என்பன இவனது போர்க் கோலத்தை நினைவூட்டுவன.

### புலிச் சின்னம்

சோழர்களின் அடையாளச் சின்னம் புலி. இது *'பேழ்வாய் உழுவை'* என்று கூறப்படுவதால் திறந்த வாயமைப்பு உடையதாகப் பொறிக்கப்பட்டிருந்தது என்பது தெரியவருகிறது.

# நலங்கிள்ளியின் சமகாலத்தியச் சோழ மன்னர் மாவளத்தான் (நலங்கிள்ளியின் தம்பி)

நலங்கிள்ளியின் உடன் பிறந்த இளவல் மாவளத்தான். உடன்பிறாவாப் பங்காளி நெடுங்கிள்ளி. இவர்கள் நலங்கிள்ளியின் காலத்திலேயே வாழ்ந்தவராவர். புறநானூற்றுக் கொளு மாவளத்தானைச் சோழ அரசன் நலங்கிள்ளியின் தம்பி என்று குறிப்பிடுகிறது (புறம் 43). இஃது இவனது உறவுமுறையைத் தெளிவாக அறிய உதவி செய்கிறது. நலங்கிள்ளி இளஞ்சேட் சென்னியின் மகன் என்பதை அவனது வரலாற்றில் கண்டோம். எனவே, இவனும் இளஞ்சேட் சென்னியின் மகன் என்பதை அவனது வரலாற்றால் அறிகிறோம். எனவே, இவனும் இளஞ்சேட் சென்னியின் மகன் ஆவான்.

## ஆவூர் முற்றுகை

ஆவூர்க் கோட்டையில் இருந்துகொண்டு நெடுங்கிள்ளி அதனைச் சூழ்ந்திருந்த நாட்டை ஆண்டு வந்தான். அப்போது அவனது செல்வாக்கை ஒடுக்கச் சோழர் குடியைச் சேர்ந்த மற்றொரு கிளையினர் கருதினர். நலங்கிள்ளியும் அவன் தம்பி மாவளத்தானும் இந்த முயற்சியில் ஈடுபட்டனர்.

நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தான் ஆவூர்க் கோட்டையை முற்றுகை யிட்டான். கோட்டைக்குள்ளே இருந்த நெடுங்கிள்ளி மாவளத்தானை எதிர்த்துப் போரிடவில்லை. கோட்டைக் கதவுகளை அடைத்துக்கொண்டு உள்ளேயே இருந்தான். கோட்டைக் கதவுகளைத் தகர்க்க மாவளத்தானால் முடியாது என்று அவன் கருதியிருக்கலாம். அல்லது மாவளத்தானை எதிர்த்துப் போரிட்டால் தான் வெற்றிபெற முடியாது என்று நெடுங்கிள்ளி கருதியிருக்கலாம். முற்றுகையின் காலம் நீடித்தது. கோட்டைக்குள்ளேயே இருந்த மக்களும் விலங்கினங்களும் வெளியே வர முடியவில்லை. வெளியில் இருந்தவர் கோட்டைக்குள் வாழ்ந்தவர்களுக்கு வழக்கம் போல் உதவி செய்ய முடியவில்லை. எனவே, கோட்டைக்குள் இருந்த மகளிர் தலையில் பூ இல்லாமல் வெறுமனே தலையை வாரி முடித்துக் கொண்டனர். தாய்மார்களுக்கு நல்ல உணவு இல்லாமையால் குழந்தைகள் தாய்ப்பால் இல்லாமல் அழுதனர். யானைகள் உணவுக் கவளம் இல்லாமல் கட்டுத்தறிகளைத் தாக்கின; குளங்களில் படிய வாய்ப்பின்றி நிலங்களில் புரண்டன (புறம் 44 1-7). இந்த நிலைக்கெல்லாம் காரணம் நெடுங்கிள்ளி எதிர்த்துப்

போரிடாமல் அடைத்துக் கொண்டு கிடக்கும் நிலைதான் என்று கோவூர்க் கிழார் நெடுங்கிள்ளியிடம் எடுத்துரைத்தார். புலவரின் அறிவுரைகள் நெடுங்கிள்ளியைத் திருத்தின. அவன் கோட்டைக் கதவுகளைத் திறந்துவிட்டுப் போரிடாமலேயே சென்றுவிட்டான். இதனால் ஆவூர்க் கோட்டை மாவளத்தானுக்குக் கிடைத்தது.

## வட்டும் மாண்பும்

இந்த மாவளத்தானும் பார்ப்பனப் புலவர் தாமப்பல் கண்ணனாரும் வட்டு என்னும் சூது விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது புலவர் அரசனை ஏமாற்ற எண்ணி வஞ்சனையாக வட்டுக்காயைத் தம் கையால் மாற்றியமைத்துத் திருட்டுத்தனம் செய்தார். புலவர், அரசனுக்குத் தெரியாமல், இதனைச் செய்ய முயன்றார். என்றாலும் அரசன் பார்த்துவிட்டான். அரசனுக்குச் சினம் மேலிட்டது. வட்டுக்காயை எடுத்து அவர் மீது ஓங்கி எறிந்தான். புலவருக்கு நல்ல அடி.

தவறு செய்தது அரசனிடம். அரசன் மேலும் வேறு வகையிலும் அவரைத் தண்டிக்கலாம். தண்டிக்க அவனுக்கு உரிமை உண்டு. அந்தத் தண்டனையிலிருந்தாவது இனித் தப்ப வேண்டுமே என்று புலவர் உணர்ந்தார். தந்திரமாகத் தம் குடிப்பிறப்பைப் பார்ப்பனர் என்று கூறித் தப்பித்துக்கொண்டார் (புறம் 43 : 13-15).

## குடிச் சிறப்பு

மாவளத்தான் கொடை வள்ளல் குடியில் வந்தவன்; புறாவுக்காகத் தன் உடலையே நிறுத்துத் தந்த சிபியின் வழிவந்தவன்; பிறரால் பிற உயிருக்கு உண்டான துன்பத்தையே கண்டு உள்ளம் தாங்காத சிபியின் வழிவந்தவன் (புறம் 43 : 4-8). இதனைப் புலவர் முதலில் நினைவூட்டினார். இதனால், தானே பிறர் ஒருவருக்குத் துன்பம் செய்யக்கூடாது என்னும் கருத்தைக் குறிப்பால் உணர்த்தினார். மேலும், தம்மீது அவனுக்குக் கருணை தோன்ற அவனது முன்னோர்கள் யாரும் பார்ப்பார்க்குத் துன்பம் செய்யவில்லை என்றும் குறிப்பிட்டார். இவன் பார்ப்பனனாகிய தம்மை அடித்துத் துன்புறுத்தினான் என்று குற்றம் சுமத்தினார். குற்றம் செய்தது புலவர்; குற்றம் சுமத்தப்பட்டது அரசன் மேல். எனினும், அரசன் நாணினான். தான் பிறரைத் துன்புறுத்தியது – அதிலும் பார்ப்பாரைத் துன்புறுத்தியது – தன் தவறு என்று எண்ணிக் கொண்டு நாணினான்.

## தோற்றப் பொலிவு

'கடுமான் கைவண் தோன்றல்' (புறம் 43 : 11-12) என்று இவன் குறிப்பிடப்படுகிறான். இது இவனது போர்க்கோலத்தைக் காட்டுகிறது.

# நெடுங்கிள்ளி
# (காரியாற்றுத் துஞ்சியவன்)

நலங்கிள்ளியும் மாவளத்தானும் அண்ணன் தம்பியர். இவர்கள் காலத்தில் இருந்த மற்றொரு சோழ அரசன் நெடுங்கிள்ளி. இவன் நலங்கிள்ளியின் பங்காளியாக இருந்திருக்க வேண்டும் என்பது புறநானூற்றுப் பாடல்களால் புலனாகின்றது.

## ஆவூர் முற்றுகை

ஆவூரில் நெடுங்கிள்ளி தங்கியிருந்தான். நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தான் ஆவூரைத் தாக்கினான். நெடுங்கிள்ளி கோட்டைக் கதவுகளை அடைத்துக் கொண்டு உள்ளேயே தங்கி விட்டான். மாவளத்தான் விட்டபாடில்லை. ஆவூர்க் கோட்டையையே வளைத்து முற்றுகையிட்டான். முற்றுகை நீடித்தது (புறம் 44).

கோவூர்கிழாரின் அறிவுரையினை ஏற்றுக் கோட்டைக் கதவுகளைத் திறந்து விட்டுவிட்டான். இவன் உறையூர்க் கோட்டைக்குள் அடைந்து கிடப்பதை மீண்டும் நாம் காண்பதால், இவன் ஆவூர்க் கோட்டையை மாவளத்தானிடம் இழந்துவிட்டான் எனத் தோன்றுகிறது.

## உறையூர் முற்றுகை

ஆவூரில் நிகழ்ந்தது போலவே, உறையூரிலும் முற்றுகை நிகழ்ந்தது. நெடுங்கிள்ளி கோட்டைக் கதவுகளை அடைத்துக்கொண்டு உள்ளே இருந்தான். இங்கு முற்றுகையிட்டிருந்தவன் நலங்கிள்ளி.

முற்றுகையின்போது புலவர்களுக்கு மட்டும் தடை இல்லை. அவர்கள் உள்ளேயும் வெளியேயும் கட்டுப்பாடு இல்லாமல் சென்று வரலாம். ஆவூர் முற்றுகையின்போது கோவூர்க்கிழார் அவ்வாறு தடையின்றி உள்ளே சென்றதை அறிவோம். உறையூர் முற்றுகையின் போதும் அவர் வெளியிலிருந்து உள்ளேயும் உள்ளேயிருந்து வெளியேயும் வந்து முறையே அடைக்கப்பட்டிருந்தவனுக்கும் அடைத்தவனுக்கும் அறிவுரை கூறுவதை அடுத்துக் காண்போம். இந்த வகையில் இளந்தத்தன் என்னும் புலவர் உறையூருக்குச் சென்றார். உள்ளே இருந்த அரசன் இந்தப் புலவரை நலங்கிள்ளியின் ஒற்றன் என்று கருதிக் கொல்ல நினைத்தான். புலவர்க்கு நேர்ந்த நிலையைக் கோவூர்க்கிழார் கண்டார்.

இளந்தத்தன் புலவர் என்றும், புலவர்கள் பரிசில் பெற்று உண்டும் வழங்கியும் வாழும் வாழ்க்கையினர் என்றும், பிறருக்குத் தீங்கு செய்து அறியாத அவரது பண்புகளால் அரசன்போல் செம்மாந்து செல்லும்

இயல்பினர் என்றும் எடுத்துரைத்தார் (புறம் 47). நெடுங்கிள்ளி, கோவூர்க்கிழாரின் அறிவுரையை ஏற்றுக்கொண்டு இளந்தத்தனைக் கொல்லாது விட்டுவிட்டான்.

உறையூர் முற்றுகை நீடித்தது. கோவூர்க்கிழார் அடைத்தவனையும் அடைக்கப்பட்டிருந்தவனையும் கண்டு பாடினார். இருவரும் சோழர் குடியினர். இருவரும் வெற்றி பெறுவது முடியாத செயல். எனவே, யார் தோற்றாலும் தோற்பது சோழர் குடியே. இந்தத் தோல்வி ஏனைய சேர, பாண்டியர், சோழரை ஏளனம் செய்ய ஏதுவாகும். இவ்வாறு இரண்டு சோழ அரசர்களிடமும் எடுத்துப் புலவர் கூறினார்.

இந்த அறிவுரையின் விளைவு என்ன என்பது தெரியவில்லை. முற்றுகை கைவிடப்பட்டிருக்கலாம். அல்லது நெடுங்கிள்ளி உறையூரை நலங்கிள்ளிக்கு விட்டுக் கொடுத்திருக்கலாம்.

## இறுதி நிலை

இவனது பெயரைக் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி (புறம் 47) என்று புறநானூற்றுக் கொளுக் குறிப்பிடுகிறது. இதனால் இவன் காரியாறு என்னுமிடத்தில் இறந்தான் என்பதை அறியலாம். இந்தச் சிறப்பு, போரின் விளைவு ஆயின், மீண்டும் நலங்கிள்ளியோடு இகலி நடத்திய போரோ என்று எண்ணத் தூண்டும்.

## கிள்ளிவளவன் 1 - 2

கிள்ளி அரசர்களது வரலாற்றைக் காண்கையில் வளத்தான் என்னும் பெயருடன் கிள்ளி அரசர்களின் தம்பியராய் விளங்கியவர்களின் வரலாற்றையும் கண்டோம். இப்போது வளவன் என்னும் பெயர்கொண்ட அரசர்களின் வரலாற்றைக் காண்போம்.

வளவன் என்னும் பெயர்கொண்ட அரசர்களின் வரலாறெல்லாம் புறநானூற்றுப் பாடல்களிலிருந்தே கிடைக்கின்றன. அகத்திணை நூல்களில் அவர்களைப் பற்றிய குறிப்பு இல்லை. காரணம், இவர்கள் காலத்திற்கு முன்பே பாண்டியன் உக்கிரப் பெருவழுதி வரலாற்றில் சுட்டியதைப்போல், புறநானூறு தொகுக்கப்பட்டுவிட்டதே ஆகும்.

வளவன் என்று குறிப்பிடப்படும் அரசர்கள் இருவர். இருவரும் கிள்ளிவளவன் என்றே குறிப்பிடப்படுகின்றனர். எனவே, இவர்களது தந்தை கிள்ளி என்பது பெறப்படும். இவர்களில் ஒரு கிள்ளிவளவன் குளமுற்றம் என்னுமிடத்தில் இறந்தான். மற்றொருவன் குராப்பள்ளி என்னுமிடத்தில் இறந்தான். எனவே, இரு வேறு அரசர்கள் இவர்கள் என்பது பெறப்படும். இரு வேறு அரசர்கள் ஒரே பெயர் கொண்டு விளங்கியுள்ளனர். எனவே, ஒரு தந்தையின் மக்கள் என்று கொள்ள

இயலவில்லை. இதனால், இவர்களில் ஒருவனை நலங்கிள்ளியின் மகன் என்றும் மற்றொருவனை நெடுங்கிள்ளியின் மகன் என்றும் நாம் கருதலாம். செல்வாக்கு மிகுதி நோக்கி நலங்கிள்ளியின் மகன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்று உய்த்துணரலாம்.[22]

இனி இவர்களது வரலாற்றைத் தனித்தனியே நோக்கலாம்.

# கிள்ளிவளவன் - 1
# (குளமுற்றத்துத் துஞ்சியவன்)

## தந்தை

கிள்ளிவளவன் என்னும் பெயர் கிள்ளியின் மகன் வளவன் என்னும் பொருளைத் தருகிறது. செல்வாக்குடன் அரசாண்ட கிள்ளி, நலங்கிள்ளி ஆவான். இவனது மகன் என்று இவனைக் கொள்ளலாம்.

இந்தக் கொள்கை சரியானது என்பதைக் கீழ்க்காணும் சான்றுகள் உறுதிப் படுத்துகின்றன. நலங்கிள்ளியையும் கிள்ளிவளவனையும் இரண்டு புலவர்கள் கண்டு பாடியுள்ளனர். அவர்களில் ஆலத்தூர்க் கிழார் தம் பாடலில் இவர்களது பெயர்களைத் தந்தை பெயருடன் கூறுவதன் வாயிலாக உறவு முறையை நமக்குத் தெளிவுபடுத்துகிறார். இவர் நலங்கிள்ளியைச் 'சேட்சென்னி நலங்கிள்ளி' (புறம் 225 : 9) என்று குறிப்பிடுகிறார். வளவனைப் 'பசும்பூண் கிள்ளிவளவன்' (புறம் 69 : 15-16) என்று குறிப்பிடுகிறார். இந்தக் குறிப்புகள் தெளிவான உறவுமுறை ஒன்றை நமக்குக் காட்டுகின்றன.

சேட்சென்னி
|
நலங்கிள்ளி
(பசும்பூண்கிள்ளி)
|
வளவன்
(குளமுற்றத்தில் துஞ்சியன்)

இந்த உறவுமுறை பொருத்தமானது என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் கோவூர்க்கிழார் பாடல்களும் அமைந்துள்ளன.

மேலே கண்டவாறு ஒரே புலவர் இரண்டு அரசர்களையும் கண்டு பாடியதிலிருந்து அந்த அரசர்கள் சமகாலத்தவர் அல்லது அடுத்தடுத்த காலத்தவர் என்னும் உண்மையை மட்டும்தான் நாம் பெறமுடியும்.

அண்ணன் தம்பி உறவா, தந்தை மகன் உறவா என்பதை அவர்களது பாடல்களிலிருந்து உணர முடியவில்லை என்றாலும் அவர்களது பெயர்கள் தந்தை மகன் உறவு முறையையும் அண்ணன் தம்பி உறவுமுறையையும் காட்டுவனவாய் உள்ளன.

## நாடு

இவன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தான் (புறம் 39 : 8-9; உறையூரில் அவனது அரண்மனை இருந்தது). அது ஒளிரும் நிலைமாடங்களைக் கொண்டது (புறம் 69 : 12).

மழையில்லாத காலங்களிலும் காவிரி நீரூட்டும் வளம் நிறைந்த நாடு அவன் நாடு (புறம் 35 : 6-11). ஒரு பெண் யானை படுக்கக்கூடிய பரப்பளவில் ஏழு ஆண் யானைகளைக் காப்பாற்றும் அளவுக்கு நல்ல விளைவினைத் தரக்கூடிய வளம் நிறைந்த நாடு அது (புறம் 40 : 10-11). இவனது நாட்டில் ஆறு தொழில்களைப் புரியும் அந்தனர் அறம் செய்தற் பொருட்டுத் தீ வளர்த்தார்கள் (புறம் 397 : 20-21).

இத்தகைய வளமும் நலமும் மிக்க நாட்டை இவன் ஆண்டு வந்தான்.

## கருவூர் முற்றுகை

தண் ஆன்பொருநை என்னும் ஆறு பாயும் ஊர் கருவூர். இந்த ஆற்று மணலில் மகளிர் கழங்கு விளையாடுவர். இந்தக் கிள்ளிவளவன் அந்தக் கருவூரை முற்றுகையிட்டான் (புறம் 36). ஆற்றங்கரையிலிருந்த காவல்மரங்களை வெட்டி வீழ்த்தினான். காவல் மரங்களை வெட்டும் ஒலி கருவூர் நகருக்குள்ளேயும் எதிரொலித்தது. கருவூர் அரசன் சேரன் கருவூரின் கோட்டைக் கதவுகளை அடைத்துக்கொண்டு உள்ளேயே இருந்தான்; வெளியில் வந்து காவல்மரத்தை வெட்டுபவனை எதிர்த்துப் போர் செய்யவில்லை. இது சேரனின் கோழைத்தனம். இத்தகைய கோழையோடு வீரனான கிள்ளிவளவன் போரிட நினைப்பது நாணத்தக்க செயல். இதனை வளவனுக்கு எடுத்துக் கூறினார் ஆலத்தூர்க்கிழார் (புறம் 36 : 11-13) என்னும் புலவர். (இது போன்ற செயலை இவனின் தந்தை வரலாற்றிலும் காணலாம்.)

புலவர் அறிவுரையைக் கேட்ட வளவன் முற்றுகையைக் கைவிட்டிருக்கலாம்.

செம்பு உருக்கி வார்த்த ஒரு கோட்டைக்குள்ளே வேந்தன் ஒருவன் இருந்தான். அந்தக் கோட்டை முதலை வாழும் அகழிகளையும் இலஞ்சி களையும் கொண்டது. இது மிகவும் அழகான கோட்டை. கிள்ளிவளவன் அந்தக் கோட்டையின் அழகை எண்ணியாவது அழிக்காமல்

விட்டிருக்கலாம். ஆனால், அவன் விடவில்லை. கோட்டையைச் சிதைத்தான் (புறம் 37 : 7-13).

இந்தக் கோட்டை எந்த ஊரில் இருந்தது, கோட்டைக்குள்ளே இருந்த வேந்தன் யார் என்பன தெரியவில்லை. இந்தக் கோட்டை முன் கூறிய கருவூர்க் கோட்டையாயின் முன்பு ஆலத்தூர்கிழார் கூறிய அறிவுரையை இந்த வளவன் பொருட்படுத்தாமல் கோட்டையைச் சிதைத்தான் என்று முடியும். இவன் வஞ்சி நகரை வாட்டிய போர் ஒன்றும் உண்டு. இந்தப் போரை இஃது உயர்த்துவதாயும் இருக்கலாம். பாழி நகரம், துவரை நகரம் ஆகியவை செம்புக் கோட்டையைக் கொண்டவை. ஒரு வேளை இவன் அழித்தானா என்பதும் தெரியவில்லை.

நாம் பொருத்தமான வகையில் இதனை எண்ணிப் பார்க்கலாம். கருவூர் முற்றுகையை ஆலத்தூர்க்கிழார் அறிவுரைப்படி இவன் கைவிட்டான். கருவூர்க் கோட்டைக்குள்ளே இருந்த அரசன் அந்தக் கோட்டையை விட்டுவிட்டுச் சென்று பாழி நகரக் கோட்டைக்குள் தங்கினான். நார் முடிச்சேரல் நன்னனைக் கொன்றுவிட்டதனால், அந்த நகரம் சேரர் ஆட்சிக்கு உட்பட்டுக் கிடந்தது. எனவே, அந்தக் கோட்டையில் இந்தச் சேரன் தங்கியிருந்துகொண்டு சோழனைத் தாக்க வலிமை மிக்க படையைத் திரட்டிக் கொண்டிருந்தான். நிலைமை உணர்ந்த இந்த வளவன் பாழி நகரக் கோட்டையைத் தாக்கி அழித்தான்.

இவ்வாறு கோழைத்தனமாகவும் சூரத்தனம் போலவும் இவனிடம் நடந்துகொண்ட சேரன் யார் என்பது விளங்கவில்லை.

## வஞ்சி நகரை வாட்டல்

சேரஅரசன் வானவனுக்கும் இவனுக்கும் போர் மூண்டது. போர் வஞ்சி நகரில் நடைபெற்றது. இப்போது தாராபுரம் என வழங்கும் ஊர்க்கு அக்காலத்தில் சேர நாட்டு வஞ்சி நகரின் நினைவாக வஞ்சிமுற்றம் என்னும் பெயர் சூட்டப்பட்டிருந்தது. இந்த வஞ்சி நகரில் நடந்த போரில் வானவன் கொல்லப்பட்டான் (புறம் 39 : 16). வஞ்சிமுற்ற மக்கள் வாடினர்.

கிள்ளிவளவனால் இப்போரில் கொல்லப்பட்ட வானவன் இமயத்தில் வில்லைப் பொறித்தான் என்று கூறப்படுகிறது. இவன் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் அரசன் என்று எண்ண வேண்டியுள்ளது.

சேரர்க்கும் சோழர்க்கும் நடந்த போர்களில் குறுநில மன்னர்கள் சோழனுக்குத் துணையாக நின்றதைக் காண்கிறோம். ஓரி, அதியமான், மலையன் ஆகியோர் அவ்வாறு சோழர் பக்கம் இருந்தவர்கள். பெருஞ்சேரல் இரும்பொறையும் அவனது தம்பி மாந்தரஞ்சேரல்

இரும்பொறையும் சோழர்க்கு எதிர்ப்பாய்க் கொங்கு நாட்டில் தங்களது ஆட்சியை விரிவுபடுத்திக் கொண்டிருந்தார்கள். பணம் கொடுத்த பக்கம் சேர்ந்துகொள்ளும் மலையமான் மரபினர் சோழர் பக்கம் ஒரு சமயம் சேர்ந்துகொண்டு மாந்தரஞ்சேரலுக்குத் தோல்வியை உண்டாக்கியது போலவே, மற்றொரு சமயம் சேரர் பக்கம் சேர்ந்து கொண்டு கொல்லிமலைத் தலைவன் ஓரியைக் கொன்று அவனது நாட்டைச் சேர அரசர்க்குக் கொடுத்தனர்.

இந்தப் போர்களில் எல்லாம் நாம் குறிப்பிடத்தக்க உண்மை ஒன்று உண்டு. சேரர்கள் குறுநில மன்னர்களை எதிர்த்துத் தாக்கிய போர்களில் வெற்றியையே கண்டனர். கொல்லிப் போரில் சோழ அரசன் அதியமானுக்கு உதவியதுபோல் முடிவேந்தர் உதவி இருந்தபோதும் சேரர்க்கே வெற்றி கிடைத்தது. ஆனால், சோழர்கள் தாமே எதிர்த்துத் தாக்கிய போர்களில் எல்லாம் இந்தச் சேர அரசர்கள் தோல்வியையே கண்டனர். இந்த முடிவுகளே நாம் குறிப்பிடத்தக்கவை.

## சேர, பாண்டியரை வெல்லக் கருதல்

புலவர்கள் எல்லாரும் இவனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற விரும்பி நாடி வந்தனர். அவர்களுக்கெல்லாம் கொடை வழங்கிய அதே நேரத்தில் இவனது நாட்டமெல்லாம் சேர நாட்டையும் பாண்டிய நாட்டையும் வெல்வதிலேயே இருந்தது (புறம். 42 : 22-24).

பகைவர்களின் கோட்டைகள் பலவற்றைக் கடந்து வெற்றிபெற்றான் என்றும் (புறம் 40 : 1-2), அவர்களது முடிப்பொன்னைக் கொண்டு வீரக்கழல் செய்து அணிந்துகொண்டான் என்றும் (புறம் 40 : 3-5), இவன் படையெடுத்து வந்து தம் நாட்டை அழிப்பான் என்று எண்ணிய பகைவர்கள் தீக்கனாக் கண்டு நடுங்கினர் என்றும் (புறம் 41 : 4-11) கூறப்படும் செய்திகள் இவனது போர் நிகழ்ச்சிகளை நினைவூட்டுகின்றன. ஞாயிற்றிடம் நிலவொளியையும் திங்களிடம் வெயிலையும் விரும்பினால் முயன்று பெறக் கூடியவன் என்று கூறப்படுவது (புறம் 38 : 7-9) இவனது ஆற்றலைப் புலப்படுத்துகின்றது.

புறநானூற்றுக் கொளு இந்தக் கிள்ளிவளவன், மலையமான் மக்களை யானையின் காலடியில் இட்டுக் கொல்ல முயன்றதாகக் குறிப்பிடுகிறது (புறம் 46). பாடலில் குழந்தைகள் இன்னார் என்ற குறிப்பு இல்லை. குழந்தைகள் கள்ளமற்ற தன்மையை எடுத்துக்காட்டிக் கோவூர்க்கிழார் என்னும் புலவர் சோழனது செயலைத் தடுத்து நிறுத்தினார். குழந்தைகள் கொல்லப்படாமல் காப்பாற்றப்பட்டனர்.

காரி, சோழர் பக்கம் சேர்ந்துகொண்டு, சேரனை வெல்ல ஒரு சமயம் உதவினான் என்றாலும், பின்பு ஒரு முறை சேரர் பக்கம் சேர்ந்துகொண்டு

ஓரியைக் கொன்று கொல்லிமலைப் பகுதியைச் சேர்க்கச் சேரனுக்கு உதவினான் என்பதை அவன் வரலாற்றில் நாம் அறியலாம். இவ்வாறு காரி நிலையின்றிச் சோழர் பக்கமும் சேரர் பக்கமும் மாறியதால் சோழ அரசன் அவன் மீது சினம் கொண்டான். காரியின் குழந்தைகள் அவனுக்குக் கிடைத்தபோது இந்தக் குழந்தைகளும் பெரியவர்கள் ஆனபின் தந்தையைப்போல் சேரர்க்குத் துணையாய் அமைவார்களோ என்று எண்ணியிருப்பான். இந்த எண்ணம் முள்மரத்தை முளைக்கும்போதே கிள்ளி எறிந்துவிடுவது போன்றது என்று அவனது அரச நீதி அவனுக்குக் கூறியிருக்கும் (குறள் 879). அதனால், கொல்லத் துணிந்திருப்பான்.

புலவர், குழந்தைகளின் கள்ளமற்ற தன்மையை விளக்கினார். அவனது முன்னோன் புறாவுக்காகத் தன் உடலையே வழங்கிய கொடையை நினைவூட்டினார். சோழன் உள்ளம் மாறியது; குழந்தைகளும் பிழைத்தனர்.

## கையறவு

நப்பசலையார், மாசாத்தனார், முடவனார் என்னும் புலவர்கள் இவன் இறந்தது கண்டு இரங்கிப் பாடியுள்ளனர். கூற்றுவன் கொடியவன் என்றும் இவனது உயிரைக் கொண்டதால் இவனால் போரில் கூற்றுவனுக்குக் கிடைக்கும் இரை கிடைக்காதாகையால் கூற்றுவன் ஓர் அறிவிலி என்றும் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் (புறம் 226, 227, 228). இதனால் அவனது உடல் தாழியில் இட்டு நிலத்தில் அடக்கம் செய்யப்பட்டது எனலாம்.

## ஆட்சி

வெள்ளி தெற்குத் திசையில் தோன்றினாலும் கவலையில்லை. வெள்ளி எந்தத் திசையில் தோன்றினால் என்ன? தோன்றாமல் போனால்தான் என்ன? (புறம் 386 : 20-24) இந்த வளவன் இருக்கிறான் உதவுவதற்கு என்று புலவர்கள் மகிழ்ந்திருந்தனர்.

இவனது நாட்டு மக்கள் சோறு சமைக்கும் நெருப்பைத் தவிர வேறு சூடு (புறம் 70 : 8-9) அறியாராம் (இதனால் பகைவன் இவனது நாட்டை வென்று எரியூட்டியது இல்லை என்பது பொருள்). இவனது நாட்டார் போர்ப் பூசலைக் கனவிலும் அறியாதார்; குட்டிகளைக் குகையில் காக்கும் புலிபோல் இவன் நாட்டு மக்களைக் காத்து வந்தானாம் (புறம் 42 : 8-11).

வெள்ளைக்குடி நாகனார் என்னும் புலவர் இவனுக்குக் கூறும் அறிவுரைகள் இவனது ஆட்சி முறையைப்பற்றி நம்மை எண்ணச் செய்கின்றன. 'காட்சிக்கு எளியனாக இருக்கவேண்டும். வெண்கொற்றக்

குடை அரசனுக்கு வெயில்படாமல் மறைப்பதற்கு அன்று; மக்களுக்குத் துன்பம் நேராமல் நிழல் தந்து காப்பாற்றுவதற்காகவே!' என்று கூறுகிறார். 'நண்பர் அல்லாதார் பொதுப்படையாகக் கூறும் சொற்களை உண்மை என்று ஏற்றுக் கொள்ளக்கூடாது. உழவர்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்,' என்றெல்லாம் அவர் அறிவுரை கூறியுள்ளார். இவனிடம் ஓரளவேனும் இந்தக் குறைபாடுகள் இருந்ததனால்தான் இவ்வாறு இவர் அறிவுரை கூறவேண்டிய நிலை ஏற்பட்டது என்று கருதலாம்.

## கொடை

இவனது கொடைத்தன்மை புலவர்களைப் பொறுத்தவரை 'ஆனா ஈகை'யாக அமைந்திருந்தது (புறம் 42 : 1). எவ்வளவு கொடுத்தாலும் இன்னும் கொடுத்திருக்கலாமே என்றும், வந்தவருக்கெல்லாம் கொடுத்தாலும், இன்னும் பலர் வந்திருந்தால் கொடுத்திருக்கலாமே என்றும் கொடையாளி கருதுவதுதான் 'ஆனா ஈகை'.

இவன் எல்லாருக்கும் எல்லாப் பொருள்களையும் கொடுத்தான் என்றாலும், சிலருக்குச் சில பொருள்களைக் கொடுத்ததில் தனிச் சிறப்பு இருந்தது.

கலையில் வல்ல பாணர்க்கும் (புறம் 34 : 14-15, 69 : 1-4), எதிலும் வல்லமையின்றி ஏதோ ஆசையில் பரிசில் பெறலாம் என வந்த பரிசிலர்க்கும் இவன் பரிசில் வழங்கினான் (புறம் 38 : 14-17). சிறந்த உணவு (புறம் 34 : 8-14, 386 : 3-7, 393 : 14, 397 : 14), சிறந்த உடை (புறம் 393 : 17-18, 397 : 15), அணிகலன்கள் (புறம் 397 : 22) முதலான பொருள்களையும், பாணர்க்குப் பொன்னால் செய்யப்பட்ட தாமரையையும் (புறம் 69 : 20) இவன் வழங்கியதில்கூட அத்தனை வியப்பு இல்லை. தன் வாழ்நாளையும் சேர்த்துக் கொண்டு வாழ வேண்டும் என்று கொடைவள்ளல் ஒருவனை . இவனே வாழ்த்தியதில்தான் இவனது கொடைத் திறனின் உச்சநிலை அமைந்திருக்கிறது.

பண்ணன், அவனது நாட்டிலிருந்த குடிமகன். சிறுகுடியில் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) அவன் வாழ்ந்து வந்தான். அவன் வழங்கியதெல்லாம் என்ன? சோறு. அதில் என்ன சிறப்பு? வந்தவர்க்கெல்லாம் சோறு. அத்துடன் வாராதவர்களுக்கும் சோற்று மூட்டை கொடுத்தான். இந்தக் கொடைத் தன்மையைக் கண்டான்; வியந்தான். தன் கொடையைக் காட்டிலும் பயன் நோக்கில் விஞ்சி மேம்பட்டு நிற்பதை உணர்ந்தான். தனது வாழ்நாளும் சேர்ந்து

பண்ணனுக்கு அமைந்தால் மக்களுக்குப் பயனுடையதாக இருக்குமே என்று கருதினான்; வாழ்த்தினான்; பாடினான் (புறம் 173 : 1).

குடிமகன் அரசனைப் பாராட்டிப் பாடுவது இயல்பு. குடிமகன் மற்றொரு குடிமகனைப் பாராட்டிப் பாடுவதில் வியப்பு ஒன்றும் இல்லை. அரசன் ஒருவன் – பேரும் புகழும் ஒருங்கு பெற்ற அரசன் ஒருவன் – தன் நாட்டிலுள்ள குடிமகனை, எளிய குடிமகனைப் பாராட்டிப் பாடுகிறான் என்றால், தன் வாழ்நாளையே அவனுக்குக் கொடுக்க விழைகிறான் என்றால், அவனது கொடைத் தன்மையிலும் பெருந்தன்மையிலும் எத்துணைச் சான்றாண்மைப் பண்புகள் உள்ளன என்பதை நாம் உணரலாம்.

## பெயர் அடைமொழிகள்

*'பசும்பூண் கிள்ளிவளவன்'* (புறம் 69 : 15-16), *'பொன்னியல் பெரும் பூண்வளவன்'* (புறம் 227 : 8-9), *'பொலந்தார் வளவன்'* (புறம் 226 : 4-6), *'பலகோள் செய்தார் மார்ப'* (புறம் 397 : 8-9) என்பன அணிகலன்களோடு கூடிய அவனது தோற்றப் பொலிவினைக் காட்டுகின்றன.

*'வாய்வாள் வளவன்'* (புறம் 393 : 24), *'திண்தேர் வளவன்'* (புறம் 226 : 6), *'நெடுங்கொடி நுடங்கும் யானை நெடுமா வளவன்'* (புறம் 228 : 10) என்பன அவனது போர்க் கோலத்தைக் காட்டுகின்றன.

இவனது மரபினர் *'மறங்கெழு சோழர்'* (புறம் 39 : 8) என்று குறிப்பிடப்படுகின்றனர்.

## முன்னோர்

புறா உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தன் உடலையே துலாக்கோலில் (தராசில்) நிறுத்தித் தந்த அரசனான சிபியின் வழி வந்தவன் இவன் என்று குறிப்பிடப்படுகிறான் (புறம் 37 : 5-6, 39 : 1-3, 46 : 1-2). அவன் வழி வந்த இவனுக்கும் கொடை உள்ளம் அமைந்தது.

# கிள்ளிவளவன் – 2
# (குராப்பள்ளித் துஞ்சியவன்)

*'காவிரிக் கிழவன்'* என்றும் *'உறந்தைப் பொருநன்'* என்றும் இவன் சிறப்பிக்கப்பட்டுள்ளான் (புறம் 58 : 1, 9 : 6). இதனால் இவன் உறையூரில் தங்கிச் சோழநாட்டை ஆண்டு வந்தான் என்பதை உணரலாம்.

## கருவூர்ப் போர்

கொங்குநாட்டிலிருந்த கருவூரை இவன் தாக்கினான் (புறம் 373 : 8). போரில் பிட்டை (பிட்டன்) என்பவன் படுகாயமடைந்தான். இதனால், கொங்கு நாட்டார் தோற்றனர்.

## வஞ்சிமுற்றப் போர்

வஞ்சிமுற்றம் என்னுமிடத்தையும் இவன் தாக்கினான் (புறம் 373 : 24). போரில் எதிரிகளைக் கொன்று குவித்தான். இதில் கொல்லப் பட்டவர்களில் பெரும்பகுதியினர் குடநாட்டுப் படையினர்.

இந்த இரண்டு ஊர்களும் வெவ்வேறு இடங்கள். கருவூர் இப்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள கருவூர். வஞ்சிமுற்றம் என்பது இப்போது கோவை மாவட்டத்தில் உள்ள தாராபுரம். கருவூரில் தாக்கப்பட்ட அரசன் யார் என்பதற்கு வெளிப்படையான சான்று இல்லை என்றாலும், உறுதி மிக்க சான்று உள்ளது. அது பிட்டன் போரில் காயம்பட்டான் என்று குறிப்பிடப்படுவதே ஆகும். பிட்டன் வானவனின் படைத்தலைவன் என்பதைச் சேரர் வரலாற்றுப் பகுதியில் 'வானவர்' என்னும் தலைப்பின் கீழ்க் கண்டோம். எனவே, பிட்டன் போரிட்டபோது கருவூரில் இருந்த அரசன் மாந்தரஞ்சேரல் என்பது பெறப்படுகிறது.

இந்த மாந்தரஞ்சேரல் வரலாறு, சோழர் வரலாற்று நிகழ்ச்சிகளை ஒரு நிரல் செய்து காட்டுகிறது.

மாந்தரஞ்சேரல், காரியின் துணை தனக்குக் கிடைக்காமையால் சோழரை எதிர்த்துத் தாக்கிய ஒரு போரில் தோற்றான். இந்தப் போரில் இவனைத் தாக்கிய சோழ அரசன் பெருநற்கிள்ளி (இராசசூயம் வேட்டவன்).

கிள்ளிவளவன் - 1 (குளமுற்றத்துத் துஞ்சியவன்), கருவூரைத் தாக்கியபோது வானவன் கோட்டைக் கதவை அடைத்துக்கொண்டு உள்ளேயே இருந்தான். அடைத்துக் கொண்டு உள்ளே இருக்கும் அரசனோடு போர்புரிவது அழகன்று என்று புலவரால் அறிவுறுத்தப்பட்ட சோழன் முற்றுகையைக் கைவிட்டான்.

எனினும், வானவன் கருவூர்க் கோட்டைக்குள் தொடர்ந்து இருக்க விரும்பவில்லை. தன் படைத் தலைவன் பிட்டனிடம் கருவூரை ஒப்படைத்துவிட்டு, பாழி நகருக்குச் சென்று தங்கிப் பெரும்படை ஒன்றைத் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான். நிலைமை அறிந்த கிள்ளிவளவன்-1 அவனைப் பாழி நகரிலே தாக்கினான்; பாழிக்

கோட்டையை அழித்தான். மாந்தரஞ்சேரல் தன் மற்றொரு கோட்டையான வஞ்சிமுற்றக் கோட்டைக்குத் தப்பிவிட்டான்.

கிள்ளிவளவன் – 1 (குளமுற்றத்துத் துஞ்சியவன்) பாழிக் கோட்டையைத் தாக்கிக்கொண்டிருந்தபோது கருவூரில் அப்போரில் எதிரொலியாக மற்றொரு போர் மூண்டது. அந்தப் போர் பிட்டனுக்கும், கிள்ளிவளவன் – 2 (குராப்பள்ளித் துஞ்சியவன்) என்பவனுக்கும் இடையே நடை பெற்றது. கிள்ளிவளவன்-2 பிட்டனைப் படுகாயம் அடையும்படி செய்தான்.

பாழியிலிருந்து தப்பி வந்த மாந்தரஞ்சேரல் வஞ்சிமுற்றக் கோட்டையில் இருந்தபோது கிள்ளிவளவன்-1, கிள்ளிவளவன்-2 ஆகிய இருவரும் தாக்கினர். மாந்தரஞ்சேரல் கொல்லப்பட்டான்.

இந்த நிகழ்ச்சிகள் கிள்ளிவளவன்-1, கிள்ளிவளவன்-2 ஆகிய இருவரும் சமகாலத்தவர் என்பதைத் தெளிவாக்குகின்றன. ஒருவன் குளமுற்றத்தில் துஞ்சினான் என்றும் மற்றொருவன் குராப்பள்ளியில் துஞ்சினான் என்றும் கூறப்படுவதால் இவர்கள் இருவரையும் ஒருவர் எனக் கூற முடியவில்லை.

கிள்ளிவளவன்-1 கருவூரை முற்றுகையிட்டபோது போரே நடைபெறவில்லை என்பது தெளிவு. கிள்ளிவளவன்-2, கருவூரை முற்றுகையிட்டபோது போரும் நடந்தது. போரில் பிட்டன் என்பவனும் படுகாயம் அடைந்தான். இந்த வேறுபட்ட நிகழ்ச்சிகள் ஒரே அரசன் காலத்தில் நிகழ்ந்தவை என்று கூறுவது பொருந்தா. இதனாலும் கிள்ளிவளவன்-1, கிள்ளிவளவன்-2 ஆகியோர் வேறுவேறு அரசர்களே என்பது பெறப்படும்.

இவர்கள் உடன்பிறந்த அண்ணன் தம்பியராகவோ பெரியப்பன், சிற்றப்பன் மக்களாகவோ இருக்கலாம். நலங்கிள்ளியின் மகன கிள்ளிவளவன்-1 என்று அவனது வரலாற்றிலே கண்டோம்.

## ஆட்சி

வண்டிச் சக்கரம் கல்லால் தடுக்கப்பட்டாலும், பள்ளத்தில் ஆழ்ந்தாலும் பொருட்படுத்தாமல் பெரிதும் முண்டி இழுத்துச் செல்லும் காளைமாடுபோல இவன் தன் நாட்டை நடத்திச் சென்றான் (புறம் 60 : 7-9).

இவனது ஆட்சிக்குச் சோதனையாகத் தடைகளும் சோர்வும் பிறந்தன. அவற்றை இவன் வலிமையுடன் சமாளித்து அரசாட்சி நடத்தி வந்தான். இதனால், அவன் நாட்டு மக்கள் முன் அவர்களின் துன்பம் நீக்கும் இவனது ஆட்சிக் கோலமே நின்றது. உறையூர் மருத்துவன்

தாமோதரனாரும் விறலியும் கடற்கரை ஓரமாகச் சென்று கொண்டிருந்தபோது கடலில் முழு நிலாத் தோன்றுவதைக் கண்டனர். உடனே அவர்களுக்கு இந்தச் சோழனின் வெண்கொற்றக் குடைதான் நினைவுக்கு வந்தது. அந்த நிலாவைச் சோழனது குடையென எண்ணி வணங்கினர் (புறம் 58, 59).

## கொடை

இவனது ஆட்சிக் காலத்தில் இன்னல்கள் பல நேர்ந்தன என்று கண்டோம். அந்த இன்னற் காலத்தில் இவனைக் கண்டு குமரனார் என்னும் புலவர் பாடிப் பரிசில் வேண்டினார்; இந்தக் குமரனாரின் சொந்த ஊர் கோனாட்டு எறிச்சலூர். கோனாடு என்பது இப்போதுள்ள புதுக்கோட்டை மாவட்டப் பகுதியில் இருந்தது. அங்கிருந்து இவர் உறையூர் வந்து இவனைக் கண்டு பாடினார். பாடலில் அவர் இந்தச் சோழன் நல்லறிவுடையவன் என்றும், அவனது வறுமையை என்றும் தாம் எண்ணிப் பார்க்கும் தன்மை உடையவர் என்றும் கூறுகிறார். புலவரிடம் பண்பறிந்து ஒழுகாதவர், நாற்படையில் வலிமைமிக்க வேந்தாயினும் அவர்களைத் தாம் வியந்து மதிப்பதில்லை என்றும், அவர் குறிப்பிடுகிறார். சோழன் பரிசில் நல்காவிடினும் அவனை இவர் பாடியுள்ளார் (புறம் 197).

## தோற்றம்

அவையில் வீற்றிருக்கும்போது பனைக்கொடிக் கடவுள் இவனுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளார் (புறம் 58 : 14). இந்தக் கடவுள் வெள்ளை நிறத்தவர். பாண்டியனுக்கு நீலநிறத் திருமாள் உவமை கூறப்பட்டுள்ளார். எனவே, பாண்டியனைக் காட்டிலும் இந்தச் சோழன் சற்றேனும் வெளுப்பான மேனி உடையவனாயிருந்தான் என்பது பெறப்படும்.

கூர்மையான வாளைப் பயன்படுத்தும் வல்லமை மிக்கவனாய் அதனுடன் தோற்றமளித்ததையும், பக்கத்தே வெற்றியின் அறிகுறியாக முரசு முழங்க அவன் உலா வந்த காட்சியையும் தாமோதரனார் குறிப்பிடுகிறார்.

# இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி

சங்ககாலச் சோழவேந்தருள் சிறப்பு மிக்க மாபெரும் மன்னன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆவான். இவனுக்குப் பிறகு ஓர் அளவிற்குப் புகழ்பெற்றவன் சோழன் செங்கணான் ஆவான்.

## சேரசோழ பாண்டியர் ஒருமைப்பாடு

தமிழ் நாட்டு மூவேந்தரான சேர, சோழ, பாண்டியர் தம்முள் பகைமை கொண்டு ஒருவரோடு ஒருவர் போரிட்டுக் கொள்வது வழக்கமாக இருந்துவந்தது. இவர்களுள் இருவர் ஒன்று சேர்ந்து மூன்றாமவனைத் தாக்குதல் உண்டு. இந்த நிகழ்ச்சிகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் தமிழக வரலாற்றிலேயே முதல் நிகழ்ச்சியாக நாம் காணும் அளவில், இவன் காலத்தில் மூவேந்தரும் அரசியல் முறையில் ஒன்று கூடி இணைந்து நண்பர்களாகச் செயலாற்றத் தொடங்கினர்.

சேர அரசன் மாரிவெண்கோ, பாண்டிய அரசன் கானப்பேரெயில்தந்த உக்கிரப் பெருவழுதி ஆகியோர் இவனுடன் கூடித் தமிழக முன்னேற்றத்திற்காகத் திட்டமிடத் தொடங்கினர். இந்தக் காட்சியைக் கண்ட ஔவையார் 'இன்றுபோல் என்றும் ஒருமைப் பாட்டுடன் வாழவேண்டு'மென்று வாழ்த்தினார் (புறம் 367).

அப்போது அவர் பார்ப்பனர்க்குப் பூவும் (நிலமும்) பொன்னும் தாரைவார்த்துக் கொடுக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்வதும், மகளிர் மதுவூட்ட மகிழ்ந்து வாழ வேண்டும் என்று வாழ்த்துவதும் நம்மை எண்ணத் தூண்டும் செய்திகள் ஆகும்.

## சுடுதீ விளக்கம்

குதிரை, யானை, காலாள் படைகளின் துணைகொண்டு தனது பகைவர் நாடுகளைத் தாக்கினான். அங்கிருந்த நன்னீர்த் துறைகளில் தன் யானைகளைப் படியச் செய்து கலக்கினான். விளைந்த வயல்களைக் கவர்ந்தான். வீடுகளில் உள்ள மரங்களை விறகாகக் கொண்டு மாலைவேளையில் தீ வளர்த்தான். இந்தத் தீ, சுடுதீ விளக்கமாக எரிந்தது. கரும்பு வயல்களுக்கும் தீ மூட்டினான். இதனால் வளமான வயல்கள் பாழாயின. இந்தப் போரைக் கொடிய போர் என்பதுபட 'நாம நல்லமர்' – அஞ்சத்தக்க நல்ல போர் – என்று புலவர் குறிப்பிடுகிறார். இந்தப் போர் தொடங்கும்போது இவனுக்குச் சில அரசர்கள் உதவி செய்ய முன்வந்ததாகத் தெரிகிறது. இவனோ அவர்களையெல்லாம் வேண்டா என்று கூறிவிட்டுத் தான் மட்டும் தன் படைத்துணையுடன் போரிட்டு வெற்றி பெற்றதாகத் தெரிகிறது (புறம் 16 : 10-19).

## மாந்தரஞ்சேரல் இரும்பொறையோடு போர்

சேர அரசன் மாந்தரஞ்சேரல் இரும்பொறைக்கும் இவனுக்கும் போர் மூண்டது. அப்போது இவன், தேர்வண் மலையன் என்பவனின் உதவியைப் பெற்றான். அவனது துணையால் சேரனை வென்றான்.

மலையன் வரலாற்றில் இப்போரைப் பற்றிய செய்திகளை மேலும் காணலாம் (புறம் 125).

## படை

பொன் பூண் பூட்டிய தந்தங்களைக் கொண்டு யானைப் படை, கச்சை அணிந்த குதிரைப்படை, மணி ஒலிகொண்ட தேர்ப்படை, வாளால் ஆர்வமுடன் வாழும் மறவர் படை ஆகியவை அடங்கிய இவனது தானை கடல் ஒலிபோல் முழங்கும் (புறம் 377 : 23-30). அது வரம்பில்லாப் பெரிய படை.

## கொடை

உலோச்சனார் கிணைப்பறையை முழக்கிக்கொண்டு வைகறைக் காலத்திற்கு முன்பே சென்றார். நல்ல பனிக்காலம் (மார்கழி மாதம் எனலாம்); அரண்மனையிலே சோழன் இனிமையாகத் தூங்கிக் கொண்டிருந்த நேரம். அப்போதுதான் இவர் கிணையை முழக்கிக் கொண்டு சென்றார். (இந்தச் செயலை மார்கழி மாதம் விடியற்காலத்தில் தாதன் திருப்பாவை பாடிக்கொண்டு தெருத் தெருவாகச் செல்லும் நிகழ்ச்சியோடு ஒப்பிடலாம்.) 'அறநெஞ்சத்தோன் வாழ்க!' என்று இடையிடையே அவர் வாழ்த்தினார். அந்த வாழ்த்துத் தனக்குத்தான் என்று கொண்டு தொலைநாடு செல்லும் உலோச்சனார் என்னும் புலவரைத் தடுத்து அழைத்துச் சென்று அந்தப் புலவர் கனவு காண்பது போல் மருளும்படி முத்தும், நல்ல உடைகளும், காலையில் பருகும் 'தசும்பு' என்னும் மதுக்குடங்களும் அளித்தான். புலவர் பெற்று அவனைப் பாராட்டிப் பாடினார் (புறம் 377 : 16-20).

நாடு என்றால் அவன் நாடுதான் நாடு. வேந்து என்றால் அவன்தான் என்ற முறையில் அவரது பாராட்டு அமைந்திருந்தது.

## தோற்றப் பொலிவு

மார்பிலே சந்தனம், புலவு நாற்றம் வீசும் வாள் ஆகியவற்றுடன் இவன் தோன்றினான். இவனது சீற்றம் முருகனது சீற்றம் போன்றது (அகம் 158 : 16). முருகனது சீற்றம் இதிலிருந்து தெரியவருகிறது.

## இராசசூயம் வேட்டல்

இவனது பெயர் பெருநற்கிள்ளி. புறநானூற்றைத் தொகுத்த ஆசிரியர் இப்பெயருக்கு 'இராசசூயம் வேட்ட' என்னும் அடைமொழியைத் தந்துள்ளார் (புறம் 16 கொளு). இந்த அடைமொழியால் வைதிக

சமயவழிப்பட்ட இராசசூய வேள்வியை இவன் செய்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.

## சோழன் செங்கணான்

சோழன் கிள்ளிவளவன் (குளமுற்றத்துத் துஞ்சியவன்) காலமான பின் சோழநாட்டை அரசாண்ட சோழ அரசன் செங்கணான் எனலாம். சங்க இலக்கியங்களிலிருந்து அறியப்படுகிற சோழ அரசர்களுள் கடைசி அரசன் இவன். இவன் சைவ அடியார்களுள் ஒருவரான செங்கட்சோழ நாயனார் அல்லன்.[23]

சங்க காலத்தின் இறுதியில் சோழ நாட்டை ஆண்ட சோழன் செங்கணான் என்று கூறினோம். சோழன் செங்கணான் காலத்தில் கொங்கு நாட்டை அரசாண்டவன் கணைக்கால் இரும்பொறை, பொறையர் குடி அரசர்களுள் கடைசி அரசன் இவன்.

சோழ நாட்டை அரசாண்ட (குளமுற்றத்துத் துஞ்சிய) கிள்ளிவளவன் கொங்குநாட்டை வென்று சேரநாட்டை அரசாண்ட கோதை அரசனின் படைத்தலைவன் பிட்டனையும் வென்றான் என்று அறிந்தோம். கிள்ளிவளவனுக்குப் பிறகு சோழநாட்டை அரசாண்ட செங்கட்சோழன் கொங்குநாட்டை ஆண்ட கணைக்கால் இரும்பொறையுடன் போர் செய்தான். போர் செய்ய வேண்டிய காரணம் தெரியவில்லை. இவனை எதிர்த்துச் செங்கணான் போர் செய்தான். அந்தப் போர் 'போர்' என்னும் ஊரில் நடந்தது. (போர் என்னும் ஊருக்குப் போர்வை என்னும் பெயரும் இருந்தது.) இந்தப் போரில் கணைக்கால் இரும்பொறை தோல்வி அடைந்தது மட்டுமல்லாமல் செங்கணானால் சிறைப் பிடிக்கப்பட்டான். சிறைப்பட்ட கணைக்கால் இரும்பொறையைச் சோழன் செங்கணான் குடந்தைக் (கும்பகோணம்) கோட்டையில் மேற்கு வாயில்புறத்தில் இருந்த குடவாயில் சிறைக்கோட்டத்தில் அடைத்துவைத்தான்.

சிறையில் இருந்த கணைக்கால் இரும்பொறை நீர்வேட்கை கொண்டு நீர் கேட்டான். சிறைக் கோட்ட ஊழியர் அலட்சியமாக இருந்து நெடுநேரஞ்சென்று நீர் கொண்டு வந்து கொடுத்தனர். அவன் நீரைப் பருகாமலே ஒரு செய்யுளைப் பாடினான். இச்செய்யுளின் அடிக்குறிப்பு இவ்வாறு கூறுகிறது: ''சேரமான் கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கணானோடு திருப்போர்ப்புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டுக் குடவாயிற்கோட்டத்துச் சிறையிற்கிடந்து தண்ணீர் தாவென்று பெறாது பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு'' (புறம் 74).

'பிறந்த குழந்தை இறந்தாலும், பிறக்கும் முன்பே குழந்தை இறந்து பிறந்தாலும் அக்குழந்தை வீர ஆள் ஆகவில்லை என்று கருதி அதனை வீர ஆளாக மடியச் செய்வாராய் அதன் உடலில் வாளால் காயப்படுத்திப் புதைப்பதோ எரிப்பதோ செய்யும் வழக்கம் தமிழ்நாட்டில் இருக்கிறது. நானோ வீரர்களுக்குத் தலைவனான அரசனாக விளங்கியும் சங்கிலியால் பிணைக்கப்பட்ட வேட்டை நாய் போல் சிறையில் அடைபட்டுள்ளேன். பகைவர் கூட்டத்தில் உள்ள நண்பரல்லாத ஒருவர் அளித்த நீரை மான உணர்வின்றி எனது நீர்வேட்கையைத் தணிக்கும் பொருட்டுக் கேஞ்சிக் கேட்டுப் பருகுதலை இவ்வுலகத்திலுள்ள யாரேனும் விரும்புவரோ? விரும்பார் (எனவே நானும் விரும்பேன்).

இந்தக் கருத்தமைந்த பாடலைப் பாடிவிட்டுத் தண்ணீர் பருகாமல் நாச்சுருண்டு சோர்ந்து கணைக்கால் இரும்பொறை சோழனது சிறையில் மாண்டு போனான்.

தொண்டித் துறைமுகப் பட்டினத்தில் வாழ்ந்திருந்த பொய்கையார் கோக்கோதை மார்பன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் ஆகியோர் காலத்தில் இருந்தவர். இந்தப் பொய்கையார் அவ்வரசர் காலத்துக்குப் பிறகு கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கணான் ஆகியோர் காலத்திலும் வாழ்ந்திருந்தார். அவர் கணைக்கால் இரும்பொறை குடவாயிற் கோட்டத்தில் செங்கணானால் சிறை வைக்கப்பட்டதை அறிந்து செங்கணானிடம் சென்று களவழி நாற்பது என்னும் நூலைப் பாடி அதற்குப் பரிசாகக் கணைக்கால் இரும்பொறையைச் சிறையிலிருந்து விடுவிக்குமாறு கேட்டார் என்றும் செங்கணான், கணைக்கால் இரும்பொறையை விடுவித்தான் என்றும், விடுவிப்பதற்கு முன்பே சிறைக் கோட்டத்தில் கணைக்கால் இரும்பொறை துஞ்சினான் என்றும் கூறப்படுகிறது.

இவ்வாறு புறநானூற்றுச் செங்கணானுக்கும் களவழியில் கூறப்பட்டுள்ள சோழ அரசனுக்கும் தொடர்பு இருப்பதாகக் கொள்வது பொருந்துமாறில்லை. காரணங்களை எண்ணிப் பார்க்கலாம். இதனுடன் சைவ அடியார்களில் ஒருவனாய் விளங்கிய செங்கணானைப் பற்றியும் எண்ணலாம்.

போரில் வெற்றி பெற்ற அரசனது பெயர் சோழன் செங்கணான் என்று புறநானூற்றுக் கொளுக் குறிப்பிடுகிறது. செங்கண்மான் (களவழி 4 : 3, 5 : 3, 11 : 5), செங்கட்சினமால் (களவழி 15 : 3-4, 21 : 4-5, 29 : 3-4, 30 : 3, 40 : 3), திண்டேர்ச் செம்பியன் (களவழி 6 : 5, 23 : 4, 33 : 4), பொன்னார மார்பிற் புனைகழற்காற் செம்பியன் (களவழி 38 : 3) என்ற முறையில் ஓரளவு சிறப்பு வகையாலும் புனல் நாடன் (களவழி 1 : 4, 2 : 4, 9 : 3, 10 : 3, 14 : 3, 16 : 4, 20 : 3, 25 : 3, 26 : 4, 27 : 3, 28 : 5, 31 : 3, 36 : 4, 37 : 3, 39 : 3), புனல் நீர் நாடன் (களவழி 8-4, 17 : 4, 22 : 5, 41 : 4), நீர் நாடன் (களவழி 3 : 3, 19 : 3, 24

: 4, 32 : 3), காவிரி நாடன் (களவழி 7 : 3, 12 : 4, 35 : 3, 36 : 2), சேய் (களவழி 13 : 14, 18 : 3), பைம்பூட்சேய் (களவழி 34 : 4-5) என்ற முறையில் ஓரளவு பொது வகையாலும் வெற்றிபெற்ற சோழ அரசன் களவழி நூலில் குறிக்கப் படுகிறானே அன்றிச் சோழன் செங்கணான் என்று குறிக்கப்படவில்லை. மால் (திருமால்) என்றும் சேய் (முருகன்) என்றும் இவன் குறிப்பிடப்படுவது மனிதன் மீது கடவுள் தன்னை ஏற்றப்பட்ட நிலையாகும். மற்றும், 'செங்கண்மால்', 'செங்கட் சினமால்' என்னும் பெயர்களை நோக்கும்போது போர்க்காலத்தில் சினம் மிகுதியால் சிவந்திருந்த கண் நோக்கிய தெளிவுரைப் பெயரே அன்றிச் சோழன் செங்கணான் என்று சங்கால இயற்பெயர் போன்றது அன்று. மற்றும் 'செங்கணான் கோச்சோழன்' என்று திருமங்கை ஆழ்வாரால் குறிப்பிடப்படுபவன் சிவபெருமானுக்கு 70 கோயில்கள் கட்டியவன். இவர்கள் மூவரும் வெவ்வேறு அரசர்கள். வரிசைப்படி காலத்தால் வேறுபட்டவர்.

இந்தச் சோழனை எதிர்த்துப் போரிட்ட அரசனின் பெயரைப் புறநானூற்றுக் கொளு கணைக்கால் இரும்பொறை என்று குறிப்பிடுகிறது. களவழியில் சோழனது பெயர் குறிப்பிடப்படாதது போலவே சோழனை எதிர்த்துப் போரிட்டவனின் பெயரும் குறிப்பிடப்படவில்லை. வஞ்சிக்கோ (களவழி 39 : 4) என்று பொதுவகையால் ஓரிடத்தில் குறிப்பிடப்படுகிறான். மற்றோரிடத்தில் கொங்கர் படையைக் கொண்டவன் (களவழி 14 : 4) என்று குறிப்பிடுகிறார். மற்றும் பகைவர் என்றும் பிறவாறும் பொருள் தரக்கூடிய பல சொற்களால் (அடங்கார், உடற்றியார், ஒன்னார், காய்ந்தார், கூடார், செற்றார், தப்பியார், தெவ்வர், நண்ணார், நேரார், பிழைத்தார், புல்லார், மேவார்) சோழனை எதிர்த்தவர் குறிப்பிடப்படுகின்றனர். மற்றும் சங்க காலத்தில் செங்கணானை எதிர்த்தவன் கணைக்கால் இரும்பொறை என்று மட்டும் தெரியவருகிறது. களவழியிலோ தெவ்வேந்தர் (களவழி 6 : 5-6), வேந்தர் (களழி 16 : 5) என்றெல்லாம் பல்வேறு அரசர்கள் சோழனை எதிர்த்ததாகக் குறிப்புள்ளது. திருமங்கை ஆழ்வார் குறிப்பிடும் சோழன் எதிரி கழல் மன்னர்,[24] விழல் மன்னர்,[25] படை மன்னர்[26] என்று பன்மையால் காட்டப்படுகின்றனர். மற்றும் சிவனடியான் கோச்செங்கணானால் வெல்லப்பட்டவன் விளைந்தைவேள்[27] என்ற தெளிவான குறிப்பும் உள்ளது. இந்த வகையிலும் மேற்கண்ட மூவேறு பகைவர்களும் வேறுபட்டவர் என்பது தெளிவாகிறது.

புறநானூற்றுக் கொளுவில் போர் நடந்த இடம் திருப்போர்ப்புறம் என்று கூறப்பட்டுள்ளது. களவழியிலோ போர் நடந்த இடம் கழுமலம் (களவழி 36 : 2) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. திருமங்கை ஆழ்வார்

போர் நடந்த இடம் அழுந்தை[28] என்று குறிப்பிடுகிறார். இந்த வகையிலும் மேற்கண்ட மூன்று போர் நிகழ்ச்சிகளும் வெவ்வேறானவையாய் அமைந்து விடுகின்றன.

புறநானூற்றுப்படி சோழனை எதிர்த்தவன் சிறையிலடைக்கப்பட்டு மானம் கருதி உயிரை விடுகிறான். களவழிப்படி சோழனை எதிர்த்தவன் தன் யானையுடன் போர்க்களத்திலேயே உயிர் துறக்கிறான் (களவழி 35 : 3-5). களவழி உரைகாரரோ சோழனை எதிர்த்தவன் சிறையில் அடைக்கப்பட்டுப் பொய்கையாரின் களவழி நூலால் விடுதலை பெறுகிறான் என்று கற்பனை செய்கிறார். மற்றம் திருமங்கை ஆழ்வாரோ சோழனை எதிர்த்தவர் மாண்டனர் என்கிறார். மற்றும் கலிங்கத்துப் பரணி விலங்கைத் தகர்த்து விடுதலை செய்யப்பட்டதோடு அரசுரிமையும் அளிக்கப்பட்டான் என்று கூறுகிறது.[29] இவையெல்லாம் வரலாற்றுச் செய்திகளைச் சொல்வதில் தழுவியும் நழுவியும் செல்வதைப் பார்க்கும்போது வெவ்வேறு நிகழ்ச்சிகள் என்றே கொள்ளத்தகும்.

இவை ஒருபுறம் இருக்க, இவ்வரலாற்றுச் செய்திகளைத் தெரிவிக்கும் புலவர்களையும் எண்ணுவோம். சங்க காலத்து நிகழ்ச்சியைப் பாடியவர் புலவர் பொய்கையார். இவர் கோக்கோதை மார்பனைப் பாடியுள்ளார் (புறம் 48, 49). மற்றும் பொறையன் என்னும் சேர அரசனையும் குறிப்பிட்டுள்ளார் (நற். 18 : 15). இந்தப் பொறையன் கணைக்கால் இரும்பொறைதான் என்று அறுதியிட்டுக் கூறமுடியாவிட்டாலும் பெயர் ஒப்புமை கருதி ஓரளவு ஏற்கத்தான் வேண்டும். ஆயின், இந்தக் கோதை மார்பனின் படைத்தலைவன் பிட்டன் என்று வரலாற்றுப்படி முடியும். பிட்டன் காலம் வேறு; கோச்செங்கணான் காலம் வேறு. முன்னது சங்க காலத்தின் இடைப்பகுதி. பின்னது கடைப் பகுதி. மற்றும் கோக்கோதை மார்பன், பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் சேரமன்னன் என்று கொள்வது பொருத்தமானது என்று அவர்களது வரலாற்றில் விளக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தப் பொய்கையாருக்கும் கோச்செங்கணானுக்கும் தொடர்பில்லை எனல் சாலும். மற்றும் களவழி நூலைப் பாடிய புலவரும் பொய்கையார் என்றாலும் களவழிப் பாடலில் காணப்படும் நடை வேறுபாட்டை எண்ணி அவர்களை வெவ்வேறு பொய்கையார் என்று கொள்ளலே தகும். மற்றும் மூன்றாவது நிகழ்ச்சியோடு தொடர்புடைய பொய்கையாரோ ஆழ்வார் (திருமால் அடியவர்). புலவர் தொடர்பான இந்த வேறுபாடுகளும் இவர்களை வெவ்வேறு காலத்தவராகவே கொள்ளவைக்கின்றன.

இந்த வரலாறு மூவேறு நிகழ்ச்சிகளாகக் கொள்ளத் தக்கது. செங்கணானுக்கு நல்லடி என்று ஒரு மகன் இருந்தான் என்று சிலர் கருதுகின்றனர். சோழர் குலத்தில் நல்லடி என்றும் ஒருவர் இருந்தார்.[30] சோழ நாட்டைக் களப்பிரர் கைப்பற்றி இருக்க வேண்டும் என்று

தோன்றுகிறது. ஏறத்தாழ கி.பி. 250 அளவில் களப்பிரர் தமிழகத்தைக் கைப்பற்றினார்கள். அவர்களுக்குச் சோழநாடும் கீழ்ப்பட்டது. சேர, பாண்டிய நாடுகளைக் களப்பிரர் கைப்பற்றிக் கொண்டதுபோலவே சோழநாட்டையும் கைப்பற்றிக் கொண்டார்கள்.

சோழன் செங்கணானோடு சங்க காலத்துச் சோழர் ஆட்சி முடிவுற்றது எனலாம்.

## பிற சோழ அரசர்கள் – 1

அரசுகட்டில் ஏறி நாடாளும் உரிமை பெறாத சில சோழ அரசர் குடியினரைப் பற்றிய குறிப்புகள் சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. அக்குறிப்புகளிலிருந்து அந்த அரசக் குடியினர் செங்கோல் வேந்தரின் தம்பியராகவோ சிற்றப்பன் பெரியப்பன் பிள்ளைகளாகவோ இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது. அவர்களுள் சிலர் சிறப்புமிகு பாவலராகவும் விளங்கினர். 'எலி போன்றவர் நட்பு வேண்டா, புலி போன்றவர் நட்பே போற்றிப் பேணத்தக்கது' எனும் அரிய கருத்தை அறிவுறுத்தும் சோழன் நல்லுருத்திரன்[11] சோழன் நலங்கிள்ளியைப் போன்ற உணர்ச்சித் துடிப்பும் கற்பனை வளமும் வாய்ந்த புலவனாவான்.

## கிள்ளி மரபினைச் சேர்ந்தோர் நெடுமுடிக் கிள்ளி

மணிமேகலை என்னும் காப்பியத்தால் அறியப்படும் சோழ அசரன் நெடுமுடிக்கிள்ளி. இவனும் நெடுங்கிள்ளியும் ஒருவரா, வெவ்வேறானவரா என்னும் ஐயம் அறிஞர்களிடையே உண்டு. ஒருகால் இவன் ஒரு கற்பனைப் படைப்பாகவும் இருக்கக்கூடும். கிள்ளி என்பவன் புகார் நகரத்தில் இருந்து கொண்டு அரசாண்டான் என்பது மணிமேகலை வரலாற்றால் அறியப்படுகிறது. இவன் மகன் உதயகுமரன். இவன் மணிமேகலையைக் காதலித்தான். அவளை அடைய முயன்ற போதெல்லாம் அடைய முடியாமல் ஏமாந்தான். இறுதியில் ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அவளைப் பலவந்தமாக அடையக் கருதி அவளது இருப்பிடம் சென்றபோது வேறொருவனால் கொல்லப்பட்டு மாண்டான். மகன் இவ்வாறு ஒருத்தியைக் கற்பழிக்க முயன்ற குற்றத்தைச் செய்து, அந்தக் குற்றத்திற்காக வேறொருவனால் கொல்லப்பட்டு இறந்த செய்தியை நெடுமுடிக்கிள்ளி

கேள்விப்பட்டான்; வருந்தினான். தன் மகன் இறந்தானே என்பது அவன் வருத்தம் அன்று. பிழை செய்தவனைத் தன் கையால் கொல்ல வாய்ப்பு இல்லாமல் போய்விட்டதே என்பதுதான் அவனது வருத்தம்.

இவனது முன்னோனான சோழ அரசன் ஒருவன் (மனுநீதிச் சோழன்) தன் மகனைத் தானே கொன்று தண்டனையை நிறைவேற்றினான். துள்ளி விளையாடிய கன்றுக்குட்டி தவறித் தேர்க்காலில் சிக்கி இறந்தது. தேரைச் செலுத்திச் சென்றவன் சோழ அரசன் மனைவியின் மகன். தாய்ப் பசு ஆராய்ச்சி மணியை அடித்தபோது வந்து பார்த்து நிலைமையை அறிந்த அரசன் தன் ஒரே மகனை அதே இடத்தில் கிழே கிடத்தி, அவன்மேல் தன் தேரை ஏற்றிக் கொன்று தாய்ப் பசுவுக்கு நீதி வழங்கினான்.

இந்த நிகழ்ச்சியை நெடுமுடிக்கிள்ளி நினைத்தான். தன் மகனைத் தன் கையால் கொன்று நீதி வழங்கும் வாய்ப்பு இல்லையே எனறு வருந்தினான்.

இந்த நிகழ்ச்சி பற்றிய செய்தி பிற வேந்தர்களின் காதுகளில் படுவதன் முன்னர்த் தன் மகனது உடலைத் தன் கண்ணில் படாமல் எரித்து விடும்படி ஆணையிட்டான். இவனது இந்தச் செங்கோன்மையை எண்ணும்போது தமிழர் உள்ளம் பெருமிதம் கொள்கிறது.

மற்றும் இந்த அரசன் தன் மகன் கொல்லப்படக் காரணமாயிருந்த அந்தப் பெண்ணையும் கைது செய்து காவலில் வைக்குமாறு கூறினான். இவன் இவ்வாறு செய்ததிலும் தவறு இல்லை. அவன் அந்தப் பெண்ணைக் கணிகையின் மகள் (விலைமாதர் மகள்) என்றே எண்ணியிருந்தான். இவளது வலையில் பட்டு இன்னும் பலர் தன் நாட்டில் அவல நிலை எய்தக்கூடும் என்று கருதினான். நாட்டு மக்களின் நலனுக்காகவே அவளைச் சிறையில் அடைக்கச் செய்தான். மணிமேகலை சிறையில் அடைக்கப்பட்டாள்.

நெடுமுடிக்கிள்ளியின் மனைவி இராசமாதேவி செய்தியை அறிந்து மகனைப் பிரிந்த துன்பத்தால் மணிமேகலைக்குப் பல துன்பங்கள் செய்தாள். மணிமேலை அத்துன்பங்களைக் களைந்து நலமுடன் இருந்தது கண்டு அரசி அவளிடம் மன்னிப்பு வேண்டினாள்.

மேலே கூறப்பட்ட அரசமாதேவியின் பெயர் சீர்த்தி. அவள் திருமாலுக்கு மூன்றடி மண் வழங்கி மாண்ட மாவலி அரச பரம்பரையில் தோன்றிய ஒருவனின் மகள் (மணிமே. 19 : 54-55).

நெடுமுடிக்கிள்ளி 'புன்னையங்கானல்' மணல்வெளியிலே உலாவிக் கொண்டிருந்தான். அங்கே தனித்து நின்ற ஓர் அழகியைக் கண்டான். பால் உணர்வுகள் அவர்களைக் கூட்டிவைத்தன. ஒரு மாதம் அவளுக்கும் அவனுக்கும் அவ்விடத்தில் களவு ஒழுக்கம் நடைபெற்றது. ஒரு மாதத்திற்குப் பின் அவளை அவ்விடத்தில் காணமுடியாமல் ஏங்கினான்.

அங்கே வந்த சாரணர் அவள் நாக நாட்டு இளவரசியாய் இருக்கக்கூடும் என்றனர். நாகநாட்டு அரசன் வளைவணன். அவனது மனைவி வாசமயிலை. இவர்கள் இருவருக்கும் பிறந்தவள் பீலிவளை (மணிமே. 24 : 54 - 60). இவள் பிறந்தபோது 'இவள் வயது வந்தபின் கதிர்க்குலத்தவன் ஒருவனைக் களவில் கூடிக் கருவுற்ற நிலையில் திரும்பி வருவாள், என்று கணியர்கள் கணித்துக் கூறினர். இந்தச் செய்தி சாரணர்க்குத் தெரியும். அரசன் கூறிய கூற்றைச் சாரணர் கேட்டனர். சோழ அரசன் சூரிய குலத்தினன் எனவே பீலிவளையைத்தான் அரசன் அடைந்து மகிழ்ந்திருக்க முடியும் எனக் கூறினர்.

(கருவுற்றுச் சென்ற பீலிவளை தான் கருவுற்ற நிலையை உணர்ந்தாள். உயிருடன் தன் தந்தை தாயாருக்குச் சுமையாக வாழ விரும்பவில்லை. எனினும், வயிற்றில் உள்ள குழந்தைக்காக வாழ்ந்தாள். குழந்தை பிறந்தது. ஆண் குழந்தை. அங்கு வந்த வாணிகர் கண்களில் படும்படி குழந்தையைக் கிடத்திவிட்டுச் சென்றுவிட்டாள். வாணிகர்கள் யாரும் இல்லாமல் கிடந்த குழந்தையைக் கண்டு எடுத்துவந்து சோழ நாட்டில் சேர்ப்பித்தனர். தாய் மாண்டாள். குழந்தை தன் தந்தை நாட்டுக்கே வந்துவிட்டது.)[32]

## வஞ்சி வெற்றி

நெடுமுடிக்கிள்ளி நாட்டுப் பரப்பை விரிவுபடுத்தக் கருதினான். இதனால் இவன் வஞ்சி நகரைத் தாக்கினான். வெற்றி பெற்றான்.

## காரியாற்றுப் போர்

இவனது தம்பி இவனுக்காகக் காரியாறு என்னுமிடத்தில் போரிட்டான். இவனை எதிர்த்துச் சேரரும் பாண்டியரும் போரிட்டனர். வெற்றி சோழர்களுக்குக் கிடைத்தது மணிமே. 19 : 124-127.

## பெயர்களும் அடைமொழிகளும்

'கிளர்மணி நெடுமுடிக்கிள்ளி' (மணிமே. 24 : 29), 'அணிகிளர் நெடுமுடி அரசாள்வேந்தன்' (மணிமே. 22 : 215), 'மாவண்கிள்ளி' (மணிமே. 19 : 127) இவற்றில் முதல் இரண்டு தொடர்களும் இவன் தலையில் அணிந்திருந்த முடியின் சிறப்பை உணர்த்துகின்றன. 'மாவண்கிள்ளி' என்னும் தொடரும் 'மாவண் சோழர்' (அகம் 123 : 10) என்னும் தொடரும் எந்த அளவு ஒற்றுமை உடையவை என்பது விளங்கவில்லை.[33]

# இசைவெங்கிள்ளி

இவன் அம்பர் என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு அரிசிலாற்றங்கரையைச் சூழ்ந்த பகுதியை அரசாண்டு வந்தான். இவன் பாண்டிய அரசன் ஒருவனோடு போரிட்டு வெற்றி கண்டான்.[34] இவன் புதுமை அழகுடன் திகழும் வெற்றிக் கொடியை நாட்டி மகிழ்ந்தான்.

இவன் கைகளிலெல்லாம் மலர் மாலைகளை அணிந்து கொண்டான். இவன் களிற்றின்மேல் ஏறிப் போருக்கெழும் கோலம் அன்றைய மக்கள் உள்ளத்தைக் கவர்ந்திருந்தது (சல்லியங்குமரனார், நற். 141).

இசைவெங்கிள்ளி என்பதற்கு இசைத் தமிழில் வேட்கையுடைய கிள்ளி என்றோ புகழ்மீது வேட்கையுடைய கிள்ளி என்றோ பொருள் கொள்ளலாம்.

# கைவண் கிள்ளி

கரிகாலன் பெரும்போரில் ஈடுபட்ட ஊர் வெண்ணி என்பதை அறிவோம். இந்த வெண்ணியினைத் தலைநகராகக் கொண்டு ஒரு சமயம் கைவண் கிள்ளி (நற். 390 : 3) என்பவன் ஆண்டு வந்தான்.

சோழன் நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தான் 'கைவண்தோன்றல்' (புறம் 43 : 12) என்று குறிப்பிடப்படுகிறான். இந்தக் கைவண்ணம் குதிரை பூட்டிய தேரை ஓட்டுவதில் இவன் பெற்றிருந்த திறமையைக் குறிக்கிறது. இதனோடு மேற்கூறிய கைவண் கிள்ளிக்கு எந்த அளவு தொடர்பு உண்டு என்பது தெரியவில்லை.

# பொலம்பூண் கிள்ளி

பொலம்பூண் கிள்ளி (அகம் 205 : 10) என்று குறிப்பிடப்படும் இவன் காவிரிப் பூம்பட்டினத்தில் இருந்து கொண்டு காவிரி ஆற்றுப் பள்ளத்தாக்கிலுள்ள நாட்டை ஆண்டு வந்தான்.

இவன் கோசர்களின் படையை அழித்தான், அன்றியும் அவர்களது நாட்டையும் கைப்பற்ற முயன்றான்.

# கடுமான் கிள்ளி

'கதிரிலை நெடுவேல் கடுமான் கிள்ளி' என்று குறிப்பிடப்படும் இந்த அரசன் தன் யானையைக் கொண்டு பகைவர் மதில்களைத் தாக்கி அழித்தான் என்று தெரிகிறது.

வாள்பட்ட புண் ஆறி வடுப்பட்ட மேனியுடன் விளங்கிய ஏனாதிப் பட்டம் பெற்ற திருக்கிள்ளி என்னும் படைத்தலைவன் 'கடுமான் கிள்ளி' என்று குறிப்பிடப்படுகிறான் (புறம் 167 : 10).

சோழன் நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தான் என்பவன் 'கடுமான் தோன்றல்' (புறம் 43 : 11-12) என்று குறிப்பிடப்படுகிறான்.

மேலே கூறப்பட்ட கடுமான் தோன்றல் அடுத்துக் கண்ட இருவருள் ஒருவனாகவோ, தனியொருவனாகவோ இருக்கலாம்.

## மணக்கிள்ளி

'சோழன் மணக்கிள்ளி' என்னும் பெயரை பதிற்றுப்பத்து நூலைத் தொகுத்த ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

'நெடுஞ்சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன்' (பதிற். பதி. 5 : 2-3) செங்குட்டுவன் என்று அது குறிப்பிடுமிடத்தில் இப்பெயர் பெண்ணின் பெயராக அமைந்திருப்பதைக் காண்கிறோம். மணக்கிள்ளி என்னும் சோழ அரசனின் மகளது பெயரும் மணக்கிள்ளி என்றே வழங்கப்பட்டிருக்கலாம்.

செங்குட்டுவனின் தாய்ப்பாட்டன் 'ஞாயிற்றுச் சோழன்' என்றும் குறிப்பிடப்படுகிறான் (சிலப். 29 உரைப்பாட்டுமடை). இங்கும் செங்குட்டுவனது தாயின் பெயர் காணப்படவில்லை. (ஆனால் இந்தப் பதிக்கு உரை கூறுகையில் அடியார்க்கு நல்லார் ஞாயிற்றுச் சோழனை நெடுந்தேர்ச் சோழன் என்று சிறப்பித்துக் கூறி அவனது மகளுக்கு 'நற்சோணை' என்னும் பெயரையும் குறிப்பிட்டுள்ளார்.)

## பிற சோழ அரசர்கள் – 2

சோழர் குடியினர் ஒன்பது இடங்களில் செல்வாக்குடன் தனித்தனிக் குடியினராய் விளங்கினர். அவர்களுள் புகார், உறையூர், கழார் ஆகிய ஊர்களில் இருந்துகொண்டு அரசாண்ட சோழ அரசர்கள் வரலாற்றை இதுவரை கண்டோம்.

பிற இடங்களில் (ஆர்க்காடு, வல்லம் ஆகிய இடங்களில்) இருந்து கொண்டு அரசாண்ட சோழ அரசர்களின் பெயர்கள் தெரிய வருகின்றன.

# ஆர்க்காட்டுச் சோழர்

## நாடு

ஆர்க்காடு நீர்வளம் மிக்க ஊர். நெல்வயல் நீரில், நெய்தல் பூவிலுள்ள தேன் கலந்து பாயும் (நற். 190 : 6. சிலப். 29 : உரைப்பாட்டு மடை) இந்த ஆர்க்காட்டைச் சூழ்ந்திருந்த பகுதியை நாம் ஆர்க்காட்டு நாடு என்று குறிப்பிட்டுக் கொள்வோம். இந்த ஆர்க்காட்டு நாட்டில் வாழ்ந்த குடியினருள் ஒருவர் இளையர். இந்த இளையர் குடியினர் அலை யலையாக வரும் வெள்ளம்போல் அணியணியாகச் சென்று வேட்டை யாடுவார்கள். அவர்கள் வேட்டையாடிப் பெற்ற பொருள்களில் குறிப்பிடத்தக்கது யானைக்கோடு.[35] இந்த இளையர் குடியினர் வாள் வீரர்களாய் விளங்கினர் (குறுந். 258 : 6). இவர்களின் பெருமகனாய் (தலைவனாய்) அழிசி என்பவன் விளங்கினான்.

ஆர்க்காட்டு நாட்டில் இருந்த காடு இந்த அரசன் அழிசியின் பெயராலேயே 'அழிசியல் பெருங்காடு' என வழங்கப்பட்டது (நற். 87 : 3). இந்தக் காட்டு நெல்லிக்கனிகள் சிறப்புப் பெற்றவை.

நீர்வளம், நெல்லிமரக்காடு, சோழர் குடியினர் ஆட்சி ஆகியவற்றை எண்ணும்போது இந்த ஆர்க்காடு தஞ்சை மாவட்டத்தில் உள்ளதாக இடைக்காலக் கல்வெட்டுகள் குறிப்பிடும் ஆர்க்காட்டுக் கூற்றமோ என்று எண்ண வேண்டியுள்ளது.

இந்த ஆர்க்காட்டைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட அரசர்களுள் மூன்று பேரைப் பாட்டன் – தந்தை – மகன் என்னும் உறவு முறையில் நாம் காண முடிகிறது. அவர்கள் இவர்கள்:

ஆதன்
|
அழிசி
|
சேந்தன்

## ஆதன்

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் தன் அரசவையில் நட்புரிமையுடன் விளங்கிய ஐந்துபேரைக் குறிப்பிடுகையில் ஆதன் அழிசி என்னும் ஒருவனைக் குறிப்பிடுகிறான் (புறம் 71 : 13). இந்த அழிசி பிற புலவர்களால் குறிப்பிடப்படும் ஆர்க்காட்டு அரசன் அழிசியே என்று

கொள்வதில் தவறில்லை. ஆயின் அந்த அழிசியின் தந்தை பெயர் ஆதன் என்பது பெறப்படுகிறது. இவனைப் பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை.

## அழிசி

மேலே குறிப்பிட்டபடி இவன் ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியனுடைய நண்பனாக விளங்கினான். இதனால் இவன் சோழப் பேரரசின் தலைமை இடத்தோடு முரண்பட்டிருந்தானோ என்று எண்ணவேண்டியுள்ளது. பேரரசர்கள் பகையரசனின் சிற்றரசர்களைத் தம்வயப்படுத்திக்கொள்வது உண்டு. அந்த வகையில் இந்த அழிசி பாண்டியனின் நண்பனாய் விளங்கியிருக்கலாம்.

இவன் காவிரி ஆற்றங்கரையிலுள்ள மருத மரத்தில் கட்டி வைக்கப்பட்டான் என்றும் இந்தச் செய்தி நாடெங்கும் பரவியது என்றும் கூறப்படுகிறது (குறுந்.258 : 2-3). இவன் பாண்டியனோடு சேர்ந்து கொண்டதால் சோழர்க்கு எதிராகப் படையெடுத்தான் என்று கருதிச் சோழப் பேரரசன் இவனை இவ்வாறு பலரும் நீராடும் நீர்த்துறையில் கட்டிவைத்து இழிவுபடுத்தியிருக்கக்கூடும் என்று எண்ண இடமுண்டு.

அழிசி 'வெல்போர்ச் சோழர்' குடியில் தோன்றியவன் (நற். 87 : 3). இளையர் குடியினரிடையே தலைமையாக விளங்கியவன் (குறுந். 258 : 6). மலர்மாலை அணிந்து கொண்டு இவன் தேரில் உலா வருதல் கண் கொள்ளாக் காட்சி (நற். 190 : 4) ஆகும்.

## சேந்தன்

அழிசி, பாண்டியனின் நண்பனாக விளங்கினான் என்று கூறுவதைத் தவிர, அவனது சிறப்புமிக்க அரசியல் தொடர்பான செயல்கள் வேறு ஒன்றும் இல்லை. அன்றியும் இவனது பெயரும் புகழும் அக்காலத்திலேயே பிற நாடுகளில் அவ்வளவாகப் பரவவில்லை. (எனினும், அவன் நாட்டு மக்கள் ஆர்க்காட்டையே 'அழிசியம் பெருங்காடு' என்று குறிப்பிடும் அளவுக்கு அவனைப் பெரிதும் போற்றி மதித்தனர்.) எனவே, அயல் நாட்டு மக்களுக்கும் புலப்படும்படி இவனை அறிமுகப்படுத்தும் புலவர்கள் இவன் மகன் சேந்தனைக்கொண்டு அறிமுகப்படுத்துவராயினர். அவர்கள் 'சேந்தன் தந்தை அழிசி' என்றே தெளிவாகக் குறிப்பிடுகின்றனர் (நற். 190 : 3-4; குறுந். 258 : 4-7).

சேந்தன் அரிய கோட்டையைத் தாக்கி வென்றான். என்று கூறப்படுகிறது. அந்தப் போரின்போது அவன் வேலில் படிந்த புள்ளி புள்ளியான குருதிக் கறையைத் துடைக்காமல் வெற்றிச் சின்னமாக அப்படியே வைத்துக்கொண்டு தோற்றமளித்த நிலைமையைப் புலவர் வியந்து குறிப்பிட்டுள்ளார் (நற். 190 : 1-2).

இவன் 'ஏந்து கோட்டு யானைச் சேந்தன்' என்று சிறப்பிக்கப் பட்டுள்ளான். இதனால், இவன் யானை மீது ஏறிக் காட்சி தந்த நிகழ்ச்சிகள் பல எனலாம். இவன் தந்தை தேரில் ஏறிக் காட்சி தந்ததை இவ்விடத்தில் ஒப்புநோக்கலாம். யானை வேட்டையாடுவதில் வல்ல இளையர் குடியினர்க்கு இவன் தந்தை தலைவனாக விளங்கியதற்கும், இவன் யானை மீது தோன்றியதற்கும் தொடர்பு இருப்பதைக் காணலாம்.

இந்தச் சேந்தன் சோழப் பேரரசனுக்குத் துணைவனாய் விளங்கினான் என்று கொள்ளலாம். இதனால், இவன் தந்தை இவனைக் கொண்டு அறிமுகப்படுத்தப்படுகிறான் என்றே கொள்ளலாம். படை எடுத்த கொடியவனை நேரடியே அறிமுகப்படுத்த விரும்பாத புலவர், அவனது மகன் நல்லவனைக் கொண்டு அறிமுகப்படுத்துகிறார் என்று எண்ணுவது பொருத்தமே.

அழிசி தன்னலத்துக்காகப் பாண்டியனோடு உறவு பூண்டான். அவன் மகன் சேந்தன் தன் நாட்டு மக்கள் நலனுக்காகத் தன் தந்தைக்கு மாறாகச் சோழப் பேரரசனுக்குத் துணையாய் விளங்கினான். இதனால் சேந்தன் போற்றப் பட்டான். இந்த நல்லவன் வழியே தீயவன் அறிமுகப்படுத்தப் படுகிறான். (கதைகளிலும் நாடகங்களிலும் நல்லவனைத் தலைவனாகவும் அவன் வழிக் கயவனை இழிந்தவனாகவும் காட்டுவதுபோலக் காட்டப்படுகிறான்.)

# சோழன் மருகன் நல்லடி

நல்லடி என்னும் அரசன் 'சோழன் மருகன்' என்று குறிப்பிடப்படுகிறான். சோழர்வழி வந்தவன் என்பது இதன் பொருள். இவன் 'வல்லங் கிழவோன்' என்று குறிப்பிடப்படுவதால் வல்லம் என்னும் ஊர் மக்களின் நன்மதிப்பினைப் பெற்ற அரசியல் தலைவனாக விளங்கினான் என்பது பெறப்படும்.

இவனது கோட்டைக் கதவுகளை இவனது பகைவர்கள் தாக்கினார்கள். பகைவர்கள் தாக்குவார்களென்று நல்லடி எதிர்பார்க்காதபோதே தாக்கினார்கள்.

ஆரியப்படை, வல்லம் என்னும் ஊரைத் தாக்கியது என்பதையும், ஆவ்வூரை அடுத்திருந்த காவற்காட்டில் அந்தத் தாக்குதல் முறியடிக்கப்பட்டது என்பதையும் பின்னர்க் காணலாம். இந்த ஆரியரே இந்த நல்லடியைத் தாக்கியவர்கள் என்றும், நல்லடி அவர்களை முறியடித்தான் என்றும் நாம் கொள்ளலாம்.

# சோழரின் படைத் தலைவர்கள்

சோழ வேந்தர்களின் படைத்தலைவராய் விளங்கியவர்களுள் நான்கு பேர்களின் பெயர்கள் தெரியவருகின்றன. பழையன் (சோழன் மறவன்; (அகம் 326 : 9), ஏனாதி திருக்கிள்ளி (புறம் 167), சோழிய ஏனாதி திருக்கண்ணன் (புறம் 174). இந்த நால்வருள் பழையன் வரலாறும் மலையமான் வரலாறும் குறுநிலத் தலைவர்கள் வரிசையில் விளக்கப்படுகின்றன. (தமிழ்நாடு அரசு வெளியீடான தமிழ்நாட்டு வரலாறு : சங்க காலம் - அரசியல் (1983) என்ற நூலில் 'பிற குறுநில மன்னர்கள்' என்னும் இயலே இங்குக் குறிக்கப்படுகிறது. இப்பகுதி மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களால் எழுதப்பெறவில்லை. (ப-ர்)

## சோழ வேந்தரின் கால அடைவு

சங்க காலச் சோழ வேந்தரின் வரலாற்றை வரைவதற்குச் சங்க இலக்கியப் பாடல்களே பேருதவியாக உள்ளன. ஆனால், அவற்றில் ஒரு குறையுண்டு. அரசர்களின் ஆட்சிக் காலத்தைப் பற்றியோ, எந்த ஆண்டில் யார் ஆட்சிக்கு வந்தனர் என்பதைப் பற்றியோ அவை யாதும் கூறுவது இல்லை. காலவரன் முறை, வரலாற்றின் கண்ணாகப் போற்றப்படுகிறது. காலத்தை வரையறுக்க நமக்கு அகச்சான்றுகள் கிடைக்கவில்லை. எனினும், அப்பாடல்களில் காணப்படும் சிற்சில குறிப்புகளையும், அம்மன்னர்களைப் பாடிய புலவர்களைச் சில தலைமுறையினராக வகைப் படுத்துவதற்குரிய செய்திகளையும் புறச்சான்றுகள் சிலவற்றையும் கொண்டு சங்க காலச் சோழ வேந்தர்களை ஒரு வகையாகக் 'காலத்தால் முற்பட்டவர் – பிற்பட்டவர் யாவர்' என்பதைத் துணிந்து, அம்முறையில் அவர்களுடைய வரலாற்றை வரைந்துள்ளோம்.

இனி, அவர்களுடைய ஆட்சிக் காலத்தைக் கணிக்கும் முயற்சியில் ஈடுபடலாம். அசோகனின் கல்வெட்டுகளால், கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே சோழ வேந்தர் தமிழகத்தில் ஆட்சி புரிந்தனர் என்பதை நாம் முன்னரே கண்டோம்.

பண்டைத் தமிழகத்து வேந்தருள் காலத்தால் மிகவும் முற்பட்டவனாகக் கரிகாலன் காட்சி அளிக்கிறான். அவனைப் பற்றிப் பல

வரலாற்றுச் செய்திகளை அறிய முடிகிறது. அவனை வெண்ணிக் குயத்தியார் (புறம் 66), கருங்குழலாதனார் (புறம் 7, 224), குடவாயில் கீரத்தனார் (அகம் 44 : 13-14), கழா அத்தலையார் (புறம் 65, 202 : 12), பரணர் (அகம் 326 : 5) போன்ற புலவர்கள் பாடியுள்ளனர். கரிகாலன் காலத்தில் சேரமான் பெருஞ்சேரலாதன் எனும் சேர அரசன் சிறப்புற்று விளங்கினான் (புறம் 65). கழா அத்தலையார் என்னும் புலவர் அவனைச் சுட்டுகிறார்.

இப் பெருஞ்சேரலாதன் பதிற்றுப் பத்தின் முதற் பத்தில் பாராட்டப்படும் பெருஞ்(சோற்றுதியன்) சேரலாதனாக இருத்தல் கூடும். இதைக் கருதுகோளாகக் கொண்டால், இவனுடைய மகன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பது போதரும். இமயவரம்பன் மகனே (கடல் பிறக்கோட்டிய) செங்குட்டுவனாவான். இதனால், சேரன் செங்குட்டுவன் கரிகால் பெருவளத்தானுக்கு இரு தலைமுறைகள் பிற்பட்டவனாவான்.

கரிகாலன் காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் சிறப்புற்று விளங்கியது. அதன் சிறப்பினைப் பெரிபுளூஸ் எனும் நூல் சுட்டுகிறது. இந்நூல் தொகுக்கப்பட்ட காலம் கி.பி. 81க்கும் கி.பி. 96க்கும் இடைப்பட்ட காலமாகும்.[36] எனவே, இதற்கு முன்பே கரிகாலனால் பூம்புகார் வலிவும் பொலிவும் பெற்றிருக்கவேண்டும் என்பது புலனாகிறது. இதனால், கரிகாலன் கி.பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவனாகத் தோன்றுகிறது.

சேரன் செங்குட்டுவன் - கயவாகு (காமனி அபயன்) காலக்கணிப்பினை அறிஞர்கள் கணித்துள்ளனர். பரணவிதானே எனும் இலங்கை வரலாற்றறிஞர் கயவாகுவின் காலத்தைக் கி.பி. 111-136 என்று கணக்கிட்டுள்ளார்.[37] சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் குடமுழுக்கு விழா நடத்தியது அவனுடைய ஆட்சியின் இறுதிப் பகுதியிலாகும். அப்பொழுதுதான் கயவாகு ஆட்சிக்கு வந்து சில ஆண்டுகளே கழிந்திருக்கவேண்டும் எனத் தோன்றுகிறது. கி.பி. 115இல் வஞ்சிமாநகரில் இத்திருவிழா நடந்ததாகக் கூறலாம். இதற்குப் பிறகு நான்கைந்து ஆண்டுகளே செங்குட்டுவன் ஆட்சி செய்ததாக அறிகிறோம். அவன் மொத்தம் 55 ஆண்டுகள் ஆட்சி செய்ததாகப் பதிற்றுப்பத்துப் பதிகம் தெரிவிக்கிறது. இவ்வடிப்படையில் செங்குட்டுவன் கி.பி. 65 முதல் கி.பி. 120 வரை ஆட்சி செய்தவனாகலாம்.

அவனுடைய தந்தையான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் 58 ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாகப் பதிற்றுப் பத்தின் பதிகத்தால் அறிகிறோம். அவன் கி.பி. 7 முதல் கி.பி. 65 வரை ஆட்சி செய்தவ னாகலாம். இவனுடைய தந்தை பெருஞ்சேரலாதன், கரிகாலனோடு போரிட்டு மாண்டான். அவனுக்குப் பிறகு இவன் அரசு கட்டில்

ஏறியுள்ளான். எனவே, பெருஞ்சேரலாதன் இறந்தது கி.பி. 7 ஆம் ஆண்டு எனத் துணியலாம்.

கரிகாலன் சேரனோடு நடத்திய போர் வெண்ணிப்போர் என்பதாகும் (புறம் 66 6). அஃது அவனுடைய கன்னிப் போராகும். எனவே, கி.பி. 7 ஆம் ஆண்டிற்குச் சற்று முன்பு கரிகாலன் ஆட்சிக்கு வந்திருத்தல் கூடும். கரிகாலன் கி.பி. 6ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்ததாகக் கொள்ளலாம். ஓர் அரசனுடைய ஆட்சிக் காலத்தை 25 ஆண்டுகள் கொண்டதாகக் கொள்வது ஆராய்ச்சியாளர் வழக்கம். இவ்வடிப்படையில் கரிகாலன் கி.பி. ஆறாம் ஆண்டு முதல் கி.பி. முப்பதாம் ஆண்டு வரையில் ஆட்சி செய்ததாகக் கொள்ளலாம்.

இந்தக் காலத்தை மையமாகக் கொண்டால் கரிகாலனுக்கு முற்பட்ட பெருநற்கிள்ளி, சேட்சென்னி அரசர்களும், கோப்பெருஞ் சோழனும் கி.மு. முதல் இரு நூற்றாண்டுகளில் ஆட்சி செய்தவர்களாகத் தோன்றுவர்.

கரிகாலனுக்குப் பிறகு நலங்கிள்ளி ஆட்சிக்கு வந்ததாகத் தெரிகிறது. அவன் கி.பி. 30-55 வரை ஆட்சி செய்ததாகக் கொள்ளலாம். அவனுடைய மகன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் கி.பி. 56 முதல் கி.பி. 80 வரை ஆட்சி புரிந்திருக்கக் கூடும். இவனுடைய காலத்தை யொட்டிக் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன் ஆண்டதாகக் கண்டோம். எனவே, கி.பி. 81 முதல் கி.பி. 105 வரை இவன் ஆண்டதாகத் தெரிகிறது. இதற்குப் பிறகு இரண்டு அல்லது மூன்று தலைமுறைச் சோழ அரசர்கள் யாவர் எனத் துணிய இயலவில்லை.

கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியின் சமகாலத்தவனாக இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி காணப்படுகிறான். இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெஞ்செழியனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவனாவான். இவனுடைய சமகாலத்துப் புலவரான நக்கீரர், கிள்ளிவளவனிடத்துப் பழையன் மாறன் தோற்றோடியதைச் சுட்டுகிறார் (அகம் 346 : 19-22). எனவே, கிள்ளிவளவனுக்குப் பிறகு தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஆட்சி புரிந்ததாகத் தெரிகிறது. இரண்டு தலைமுறை சோழராட்சியில் இடைவெளி காணப்படுவதாகக் கொண்டு கணக்கிட்டால், கி.பி. 155 முதல் 180 வரை இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆட்சி செய்ததாகக் கொள்ளலாம். இவனுக்குப் பிறகு யார் ஆட்சி செய்தார்கள் என்பது உறுதியாகத் தெரியவில்லை.

சோழ மரபின் சிறப்புமிக்க கடைசி அரசன் சோழன் செங்கணான். அவன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளிக்குக் காலத்தால் இரண்டு மூன்று தலைமுறைகள் பிற்பட்டவனாவான். இவன் கணைக்கால்

இரும்பொறையோடு போரிட்டான் என்பதைக் கண்டோம். கணைக்கால் இரும்பொறை என்னும் சேர வேந்தன், மாரிவெண்கோ என்னும் சேர அரசனுக்குக் காலத்தால் மிகவும் பிற்பட்டவன். எனவே, இரண்டு தலைமுறைகளுக்குப் பின்னால் தோன்றியவன் எனக் கொள்ளலாம். மாரிவெண்கோ, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியின் சமகாலத்து அரசன் என்பது முன்னர்ச் சுட்டப்பட்டது. எனவே, சோழன் செங்கணான் கி.பி. 230 முதல் கி.பி. 255 வரை ஆட்சி புரிந்ததாகக் கூறலாம்.

ஏறக்குறைய ஆறு நூற்றாண்டுகள் (கி.மு. 300 முதல் கி.பி. 300 வரை) சங்ககாலச் சோழ மன்னர் ஆட்சிபுரிந்தமை இந்தக் காலக்கணிப்பினால் புலனாகிறது. செங்கணானுக்குப் பிறகு களப்பிரர் இடையீட்டால், தமிழக அரசியல் வானிலிருந்து சோழ அரச மரபு பைய மறைந்துவிட்டது. ஆந்திர நாட்டில் ஆந்திரச் சோழ அரச மரபு ஒன்று கி.பி. நான்காம் நூற்றாண்டில் தோன்றியுள்ளதைக் காணுகின்றோம்.

# குறிப்புகள்

1 யவனர், அரபுநாட்டுக்கு மேற்கிலுள்ள செங்கடலையும், அதற்கு இப்பால் உள்ள பாரசீகக் கடலையும், அதற்கப்பால் உள்ள அரபிக் கடலையும், குமரிக் கடலையும், குண கடலையும் செங்கடல் (எரித்திரையக்கடல்) என்று கூறினார்கள்.

2 கடல் கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம் – வடதிசையில்
ஏணாட்டுப் பண்ணை இருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல் (பழம்பாடல்)

3 புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலைக்கு மேற்கில் தொடங்கி, அறந்தாங்கிக்குத் தென்மேற்குப் பகுதியில் ஓடி, மணல்மேல்குடி என்னும் ஊருக்கு வடபால் கடலில் கலக்கிறது.

4 இப்போதுள்ள தான்தோன்றி மலைப் பகுதி சங்க காலத்தில் 'தாமான் தோன்றிக்கோன்' என்னும் அரசனால் ஆளப்பட்டது. அவன் காலத்தில் கிள்ளிவளவன் என்னும் சோழ அரசனும் ஆண்டான் (புறம் 399). இந்த நிலை மேற்கண்ட உய்த்துணர்வுக்கு இடமளிக்கிறது.

5 வேங்கடசாமி, மயிலை சீனி, சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள் (சங்ககாலத்து நகரங்கள்), பக். 126-150.

6 அந்தச் சிறைச்சாலைக்குக் குடவாயில் கோட்டம் என்று பெயர். சோழன் செங்கணான், சேரமான் கணைக்கால் இரும்பொறையைப் போரில் சிறைப்பிடித்துக் கொண்டுவந்து குடவாயில் சிறையில் அடைத்துவைத்தான் என்று கூறப்படுவது இந்தச் சிறைச்சாலை போலும்.

7 தஞ்சை மாவட்டம் திருவிடைக்கழி என்னும் ஊரை அடுத்துள்ள திருக்களாச்சேரி என்பது திருக்குராச்சேரி என்பதன் திரிபு வழக்கு என்பது கோயிலின் தலவிருட்சம் குராமரமாக இருப்பதனால் உய்த்துணரக் கிடக்கிறது. (செந்தமிழ்ச் சொல்வி 40, பக். 13, 79). 'துஞ்சிய' என்பதற்கு ஒய்வு எடுத்துக்கொண்ட என்னும் ஒரு பொருளும் உண்டு.

8 வரதராசனார், மு., தமிழ் இலக்கிய வரலாறு, ப. 5.

9 Mukerji, R.K., The Fundamental Unity of India, p.54.

10. Sircar, D.C. (ed), Inscriptions of Asoka, pp. 47, 58.

11 Mendis, G.C., 'Ceylon' in A Comprehensive History of India, Vol. 2, The Maurya and Satavahanas, p. 579.

12 Gerini, Col., Researches, pp. 85-90.

13 Bhandarkar, D.R., Ancient India, p. 89.

14 துரையரங்கனார், மொ.அ., சங்க காலச் சிறப்புப் பெயர்கள், பக். 227.

15 Ramaswami Aiyar, L.V. Collected Papers, p.42.

16 துரையரங்கனார், மொ.அ., மு.கு.நூ., பக். 228-230.

17 இவ்வாறு கொள்ளின் இந்தச் சோழன் சேர அரசன் கருவூருக்கு மேற்கில் ஆண்டான் என்று முடியும். சோழ அரசன் சார்பில் பழையன் என்பவன் போர் (திருப்பூர்)ப் பகுதியை ஆண்டு கொண்டிருந்ததையும் அந்நாட்டை ஆண்ட சோழ அரசன் ஒருவன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி என்று பெயர் பெற்றிருந்ததையும் எண்ணும்போது கொடுமுடியில் இருந்து கொண்டு சோழ அரசன் ஒருவன் அரசாண்டான் என்று கூறுவது இயல்பாகவே முடியும். அன்றியும் அந்துவன் என்னும் சேர அரசனின் தலைநகரான கருவூர் மேற்குக் கடற்கரையை அடுத்த கருவூராகவும் இருக்கலாமன்றோ? அந்துவனுக்குச் சமகாலத்துச் சேர அரசனான உதியஞ்சேரல் மேற்குக் கடற்கரைப் பகுதியில் அரசாண்டான் என்று கொள்வதால், அந்துவனது தலைநகரான கருவூரைக் கொங்குநாட்டுக் கருவூர் என்று கருதுகிறோம்.

18 இந்த ஊர் 'திருப்போர்ப்புறம்' என்றும் சுட்டப்படும்; செங்கணானுக்கும் கணைக்கால் இரும்பொறைக்கும் இவ்விடத்தில்தான் போர் நடந்தது.

19 உறையூருக்கு அருகில் காவிரி ஆறும், உய்யக்கொண்டான் ஆறும் ஒன்றுகூடுகின்றன. இந்த இடத்தில் இக்காலத்தில் ஒரு மண்டபம் உள்ள இடத்தில்தான் அக்காலத்தில் கோப்பெருஞ்சோழன் அருநிழலில் அமர்ந்து உயிர்விட்டான் என்பர்.

20 இக்கருத்தினை ஏற்றுக்கொள்ள இயலாது. பழமொழி நானூற்றில் (239 : 1-2).

'சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும்
பிடர்த்தலைப் பேரானைப்பெற்று'

என வருகிறது. இந்தப் பிடர்த்தலையாரை நச்சினார்க்கினியர் என்னும் உரையாசிரியர் கரிகாலனுடைய தாய்மாமன் எனச் சுட்டுகிறார். (ப-ர்) (தமிழ்நாட்டு வரலாறு : சங்க காலம் - அரசியல் என்ற நூலில் பதிப்பாசிரியர் கொடுத்துள்ள குறிப்பு இது. மயிலையாரின் குறிப்பு அன்று. (ப-ர்).

21 கோயில் வெண்ணி - தஞ்சை மாவட்டம்; வெண்ணில் என்பது வெண்ணி என மருவியுள்ளது.

22 இருவரும் ஒருவனே என்பாரும் உண்டு. குளத்தின் பக்கத்தில் இருந்த கூடாரத்தில் (குராப்பள்ளியில்) இறந்தவன் என்று டாக்டர் ஜி.யூ. போப் கூறுவார். காண்க: Tamilian Antiquary, Vol. 29, p. 250, F.N.2.

23 சுந்தரமூர்த்தி நாயனார் தம்முடைய திருத்தொண்டத் தொகையில் 'தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க்கடியேன்.' என்று ஒரு செங்கட் சோழனைக் கூறுகிறார். நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியில் கோச்செங்கட் சோழ நாயனாரைக் கூறுகிறார். இவற்றை அடிப்படையாகக் கொண்டு சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில் கோச்செங்கட் சோழன் ஒருவரே என்று சிலர் கூறியும் எழுதியும் வருகிறார்கள். ஆழ்ந்து நுணுகி ஆராயும் போது இந்த இரண்டு செங்கணான்களும் வெவ்வேறு காலங்களில் இருந்தனர் என்பது தெரிகிறது.

24 கவ்வைமா களிறுந்தி வெண்ணி ஏற்றக்
கழல்மன்னர் மணிமுடிமேல் காகம் ஏறத்
தெய்வவாள் வலங்கொண்ட சோழன் (பெரிய திருமொழி 6-6-3).

25 வெங்கண்மா களிறுந்தி வெண்ணி ஏற்றி
விறல்மன்னர் திறல்அழிய வெம்மா உய்த்த
செங்கணான் கோச்சோழன் (பெரிய திருமொழி 6-6-4)

26 பாரானர் அவர்இவர் என்று அழுந்தை ஏற்றப்
படைமன்னர் உடல் துணியப் பரிமா உய்த்த
தேராளன் கோச்சோழன் (பெரிய திருமொழி 6-6-9)

27 மின்னாடு வேல்ஏந்தும் விளந்தை வேளை
விண்ஏறத் தனிமேல் உய்த்து உலகம் ஆண்ட
தென்னாடன் குடகொங்கன் சோழன் (பெரிய திருமொழி6-6-6)

28 விளந்தை என்பதற்கு 'விளைந்த' என்பதும் பாடம் (பெரிய திருமொழி 6-6-6).

29 களவழிக் கவிதை பொய்கை உரைசெய்ய உதியன்
கால்வழித் தளையை வெட்டிஅர சிட்ட அவனும்
(கலிங். இராச பாரம்பரியம். தாழிசை 18)
உதியன் - சேரன்; இங்குக் கணைக்கால் இரும்பொறையைக் குறிக்கிறது. கால்வழித்தளை – காலில் இடப்பட்ட விலங்கு.

30 கடும்பகட்டு யானைச் சோழர் மருகன்
நெடுங்கதிர் நெல்லின் வல்லம் கிழவோன்
நல்லடி யுள்ளா னாகவும் ஒன்னார் (அகம் 356 : 12-14).

31 விளைபதச் சீறிடம் நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டுஅளை மல்க வைக்கும்
எலிமுயன் றனைய ராகி உள்ளதம்
வளன்வலி யுறுக்கும் உளம்இ லாளர் (புறம் 190 : 1-4).

32 அடைப்புக் குறிப்பில் உள்ள கதைப் பகுதி செவிவழிச் செய்தியை அடிப்படையாகக் கொண்டது. வரலாற்று உண்மையன்று.

33 மாவண் கடலன் (அகம் 81 : 13)
மாவண் கழுவுள் (அகம் 365 : 12)
மாவண் தித்தன் (புறம் 352 : 9)
மாவண் பாரி (புறம் 236 : 3 பதிற் 61 : 8)
மாவண் புல்லி (அகம் 61 : 12, 359 : 12)
மாவண் தோன்றல் (புறம் 121 : 4)
அகம் 394 : 12 (தலைமகன்) என்னும் தொடர்களையும் ஒப்புநோக்கி எண்ண வேண்டியுள்ளது.

34 பாடலில் 'பாண்டில்' என்றே உள்ளது. இச்சொல்லுக்குக் 'காளை' என்பது பொருள். காளையோடு பொருதான். எனின் வெற்றிக் கொடி நாட்டினான் என்பது பொருளின்றி முடியுமாகையால், ஏற்புடை வழியில் பாண்டிய அரசன் என்று கொள்ளப்பட்டது.

35 'அரியல்அம் புகவின் அம்தோடு' – குறுந். 258 : 5. புகா – உணவு, அரி – அரிசி. அரி அல்லாத அழகிய புகா - யானை. எனவே, கொல்லிமலை மக்கள் யானைக் கோட்டை விற்று வாழ்ந்த நிலையை ஓரி வலாற்றில் கண்டு ஒப்புநோக்கலாம்.

36 McCrindle, Indian Antiquary, Vol. VIII, p. 145.

37 Paranavitane, History of Ceylon, Vol. I, pp. 124-126, 181-185.

★★★

# பாண்டியர்

பாண்டிய நாடு தமிழகத்தின் தென்கோடியில் கிழக்கே வங்காளக்குடாக் கடலையும் தெற்கே குமரிக் கடலையும் மேற்கே அரபிக் கடலையும் எல்லைகளாகக் கொண்டிருந்தது. யவனர் இம் மூன்று கடல்களையும் செங்கடல் என்னும் பொருட்பட எரித்திரையக்கடல்[1] என்று அழைத்தனர். பாண்டி நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையில் கடல் உள்ளது. இராமேசுவரத்திற்கு வடபால் உள்ள கடற்பகுதி 'பாக்' கடலிணைப்பு என்றும் தெற்கிலுள்ள சிறுபகுதி 'மன்னார் வளைகுடா' என்றும் வழங்கப்படுகின்றன. இக் கடற்பகுதிகளைப் பெரிபுளூஸ் நூலில் 'ஆர்கலஸ்' (Argalus) என்றும் தாலமி ஆர்கலிக் கடல் (Orgalic sea.) என்றும் குறிப்பிடுகின்றனர். இதனால் 'ஆர்கலிக் கடல்' என்னும் பெயர் இப்பகுதிக்கு வழங்கியதாகக் கொள்ளலாம்.[2]

இப்போது இராமேசுவரம் இருக்கும் பாம்பன் தீவு முற்காலத்தில் பாண்டிய நாட்டோடு இணைந்திருந்தது. நானூறு ஆண்டுகளுக்கு முன் போர்ச்சுகீசியர் வந்து வாணிகம் செய்த காலத்தில் பெரும்புயல் ஒன்று அடித்து இந்நிலப்பகுதி கரைந்து தீவாக உருக்கொண்டது. ஆகையால் சங்க காலத்தில் இந்தத் தீவு பாண்டிய நாட்டோடு இணைந்திருந்தது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் இப்போதுள்ள இலங்கைத் தீவும் பாண்டிய நாடும் இணைந்து ஒரே நிலப்பரப்பாக இருந்தது. கன்னியாகுமரிக்குத் தெற்கிலும் கிழக்கிலும் அக்காலத்தில் நிலங்கள் இருந்தன. பின்னர் அவ்வப்போது தோன்றிய புயல்களினாலும் கடல் கொந்தளிப்பினாலும் கரைந்தும் சிதைந்தும் அந்நிலப் பகுதிகள் மறைந்துபோயின. இப்பொழுது இலங்கை என்று வழங்கப்பெறும் நிலப்பகுதி சங்க காலத்தில் 'ஈழம்' எனப் பெயர் பெற்றிருந்தது.


இலங்கை தனியாகப் பிரிந்து போன பிறகும் எஞ்சியிருந்த நிலப்பகுதிகளில் பல கொஞ்சம் கொஞ்சமாகக் கடலில் மூழ்கிப் போயின. முழுகிப்போன பகுதிகளில் பல பாண்டியருடைய ஆட்சியில் இருந்தன. பாண்டிய அரசர்கள் அமைத்திருந்த தலைச்சங்கம், இடைச்சங்கம் என்ற இரண்டு தமிழ்ச் சங்கங்களும் கடலில் மூழ்கிப்போன நாட்டில் இருந்தன என்று பழைய செவிவழிச் செய்தி கூறுகிறது. சிலப்பதிகாரமும், கலித்தொகையும் இறையனார் அகப்பொருள் உரைப்பாயிரமும் பாண்டிய நாட்டின் தெற்கே பரவியிருந்த நிலப்பகுதிகள் கடலில் மூழ்கிப் போனதைப்பற்றிக் கூறுகின்றன.[3] இலங்கை வரலாற்றைக் கூறும் மகாவம்சமும் இச்செய்தியை வலியுறுத்துகிறது (மகாவம்சம் 22 : 20). அக்காலத்திலும் குமரித்துறை புண்ணிய தீர்த்தமாகக் கருதப்பட்டது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் குமரித் துறையில் இருந்து இலங்கைப் பக்கமாகக் கடலில் இடையிடையே பாறைக்கற்கள் காணப்பெற்றதை மணிமேகலை கூறுகிறது (மணிமே. 5 : 37). இந்திய நாட்டு மக்கள் காசிக்குச் சென்று கங்கையில் நீராடிய பிறகு குமரித் துறையிலும் நீராடினர். பாண்டி நாட்டிற்குத் தெற்கே இலங்கை வரையில் இருந்து பின்னர் மூழ்கிப்போன நிலம் 'லெமூரியா' என்றும் 'குமரிக்கண்டம்' என்றும் கூறப்படுகிற பழங்காலப் பெரிய நிலப்பரப்பு அன்று. இப்பொழுது இந்தியப் பெருங்கடல் என்று கூறப்பெறுகிற பெரிய நிலப்பரப்பு மிகப்பழைய காலத்தில் ஆப்பிரிக்காக் கண்டம் முதல் ஆஸ்திரேலியா வரையில் பரந்த பெரிய நிலமாக இருந்தது என்றும் அதற்கு 'லெமூரியா' என்னும் பெயர் வழங்கியதென்றும் பின்னர் அக்கண்டம் மறைந்து போய் இந்தியப்பெருங்கடல் தோன்றியதென்றும் நிலப்பொதியியல் அறிஞர்கள் கூறுகின்றர். மிகப் பழங்காலத்தில் இருந்த லெமூரியாக் கண்டம் வேறு; சங்க காலத்தில் கன்னியாகுமரிக்கு அருகிலே இருந்து மறைந்து போன நிலப் பரப்பு வேறு. இவை இரண்டையும் ஒன்றாகக் கூறுவது கூடாது.[4]

## மேற்கு எல்லைப் பகுதி

சங்க காலத்துப் பாண்டிய நாடு மேற்குக் கரைப் பக்கத்தில் இப்போதைய தென்திருவாங்கூர் வரையில் பரவி இருந்தது. பொதிகைமலை நாடும் நாஞ்சில் நாடும், தென்திருவாங்கூர் வரையில் பாண்டிய நாட்டுடன் சேர்ந்திருந்தன. ஆய் என்னும் வேள் அரசர் பொதிகைமலை நாட்டை அரசாண்டார். பாண்டிய அரசர்களைச் சேர்ந்திருந்த ஆய்ச் சிற்றரசர்களின் நாடு மேற்குக் கடற்கரை வரையில் விரிந்து இருந்தது.

## வடக்கு எல்லைப் பகுதி

முதுகோடி (தனுக்கோடி) பாண்டிய நாட்டைச் சேர்ந்திருந்தது ('வென்பேற் கவுரியர் தொன்முது கோடி' - அகம் 70 : 13). தென்வெள்ளாறும் அதன் பகுதியாகிய கொடும்பாளூரும் பாண்டிய நாட்டின் வட எல்லைகளாகும். கொடும்பாளூரையாண்ட குறுநில மன்னர்கள் இருங்கோவேள் என்பவராவர்.[5] திண்டுக்கல் பாறையும் கோடைக்கானல் மலைகளும் பாண்டிய நாட்டின் வடக்கே இருந்தன.



கோடைக்கானலில் தென்னவன் மறவனான கோடைப்பொருநன் பாண்டியருடைய சேனதிபதியாக இருந்தனன் (அகம் 13 : 10). பன்றிமலைகள் எனப்படும் வராக மலைகளும் பாண்டியநாட்டின் வட பகுதியில் இருந்தன. அரபிக் கடலை அடுத்திருந்த வேணாடு சங்க காலத்தில் பாண்டிய நாட்டைச் சேர்ந்திருந்தது.

# பாண்டிய நாட்டு மலைகள்

## இருங்குன்றம்

இருங்குன்றம் அக்காலத்தில் கீழ் இரணியமுட்ட நாட்டைச் சேர்ந்திருந்தது. ஓங்கிருங்குன்றம், கேழிருங்குன்றம், மாலிருங்குன்றம், திருமால்குன்று, திருமால் இருஞ்சோலை, சோலைமலை முதலான சிறப்புப் பெயர்கள் இதற்கு வழங்கின. இம்மலையில், கண்ணன், பலராமன் ஆகிய இருபெருந் தெய்வங்களுக்கும் கோயில்கள் இருந்தன (பரிபா. 1 : 1-5, 2 : 19-21, 13 : 7-33, 15 : 13-14). புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி என்னும் மூன்று பொய்கைகள் இங்கிருந்தன (சிலப். 11 : 94-97). சிலம்பாறு அல்லது நூபுரகங்கை இம்மலையில் தோன்றிப் பாய்ந்தது. சுமார் 16 கி.மீ. நீளமுள்ள இம்மலைகளின் குகைகளில் பல சமண முனிவர்கள் வாழ்ந்தனர்.

## திருப்பரங்குன்றம்

சங்ககாலத்துப் புலவர்களால் சிறப்பித்துப் பாடப்பெற்ற தெய்வம் திருப்பரங்குன்றத்து முருகனாகும். இக் குன்றத்தின் உச்சியில் இயற்கையாக அமைந்துள்ள குகைகளில் முனிவர்களின் கற்படுக்கை களும் பிராமி எழுத்துக் கல்வெட்டுகளும் உள்ளன. இங்குள்ள தாமிழி எழுத்துக் கல்வெட்டுகளில் சங்க காலத்திய நல்லந்துவனார் பெயர் காணப்படுகிறது.[7]

## ஆனைமலை

சங்கச் செய்யுள்களில் ஆனைமலையைப்பற்றி ஒன்றும் சொல்லப் பெறவில்லை எனினும் சங்ககால எழுத்துகள் இம்மலையில் உள்ளன.

## பறம்பு மலை

பாண்டிய நாட்டில் இருந்த இம்மலைக்குத் தலைவன் பாரி வள்ளலாகும்.

## பொதிகை மலை

பொதியில், பொதியம் என்று வழங்கப்பெறும் இம்மலைக்குத் தென்னவன் பொதியில், ஆய்பொதியில் என்னும் பெயர்கள் வழங்கப்பெறுவதால் இது பாண்டிய நாட்டு மலை என்பது தெளிவாகும். சங்கப் புலவர்களில் ஒருவராகிய அகத்தியர் பொதிகை மலையில் இருந்ததாகக் கூறப்படும் கதை கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தோன்றியது. சிலப்பதிகாரத்தில் கூறப்பெறும் பொதியில் முனிவர் அகத்தியர் அல்லர். வடமொழியில் உள்ள பாகவத புராணத்தில் பொதிகை மலையில் மலயத்துவச பாண்டியன் தவம் செய்ததாகக் கூறுகிறதேயன்றி அகத்தியர் தவம் செய்ததாகக் கூறவில்லை.

## கழுகு மலை

மதுரை மாவட்டம் மீனாட்சிபுரத்தை யடுத்துள்ள இந்த மலையைப்பற்றிச் சங்கப் பாடல்களில் குறிப்புகள் இல்லை. எனினும், சங்க காலத்துக் கல்வெட்டுகள் இந்த மலையில் காணப்பெறும் சமணர் குகைகளில் உள்ளன. பாண்டிய அரசன் நெடுஞ்செழியன் பற்றியும் அவனது பகைவன் கடலன்வழுதி பற்றியும் அக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

## ஆறுகள்

வையை, சிலம்பாறு, பஃறுளி, குமரி ஆகிய ஆறுகள் பாண்டிய நாட்டிய பாய்ந்தன என்று சங்கப்பாடல்களால் அறிகிறோம். இவற்றுள் குமரியாறும் பஃறுளியாறும் கடலில் மூழ்கிப்போன நிலப்பகுதியில் பாய்ந்தன. வையையாற்றிற்கு வைகை என்னும் பெயரும் வழங்கியது. இவ்வாற்றின் தென் கரையில் மதுரை நகரம் இருந்தது. இந்நகரம் வட்ட வடிவமாகத் தாமரைப் பூப்போல் அமைக்கப்பட்டிருந்தது. இந் நகரத்தின் கோட்டைச்சுவருக்கு வெளியே அதைச் சூழ்ந்திருந்த அகழியில் வையை நதியின் நீர்பாய்ந்தது (பரிபா. 12 : 9-10, கலி. 67 : 3-4). வைகையில் திருமருதந்துறை என்னும் இடத்தில் சங்ககாலத்து மக்கள் புதுப்புனலில் நீராடி மகிழ்ந்தனர்.

## சிலம்பாறு

திருமாலிருஞ்சோலை மலையில் தோன்றிப் பாய்ந்தது (சிலப். 11 : 108 : பரிபா. 15 : 21-23).

## பாஃறுளியாறு

இது கன்னியாகுமரிக்குத் தெற்கிலிருந்த ஓர் ஆறு. கி.பி. முதல் நூற்றாண்டிற்கு முன் கடல்கோளினால் மறைந்து போயிற்று. குமரியாறும் மேற்கூறப்பெற்ற கடல்கோளினால் மறைந்தது.[5]

# துறைமுகப் பட்டினங்கள்

சங்க காலத்தில் பாண்டிய நாட்டில் நிலைபெற்றிருந்த தொண்டி, மருங்கூர்ப்பட்டினம், கொற்கை, குமரி, விழிஞம் முதலிய துறைமுகங்களைப்பற்றிச் சற்று விரிவாகக் காணலாம். இக்காலத்தில் தொண்டி என்ற துறைமுகங்கள் இரண்டில் ஒன்று மேற்குக் கரையில் சேர நாட்டிலும் மற்றொன்று பாண்டிய நாட்டுக் கிழக்குக் கரையிலும் இருந்தன. கிழக்குக் கரையிலிருந்த தொண்டி, பாண்டிய நாட்டின் வடக்கு எல்லையில் இருந்தது. இத்துறைமுகத்தில் கிராம்பு, இலவங்கம், தக்கோலம், சாதிக்காய், கற்பூரம் முதலிய நறுமணப் பொருள்கள் இறக்குமதி செய்யப் பெற்றன (சிலப். 14 : 108-112). இத் துறைமுகப்பட்டினம் பிற்காலத்தில் மறைந்து இப்போது இராமநாதபுரம் மாவட்டத்தில் தொண்டி என்னும் சிற்றூராக இருக்கிறது. மருங்கூர்ப்பட்டினம் மருங்கை என்றும் வழங்கியது. இதற்கு மேற்கில் ஊணூர் என்னும் இடமும், அதைச் சூழ்ந்து மதிலும் அம்மதிலைச் சூழ்ந்து நெல்வயல்களும் இருந்தன (அகம் 220 : 13). நெல் வயல்கள் மிக்கிருந்த ஊர் சாலியூர். இதற்கும் நெல்லினூர் என்னும் பெயர் பெற்றிருந்த ஊருக்கும் தொடர்பு இருந்திருக்கலாம். நெல்லினூர்த் துறைமுகத்தில் பெரிய நாவாய்கள் தங்கிச் சென்றன. தாலமி என்ற யவன ஆசிரியர் 'சாலோர்' என்று குறிப்பிடும் இடம் சாலியூர் ஆகலாம்.[8]

## கொற்கை, குமரி, விழிஞம்

உலகப் புகழ் பெற்ற பாண்டி நாட்டுத் துறைமுகப்பட்டினம் கொற்கையாகும். இத்துறைமுகம் ஒரு வளைகுடாவில் இருந்ததனால் முத்துக் குளிக்கும் இடமாகவும் சங்கு எடுக்கும் இடமாகவும் விளங்கியது. கொற்கையில் கிடைத்த முத்துகள் உலகப் புகழ் பெற்றவையாகும். சங்கப் புலவர்களும் இங்குக் கிடைத்த முத்துகளின் பெருமையைப் புகழ்ந்துள்ளனர். கொற்கை, பாண்டிய இளவரசர் களுடைய இருக்கையாகவும் திகழ்ந்தது. யவனர்கள் 'கொல்கொய்' (Kolkei) என்று வழங்கிய துறைமுகம் கொற்கையேயாகும் கடல் கொண்ட கவாடபுரம் கொற்கையாக இருக்கலாம் எனச் சில அறிஞர்கள் கருதுவர். பாண்டிய நாட்டின் தென் கோடியில் கன்னியாகுமரிக் கருகில் குமரித் துறைமுகம் இருந்தது. இது துறைமுகமாகவும் புனித நீராடும் இடமாகவும் கருதப்பெறுகிறது. தமிழ்நாட்டவரும் மற்றையோரும் இங்குப் புனித நீராடுவதுண்டு. குமரித் துறைமுகத்திற்கருகில் குமரி என்னும் ஊரும் அங்கு ஒரு கப்பல் அமைக்கும் தொழிற்சாலையும் இருந்ததென்று யவனர்களுடைய குறிப்புகளிலிருந்து அறிகிறோம். பாண்டிய நாட்டின் மேற்குக் கடற்கரையில் ஆய் நாட்டில் விழிஞம்

என்னும் துறைமுகப்பட்டினம் இருந்தது. ஆய் நாட்டுக் குறுநில மன்னர்கள், பாண்டியர்களுக்கு அடங்கிய சிற்றரசர்கள் ஆவர். ஆய் நாட்டின் 'எலங்கோன்' (Elankon of Ptolomy) என்னும் துறைமுகம் இருந்ததென்று தாலமி என்னும் ஆசிரியர் கூறியுள்ளது விழிஞம் துறைமுகமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

# முற்காலப் பாண்டிய நாட்டு நகரங்கள்

## கடல்கொண்ட மதுரை

கன்னியாகுமரிக்குத் தெற்கே இருந்த நிலப்பரப்பில் ஆதி மதுரை இருந்து பின்னர்க் கடலில் மூழ்கியது.[10] இக்கடல்கோளுக்குப் பிறகு கவாடபுரம் பாண்டியர்களுடைய தலைநகராயிற்று.[11] இக் கவாடபுரத்தில் தான் இடைச்சங்கம் இருந்ததெனச் செவிவழிச் செய்தி கூறுகிறது. இரண்டாவது கடல்கோளில் இக்கவாடபுரம் அழிந்து போயிற்று. கவாடபுரத்தில் முடத்திருமாறன் என்ற பாண்டிய அரசன் இருந்ததாகவும் அவ்வரசன் வையையாற்றங்கரையில் மதுரை நகரத்தை அமைத்து அதைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தான் எனவும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. (இறையனார் அகப்பொருள் உரைப்பாயிரம்).

## கூடல் நகர்

கவாடபுரம் கடலில் மூழ்கிய பிறகு கூடல் நகரம் பாண்டிய நாட்டின் தலைநகரமாயிற்று. இந்நகரம் தாமரை மலர்போல் வட்ட வடிவமாக அமைக்கப் பெற்றதென்றும் அம் மலரின் நடுவிலுள்ள பொகுட்டுப் போலப் பாண்டியனுடைய அரண்மனை இருந்ததாகவும் அரண்மனையைச் சூழ்ந்திருந்த தெருக்கள் தாமரை மலரின் இதழ்களைப் போலவும் அந்நகரத்தில் வாழ்ந்த மக்கள் மலரில் இருந்த மகரந்தப் பொடிபோல இருந்தனர் எனவும் கூறப்பெறுகிறது (பரிபா. தி. 7 : 1-5). மதுரை நகரத்தைச் சூழ்ந்து மூன்று மதில்கள் ஒன்றுக்குள் ஒன்றாக இருந்தன. கோட்டை மதிலுக்கு வெளியே மிளைக்காடு நிறைந்த காவற்காடு இருந்தது. மிளைக்காட்டைச் சூழ்ந்து அகழி இருந்தது. கோட்டை வாயிலின் மேலே பாண்டியருடைய கயற்கொடி பறந்தது. கையில் பந்து ஏந்திய பெண்பாவை உருவங்கள் கோட்டை வாயிலில் தொங்கிக் கொண்டிருந்தன. கூடல் நகரத்திற்கு மேற்கே திருப்பரங்குன்றம் இருந்தது (முருகு. 67-77). கோட்டை வாயிலில் யவன வீரர்கள் காவல் புரிந்தனர். அவர்களுடைய தோற்றம் அஞ்சத்தக்கதாக இருந்தது (சிலப். 14 : 67). தாலமி 'மதௌர' என்னும் பெயரால் இந் நகரைச் சுட்டியுள்ளார். மதுரை நகரக் கோட்டையைப் பகைவர் களிடமிருந்து காப்பாற்றுவதற்காக மதிலின்மீது போர்க்கருவிகள் வைக்கப்பட்டிருந்தன (சிலப். 15 : 207-16).

மதுரைக்கு அருகில் மோகூர் இருந்தது. பிற்காலத்தில் இது 108 வைணவத் திருப்பதிகளில் ஒன்றாகத் திருமோகூர் எனப் பெயர் பெற்றது. பாண்டிய மன்னர்களின் படைத் தலைவனாகிய பழையன் மாறன் இவ்வூர்ப் பகுதியின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருந்தான். இவனது காவல்மரமாகிய வேம்பு இவ்வூரில் ஓங்கி வளர்ந்திருந்தது. சேரன் செங்குட்டுவன் பழையனை வென்று இதனை வெட்டிச் சாய்த்தான்.

தங்கால் என்னும் ஊர் திருவில்லிபுத்தூருக்கு அருகில் உள்ளது. இது திருத்தங்கால் என்றும் அழைக்கப்பெறுகிறது. தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார், தங்கால் ஆத்திரேயன், செங்கண்ணனார் ஆகிய சங்கப் புலவர்கள் இவ்வூரைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். அலைவாய் எனப்படும் திருச்செந்தில் பாண்டிய நாட்டின் கீழைக்கரை ஓரத்தில் உள்ளது. சங்க காலம் முதல் இங்கு முருகன் கோயில் ஒன்று இருந்து வருகிறது. பிசிர் என்பது பாண்டிய நாட்டில் இருந்த மற்றோர் ஊராகும். இவ்வூரில் வாழ்ந்த புலவர் பிசிராந்தையாருக்கும் சோழ நாட்டரசனாகிய கோப்பெருஞ்சோழனுக்கும் நெருங்கிய நட்பு இருந்தது (புறம் 215 : 6-7).

இவை சங்க காலத்துப் பாண்டிய நாட்டின் எல்லைகளையும் அந்நாட்டில் சிறந்து காணப்பெற்ற மலைகள், ஆறுகள், பட்டினங்கள், நகரங்கள் ஆகியவற்றையும் பற்றிச் சங்க இலக்கியச் சான்றுகளால் அறிவனவாகும். இனி அக்காலத்துப் பாண்டிய மன்னர்களைப் பற்றி ஆராய்வோம்.

# பாண்டிய மன்னர்களின் குலம்[12]

## 1. அயலகக் குறிப்புகளால் அறியப்படும் பாண்டிய மன்னர்கள்

பாண்டிய மன்னர்களைப் பற்றிய வரலாறு தொடர்ச்சியாகவும் வரன் முறையாகவும் கிடைக்கப் பெறவில்லை. அயல் நாட்டவருடைய குறிப்புகளைக் கொண்டு சில பாண்டிய மன்னர்களின் வரலாறுகளை அறிய முடிகிறது. இவர்களைப் பற்றிச் சங்க இலக்கியங்களில் குறிப்புகள் இல்லை.

### கி.மு. நான்காம் நூற்றாண்டுப் பாண்டியன்

இலங்கை நாட்டின் முதல் அரசனான விசயனுக்குப் பெண் கொடுத்த பாண்டியன் ஒருவனைப்பற்றித் தீபவம்சம், மகாவம்சம் ஆகிய இலங்கை வரலாற்று நூல்கள் கூறுகின்றன. விசயன் தன்னுடைய 700

தோழர்களோடு வட இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து அங்கு அரசு செலுத்தி வந்த இயக்கர் என்னும் இனத்தாரை வென்று தனது அரசை நிறுவினான். விசயனுக்கு முடிசூட்ட விரும்பிய பாண்டிய அரசன் அவனது புதல்வியை மணம் பேசித் திருமணம் செய்வித்தனன். ஆனால், விசயனுக்கு மகட்கொடை செய்த பாண்டிய அரசனுடைய பெயர் இவ்வரலாற்று நூல்களில் குறிப்பிடப் பெறவில்லை. மற்றும் விசயனுக்குப் பாண்டியன் மகளைத் திருமணம் செய்வித்த அவனுடைய 700 தோழர்களும் பாண்டிய நாட்டுப் பெருங்குடியிலிருந்து மகளிரை மணந்துகொண்டனர் என்றும் இந்நூல்கள் கூறுகின்றன. மணமகளான பாண்டிய குமாரியையும் மற்றும் பிற மணமகளிரையும் படைச்சிறப்புடன் இலங்கைக்கு அனுப்பிவைத்தான். அவர்களோடு தன் நாட்டிலிருந்து கொல்லர், தச்சர், உயவர், குயவர் முதலான பதினெட்டு வகையான தொழிலாளர்களையும் அவர்களுடைய குடும்பத்தினர் ஆயிரவரையும் இலங்கைக்கு அனுப்பி வைத்தான். இலங்கை மன்னனாகிய விசயன் தன்னுடைய மாமனாராகிய பாண்டியனுக்கு ஆண்டுதோறும் இரண்டு இலட்சம் பொன் பெறுமானம் உள்ள முத்துகளைக் காணிக்கையாக அனுப்பிக் கொண்டிருந்தான். இந்நிகழ்ச்சிகள் கி.மு. நான்காம் நூற்றாண்டில் நடந்ததாக இலங்கை வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இச்செய்திகளை உறுதி செய்யக்கூடிய சான்றுகள் தமிழ் நாட்டில் கிடைக்கவில்லை. இலங்கை மன்னன் விசயனுக்கு மகட்கொடை அளித்ததைத் தவிர அப்பாண்டிய மன்னனைப் பற்றிய வேறு செய்திகள் தெரியவில்லை.

## பாண்டிய அரசி

சந்திரகுப்த மௌரியருடைய ஆட்சிக் காலத்தில் கி.மு.304இல் செலியூகஸ் நிகேட்டாருடைய தூதனாகப் பாடலிபுத்திரத்தில் இருந்த மெகஸ்தனிஸ் தாம் எழுதிய இண்டிகா என்னும் நூலில் பாண்டிய நாட்டில் ஒரு பெண் ஆட்சி செய்தாள் என்று கூறியுள்ளார். அவளது பெயர் தடாதகைப் பிராட்டி என்று தமிழ்ப் புராணங்கள் கூறினாலும் அவளுடைய சரியான பெயர் தெரியவில்லை.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அரசாண்ட அசோகன் தனது பாறைக் கல்வெட்டுகளில் சேர, சோழ, பாண்டிய அரசர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறான். (Rock Edicts II and XIII). தன்னுடைய தருமத்தை மக்களிடையே பிரசாரம் செய்யவும் மக்களுக்கும் விலங்குகளுக்கும் உதவி செய்வதற்கும் பௌத்தப் பிக்குகள் தமிழ் நாட்டிற்கு அனுப்பப் பெற்றதாகக் கூறியுள்ளான். இக்கல்வெட்டுகள் பாண்டியர்கள் என்று குறிக்கின்றனவேயன்றிக் குறிப்பிட்ட அரசனுடைய பெயரைக் கூறவில்லை.

கலிங்க நாட்டை அரசாண்ட காரவேலன் ஏறத்தாழ கி.மு.185இல் தென்னாட்டின் மீது படையெடுத்து வந்து தமிழ் நாட்டு மன்னர்களை வென்று அவர்களிடமிருந்து பொன், மணி, முத்துகள் முதலியவற்றைப் பெற்றான் என்று கூறும் அத்திகும்பா கல்வெட்டிலும் பாண்டிய மன்னனுடைய பெயர் குறிப்பிடப்பெறவில்லை.

ஆகையால், இயற்பெயர் தெரியாத இந்தப் பாண்டிய அரசனும் அரசியும் அயலகக் குறிப்புகளால் அறியப்படும் அரச அரசியர் ஆவர்.

# 2. செழியன் என்னும் பெயருடைய அரசர்கள் செழியன்

இப்பெயர் பொதுவாகத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனையே சுட்டுவதாகும். தெளிவாக அறியப்பெறும் செய்திகளின் அடிப்படையில் சமணரைப் பேணியவன், ஆரியப்படை கடந்தவன், தலையாலங்கானத்துச் செருவென்றவன் ஆகிய மூவரைக் கால வரிசைப்படக் கூறலாம். எனினும், இவர்களது ஆட்சிக் காலங்களுக்கு இடையில் நிலவிய நிகழ்ச்சிகளைப் பற்றியோ அரசர்களைப்பற்றியோ தெளிவாக அறியமுடியவில்லை.

## சமணரைப் பேணிய நெடுஞ்செழியன்

இவனைப் பற்றிய செய்திகள் மீனாட்சிபுரம் தாமிழிக் கல்வெட்டுகளால் அறியப்பெறுகின்றன. வானநூல் அறிஞரான நந்தி என்னும் சமணப் பெரியாருக்கு, இந்த நெடுஞ்செழியன் மலைக் குகையில் கற்படுக்கைகளைச் சமைத்துக் கொடுத்தான் என்ற செய்தியை இக்கல்வெட்டால் அறியமுடிகிறது. மேலும், இக்கல்வெட்டில் கடலன் வழுதி என்னும் பெருந்தச்சனைப் பற்றியும் குறிப்பிடப் பெற்றுள்ளது. இத்தச்சன் கற்படுக்கைகளின் தரையைச் செம்மைப்படுத்தினான். சடிகன், இளஞ்சடிகன் ஆகிய இருவருடைய பெயர்களும் இக்கல்வெட்டில் காணப்பெறுகின்றன.[13]

## ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

இவன் பாடிய பாடலொன்று புறநானூற்றில் (183) காணப் பெறுகிறது. இப்பாடல் கல்வியின் சிறப்பைச் சித்திரிக்கிறது. இதில் அக்காலத்திய நான்கு வருணங்களாகப் பிரிக்கப் பெற்றிருந்த குறிப்பும்

காணப்பெறுகிறது.[14] கோவலனைக் கொலை செய்தவன் என்று சிலப்பதிகாரத்தில் (23 கட்டுரை 14-18) கூறப்படும் பாண்டிய அரசன்,

> வடவாரியர் படைகடந்து
> தென்றமிழ் நாடு ஒருங்கு காணப்
> புரைதீர் கற்பின் தேவி தன்னுடன்
> அரைசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன்
> நெடுஞ்செழியன்

என்று குறிப்பிடப்படுகிறான். இவ்வாறு குறிப்பிடப்பெறும் 'ஆரியப்படை கடந்த' என்னும் தொடரும் புறநானூற்றைத் தொகுத்தவர் குறிப்பிடும் 'ஆரியப் படை கடந்த' என்னும் தொடரும் ஒன்றாக அமைவதால் இவ்விருவரும் ஒருவரே என்று அறிஞர்கள் கருதுகின்றனர். சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் இவனோடு தொடர்புடைய நிகழ்ச்சிகள் இவனது வரலாற்று நிகழ்ச்சிகளே என்று கூறலாம்.

## வார்த்திகனைச் சிறையிட்டது

சோழ நாட்டில் பராசரன் என்னும் பார்ப்பனன் ஒருவன் இருந்தான். அவன் சேர அரசன் ஒருவன் மறையவன் ஒருவனுக்கு வீடுபேறு கொடுத்த செய்தியைக் கேள்விப்பட்டு (பல்யானைச் செல்கெழு குட்டுவன்) அவனைத் தானும் நேரில் கண்டு பரிசில் பெற்றுத் திரும்பினான். வழியில் தங்கால் என்னும் இடத்தில் ஓர் ஆலமரத்தடியில் தங்கி இளைப்பாறினான். அப்போது பார்ப்பனச் சிறுவர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டனர். பராசரன் தன்னோடு வழுவின்றி வேதம் ஓதுபவர்க்கு ஒரு பரிசு நல்குவதாகக் கூறினான். அவ்வூரில் வாழ்ந்த வார்த்திகன் என்னும் அந்தணனின் மகன் வழுவின்றி வேதம் ஓதக் கேட்டுத் தன்னுடைய முத்துப் பூணுலை அச்சிறுவனுக்கு அளித்தான். ஏழை வார்த்திகன் மகனின் மார்பில் விலையுயர்ந்த முத்துப் பூணூலைக் கண்ட அரசுக் காவலர் அரண்மனையில் திருடிய குற்றம் சாட்டி வார்த்திகனைச் சிறையிலிட்டனர்.

வார்த்திகனின் மனைவி கார்த்திகை தன் மகனுக்கு இழைக்கப்பெற்ற கொடுமையை ஐயைக் கோயிலில் முறையிட்டு அழுதாள். ஐயைத் தெய்வம் தன் கோயிற் கதவுகளை அடைத்துக் கொண்டது. தன்னாட்சியில் கொடுங்கோன்மை நிகழ்ந்துள்ளதோ என வினவிப் பாண்டியன் ஆராய்ந்தபோது காவலர் வார்த்திகனுக்கு உண்டாக்கிய துன்பத்தைக் கூறினர். மன்னன் வார்த்திகனை வருவித்து அவனிடம் மன்னிப்பு வேண்டினான். ஐயைக் கோயில் கதவு திறந்துகொண்டது. இங்குக் குறிப்பிடப்படும் மன்னனுடைய பெயரும் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்பது கருதத்தக்கது.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் காலத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் மதுரை நகர் (அரண்மனை) அழியும் என்ற நிமித்திக வாக்கு மக்களிடையே நிலவி வந்தது.[15] அரியணையில் அமர்ந்தபடியே இறந்துபோனமையால் இந்தப் பாண்டியன் அரசு கட்டிலில் துஞ்சிய நெடுஞ்செழியன் என்று பெயர் பெற்றான். வார்த்திகன் நிகழ்ச்சியில் அறியாத மக்களின் சொல்லைக் கேட்டு இவன் கொடுமை செய்தது போலவே கோவலன் நிகழ்ச்சியிலும் அரண்மனைப் பொற்கொல்லன் சொல்லைக் கேட்டு இவன் கோவலனைக் கொன்றுவிடச் செய்கிறான். முன்னர்ச் சிறையில் இருந்து விடுதலையால் அப்பிழை பொறுக்கப் பட்டது. இப்பொழுது கொலையுண்ட உயிருக்கு ஈடாகத் தன் உயிரையே கொடுக்க வேண்டிய நிலை நேர்ந்து விடுகிறது. தன் தவறினை உணர்ந்த போது தனக்குத் தானே தண்டனை விதித்துக் கொண்டு அரியணை யிலிருந்து கீழே விழுந்து உயிர் துறந்தான். பாண்டிமாதேவியும் கோவலன் கொலைக்கு ஒரு வகையில் காரணமாகையால் கணவனுடன் தானும் மாண்டு செங்கோலை நிலை நாட்டுகிறாள்.

### ஆரியப் படையை வென்றது

தமிழ் நாட்டுக்குத் தெற்கிலிருந்த நிலப் பகுதியைக் கடல் கொண்டமையால் தமிழர், தம் நாட்டுப் பரப்பை வடக்கில் விரிவாக்கிக் கொண்டிருந்தனர். அப்பொழுது ஆரியரும் தெற்கில் தம் நாட்டை விரிவுபடுத்திக் கொண்டிருந்தனர். இந்தப் போட்டியில் நிகழ்ந்த போர்களில் நெடுஞ்செழியன் ஆரியப் படைகளை வென்றிருத்தல் வேண்டும். ஆகையால், இவனுக்கு 'ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்' என்னும் பெயர் வழங்கியிருத்தல் வேண்டும். இங்குச் சுட்டப்படும் 'ஆரியர்' தொடக்கக் காலப் பல்லவராக இருத்தல்கூடும்.

## தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் அப்போரில் ஏழு அரசர்களை வென்றவன் ஆவான். வென்வேற் செழியன் என்றும் ஒரு பாடலில் குறிப்பிடப்படுகிறான் ('தமிழ் தலை மயங்கிய தலையாலங் கானத்து, மன்னுயிர்ப் பன்மையும் கூற்றத்து ஒருமையும், நின்னொடு தூக்கிய வென்வேற் செழிய', (புறம் 19 : 2-4). இப்பாடல் பாண்டியன் நெடுஞ்செழியன் மீது பாடப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. எனவே, வென்வேற் செழியன், பாண்டியன் நெடுஞ்செழியன் ஆகிய பெயர்கள் தலையாலங்கானத்துச் செருவென்ற

நெடுஞ்செழியனையே சுட்டுகின்றன. இப்போரில் ஏழுபேரை வென்ற 'பசும்பூட் செழியன்' என்று குறிப்பிடப்படும் அரசனும் இவனே எனத் தெரிகிறது (புறம் 76 : 9). வென்வேற் செழியன் என்னும் பெயர் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுக்குப் பிறகு மதுரையில் அரியணை ஏறிய வெற்றிவேற் செழியன் என்னும் பெயரை நினைவுபடுத்துகிறது ('கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன்' – சிலப். உரைபெறுகட்டுரை). இவன் தொடக்கத்தில் கொற்கை நகரில் இருந்துகொண்டு அரசாண்டமையால் அவன் கொற்கைக் கோமான் என்றும், மதுரையை ஆண்ட அரசன் என்றும் குறிப்பிடப்படுகிறான் ('கொற்கைக் கோமான், தென்புலங் காவலர் மருமான்' – சிறுபாண். 62-63). கொற்கையில் ஆட்சியைத் தொடங்கிய இவன் 'கடுந்தேர்ச் செழியன்' என்றும் 'தென்புலங் காவலர் மருமான்' என்றும் குறிப்பிடப்படுகிறான். மற்றொரு பாடல் 'இயல்தேர்ச் செழியன்', 'நெடுந்தேர்த் தென்னவர் கோமான்' எனவும் குறிப்பிடுகிறது (அகம் 209 : 3-4). தேர் அடை மொழியும் தென்னர் குடித் தலைமையும் சேர்ந்து மேலே கண்ட கருத்துகளை உறதிப்படுத்துகின்றன. மற்றும் 'கொடித்தேர்' என்னும் அடைமொழியாலும் சிறப்பிக்கப்படுகிறான் ('இழையணி நெடுந்தேர்க் கைவண் செழியன்' – அகம் 137 : 13-14). அடுபோர், வெம்போர், மறப்போர், நெடுந்தேர், கடுந்தேர், இயல்தேர், கொடித்தேர், திண்டேர் முதலிய சொற்கள் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனைக் குறிக்கின்றன எனக் கூறலாம். வெற்றி வேற்செழியன் என்பதும் இவனையே உணர்த்தியது என்றும் நினைக்கலாம்.

## நாடு

தொடக்க நிலையில் இவன் கெ ாற்கையைத் தலைநகராகக் கொண்டு அதனைச் சூழ்திருந்த நிலப்பரப்பை ஆண்டு வந்தான். கொற்கையை அடுத்த கடலில் முத்து எடுக்கப்பட்டது. அந்தக் கடற்பகுதியும் இவனாட்சிக்கு உட்பட்டிருந்தது ('முத்தின் தெண்கடல் பொருநன் திண்டேர்ச்செழியன்' – அகம் 137 : 13-14). தென்னர் கோமான் என்றும் தென்புலம் காவல் மருமான் என்றும் இவன் கூறப்படுவதால் தென்பாண்டிநாடு இவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததெனத் தெரிகிறது. ஆலங்கானப் போர் இவனது இளமைப் போர் எனத் தெரிய வருவதால் அப்போருக்குப் பின்னர் இவன் தன்னாட்டின் பரப்பை மேலும் விரிவுபடுத்தினான் எனத் தெரிகிறது.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் அரியணையிலிருந்து வீழ்ந்து இறந்தபிறகு பாண்டிய நாட்டில் செல்வாக்குப் பெற்ற அரசன் இல்லை. நாட்டில் நல்லாட்சி இன்மையால் பாண்டிய நாடு மழை வளங்குன்றி நலிவுற்றது (சிலப். 23 : உரைபெறு கட்டுரை). இந்நிலை ஏற்படுவதற்குச்

சில ஆண்டுகள் பிடித்திருக்கும். அக்காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டவர் யார் என்பது தெளிவாகத் தெரியவில்லை (பசும்பூண் பாண்டியன் எனக் கொள்ள இடமுண்டு). பின்னர்த் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் கூடல்நகரைக் கைப்பற்றி அரசனானான் (அகம் 149 : 13-14, 231 : 12-13 : நற். 39 : 9-10). பின் இவன் எவ்வியை வென்று அவனது ஆட்சிக்கு உட்பட்டிருந்த மிழலைக் கூற்றைத்தைக் கைப்பற்றினான். வேளிரை வென்று முத்தூற்றுப் பகுதியைக் கைப்பற்றினான். கொங்கர்களை அவர்களது நாட்டை விட்டுத் துரத்தினான். சேர அரசனுடைய முசிறியையும் கைப்பற்றினான். இவ்வகையில் இவனது நாட்டுப் பரப்பு விரிவடைந்தது. இவற்றால் அள்ளூர், சிறுமலை முதலிய பகுதிகள் இவனது ஆட்சிக்குட்பட்டன (அகம் 46 : 14, 47 : 16).

## போர்கள்

ஏழு அரசர்கள் ஒருங்குகூடித் தலையாலங்கானம் என்னுமிடத்தில் இந்த நெடுஞ்செழியனைத் தாக்கினர்.[16] சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ, வேண்மாண், பொருநன் ஆகிய ஏழு அரசர்கள் இந்தக் கூட்டக் குழுவிலிருந்த பகையரசர்களாவர் (அகம் 36 : 15-20). இப்போர் நடந்தபோது நெடுஞ்செழியன் மிகவும் இளைஞனாக இருந்தான் என்று தெரிகிறது (புறம். 76 - 6). இந்தப் போரைப்பற்றிப் பல புலவர்கள் பல பாடல்களில் குறித்துள்ளனர். வேற்படையின் துணை கொண்டு அவன் வெற்றி பெற்றது பற்றியும் பிற அரசர் துணையின்றிப் போரிட்டு வென்றது, போருடை அணிந்த வீரர்கள் பேரெண்ணிக்கையில் வந்து தாக்கியது, கிணை முழக்குடன் ஒரு பகலிலேயே ஆரவாரமின்றி அடக்கத்துடன் திறமையாகப் போரிட்டது, தலையாலங்கானப் போரின் தொடர்ச்சியாகப் பகைவர்களைத் துரத்தியடித்து அவர்களுடைய அரண்களைத் தாக்கும் போரில் ஈடுபட்டது, கூலிப்படையின்துணையால் பகைவர் நாடுகளைச் சூறையாடியது, திங்கள் தோன்ற ஞாயிறு மறைந்தது போல் அவர்களை வென்றது முதலான செய்திகள் கூறப் பெற்றுள்ளன. பகை மறவரின் மூதிற் பெண்கள் அழுதரற்ற வென்று ஒரு பகலில் வெற்றிபெற்றுப் பகைவரின் முரசு, குடை முதலியவற்றைக் கைப்பற்றிக் களவேள்வி செய்த வீரச் செயல்களையும் பற்றி மேற்கூறப்பெற்ற புலவர்கள் கூறியுள்ளனர். இப்புலவர்களில் இடைக்குன்றூர்க்கிழார், கல்லாடனார், குடபுலவியனார், நக்கீரர், வெங்கண்ணியார், மாங்குடி மருதனார் முதலியோர் முக்கியமானவர் ஆவர்.

ஆலங்கானப் போரில் நெடுஞ்செழியன் உழிஞைப் பூச்சூடிப் போரிட்டான் என்று கூறப்பட்டுள்ளது (புறம் 76 : 5-9). இவ்வகைப் போர் பகைவரின் கோட்டையைத் தாக்கும் போர்முறை என்பதை நாம் அறிவோம். இதனால் நெடுஞ்செழியன் தலையாலங்கானத்தை முதலில்

தாக்கினான் என்பதும் அத்தாக்குதலை முறியடிக்கவே ஏழு அரசர்கள் ஒன்று சேர்ந்தனர் என்பதும் தெரிய வருகின்றன. அப்போரில் நெடுஞ்செழியனை எதிர்த்த எழுவரில் ஐவர் குறுநில மன்னர்கள். எஞ்சிய இருவர் முடியுடை வேந்தர்கள் ஆவர். நெடுஞ்செழியனை எதிர்த்த சேர அரசன் இன்னான் என்பது தெளிவாகத் தெரியவில்லை. சேரல் என்று அவனது பெயர் பொதுவகையால் சுட்டப் பெற்றுள்ளது. சேரல் என்னும் பொதுப்பெயருடன் நெடுஞ்சேரலாதன், நார்முடிச் சேரல், அந்துவஞ்சேரல், மாந்தரஞ்சேரல், பெருஞ்சேரல், இளஞ்சேரல் ஆகிய பல அரசர்கள் ஆட்சி செய்துள்ளனர். இவர்களில் ஆதன் என்னும் பின் அடையோ இளமை, பெருமைப் பண்பை உணர்த்தும் முன் அடையோ இன்றிக் காணப்படும் அரசர்கள் நார்முடிச் சேரல், குட்டுவன் சேரல், மாந்தரஞ்சேரல் என்னும் மூவரேயாவர். இந்த மூவரில் மாந்தரஞ்சேரல், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனின் சிறையிலிருந்து தப்பிச் சென்றான் என்று ஒரு பாடலில் கூறப்படுவதால் மேற்கூறப்பட்ட போரில் இந்தப் பாண்டியனை எதிர்த்துத் தோற்றவன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையே என்று நாம் கருதலாம். இவன் சிறையில் இருந்து தப்பிச் சென்ற செயல் குழியில் அகப்பட்ட யானை குழியைத் தூர்த்துக் கொண்டு தப்பிச் சென்றதுபோல் அமைந்திருந்தது என்று கூறப்படுவதால் சிறையில் அடைக்கப்பட்டான் என்பது தெளிவாகிறது.

நெடுஞ்செழியனை எதிர்த்த சோழன்

இவன் பெயர் செம்பியன் என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. இவன் தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் வழியில் வந்தவன் எனலாம். இச்செய்தியின் விளக்கத்தைச் சோழர் வரலாற்றில் நாம் கண்டோம்.

## கடற்போர்

தலையாலங்கானத்துப் போர் நெடுஞ்செழியனுடைய இளமைக் காலத்தில் நடந்ததாகும். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுக்குப் பிறகு மதுரையை ஆண்ட அரசன் இன்னான் என்பது தெளிவாக விளங்கவில்லை. பசும்பூண் பாண்டியன் போன்ற அரசர்கள் இடைக் காலத்தில் அரசாண்டு உட்பூசலில் மாண்டு போய், நாடு அரசனின்றி இருந்தது எனக் கருதலாம். இந்நிலையில் நெடுஞ்செழியன் கூடல் நகரத்தைத் தாக்கிப் பாண்டிய நாட்டின் அரியணையைக் கைப்பிற்றி யிருக்க வேண்டும் ('நண்ணார் ஆண்டலை மதிலர் ஆகவும் முரசு கொண்டு, ஓம்பரண் கடந்த அடுபோர்ச் செழியன் பெரும்பெயர்க்கூடல்' – நற். 39 : 7-10). நெடுஞ்செழியன் பாண்டிய நாட்டினைக் கைப்பற்றுவ தைச் சோழனும் சேரனும் எதிர்த்துள்ளனர். இவர்களுடைய முயற்சி

வெற்றி பெறாது, தங்களுடைய முரசங்களைப் போர்க் களத்திலேயே போட்டுவிட்டு ஓடினர். நெடுஞ்செழியன் பெருவெற்றி பெற்றான் (*'ஆடுகொள் முரசின் அடுபோர்ச் செழியன், மாட மூதூர் மதிற்புறம் தழீஇ. .... யாத்தகுடை' – அகம் 335 : 10-14*).

## எவ்வி, வேளிரோடு போர்

நெடுஞ்செழியன் கொற்கையிலிருந்து மதுரைக்குத் தலைநகரை மாற்றிக் கொள்ளவே பாண்டிய நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் இடையில் கிழக்குப் பகுதியில் மிழலைக்கூற்றத்தை ஆண்டு வந்த எவ்வி என்ற குறுநில மன்னன் பாண்டியனுக்குக் கப்பம் கட்டாது ஆளத் தொடங்கினான் போலும். இதனால், நெடுஞ்செழியன் எவ்வியைத் தாக்கி நல்லூரைத் தன்னகத்தே கொண்ட அவனது மிழலைக் கூற்றத்தைக் கைப்பற்றிக் கொண்டான். அக்காலத்தில் முத்தூறு என்னும் பகுதியில் வாழ்ந்த தொன்முது வேளிர் என்னும் குடிமக்கள் தம்முள் ஒன்றுகூடி நெடுஞ்செழியனை எதிர்த்தனர். நெடுஞ்செழியன் அவர்களை வென்று அவர்களது முத்தூற்றுக் கூற்றத்தைத் தன் நாட்டோடு சேர்த்துக் கொண்டான்.

## பல்குட்டுவரை வென்றது

சேர அரசர்களில் இளஞ்சேரல் இரும்பொறை, குட்டுவர் ஏறு என்று கூறப்பெறுகின்றான். இவனது தந்தை குட்டுவன் இரும்பொறை என்று குறிப்பிடப்படுகிறான். எனவே, பொறையர் குடியைச் சேர்ந்த யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறைக்குக் குட்டுவர் குடியைச் சேர்ந்த சிற்றரசர்கள் உறுதுறையாய் விளங்கி வந்தனர். நெடுஞ்செழியன் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைத் தாக்கியபொழுது பல குட்டுவர்களுடன் போரிட நேர்ந்தது.

## முசிறிப் போர்

பல்குட்டுவரை வென்றதன் காரணமாகக் கீழைச் சேரர் செல்வாக்கை ஓரளவு இவன் அடக்கிவிட்டான். அப்போது மேலைச் சேரர் அவனை எதிர்த்து நின்றனர். சேரன் செங்குட்டுவனுக்குக் குட்டுவன் சேரல், குட்டுவன் கோதை என இரு மக்கள் இருந்தனர். குட்டுவன் சேரல் பரணருக்குப் பணிவிடையாளாகக் கொடுக்கப் பட்டான். குட்டுவன் கோதையே நாட்டையாண்டு வந்தான்; தன் தந்தை செங்குட்டுவனுக்குப் பிறகு தொண்டி, வஞ்சி முதலிய இடங்களில் ஆட்சி புரிந்தான். குட்டுவன் கோதையின் துறைமுகப் பட்டினமாகிய முசிறியை நெடுஞ்செழியன் தாக்கி அவனுடைய யானைப் படையை அழித்தான். குட்டுவன் கோதையும் தோல்வியுற்றான். இதனால் நெடுஞ்செழியன் பல குட்டுவரை வென்றவன் என்று பாராட்டப் பெற்றான்.

## நெல்லினூர் கொண்டது

பெருங் கப்பல்கள் வந்து தங்கி வாணிகச் சிறப்புடன் விளங்கிய நெல்லினூர் என்னும் ஊரையும் நெடுஞ்செழியன் கைப்பற்றினான். நெல்சிந்தம் என்னும் மேற்குக் கடற்கரைத் துறைமுகம் வாணிகத்தில் சிறப்புற்று விளங்கி, பாண்டியர்களுக்குரியதாய் விளங்கியது பற்றியும் கிரேக்க ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்த நெல்லினூரையே அவர்கள் நெல்சிந்தம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். இந்த நெல்லினூரையே நெடுஞ்செழியன் கைப்பற்றினான்.[17] குட்டுவரையும் முசிறியையும் வென்ற செய்திகளுக்கு இவ்வெற்றி தொடர்புடைய தாகிறது.

## முதுவெள்ளிலையும் முதுபொழில் மண்டிலமும்

முதுவெள்ளிலை மருத நில வளமும் நெய்தல் நில வளமும் ஒருங்கமையப் பெற்ற ஓர் ஊர். இவ்வூரை நெடுஞ்செழியன் கைப்பற்றிக் கொண்ட பிறகு இவனது நல்லாட்சியில் மகிழ்ந்து அவ்வூர் மக்கள் இவனைப் பெரிதும் பாராட்டினர் (மதுரைக். 119). முதுபொழில் மண்டிலம் என்பது சிறப்பாக ஓர் இடத்தைக் குறிப்பது அன்று. நாவலந் தண்பொழிலாகிய நாடு முழுவதுமே முதுபொழில் மண்டிலமாகும். இவன் பல நாடுகளை வென்று தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்த செயலே முதுபொழில் மண்டலம் முற்றியதாகக் கூறப்படுகிறது (மதுரைக். 190).

## ஆட்சி

குளம் வெட்டி நாட்டில் நீர்வளத்தைப் பெருக்கவேண்டும் என்று புலவர் ஒருவர் இவனிடம் அறிவுரை கூறினார் (புறம் 18 : 28-30). இவரது அறிவுரைப்படி இவன் பெருங்குளம் என்னும் பெயருடைய குளத்தை அமைத்தான் (நற். 340 : 3). இவன் நான்மறைகள் கூறும் வேள்விகளைச் செய்தான் (புறம் 26 : 13-15). அன்றியும் களச்சோறு வழங்கும் வேள்வியும் செய்தான் (புறம் 372 : 5-12). இந்த வேள்விகள் பல நாடுகளை வென்றதன் நினைவாகச் செய்த அறக்கொடைகள் ஆகும். இந்த அறக்கொடைகள் வீரர்க்கும் பாணர் முதலானோர்க்கும் நான்மறைவல்ல அந்தணர்களுக்கும் வழங்கியவையாகும்.

புறநானூற்றுச் செய்யுளில் நம்பி நெடுஞ்செழியனைப்பற்றிக் கையறுநிலையில் பேரெயின் முறுவலார் என்ற புலவர் பாடியுள்ளார். நம்பி நெடுஞ்செழியன் போரில் ஈடுபட்டு உயிரிழந்தான். போர்க்களத்தில் இறந்த அவனுடைய தலை மாத்திரம் கிடைத்த நிலையில் பேரெயின் முறுவலார் பின்வருமாறு இரக்கம் கொண்டு பாடியுள்ளார். நம்பி நெடுஞ்செழியன் சந்தனம் பூசி, மலர்மாலை

யணிந்து, உரிமை மகளிரைத் தழுவி மகிழ்ந்தான்; பகைவர்களை அடியோடு ஒழித்தான்; நண்பர்களுக்கு உயர்வளித்தான். தன்னைவிட வலிமை உடையவராயின் அவர்களிடம் வணங்குவதோ, தன்னைக் காட்டிலும் வலிமை குறைந்தவர்கள் முன்னிலையில் தன்னைப் புகழ்ந்து பேசிக் கொள்வதோ இவனிடம் காண முடியாத பண்புகள். பிறரிடம் இரப்பதோ இரந்தவர்களுக்குக் கொடுக்க மறுப்பதோ இவனிடம் கிடையாது. பல அரசர்கள் கூடியிருந்த சபையில் தலைமை தாங்கினான்; தாக்க வரும் படையை எதிர்க்கத் தான் முதலில் சென்றான்; பல படைகள் தன் முன் நிற்கமாட்டாது புறமிட்டு ஓடியதைக் கண்டு மகிழ்ந்தான்; குதிரை மீதும் தேர் மீதும் களிறு மீதும் ஊர்ந்து சென்று அந்தந்தப் படைகளின் தலைமையை ஏற்றுப் போரிட்டான்; பாணர்களின் பசியைத் தீர்த்தான்; மிகுதியாகக் குடிக்காமல், அளவோடு பருகிக் கள் மயக்கம் கொண்டு பேசும் வழக்கம் இவனிடம் இல்லை. இத்தகைய நற்பண்புகள் உடையவனாக இருந்தான் (புறம் 239).

## நம்பி நெடுஞ்செழியன்

பாண்டியன் அறிவுடை நம்பி என்னும் அரசன் ஒருவன் சங்க காலத்தில் விளங்கினான்.[16] நம்பி நெடுஞ்செழியின் என்ற பெயரை நோக்குகையில் இவனை அறிவுடை நம்பியின் மகன் என்று கருதலாம்.

# 3. மாறன் என்னும் பெயருடைய அரசர்கள்

## இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன்

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடிய புலவர்களான மருதன் இளநாகனாரும் நக்கீரரும் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனையும் நேரில் கண்டு பாடியுள்ளனர் (புறம் 55, 56). இவனைப் பாடியுள்ள பிற புலவர்களை நோக்கும்போது இவன் தலையாலங்கானத்து நெடுஞ்செழியனுக்குப் பிறகு ஆட்சி புரிந்தவன் எனத் தோன்றுகிறது. நெடுஞ்செழியனுக்கும் இவனுக்கும் இருந்த உறவையும் நெடுஞ்செழியனுக்கு அடுத்து அரியணையில் அமர்ந்தான் என்பதையும் திட்டவட்டமாகக் கூற இயலாத நிலை உள்ளது. இவன் நெடுஞ்செழியனுடைய மகனா என்பது பற்றியும் கூறமுடியவில்லை.

நெடுஞ்செழியன் மதுரையில் பேரரசனாக விளங்கியபோது இவன் கொற்கைப் பகுதியில் இருந்து நாடு காவல் புரிந்து வந்தான் என்று கருதலாம். இவனை நேரில் கண்டு வாழ்த்திய புலவர் ஒருவர் செந்தில் கடற்கரையில் உள்ள மணலினும் மேலான பல காலம் இவன் வாழ வேண்டுமென்று வாழ்த்துகின்றார் (புறம் 55 : 18-21). எந்த இடத்திலும் இவன் மதுரையில் இருந்து அரசாண்டான் என்று குறிப்பிடப் பெறவில்லை. பாண்டியப் பேரரசர்களின் கீழ் ஆண்ட அரசன் என்ற நிலையிலேயே இவன் காலம் முடிந்து விட்டதோ என்று எண்ண வேண்டியுள்ளது. பிறர் நாட்டைக் கைப்பற்றும்போது அவர்களது வயல்களிலுள்ள விளைச்சல்களை வீரர்கள் கவர்ந்து கொண்டாலும் கொள்ளட்டும்; அவர்களது பேரூர்கள் எரியூட்டப்பட்டாலும் படட்டும்; பகை வீரர்களைக் கொன்றாலும் கொல்லட்டும்; ஆனால், பகையரசர்களுடைய காவல்மரத்தை மட்டும் வெட்டவேண்டா என்று புலவர் ஒருவர் இவ்வரசனுக்கு அறிவுரை கூறியுள்ளார். இந்த அறிவுரை இவன் போருக்கு எழுந்தபோது போர் வேண்டா என்று தடுத்துரைத்த அறிவுரையாகலாம் (புறம் 57 : 5-11). இவன் தாராளமாகக் கொடை வழங்கியதாகத் தெரியவில்லை. பரிசில் வழங்கக் காலம் தாழ்த்தியிருக்கக்கூடும். இவனது போக்கைக் கண்டித்துப் புலவர்கள் இவன் நோயின்றி வாழ்ந்தால் சரி என்று வாழ்த்தியுள்ளார்கள் (புறம் 57). இவனது மனைவி கடவுள் சான்ற கற்பினை உடையாள்; சிறந்த செம்பொன் அணிகலன்களுடன் விளங்கினாள்; பெண்மைக்குரிய மடமைத் தன்மை கொண்டவள் (புறம் 196 : 13-15).

இவனுக்கு ஆண்மக்கள் சிலர் இருந்தனர். அவர்கள் கிண்கிணி அணிந்த காலுடன் விளங்கியதைக் கண்ட புலவர்கள் வாழ்த்தியுள்ளனர். காலைக் கதிரவன் போலவும், வளர்பிறை போலவும், இவன் வாழ வேண்டும் என்று வாழ்த்தும் புலவர் ஒருவர் இவன் சினத்தால் எமனையும், வலிமையிற் பலராமனையும், புகழால் திருமாலையும், எண்ணிய செயலை முடித்தலில் முருகனையும் ஒத்தவன் என்று குறிப்பிட்டுள்ளார் (புறம் 198 : 10, 56 : 9-15).

'பூந்தார் மாற' (புறம் 55 : 6) என்று இவன் கூறப்படுவதிலிருந்து இவனது மலர்மாலை அணிந்து விளங்கிய கோலத்தையும் 'கடுமான் மாற' (புறம் 198 : 2) என்று கூறப்படுவதிலிருந்து இவனது குதிரைச் சவாரியையும், 'திண்டேர் அண்ணல்' (புறம் 198 : 6) என்று கூறப்படுவதிலிருந்து இவன் தேரில் உலாவச் சென்ற காட்சியையும் நாம் உணரமுடிகிறது. இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் என்னும் பெயர் இவன் இலவந்திகைப்பள்ளி என்னுமிடத்தில் மாண்டதைத் தெரிவிக்கிறது. இலவந்திகை என்னும் சொல் தாமரைக் குளத்தைச் சூழ்ந்த சோலையாகும்.

# சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன்

இவனைப் பாடிய புலவர் வேறு எந்த அரசனையும் தமது பாடல்களில் குறிப்பிடவில்லை. ஆகவே, இவனது காலத்தைத் திட்டவட்டமாக அறிய முடியவில்லை. மணிமேகலையை இயற்றிய மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இவர் அல்லர் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இவ்விருவரும் ஒருவராயின் இவரால் பாடப்பெற்ற இந்த நன்மாறன் சேரன் செங்குட்டுவன் காலத்தவன் என்று கூறலாம்.

இவனது அகன்ற மார்பில் முத்தாரம் அணிந்திருந்தான். இவனது கைகள் முழந்தாள்வரை நீண்டு இருந்தன. பகைவர்களைக் காய்வதில் இவன் ஞாயிறு போன்றவன்; புலவர்களுக்கு நலம் சொரிவதில் திங்கள் போன்றவன்; பொய் என்பதை முற்றிலும் வெறுத்தவன். இவனது இறுதிக்காலம் சித்திரமாடம் என்னுமிடத்தில் முடிவுற்றது. இஃது ஒரு மாளிகையின் பெயராகவோ, ஊர்ப் பெயராகவோ இருக்கலாம்.

# முடத்திருமாறன்

இவன் கபாடபுரத்தின் இருந்த இடைச்சங்கத்தைப் புரந்து வந்தான் என்றும், கபாடபுரம் கடல்கோளுக்கு இரையானபோது தப்பி மதுரைக்கு வந்து கடைச் சங்கத்தை நிறுவினான் என்றும் இவனைப் பற்றிச் செவிவழிச் செய்தி கூறுகிறது (இறையனார் களவியல் உரை). சிறந்த புலவனாகவும் விளங்கிய இவனது பாடல்கள் இரண்டு சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளன. இவன் தனது நண்பனான குட்டுவன் என்னும் சேர அரசனைத் தனது பாடலில் குறிப்பிட்டுள்ளான். இவன் குடவரைப் பகுதிக்கு அரசன். குடவரை என்பதை மேற்குத் தொடர்ச்சி மலையாகக் கொள்ளலாம். நீரும் நிழலும் இல்லாத வழியில் பொருள் தேடச் செல்லும் தலைவன் தன் காதலியை நினைத்துக் கொண்டு கவல்வதாகவும் களவு வழியில் காதலியைப் பெறத் தலைவன் மின்னல் வெளிச்சத்தில் வழியை அறிந்து வரும் அச்சந்தரும் காட்சியையும் தனது இரு பாடல்களில் சிறப்பித்துப் பாடியுள்ளான் (நற். 105 : 5-10, 228).

# மாலைமாறன்

மாறன் என்று பாண்டியரை உணர்த்தும் சொல் இவனது பெயரில் உள்ளதால் இவனது வரலாற்றை இங்குக் கூறுகிறோம். மற்றப்படி, இவன் ஒரு புலவன் என்ற நிலையிலேயே காணப்படுகிறான். இவனது

பாடல் சங்கநூலில் இடம் பெற்றுள்ளது (குறுந். 245). களவு வழியில் கூடிய தலைவனை எண்ணிஎண்ணி உருக்குலைந்த தன் நிலையைப் பற்றிக் கூடக் கவலைப்படாது, தலைவன் மீது பழி தூற்றுவார்களே என்று தலைவி ஒருத்தி வருந்துவதாக இவன் பாடியுள்ள பாடல் பெண்களின் பெருந்தகைமையைப் புலப்படுத்துவதாக உள்ளது (குறுந். 2-6).

# பழையன் மாறன்

பழையன் என்னும் பெயர் கொண்ட இருவர் சங்ககால வரலாற்றில் காணப்படுகின்றனர். ஒருவன் மோகூர் மன்னன் என்ற முறையில் அறிமுகமாகிறான் (பதிற் 44 : 14, 49 : 8, பதி. 5 : 13). மற்றொருவன் 'போர்' என்னும் ஊரின் தலைவன். மோகூர்ப் பழையன் பாண்டிய அரசர்களுக்கு உறுதுணையாய் விளங்கியவன். போர்ப் பழையன் சோழர் படைத்தலைவன். வித்தை என்னும் இடத்தை ஆண்ட அரசன் 'இளம் பழையன்' மாறன் என்னும் பெயர் பெற்றுள்ளான் (பதிற். பதி. 9 : 7). மோகூர் அரசனைச் சேரன் செங்குட்டுவன் வென்றான். வித்தை அரசன் இளம்பழையன் மாறனை இளஞ்சேரல் இரும்பொறை வென்றான். போர் அரசன் பழையனை நன்னன் முதலான ஏழுபேர் கூட்டாகத் தாக்கிப் போரில் கொன்றனர். மாறன் என்றால் இவனையே குறிக்கும் அளவிற்கு இவனது பெயர் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் காலத்தில் பரவியிருந்தமையால் இவன், பெரும்பெயர் மாறன் என்று சிறப்பித்துக் கூறப்படுகிறான் (மதுரைக். 772-74). பாண்டியன் மோகூரின் ஆட்சிப் பொறுப்பினை இவனிடம் ஒப்படைத்திருந்தான்; கோசர் இவனது அரசவையைச் சிறப்பித்தனர் ('பழையன் மோகூர் அவையகம் விளங்க, நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன' – மதுரைக். 508-509). இவனுக்கும் சோழன் கிள்ளிவளவனுக்கும் கூடல் நகரில் ஒரு போர் நடந்தது (அகம் 346 : 19-22).

கிள்ளிவளவன் என்ற சோழ அரசன் மதுரையில் வெற்றி பெற்ற செய்தி நமக்கு ஒரு வரலாற்றுத் தொடர் நிகழ்ச்சியை உய்த்துணர உதவி செய்கிறது. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், செங்குட்டுவன் காலத்தவன். கோவலனது கொலையால் இவன் தன் அரியணையிலிருந்து வீழ்ந்து இறந்தான். பிறகு பழையன் மாறன் மதுரையில் செல்வாக்குப் பெற முயன்றான்.[19] அந்த முயற்சியில் சோழன் கிள்ளிவளவன் வெற்றி பெறவே, மதுரை சோழர் வசமாகிவிட்டது. பழையன் மாறன், பின் மோகூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வரலானான். சோழன் கிள்ளிவளவன், பசும்பூண் பாண்டியன் என்பவனைப் பாண்டிய நாட்டிற்கு அரசனாகச் சில காலம் ஆண்டுவரச் செய்தான்.

பசும்பூண் பாண்டியன் சோழருக்குட்பட்டு அவர்களுக்குத் திறை செலுத்திக்கொண்டு, நாட்டை ஆண்டு வந்திருக்கலாம். இந்நிலை பாண்டியரின் விடுதலையுணர்வைத் தூண்டி, தன்னாட்சி பெறும் மனப்பான்மையை வளர்த்தது. இந்த உயர்வே வெற்றிவேற்செழியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்ற நிலையில் நமக்கு அறிமுகமாகி மதுரையைக் கைப்பற்றி ஆண்ட நிகழ்ச்சியில் முடிந்தது. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனது வெற்றியில் சோழனும் சேரனும் தோல்வியுற்றதை அவனது வரலாற்றில் காணலாம்.

மதுரை நகரில் அரியணையில் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் அமர்ந்த பின், பழையன் மாறன் அவன் படைத் தலைவனாக விளங்கினான். மோகூர் ஆட்சிப் பொறுப்பும் அவனிடம் இருந்தது. கோசர் படையில் தலைவனாகவும் கோசர் குடிமக்களைத் தன் அரசவையில் கொண்ட மன்னனாகவும் இவன் விளங்கினான்.

மேற்கூறப்பெற்ற போரில் இவனது காவல்மரமான வேம்பு வெட்டி வீழ்த்தப்பட்டது. அம்மரத்தின் அடித்துண்டை வெற்றி பெற்ற செங்குட்டுவன் முரசு செய்து கொள்வதற்காகத் தன் தலைநகருக்கு இழுத்துச் சென்றான். போரில் இறந்த வீரர்களின் மனைவியர் கைம்மை நோன்பிற்காகக் களைந்த தலைமயிரைக் கொண்டு கயிறு திரித்து அந்தக் கயிற்றில் வெட்டிய வேப்பமரத் துண்டைக் கட்டி யானைகளில் பிணைத்துத் தன் தலைநகர்க்கு இழுத்துச் சென்றான். இந்தப் போரில் பழையன் மாறன் மாண்டிருக்கலாம்.[20]

## சிறப்புகள்

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு இவன் பல போர்களில் வெற்றி தேடித் தந்திருக்கிறான். இதனைப் பாராட்டி நெடுஞ்செழியன் இவனுக்கு வேலைப்பாடு அமைந்த மாலை ஒன்றைச் சூட்டிச் சிறப்பித்தான். மாறன் என்னும் பட்டத்தையும் அளித்தான் (அகம் 346 : 19). பழையன் என்று பொதுப்பட வழங்கப்பட்டுவந்த இவன், இந்நிகழ்ச்சிக்குப் பிறகு 'பழையன் மாறன்' என்று வழங்கப்படலானான் என்பதைப் 'பெரும்பெயர் மாறன்' என்னும் தொடர் உணர்த்துகிறது.

## தோற்றம் – குடி

'நெடுந்தேர் இழையணி யானைப் பெரும் பெயர் மாறன்' என இவன் சிறப்பிக்கப்படுதலால், தேரிலும் யானையிலும் இவன் உலாப்போந்த காட்சி நமக்குக் காட்டப்படுகிறது. பழையன் இவனது பெயர். இவன் பழையர் குடியைச் சேர்ந்தவனாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

## இளம் பழையன் மாறன்

இவன் 'வித்தை' என்னும் இடத்தை யாண்ட அரசன். இவன் இளஞ்சேரல் இரும்பொறையோடு போரிட்டுத் தோல்வியுற்றான்.[21] பெயர் அமைதி கொண்டு பழையன் மாறனின் தம்பியாக இவன் இருக்கக் கூடும் என்று எண்ணத்தோன்றுகிறது. இருவரும் மாறன் என்ற பட்டம் பெற்றிருப்பதும், சேர அரசர்களிடம் தோல்வியடைந்ததும் இக் கருத்திற்கு வலுவூட்டுகின்றன.

# 4. வழுதி என்னும் பெயருடைய அரசர்கள்

'வழுதி' என்பது பாண்டியர்க்கு வழங்கப்பட்ட பெயர்களுள் ஒன்று. இச்சொல் 'வழித்தோன்றல்' என்னும் பொருளில் தோன்றியதாக எண்ண இடமுண்டு. இப்பெயரைக் கொண்ட அரசர்கள் சங்க காலத்தில் பலர் இருந்தனர். பெருவழுதி என்னும் பெயர்பெற்றுள்ள அரசர்கள் நால்வேறு அடைமொழிகளைக் கொண்ட நிலையில் காணப்படுகின்றனர். சிறப்பு அடைமொழிகளை நோக்கி, இவர்களை வெவ்வேறு அரசர்கள் என்று கொள்வதே பொருத்தமாக அமைகின்றது.

## பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி

வழுதி எனப்படும் அரசர்களுள் இவனே காலத்தால் முந்தியவனாகக் காணப்படுகிறான் (அடுத்த வழுதி, சங்க காலக் கல்வெட்டில் காணப்படும் கடலன் வழுதி). இவனை வாழ்த்தும் புலவர் பஃறுளியாற்று மணலைக் காட்டிலும் பல்லூழி வாழவேண்டும் என்று வாழ்த்துகிறார் (புறம் 9 : 10-11). பஃறுளியாறு சங்ககாலத்திலேயே கடலால் கொள்ளப்பட்டது. எனவே, இவன் அந்த ஆறு கடலால் கொள்ளப்படுவதற்குமுன் வாழ்ந்தவன் என்று தெரிகிறது. ஆதலால், இவனைப் பிறரினும் பழமையானவன் என்று நாம் கொள்ளலாம். இவனைப் பாடிய எல்லாப் புலவர்களும் இவனை மட்டுமே பாடியுள்ளனர். இவர்கள் வேறு அரசர்களையும் பாடியிருந்தால் அவ்வாறு பாடப்பெற்ற அரசர்களின் காலத்தைக் கொண்டு இவ்வரசனுடைய காலத்தைக் கணிக்கக்கூடும்.

இவன் பஃறுளியாறு கடலோடு கலக்குமிடத்தில் நிகழ்ந்த விழாவில் கலந்துகொண்டான்.[22] அவ்விழாவில் யாழில் வல்ல வயிரியர்களுக்குச் சொக்கத் தங்கத்தைப் பரிசாக வழங்கினான்.[23] அத்துடன், தன் கோமகனையும் அவர்களுக்குப் பரிசாக அனுப்பிவைத்தான். அவன் 'கடல் விழா நடத்தி மகிழ்ந்த நெடியோன்' என்னும் பெயரினன் ('முந்நீர் விழவின் நெடியோன்' – புறம் 9-10). கடல்விழா என்பது வணிகர் விழா. முதுகுடுமிப்பெருவழுதியின் மகன் நெடியோன் ஆவான். இவன் 'குடுமி தன்கோ' என்று குறிப்பிடப்படுகிறான். முதுகுடுமியின் மகனான நெடியோனின் கால்வழித் தோன்றியவன்தான் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் (மதுரைக். 759-768).

## போர்கள்

முதுகுடுமிப் பெருவழுதி பல போர்களில் ஈடுபட்டு வெற்றி கண்டான். இமயமலைக்கு வடக்கிலுள்ள நாடுகளிலும், குமரி முனைக்குத் தெற்கிலுள்ள கடல் தீவுகளிலும், கீழைக்கடலிலும், மேலைக்கடலிலும் இருந்த தீவுகளிலும் இவனது புகழ் பரவியது (புறம் 6 : 1-8). இவனிடம் கடற்படையும் யானைப்படையும் இருந்தனவாகக் கருதலாம். இவற்றைக் கொண்டு இவன் இந்த வெற்றிகளைப் பெற்றிருக்கவேண்டும். தான் வெற்றி பெற்ற இடங்களில் கிடைத்த செல்வங்களைக்கொண்டு தன்னிடம் பரிசில் நாடி வருவோர்க்கெல்லாம் வாரி வழங்கினான். நல்வேள்வி என்று சிறப்பிக்கப்படும் வேள்வியை இவன் செய்தான் (மதுரைக். 760). கள்ளும் கறிச் சோறும் அளித்தான். போரில் வெற்றி பெற உதவியவர்களையும், வெற்றி பெற்றபின் பாராட்டியவர்களையும் தானே அழைத்து, வேண்டிய பரிசில்களைக் கொடுத்துக் கொண்டாடும் வேள்வி, நல்வேள்வியாகும் (வேள்வி – யாகம்). இந்த நல்வேள்வியில் நான்மறை முனிவரை இவன் பாராட்டாதது கண்ட புலவர் ஒருவர் (புறம் 6 : 19-20). மனம் வருந்தி நான்மறை முனிவர்க்குத் தலைவணங்கியும், சிவபெருமான் நகர்வலம் வரும்போது தன் குடையைச் சாய்த்துப் பிடித்தும் மரியாதை செய்யவேண்டும் என்று கூறினார். முதுகுடுமி, புலவர் அறிவுரையை ஏற்று, அவர் விருப்பப்படி செய்தான். நான்மறை முறைப்படி யூபம் என்னும் வேள்வித் தூண்கள் பல நட்டான். நான்மறை வல்ல அந்தணர்களைக் கொண்டு பல வேள்விகளைச் செய்வித்தான் (புறம் 15 : 17-21). இவ்விதம் பல வேள்விகளைச் செய்தமையால் இவன் 'பல்யாகசாலை' என்னும் அடைமொழியுடன் வழங்கப்பட்டான்.

புலவர்களுக்குப் பொற்றாமரைப் பூக்களைப் பரிசளித்துச் சிறப்பித்ததும், புலவர்களுக்கு யானைகளையும் தேர்களையும் பரிசில்களாக நல்கியதும் இவனது கொடைகளில் நினைவு கூரத்தக்கவை.

பகைவர் நாட்டின் தேர் சென்ற தெருக்கள் எல்லாவற்றிலும் கழுதைகளைப் பிணைத்துத் திரியவிட்டதும், அறுவடை செய்யும் நிலையில் உள்ள விளைச்சல் வயல்களில் தன்னுடைய தேர்ப்படையுடன் சென்று பாழாக்கியதும், இவன் தனது பகைவர்கள் நாட்டிற்குச் செய்த கொடுமையாகும். இஃது அக்காலப் போர் மரபாகக் கருதப் பட்டதுபோலும். முதுகுடுமி என்னும் இவனது பெயர் முதுமையை உணர்த்தும் நரைத்தலை முடி உடையவனாக இவன் விளங்கியதால் அமைந்திருக்கலாம். போரில் மிகுதியாகப் பழகியதால், இவனது மனைவிமார் ஊடல் கொண்டபோதும் அன்பாகப் பேசாமல் அடக்குமுறையைப் பின்பற்றி வந்தான். இதனால் மகளிர் சினந்தால், எதிராகச் சினங்கொள்ளக்கூடாது என்று புலவர் இவனுக்கு அறிவுரை கூறினார் (புறம் *20 : 13-14*).

# கானப்பேர் எயில் கடந்த உக்கிரப்பெருவழுதி

இவனது பெயரை நமக்கு அறிவிப்பவர் புறநானூற்றைத் தொகுத்த ஆசிரியரே ஆவர். அவர் ஓரிடத்தில் 'கடந்த' என்னும் சொல்லாலும் மற்றோரிடத்தில் 'தந்த' என்னும் சொல்லாலும் இவனைக் குறிப்பிடுகிறார். கானப்பேர் எயில் பற்றியும், அதனை வேங்கைமார்பன் என்பவன் ஆண்டது பற்றியும், காவற்காடு, காவல் சிற்றூர்கள், ஆழ்ந்த அகழி, உயர்ந்த மதில், மீன்பூத்தன்ன ஞாயில் ஆகியவற்றைக் கொண்டிருந்த தன் கானப்பேர் எயில்கோட்டையைப் பறிகொடுத்து விட்டு வேங்கைமார்பன் ஓலமிட்டு வருந்தியது பற்றியும் சங்கப் பாடல்களில் தெளிவான செய்திகள் உள்ளன. இந்த வெற்றி இவனது வரலாற்றில் மிகவும் சிறப்புடையதாய் விளங்கியது பற்றி, இவன் 'கானப்பேர் எயில் கடந்த உக்கிரப் பெருவழுதி' என்று சிறப்பித்துக் கூறப்பட்டான் (புறம் *21*).

## மூவேந்தர் நட்பு

தமிழக வரலாற்றில் மிகச் சிறப்பு வாய்ந்ததாக எண்ணத்தக்க மூவேந்தர் நட்பு இவன் காலத்தில் அமைந்தது. சேரமான் மாரி வெண்கோ, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகியோருடன் இவனும் சேர்ந்து முத்தீப் போல அமர்ந்திருந்து செயல்படும் காட்சியைப் புலவர் ஒருவர் கண்டு வாழ்த்தியுள்ளார் (புறம் *367 : 13*). பார்ப்பார்க்குப் பூவும் பொன்னும் தாரை வார்த்துத் தர வேண்டும் என்றும், மகளிர் பொற்கலத்தில் ஊட்டும் தேறலை உண்டு மகிழ்ந்து களித்திருக்க வேண்டும் என்றும் கூறி அவர் வாழ்த்தினார்.

மூவேந்தரின் இத்தகைய கூட்டுறவு பாரியைப் பொறுத்தமட்டில் தீதாய் முடிந்தாலும், தமிழைப் பொறுத்தமட்டில் நன்மையாக முடிந்தது. தமிழ்நாட்டு மூவேந்தர்களிடையே பகைமை நீங்கி அமைதி நிலவியது. பாண்டியன் தமிழில் பாடல்களைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டான். உக்கிரப் பெருவழுதி காலத்தில்தான் குறுந்தொகை, நற்றிணை, நெடுந்தொகை என்னும் நூல்கள் தொகுக்கப்பட்டன. நெடுந்தொகை அல்லது அகநானூறு என்னும் நூலைத் தொகுக்கும் பணியைத் தானே மேற்கொண்டான்; உப்பூரிகுடிகிழார் மகன் உருத்திரசன்மன் என்னும் புலவரைத் தலைமைப் புலவராக அமர்த்தி அத்தொகுப்புப் பணியைச் செய்து முடித்தான். திருக்குறள் அரங்கேற்றமும், இறையனார் களவியலுக்கு நக்கீரர் என்பார் எழுதிய உரையும் இவனது அவையில் அரங்கேற்றப்பெற்றன என்பது செவிவழிச் செய்திகளாகும். நாஞ்சில் வள்ளுவன் இவன் காலத்தில் வாழ்ந்தவன் (புறம் 367).

## வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி

சோழ அரசன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும் இந்தப் பாண்டிய அரசனும் ஒருங்கிருக்கக் கண்ட புலவர் ஒருவர் இவர்களுடைய நட்பு நீடிக்கவேண்டுமென்று வாழ்த்துகிறார் (புறம் 58). இவர்கள் கூடியிருந்த இடம் சோழ நாட்டுத் தலைநகர் என்பது, புலவர் சோழனை முன்னிலைப்படுத்தியும் பாண்டியனைப் படர்க்கையில் குறிப்பிட்டும் பாடியிருப்பதிலிருந்து தெரிகிறது. இவ்வரசனைப் பாடிய புலவர், பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனையும் (புறம் 57) பிட்டாங்கொற்றனையும் தனித்தனியே நேரில் கண்டு பாடியுள்ளார் (புறம் 169, 171). பிட்டங்கொற்றன், சேர அரசன் கோதையின் படைத்தலைவன் என்பதும் (புறம் 172 : 8-11), கோதை அல்லது கோதை மார்பன், கிள்ளிவளவனிடம் பழையன் மாறன் மதுரையில் தோற்றபோது மகிழ்ந்தான் என்பதும் (அகம் 346 : 25) பல பாடல்களைத் திரட்டி அறியப்படும் சமகால நிகழ்ச்சிகள்.

இந்நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து எண்ணும்போது பழையன் மாறன், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனுக்காக மதுரையில் போரிட்டான். அச்சமயத்தில் பாண்டி நாட்டு அரியணையைப் பெறப் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனின் உதவியை வேண்டினான். அப்போதுதான் சோழன் அவையில் இருவரையும் ஒருங்கு கண்டு புலவர் வாழ்த்தினார். பெருந்திரு மாவளவன், குராப்பள்ளியில் துஞ்சியவன் என்பது அவனது பெயரால்

தெளிவாகிறது (புறம் 373). அந்த அடைமொழியைக் கொண்ட கிள்ளிவளவன் என்பது இவனே ஆவான் (புறம் 50, 68, 197). திருமாவளவன் என்பது இச்சோழனின் இயற்பெயர். கிள்ளிவளவன் என்பது கிள்ளியின் மகன் வளவன் என்று விளங்கும் பெயர்.

கிள்ளிவளவன் தன்னை நாடி வந்து உதவி வேண்டிய வெள்ளியம் பலத்துத் துஞ்சிய பெருவழுதிக்கு உதவினான். பாண்டியனின் கூடல் நகரத்தைத் தாக்கி வென்று பெருவழுதிக்கு அளித்தான். இந்தப் பெருவழுதி மதுரையில் இருந்து அரசாண்டு வரும்போது, வெள்ளியம் பலம் என்று வழங்கப்பெறும் மதுரைச் சொக்கநாதர் கோயில் மன்றத்தில் உயிர் நீத்தான்.[24] இந்தப் பெருந்திருமாவளவனும் பெருவழுதியும் சேர்ந்து வென்ற நாடுகளில் புலிச்சின்னமும் கயற்சின்னமும் சேர்த்துப் பொறிக்கப்பட வேண்டும் என்று புலவர் அறிவுரை கூறினார். இவனது ஆட்சிக் காலத்தில் சோழ, பாண்டி நாட்டு இலச்சினைகள் இவ்வாறு விளங்கின எனக் கொள்ளலாம். (இந்த கூட்டுச் சின்னத்தை மீண்டும் தனிச் சின்னமாக்கியவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன்.) பாண்டியர் ஐந்து கூறுகளாகப் பிரிந்து நாடாண்டு வந்தனர் (மதுரைக். 775- 'பொலம்பூண் ஐவர்').

## இளம்பெருவழுதி

இவன் புலவன் என்ற நிலையிலேயே காணப்படுகிறான். வழுதி என்னும் பெயர் அமைதியை எண்ணி, ஏதாவது ஓரிடத்தில் இளவரசனாகவேனும் இருந்திருக்கக்கூடும் என்று கருதலாம். வழுதியர் குடியில் தோன்றியவன் எனக் கொள்ளலாம். கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்னும் பெயரால் இவனைப் புறநானூற்றைத் தொகுத்த ஆசிரியர் குறிப்பிடுகிறார். தேவாமிர்தமே கிடைத்தாலும் தனியாக உண்ணாமல் பகுத்துண்ணல், பிறர் அஞ்சுகிறார்களே என்று தானும் பழிக்கு அஞ்சிச் செயலாற்றுதல், புகழ் தரத்தக்க செயலுக்காக உயிரையே கொடுத்தல், பழிக்கத்தக்க செயல்களில் உலகமே பரிசாகக் கிடைப்பதாயினும் அவற்றைச் செய்யாமை, தனது ஊக்கமான செயல் முயற்சிகளைப் பிறர் நலம் கருதிச் செய்தல் ஆகிய சிறந்த பண்புடையவர்கள் உலகில் வாழ்வதால்தான் இந்த உலகம் அழியாமல் இயங்கிக்கொண்டிருக்கிறது என்னும் கருத்தமைந்த பாடலை இவன் பாடியுள்ளான் (புறம் 182). இவன் கடலுள் மூழ்கி இறந்து போனான். கடற்போரில் ஈடுபட்டிருந்தபொழுது இந்தச் சாவு நிகழ்ந்து இருக்கலாம். முதுகுடுமிப் பெருவழுதி கடற் போரில் ஈடுபட்டதையும், செங்குட்டுவன் கடல் வாணிகத்திற்கு உதவும் பொருட்டுப் போரிட்டதையும் நாம் இங்கு நினைவுகூரலாம்.

முதுகுடுமிப் பெருவழுதி கடற்போரில் ஈடுபட்டதைக் கண்டோம். இப்பாண்டியன் கடலில் மாண்டவன் என்பது தெரிகிறது. இருவர் பெயர்களும் பெருவழுதி என்றமைந்துள்ளன. 'முது', 'இள' என்னும் அடைமொழிகள், மூத்தவன், இளையவன் என்னும் பொருளைத் தருவனவாய் இவர்களுக்கு அமைந்தனவோ என்று ஐயுற வேண்டியுள்ளது.

# பெரும்பெயர் வழுதி

இவன் (பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர்) 'வழுதி' என்று குறிப்பிடப்படுகிறான். பாண்டியருள் 'கவுரியர்' என்னும் குடியினரும் ஒருவராவர். தனுக்கோடியை அடுத்த பகுதியிலும் கவிரம் என்று சங்ககாலத்தில் வழங்கப்பெற்ற செங்கோட்டைப் பகுதியிலும் இவர்கள் வசித்தனர். இவர்களுடைய வழித்தோன்றல்களில் ஒருவன் பெரும்பெயர் வழுதி (புறம் 3 : 13 - உரை). இவன் போரில் வெற்றி பெற்று யானை மீதேறி உலா வந்தான். 'தவிரா ஈகைக் கவுரியர் மருக' என்று கூறப்படும் பகுதியில் இவனது முன்னோர் கொடைச் சிறப்புடன் இவனது கொடைச் சிறப்பும் குறிப்பாக உணர்த்தப்பட்டுள்ளது. வழிப்பறிமிக்க காட்டு வழிகளில் புலவர்கள் இவனை நாடிப் பரிசில் பெறுவதற்கு வருவார்கள் என்றும் அவர்கள் வந்ததும் அவர்களுடைய குறிப்பறிந்து உதவவேண்டும் என்றும் அவனுக்கு அறிவுறுத்திப் புலவர் பாடியுள்ளனர்.

அகன்ற மார்பு, உலர்ந்த சந்தனம், கால்களில் பொன்னால் செய்யப் பெற்ற வீரக்கழல் இவற்றுடன் காணப்பட்டான். நிலமே தலைகீழாக மாறினாலும் வாக்குத் தவறக்கூடாது என இவன் அறிவுறுத்தப் பட்டிருக்கிறான். இவனுடைய மனைவி செம்பொன்னாலாகிய அணிகலன்களை அணிந்த கற்பரசியாக விளங்கினாள். இவன் மதுரையில் இருந்து ஆட்சி செலுத்தியதாகத் தெரிகிறது. (அகம் 315 : 7-8). கூடலைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட வழுதி ஒருவன் 'வாடா வேம்பின் வழுதி' என்றும், 'அரண் பல கடந்த முரண்கொள் தானை' உடையவன் என்றும் கூறப்படுகிறான் (அகம் 315). கூடல் நகரத் தலைமை வேறு எந்த வழுதிக்கும் குறிப்பிடப் படாததால் இவனைக் 'கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி' என்றே கருதலாம். இவன் பல கோட்டைகளை வென்றபோது இவனுடைய வலிமைமிக்க கைகளில் ஒளிபொருந்திய வாள் ஒன்று சிறப்புற்று விளங்கியது. இதனால் இவன் 'கருங்கை ஒள்வாள்' என்ற அடைமொழியைத் தன் பெயருக்குமுன் பெற்றான்.

# குறுவழுதி

'அண்டர் மகன் குறுவழுதியார்' என்னும் பெயருடன் குறிக்கப்படும் இவரும் புலவர் என்ற நிலையிலேயே காணப்படுகிறார். அண்டர் என்போர் ஒரு குடியினர் ஆவர் (குறுந். 117 : 3; அகம் 59 : 5). நள்ளி என்ற அரசனுடைய தோட்டிமலைப் பகுதிகளில் அவர்கள் வாழ்ந்து வந்தனர் (குறுந். 210 : 1). நார்முடிச்சேரல் இவர்களை வென்று பின்னிடும்படி துரத்தினான் (பதிற். 88 : 7-10). அண்டர் அல்லது ஆயர் குடியில் தோன்றியவர் என்பதும், ஆட்சிப் பொறுப்பேற்று விளங்கியவர்கள் என்பதும் பெறப்படும். பாண்டியரில் ஒரு கிளைக் குடியினர் கண்டீரமலைப் பகுதியில் அண்டர் என்னும் பெயருடன் செல்வாக்குப் பெற்று விளங்கினார்கள் எனலாம். இந்த அண்டர்களுக்குப் பெருந் தலைவனாக விளங்கியவன்தான் குறுவழுதி. இவன் சிறந்த புலவனாக விளங்கியதால் 'ஆர்' என்னும் சிறப்பு அடைமொழி சேர்த்துக் 'குறுவழுதியார்' என்று வழங்கப்பட்டான். இவனுடைய பாடல்கள் அகநானூறு, குறுந்தொகை, புறநானூறு ஆகிய மூன்றிலும் காணப்பெறுகின்றன. இவன் பாண்டிய மரபில் தோன்றியவனாகத் தெரியவில்லை.

# நல்வழுதி

நல்வழுதியர் என்னும் புலவராக அறிமுகமாகும் இவரை வழுதி என்ற பெயரைக் கொண்டு, ஒரு சிறு பகுதிக்கு மன்னனாக விளங்கியிருக்கலாம் எனக் கொள்கிறோம். வையை ஆற்றைச் சிறப்பித்துப் பாடும் இவர், அதனைப் 'போரடு தானையான் யாறு' (பரிபா. 12 : 86) என்று குறிப்பிடுகிறார். இதனால், வையை அவருக்கு உரிய ஆறு அன்று என்பது பெறப்படுகிறது. இவர் பிற வழுதியரைப் போலவே, பாண்டிய நாட்டின் தென் பகுதியில் ஒருபால் ஆண்டுவந்தார் என்று கருதலாம்.

# பாண்டியன் மாறன் வழுதி

பாண்டியன் பன்னாடு தந்தானும் பாண்டியன் மாறன் வழுதியும் ஆகிய இருவரும் புலவர்களாகக் கருதப்பெறுகின்றனர் (நற். 97, 301; குறுந். 270). இந்த இரண்டு பெயர்களும் ஒருவனையே குறிப்பன என்று கொள்ளத்தக்க வகையில் 'பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி' என்ற நிலையில் அமைந்த பெயரும் காணப்படுகிறது. இப்பெயர் கொண்டவன் நற்றிணை என்னும் தொகுப்பு நூலை உருவாக்கியவன்.[25]

'கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி' என்பானைப் பல புலவர்கள் பாடியுள்ளனர். தமிழ்நாடு மூவேந்தர்க்கும் பொது என்று கூறினால் இவன் பொறுக்கமாட்டானாம். தனக்கே உரியது என்று ஆக்கிக் கொள்ளப் போருக்கு எழுவானாம். இவ்வாறு போருக்கெழுந்தபோது, ஏதோ ஒருவகையில் தமிழ்நாடு முழுவதும் இவனுக்குரியதாயிற்று என்ற நிலை வந்தது போலும். அதன் பின்னும் இவனது போர் வேட்கை தணியவில்லை. 'வடபுலமன்னர் வாட அடல்குறித்து' எழுந்தான் (புறம் 52 : 5). இதன் விளைவு என்னவாயிற்று என்பது தெரியவில்லை. தமிழ்நாட்டிற்கு வடக்கில் இருந்த சில சிற்றரசர்களையேனும் இவன் வென்றிருக்கலாம். 'சினப் போர் வழுதி', 'இயல் தேர் வழுதி' என்னும் அடைமொழிகள் இவனது சினமிகுதியையும், தேரில் உலாவந்த பாங்கையும் நம் நினைவிற்குக் கொண்டுவருகின்றன. பாண்டியன் உக்கிரப் பெருவழுதியும், இந்த மாறன் வழுதியும் ஒரே காலத்தில் அகத்திணைத் தமிழ்ப் பாடல்களைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். இவர்களைப் பாடிய புலவர்களைக் (மருதன் இளநாகனார், ஔவையார்) கொண்டு இவர்கள் சமகாலத்தவர் என்பதை உணரலாம்.

## கடலன் வழுதி

மதுரை மாவட்டம் மீனாட்சி புரத்தையடுத்த கழுகுமலையில் உள்ள சமணர் படுக்கைகளுக்கு மேல் உள்ள பாறைகளில் சங்க காலத்துத் தாமிழி எழுத்துகள் உள்ளன. அந்த எழுத்துகள் கி.மு. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. அந்த எழுத்துகளில் கடலன் வழுதி என்ற பெயர் வருகிறது. இந்த வழுதி நெடுஞ்செழியனின் பணி மேற்கொண்டவன்.[24] இவன் கஃஞனாகிய நந்தி என்னும் சமணத் துறவிக்குக் கழுகுமலைப் பாறையில் படுக்கை வெட்டிக் கொடுத்தான்.

## மருங்கை வழுதி

மருங்கூரைத் தலைநகராகக் கொண்டு வழுதி என்ற ஒருவன் ஆண்டு வந்தான். இவன் பசும்பூண் வழுதி என்று குறிப்பிடப்படுகிறான்.

## கொற்கை வழுதி

கொற்கைத் துறைமுகத்தைத் தலைநகராகக் கொண்டு வெற்றி வேற்செழியன் ஆண்டு வந்தது போல இவன் 'நற்றேர் வழுதி' என்று சிறப்பித்துக் கூறப்படுகிறான் (அகம் 130 : 11).

# பிற வழுதி அரசர்கள்

'தாடோய் தடக்கை வழுதி' என்று கூறப்படும் வழுதி ஒருவன் தன் வேலை உயர்த்திப் பகைவர்களைப் புறங்கண்டான் (அகம் 312 : 11-12). சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன் இவனைப் போலவே தாடோய் தடக்கை வழுதி என்று கூறப்படுகிறான். இதனால் இருவரும் ஒருவராக இருக்கலாம். இவன் 'வெல்போர் வழுதி' என்றும் சிறப்பிக்கப் பட்டுள்ளான். 'போர்வல் வழுதி' என்று கூறப்படும் வழுதி ஒருவனுக்குப் பகைவர்கள் பெறற்கரிய உயர்ந்த திறைப் பொருள்களைக் கொடுத்தனர். இப்போர்வல் வழுதி மேற்கூறப்பெற்ற சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் என்று கருத இடமுண்டு (கலி. 141 : 24-25). கடல்போன்ற பெரிய படையைக் கொண்டு 'கலிமா வழுதி' என்ற பெயரும் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனைக் குறிக்கக்கூடும்.

புலிமான் வழுதி என்பவர் தன் மனைவி மக்களுடன் சென்று திருப்பரங்குன்றத்து முருகவேளை வழிபட்டதாகத் தெரிகிறது. அகநானூறு தொகுக்கப்படக் காரணமாக இருந்த உக்கிரப் பெருவழுதிக்கு இப்பெயர் வழங்கியது என்று கருதலாம்.

# 5. பாண்டியன் என்னும் பெயருடைய அரசர்கள்

## ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்

இவனது பாடல்களில் இரண்டு, சங்க நூல்களில் இடம் பெற்றுள்ள வகையில் புலவனாக இவன் நமக்கு அறிமுகமாகிறான். என்றாலும், இவனது வஞ்சினப் பாடலும் இவன் பெயருக்குமுன் உள்ள 'ஒல்லையூர் தந்த' என்னும் அடைமொழியும் இவன் சிறந்த அரசனாக நாடாண்டு வந்தவன் என்பதைத் தெரிவிக்கின்றன. தன்னுடைய பகைவர்களைப் புறம் காணாவிட்டால் தனக்குத் தன் மனைவியைப் பிரிந்து வாழும் நிலை நேரட்டும்; அறவெறி தவறாத அரசவையில் திறமை இல்லாத ஒருவனை அமர்த்தித் தீமை செய்தவன் என்ற பழி நேரட்டும்; மையற்கோமான் மாவன், எயிலாந்தை, அந்துவன் சாத்தன், ஆதன் அழிசி, இயக்கன் ஆகிய ஐவருடனும் பிறருடனும் கூடி மகிழ்ந்திருக்கும் பேறில்லாமல் வறண்ட நிலத்தின் மன்னனாக அடுத்த பிறவி அமையட்டும் என்றெல்லாம் இவன் வஞ்சினம் கூறுமிடத்து இவனது நற்பண்புகள் வெளிப்படுகின்றன (புறம் 71 : 4-19). ஒல்லையூர் என்பது இப்பொழுது உள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்த நாடு. இவன் அந்த நாட்டில் நடந்த போரின்போது

இவ்விதம் வஞ்சினம் கூறினான். தான் கூறியவாறு ஒல்லையூர் நாட்டை வென்று தன் நாட்டுடன் சேர்த்துக்கொண்டான். ஒல்லையூர்க் கிழான் மகன் பெருஞ்சாத்தன் என்பவன் இறந்ததற்காகப் பாணர்கள் பெரிதும் வருந்திய செய்தியைக் கூறும் பாடல் ஒன்று உள்ளது (புறம் 242). இந்தச் சாத்தன் இறந்தது பூதப் பாண்டியன் நடத்திய போரில் நிகழ்ந்திக்கலாம்.

தமிழ் இலக்கியங்களில் வடக்குப் பகுதியிலுள்ள மலைகளைக் கடந்து பொருள் தேடச் சென்றவர்களைப் பற்றியே மிகுதியாகப் பேசப் படுகிறது. ஆனால், இவன் தமிழக மக்கள் பொதிய மலையைக் கடந்து பொருள் தேடச் சென்ற மக்களைக் குறிப்பிடுவது நினைவு கூரத்தக்கது (அகம் 25 :20).

பொதியமலைப் பகுதியில் திதியன் என்பவன் ஆண்டு வந்ததை இவன் குறிப்பிடுவதோடு, அவனது செல்வச் செழிப்பையும், அவனது அரண்மனையில் முழங்கிய இன்னிசை முழக்கத்தையும் பாராட்டிக் கூறியுள்ளான். இதனால், திதியன் இவனது சிறந்த நண்பன் என்பது தெரிகிறது. இத் திதியன், பாண்டியன் தலையாலங்கானத்து நெடுஞ்செழியனை எதிர்த்துத் தாக்கியது, அவர்களது வரலாறுகளில் காணலாம். தலையாலங்கானத்துப் போர், நெடுஞ்செழியன் கொற்கையில் ஆண்டு கொண்டிருந்தபொழுது நிகழ்ந்ததாகையால் அக்காலத்திலோ, அதற்குச் சற்று முன்னரோ பூதப்பாண்டியன் மதுரையிலிருந்து அரசாண்டான் என்று கூறலாம். ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனுக்குப் பின்னும் தலையாலங்கானத்து நெடுஞ் செழியனுக்கு முன்னும் உள்ள இடைப்பட்ட காலத்தில் இவன் ஆட்சி செலுத்தினான் என்று கூறலாம்.

போரில் வஞ்சினம் கூறியபோது, புறங்காணாவிட்டால் 'பேர் அமர் உண்கண் இவளினும் பிரிக' என்று வஞ்சினம் கூறும் அளவிற்கு இவனது அன்பு, மனைவியிடம் சிறந்து விளங்கியது. இவனைப் போலவே இவனது மனைவியும் இவன் மீது பேரன்பு கொண்டு விளங்கினாள். பூதப்பாண்டியன் இறந்தபோது அவளும், அவனை எரித்த தீயில் பாய்ந்து உயிர்துறந்தாள். அவள் பெயர் பெருங்கோப்பெண்டு (புறம் 246 : 13-15).

# பசும்பூண் பாண்டியன்

'பசும்பூண்' என்னும் அடைமொழியை மட்டும் கொண்டு இந்தப் பாண்டியனைத் தனியான ஓர் அரசன் என்று கொள்ளமுடியுமா என்பது ஆய்விற்குரியது (நற். 279 : 2; பெரும்பாண். 458; பரிபா. 3 : 53). இப்பெயர் கொண்ட அரசன், மதுரையில் இருந்து மிகச் சிறப்புடன் அரசாண்டதாகத் தெரிகிறது. அப்படியிருந்தும் எந்தப் புலவரும் இவனை நேரில் கண்டு

வாழ்த்திப் பாடியதாகப் புறநானூற்றில் பாடல்கள் இல்லை. எனவே, பசும்பூண் பாண்டியன் என்னும் பெயர் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனாக இருக்கலாமென்று கருதப்படுகிறது.

## அரசுகட்டிலைக் கைப்பற்றிய போர்

பாண்டிய நாட்டின் அரியணையைக் கைப்பற்றவே இவன் போராடி இருக்கிறான். போரில் வெற்றிகண்டதால் வெண்கொற்றக் குடையை உயர்த்திப் பெரும் புகழுடன் அரசாண்டிருக்கிறான் (அகம் 231:12). பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் இதே நிலையினன் என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிகனை வென்றது

அதிகன் என்பவன் கொல்லிமலைப் பகுதியை ஆண்ட அரசன். பசும்பூண் பாண்டியன் ஒரு யானைப் படையுடன் சென்று அதிகனை வென்று தன் வெற்றிக் கொடியை உயர்த்தி, அவனது கொல்லிமலையில் யானைப் படையில் வெற்றி அணிவகுப்பை நடத்தினான். இப்போருக்குப் பின் அதிகன் பாண்டியனுடைய நண்பன் ஆனான். பின்னர்த் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையிடம் நாட்டைப் பறிகொடுத்து, இந்தப் பாண்டியனின் படைத்தலைவனாக மாறி விட்டான் (அகம் 162 : 18).

## கொங்கரை ஓட்டியது

அதிகன் கீழைக் கொங்கர்களின் தலைவன். பசும்பூண் பாண்டியனும் அதிகனும் நண்பர்களாக மாறியபின் கீழைக்கொங்கரும் பாண்டியனுக்கு நண்பர் ஆயினர். இந்நிலையில் மேலைக் கொங்கர்கள் பொறையர் குடியைச் சேர்ந்த சேர அரசர்களுடன் சேர்ந்துகொண்டு பாண்டியனுக்கு எதிர்ப்பாய் விளங்கினர். பசும்பூண் பாண்டியன் இந்தக் கொங்கர்களோடு போரிட்டு அவர்களை நாட்டைவிட்டே துரத்திவிட்டான் (அகம் 253 : 4-5). தங்களது வேற்படைகளைப் போர்க்களத்திலேயே எறிந்துவிட்டுத் தப்பியோடிய கொங்கர், குடகடல்பக்கம் ஓடிவிட்டனர். இந்தப் போரில் இவனுக்கு ஆய் அரசன் உதவி செய்தான் எனத் தெரிகிறது (புறம் 130 : 5-6). ஓடிய கொங்கர்களில் சிலர் வழியில் இருந்த நாட்டில் அரசாண்ட நன்னனுடன் சேர்ந்து கொண்டனர். நன்னன் மூவேந்தருக்கும் எதிரியாக இருந்தான்.

## வாகைப் பறந்தலைப் போர்

ஆய் எயினனுக்கும் நன்னனது படைத் தலைவன் ஞிமிலிக்கும் நன்னனின் தலைநகர் பாழியில் போர் நடந்தது. போரில் ஆய் எயினன்

மாண்டனர். இந்நிலையில் ஞிமிலி, ஆய் எயினனின் நகர் வாகையைக் கைப்பற்ற முயன்றான். வாகையைப் பாதுகாக்கப் பசும்பூண் பாண்டியன் தன் படைத்தலைவன் அதிகனை அனுப்பியிருந்தான். பாண்டியன் படைத் தலைவனான அதிகனுக்கும் ஞிமிலிக்கும் வாகைப் பறந்தலையில் போர் நடந்தது. போரில் நன்னனுக்கு உதவியாகக் கொங்கர்கள் உதவினர். யானை மீதிருந்து போரிட்ட அதிகன் யானையுடன் கொல்லப்பட்டான். இந்த நிகழ்ச்சியில் கொங்கர்கள் ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர் (குறுந். 393 : 3-6).

## பொதியமலை வெற்றி

அதிகனை வென்று கொல்லிமலையில் யானைகளை வெற்றி உலாவரச் செய்தான் இப்பாண்டியன் என்பதை முன்னரே பார்த்தோம். அதுபோலவே, இவன் பொதியமலையைக் கைப்பற்றினான் போலும் (அகம் 338 : 5-6). இதன் பயனாகப் பொதியமலை அரசன் ஆய், அதிகனைப் போலப் பாண்டியனின் நண்பன் ஆனான். அதிகன் வாகைப் பறந்தலையில் பாண்டியனுக்காகப் போரிட்டது போலவே, ஆய் அரசன் கொங்கர்களை ஓட்டுவதில் பசும்பூண் பாண்டியனுக்கு உதவினான் (புறம் 130 : 5-6).

## நெடுமிடல் படைத்தலைமை

பசும்பூண் பாண்டியனுக்குப் படைத்தலைவனாக விளங்கியவன் நெடுமிடல் என்பவனாவான் (அகம் 266 : 12). பசும்பூண் பாண்டியனுடைய பகைவர்கள் இப்படைத்தலைவனைக் கொன்ற பிறகு அரிமணவாயில் உறத்தூரில், கள்ளுடைப் பெருஞ்சோறு உண்டு வெற்றி விழாக் கொண்டாடினர் என்று அறிகிறோம்.[27] இந்த நெடுமிடல் என்பவனுடன் கொடுமிடல் என்பவனும் மற்றொரு படைத்தலைவனாக இருந்தவன் எனத் தெரிகிறது. இவர்களைப் போரில் கொன்றவன் நார்முடிச் சேரல் என்று கூறப்படுகிறது (பதிற். 32 : 9-11). இதைக் கருதுமிடத்துப் பசும்பூண் பாண்டியன் வடக்கில் கொல்லிமலை, தெற்கில் பொதியமலை ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்ட பெருநிலப்பரப்பை, அதிகன் முதலிய சிறப்புமிக்க வள்ளல்களின் துணையுடன், அரசு புரிந்தான் எனக் கொள்ளலாம்.

# பாண்டியன் அறிவுடைநம்பி

இவனை நேரில் கண்டு பாடிய புலவர் 'அறிவுடைவேந்தன்' என்னும் தொடரைப் பொதுப்படையாகக் குறிப்பிடுகிறார் (புறம் 184 : 5). இதனால் இவனை அறிவுடைநம்பி என்று குறித்தார்களோ என்று எண்ண

வேண்டியுள்ளது. இவனது பாடல்கள் இன்பப் பயனை விளக்குவனவாக உள்ளன. நம்பி என்னும் பெயர், முறுக்கான உடற்கட்டுக் கொண்டு அழகுடன் பொலியும் ஆடவர்க்கெல்லாம் வழங்கப் பெற்ற பொதுப் பெயர் ஆகும்.

இவன் அரியணையில் அமர்வதற்கு முன், அரசியல் அலுவலர்கள் குடிமக்களின் நிலையைப் பார்த்து மிகுதியான வரிகளை வசூலித்ததாகத் தெரிகிறது. புலவர் இவனை நேரில் கண்டு சிறிது சிறிதாகப் பல தவணைகளில் மக்கள் வரிகளைச் செலுத்த அனுமதிக்கப்படவேண்டும் என்பதைக் குறிப்பாக உணர்த்தினார் (புறம் 184). அரசன், புலவரின் அறிவுரையை ஏற்று, மக்களின் விருப்பம்போல் பல தவணைகளில் வரி செலுத்த அனுமதித்தான் எனலாம். வாழ்க்கையில் பல வகையான செல்வ வளங்களும் ஒருங்கமையப் பெற்றிருந்தாலும் மக்கட் செல்வம் இல்லாவிட்டால் இன்பம் அமையாது என்று இவன் தன்னுடைய பாடல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளான் (புறம் 188).

சங்கப்பாடல் தொகுதிகளில் இவனுடைய பாடல்களாக அகத்துறைப் பாடல்கள் மூன்று இடம்பெற்றுள்ளன. தினைப்புனம் காக்கச் சென்ற பெண் ஒருத்தி, அதனை மறந்து, அவளது காதலனோடு கூடி மகிழ்ந்தே காலம் போக்குவதை அவளது தோழி பக்குவமாகத் தவறு என்று அறிவுறுத்தும் வகையில் ஒரு பாடல் அமைந்துள்ளது (அகம் 28 : 3-14). காதலன் ஒருவன் அடிக்கடி காதலியிடம் கள்ளத் தொடர்பு கொள்வதைத் தோழி வன்மையாகக் கண்டிப்பதாய் மற்றொரு பாடல் அமைந்துள்ளது (அகம் 28).

கற்பரசி ஒருத்தியின் கையில் இருந்த குழந்தையைப் பேய் ஒன்று பிடுங்கிக் கொண்டது போலத் தோழியிடமிருந்து தலைவியைத் தலைவன் பிடுங்கிக்கொண்டான் என்றும், பூப்போன்ற அவளைத் தேனீ போன்று நலம் நுகர்ந்து சென்றான் என்றும் நயம்படப் பாடிய பாடல் ஒன்றும் கிடைத்துள்ளது (நற். 15 : 7-10).

நம்பி நெடுஞ்செழியன் எனும் பெயர் கொண்ட அரசன் ஒருவன் மிகச் சிறந்த போர்த்திறம் படைத்த அரசனாக விளங்கியதை நெடுஞ்செழியன் வரலாற்றில் காணலாம். இந்தப் பெயர் நம்பியின் மகன் நெடுஞ்செழியன் என்பதாக இருக்கக்கூடும்.

## பாண்டியன் கீரஞ்சாத்தன்

கீரன் மகன் சாத்தன் என்னும் பெயர் கீரஞ்சாத்தன் என்று அமைந்திருக்கக் கூடும். பாண்டியன் என்னும் அடைமொழியைக் கொண்டு இவன் பாண்டியர் குடியைச் சேர்ந்தவன் அல்லது பாண்டியர்

படைத்தலைவன் என்பது தெரியவருகிறது. கள்ளுண்ட மயக்கத்தால் கடமையை மறந்து சில போர் வீரர்கள் அஞ்சியிருந்தபோது, எஞ்சிய படையினருக்குப் பாதுகாவலனாகத் தழுவிக் கொண்டு போரில் குதித்து முன்னேறிச் சென்றான். போர் வீரர்கள் காயம் பட்டு உணவு கொள்ளாமல் இருந்தபொழுது, இவன், 'நீங்கள் உணவு கொள்ளாவிட்டால் நானும் உண்ண மாட்டேன்!' என்று சூளுரைத்து அவர்களை உண்ணும்படி செய்தான். இதனால் இவன் சிறந்த படைத்தலைவனாகவும், படை வீரர்களைத் தன் உயிரைப்போல் போற்றும் உயர்ந்தோனாகவும் விளங்கினான். பாண்டியன் என்னும் பெயர், பாண்டிய அரசர்கள் இவனைப் பாராட்டி அளித்த சிறப்புப்பட்டமாகவும் இருக்கலாம். இவனைப் பாடிய புலவர், பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனையும் பாடியுள்ளார். ஆகையால், இவன் நன்மையுடைய படைத்தலைவனாக இருந்தான் என்று கூறலாம் (புறம் 196).

# 6. பழங்கதைகளால் அறியப்படும் அரசர்கள்

தமிழ்நாட்டில் வழங்கும் சில மரபுவழிச் செய்திகள் பாண்டிய மன்னர்களுடைய செயல்களைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. அவற்றில் சில புராணத் தலைவர்களோடு தொடர்புடையனவாக இருப்பதால் உண்மையான வரலாற்றுச் செய்திகள் என்று கொள்ள முடியவில்லை.

வடிம்பலம்ப நின்ற பாண்டியன்

நிலப்பகுதியைத் தங்கள் நாட்டுப் பரப்பில் கொண்டிருந்ததோடு நீர்ப்பரப்பாகிய கடலையும் ஓர் எல்லை வரையில் தங்களுக்கு உரியதாகப் பாண்டிய மன்னர்கள் கொண்டிருந்தனர். அந்த எல்லைப் பகுதி எதுவரையில் என்று பாண்டிய அரசன் ஒருவன் தன்னுடைய வேலை வீசிக் கட்டினான் (சிலப். 11 : 17-22). வடிம்பு என்பது வேலின் நுனியாகும். எனவே, இவன் வடிம்பு அலம்ப நின்ற பாண்டியன் எனப்பட்டான்.

இவன் தன்மீது வேலை வீசியதால் சினங் கொண்ட கடல் பொங்கியெழுந்தது; பாண்டிய நாட்டின் நிலப்பகுதியை விழுங்கியது. இதனால், பாண்டியன் தன் நாட்டுப் பரப்பில் குமரியாறு பாய்ந்த நிலம், குமரிக்கோடு முதலான பல மலைகளைக் கொண்டிருந்த நிலம் ஆகியவற்றை இழந்தான். இந்த நில இழப்பை ஈடுசெய்வதற்காக அவன் வடதிசை நோக்கிப் படையெடுத்துச் சென்று கங்கைச் சமவெளியையும் இமயமலைப் பகுதியையும் கைப்பற்றிக்கொண்டான். இந்த அரசன் தென்னன் என்று குறிப்பிடப்படுகிறான்.

நெடியோன் என்னும் அரசன் (புறம் 9 : 10; மதுரைக். 763) பஃறுளி ஆற்றோடு தொடர்புடையவனாகவும் 'நிலத்தருதிருவின்' நெடியோன் என்று நிலப்பரப்பினைத் தன் நாட்டோடு சேர்த்துக் கொண்டவனாகவும் காட்டப்படுவதால், இந்த அரசனை வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்று கருதுகின்றனர்.[28] பிற்காலத் தமிழ் நூல் ஒன்று இவனை 'ஆழி வடிவு அலம்ப நின்றான்' என்று குறிப்பிடுகிறது (நளவெண்பா 137). இந்நூல் இவனை யதுகுல அரசன் என்றும், ஏழிசை நூல் சங்கத் தலைவன் என்றும், தேவர்களுக்காகத் தூது சென்றவன் என்றும், பாரதப் போரில் கலந்துகொண்டவன் என்றும் குறிப்பிடுகிறது.

## இந்திரன் ஆரம் பூண்ட பாண்டியன்

தேவர் கோனாகிய இந்திரன் எல்லா அரசர்களையும் விருந்திற்கு அழைத்தான். விருந்திற்குச் சென்ற அரசரெல்லாரும் இந்திரன்முன் தலை தாழ்த்தி வணக்கம் செலுத்தினர். பாண்டியன் மாத்திரம் தலைதாழ்த்தி வணக்கம் செய்யாது, தன் பெருமிதம் தோன்ற நிமிர்ந்து சென்றான். இதைக் கண்ட இந்திரன் தன் முத்தாரத்தை அந்தப் பாண்டியனுக்கு அளித்துப் பெருமைப்படுத்தினான்.[29]

## மழை பிணித்தாண்ட மன்னவன்

பாண்டியன் ஒருவன் இந்திரனுடைய தலையிலிருந்த முடிவளையை உடைத்து எறிந்தான். அதனாற் சினங்கொண்ட இந்திரன் தனது ஆணைக்குட்பட்டு நடந்து வந்த மேகங்களை அழைத்துப் பாண்டிய நாட்டில் பெய்யக் கூடாதென்று கூறித் தடுத்துவிட்டான். இதனால் பாண்டிய நாட்டில் மழையில்லாமல் போயிற்று. பாண்டியன் ஒருவன் அந்த மேகங்களைத் தடுத்து மழை பெய்யச் செய்தான்.

## பொற்கைப் பாண்டியன்

இவனுடைய ஆட்சிக் காலத்தில் மதுரை நகரில் வாழ்ந்த கீரந்தை என்பான் தன்னுடைய மனைவியைத் தனியே வீட்டில் விட்டு வெளியூருக்குப் போனான். பாண்டியனுடைய ஆட்சி, தனித்திருக்கும் தன் மனைவிக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்பது அவனுடைய நம்பிக்கை. கீரந்தை வெளியூருக்குப் போயிருப்பதை அறிந்த பாண்டியன் இரவில் நகர்வலம் வரும்போது கீரந்தையின் மனைவிக்கு யாதொரு தீங்கும் நேராதபடி அவள் அறியாமலே காத்துவந்தான். நெடுநாள் சென்றபிறகு, நள்ளிரவில் கீரந்தை வீட்டிற்குள் யாரோ இருவர் பேசுங்குரல் கேட்டது. நள்ளிரவில் நகர்வலம் வந்த பாண்டியன்,

யாரேனும் கீரந்தையின் மனைவிக்குத் தீங்கு செய்ய வந்தனரோ என்று கருதி அந்த வீட்டுக் கதவைத் தட்டினான். உள்ளிருந்து கணவனாகிய கீரந்தையின் குரல், 'யார் அது?' என்று கேட்டது. கீரந்தை ஊரிலிருந்து திரும்பி வந்துவிட்டான். அவனுடைய பேச்சுக்குரல்தான் உள்ளிருந்து கேட்டது. கதவைத் தட்டினபடியால் அவன் அவர் மீது ஐயப்படுவானே, அவனுடைய ஐயத்தைப் போக்க வேண்டுமே என்று கருதிய பாண்டியன் அந்தத் தெருவிலுள்ள எல்லா வீட்டுக் கதவுகளையும் தட்டிக்கொண்டே அரண்மனைக்குப் போய்விட்டான்.

அடுத்த நாள் அந்த வீதியில் உள்ளோர் எல்லோரும் முன்னிரவு தங்கள் வீட்டுக் கதவுகளை யாரோ தட்டி விட்டுச் சென்றார்கள் என்று மன்னனிடம் முறையிட்டனர். தன் மனைவியின் மீது ஐயங்கொண்ட கீரந்தை எல்லா வீட்டுக் கதவுகளும் தட்டப்பட்டதை அறிந்து தன் மனைவியின் மேல் ஐயம் நீங்கினான். பிறகு, பாண்டியன் தானே அந்தக் குற்றம் செய்ததை அரசவையில் ஒப்புக்கொண்டு, கதவுகளைத் தட்டின குற்றத்திற்காகத் தன்னுடைய கையை வெட்டிக் குறைத்துக் கொண்டான் என்று கதை கூறப்படுகிறது (சிலப். 23 : 42-52; பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் 22 : 42-52).

## மலையத்துவச பாண்டியன்டியன்

மலயத்துவசன் என்னும் பெயர் மலையைத் தன்னுடைய அடையாளமாகக் கொண்டவன் என்ற பொருளுடையதாகும். சங்க இலக்கியத்துள் இவனைப் பற்றிய குறிப்பு இல்லை. மலையத்துவச பாண்டியன், காஞ்சனை என்ற பெயருள்ள பாண்டிமா தேவியோடு வாழ்ந்தான். இவ்விருவருக்கும் மகப்பேறில்லாமையால் தவம் செய்து ஒரு பெண்மகவைப் பெற்றனர். அக்குழந்தைக்குத் தடாதகை என்று பெயரிடப் பெற்றது. அப்பெண் பாண்டிய நாட்டை அரசாண்டாள் என்று புராணக் கதை கூறுகிறது.

மலையத்துவச பாண்டியனைப் பற்றி வடமொழி பாகவத புராணம் மற்றொரு வரலாற்றைக் கூறுகிறது. இப் புராணக் கதைகள் நம்பத் தகுந்தன அல்ல.

## தடாதகைப் பிராட்டியார்

மலையத்துவச பாண்டியனுக்குப் பிறகு அவனுடைய மகளாகிய தடாதகைப் பிராட்டியார் அரசாண்டதாகத் திருவிளையாடற் புராணங்கள் கூறுகின்றன.[30] அங்கயற்கண்ணியாகிய மீனாட்சி அம்மையே தடாதகைப் பிராட்டியாகப் பிறந்தார் என்று புராணக் கதைகள் கூறுகின்றன. கி.மு.

மூன்றாம் நூற்றாண்டில் பாடலிபுத்திரத்தில் செலியூகஸ் நிகேடாரின் தூதுவராக இருந்த மெகஸ்தனீஸ் தம்முடைய காலத்தில் பாண்டிய நாட்டை ஒரு பெண்ணரசி அரசாண்டாள் என்று கூறியுள்ளார். ஹெர்குலிஸ் என்ற கிரேக்க வீரனுக்குப் பண்டேயா என்ற பெண் இருந்தாள் என்றும், அவளுக்குத் தென்னாட்டில் கடற்கரை வரையில் உள்ள நாட்டை அரசாளக் கொடுத்தான் என்றும் மெகஸ்தனீஸ் கூறியுள்ளார். மலையத்துவச பாண்டியனை இவர் ஹெர்குலிஸ் என்று கூறினார் எனத் தோன்றுகிறது. அவனுடைய மகளுக்குப் பண்டேயா என்று பெயரிட்டான் என்பதும், பாண்டிய நாட்டைத் தடாதகையார் அரசாண்டார் என்பதும் ஒரே வரலாற்றைக் குறிக்கின்றன எனலாம்.

பாண்டிய அரசைப்பற்றி மெகஸ்தனீஸ் இன்னொரு செய்தியையும் கூறியுள்ளார். பாண்டிய அரசிக்கு 365 ஊர்கள் இருந்தன. ஒவ்வோர் ஊராரும் அரண்மனைக்கு நாள்தோறும் கடமை செலுத்தினார்கள். இந்த அரசிறை, காசாக இல்லாமல் பொருளாகச் செலுத்தப் பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. சிலப்பதிகாரத்தில் மாதரி என்ற இடைக்குல மடந்தை அரண்மனைக்குச் சேரவேண்டிய இறைவரியை நெய்யாகச் செலுத்தினாள் என்று கூறப்பட்டுள்ளது.

# குறிப்புகள்

1 எரித்திரையக் கடலின் ஆதிப்பெயர் Erythraean, e. என்பதாகும். எரிதிரியன்கள்(Etruscans என்போர்) என்ற செந்நிறமுடைய மக்கள் அக்கடல்களில் வாணிகம் செய்து வந்தனர்.

2 முதுமொழிக்காஞ்சி 'ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்' என்று கூறுமிடத்து அச்சொல் கடலின் பொதுப் பெயராக அமைந்திருந்ததைக் காணலாம்.

3 பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள (சிலப். 11 : 19-20).
மலி திரை யூர்ந்துதன் மண்கடல் வெளவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார் நாடு இடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கொண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன் (கலி. 104 : 1-4).
'அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்து கடல் கொள்ளப்பட்ட மதுரையும் கபாடபுரமும் என்ப' (இறையனார் அகப்பொருள் உரைப்பாயிரம்).

4 லெமூரியா பற்றிய தீர்ந்த முடிவு இதுகாறும் கிடைக்கவில்லை. எனினும், லெமூரியாக் கண்டம் இருந்தது உண்மையே என்றும் 1,50,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்களின் மூதாதையர் அங்கு வாழ்ந்திருக்கக் கூடுமென்றும் இந்நூலின் முதல் தொகுதியில் 'தொல்பழங்காலம்' பக்கம் 25-இல் விளக்கப்பட்டுள்ளது. அங்கு வாழ்ந்தவர்கள் தமிழர்களின் மூதாதையர் என்று தீர்மானமாகக் கூறமுடியாவிட்டாலும், தென்னிந்தியாவை ஆப்பிரிக்கா ஆஸ்திரேலியாவுடன் இணைத்த ஒரு பெருநிலப்பகுதி இருந்திருக்கலாம். அண்மையில் ஜப்பான் மொழிக்கும் தமிழுக்கும் தொடர்பு இருந்திருப்பதாகச் சில அறிஞர் கூறுகின்றனர். கபாடபுரத்தை வடநாட்டுக் காப்பியர்கள் குறிப்பிடுவதிலிருந்து ஒரு நிலப்பகுதி குமரிக்குத் தெற்கில் இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

5 கொடும்பாளூர் இக்காலத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது.

6 இந்நூலின் அடிப்படைச் சான்றுகள், கல்வெட்டு வரிசை எண் 44 முதல் 46 வரை.

7 இந்நூலின் அடிப்படைச் சான்றுகள், கல்வெட்டு வரிசை எண் 1-6.

8 'அக்காலத்து அவர் நாட்டிற்குத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி என்னும் ஆற்றிற்கும் குமரி என்னும் ஆற்றிற்கும் இடையே எழு நூற்றுக்காவதம்... கடல் கொண்டு ஒழிதலால் குமரியாகிய பௌவம் என்றார்.' சிலப். 8 : 1-2 அடியார் உரை.

9 பெரிபுளூஸ் 'நெல்சிந்தா' என்று குறிப்பிடும் மேற்குக் கடற்கரைத் துறைமுகத்தையும் 'நெல்லினூர்' என்று கொள்ள இடமுண்டு. இதுவும் பாண்டியருக்குச் சொந்தமானது என்று பெரிபுளூஸ் நூல் கூறுகிறது.

10 'சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப' (களவியலுரை).

11 'அவர் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது கபாடபுரத்தென்ப. அக்காலத்துப்போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது' (களவியலுரை).

12 திருக்குறளின் சிறந்த உரையாசிரியாராகிய பரிமேலழகர் 'குடிமை' என்னும் அதிகாரத்தில் ஐந்தாவது திருக்குறளுக்குப் பொருள் கூறுமிடத்துப் 'பழங்குடி' என்னும் சொல்லிற்குச் 'சேர, சோழ, பாண்டியர் என்றாற்போலப் படைப்புக் காலம் தொடங்கி மேம்பட்டு வருதல்' எனக் கூறியுள்ளார். ஆகையால், பாண்டியர் குலம் இன்ன காலத்தில் தோன்றியதென்று அறுதியிட்டுக் கூற இயலாது. தென்னிந்தியத் தலபுராணங்களில் பாண்டியர்கள் சந்திரகுலத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப் பெறுகிறது. இக் கூற்றுகள் பாண்டிய மன்னர்களுடைய நீண்டகாலத் தொடர்பைக் குறிக்கின்றன. பாண்டிய மன்னர்களின் குலத்தைச் சார்ந்தவர்கள் தற்காலத்தில் தமிழ்நாட்டில் உள்ளனரா என உறுதியாகக் கூறுவதற்கில்லை. சில வரலாற்றாசிரியர்கள் தென் தமிழ்நாட்டு மறவர் குலத்தைப் பாண்டிய மன்னர்களுடைய சந்ததியார் என்று கூறுவர். மற்றும் சிலர் கள்ளர்கள் இனத்தைச் சார்ந்தவர்களே பாண்டியர்களுடைய சந்ததியார் ஆவர் என உரைப்பர். இப்பொழுது தென் மாவட்டங்களில் வாழும் பள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்களே பாண்டிய மன்னர்களின் மூதாதையர் என்றும், 'மள்ளர்' என்று சங்க இலக்கியங்களில் காணப்படும் குலப்பெயர் பள்ளர் என்று திரிந்துவிட்டது என்றும் சிலர் கூறுவர். இக் கூற்றில்

எவ்வளவு வரலாற்றுண்மை பொதிந்துள்ளது என்பது அறிஞர்களின் ஆய்விற்கு உரியதாகும். சங்க இலக்கியங்களில் பயின்றுள்ள 'மள்ளர்' என்னும் சொல் பள்ளர் எனத் திரிந்தது என்பதற்கும், இப்பள்ளர்கள் பாண்டிய மன்னர்களின் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கும் தகுந்த ஆதாரங்கள் இல்லை. (ப-ர்) (தமிழ்நாட்டு வரலாறு : சங்க காலம் - அரசியல் (1983) நூலின் பதிப்பாசிரியர் குறிப்பு.)

13 இந்நூல் அடிப்படைச் சான்றுகள் கல்வெட்டு எண்கள் 1 முதல் 6.

14 உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும்மனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை திரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே (புறம் 183).

15 ஆடித் திங்கள் பேரிருள் பக்கத்து
அழற்குட் டத்து அட்டமி ஞான்று
வெள்ளி வாரத்து ஒள்ளெரி யுண்ண
உரைசால் மதுரையோடு அரைசுகே டுறும்எனும்
உரையும் உண்டே நிரைதொடி யோயே (சிலப். 23 : 133-137).

16 இத்தலையாலங்கானம் என்னுமிடம் தஞ்சை மாவட்டத்திலுள்ள தலையாலங்காடு என்று கருதப்பெறுகிறது.

17 சிலர் நெல்சிந்தம் என்பது கிழக்குக் கடற்கரைத் துறைமுகமெனக் கூறுவர். அங்ஙனமாயின் அது பாண்டியருடைய துறைமுகமாகும். அதனைக் கைப்பற்றப் பாண்டியன் முயன்றிருக்க இயலாது.

18 'பாண்டியர்' என்னும் பகுதியில் விளக்கம்.

19 மதுரையில் நடந்த போரில் பழையன் மாறன் கிள்ளிவளவனிடம் தோற்றுத் தன் கோநகரமாகிய மதுரையையும் யானைகளையும் குதிரைகளையும் இழந்து மோகூர் என்னும் ஊருக்கு ஓடி, அதைக் கோநகரமாகக் கொண்டு ஆளத் தொடங்கினான். இவனது தோல்வியைக் கேட்ட சேரன் கோதைமார்பன் மகிழ்ச்சியடைந்தான்.

20 பழையன் மாறன் என்னும் பெயர்கொண்ட ஒருவன் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின்

படைத்தலைவனாக வளங்கினான். இவனுடைய பெயரிலிருந்து மோகூர் அரசன் பழையனின் மகனாக இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

21 வித்தை போர்ப்பயிற்சி என்று கொள்வாரும் உளர்.

22 காவிரி கடலோடு கலக்குமிடத்தில் புகாரில் நடைபெற்ற இந்திர விழாவில் சோழ அரசர்கள் கலந்து கொள்வது போன்று.

23 'வயிர்' என்னும் ஒரு வித இசைக்கருவியை இயக்குபவர்கள்.

24 'துஞ்சினான்' என்பதற்கு ஓய்வு எடுத்துக்கொண்டான் என்னும் பொருளும் உண்டு எனக் கூறப்பெறுகிறது.

25 சங்க இலக்கியங்கள், 'வரலாறு', வையாபுரிப்பிள்ளை, பக். 1373.

26 அடிப்படைச் சான்றுகள், கல்வெட்டு எண் 1

27 'அரிமண வாயில்' என்பது புதுக்கோட்டைக்கருகில் உள்ள அரிமனம்.


28 சங்க இலக்கியம், பக். 1482.

29 'தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே' (சிலப். 17 உள்வரி வாழ்த்து 1 : 2).

30 பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம், தடாதகைப் பிராட்டியார் திரு அவதார, திருமணப் படலங்கள்.

★★★★★★★★★

# தஞ்சை பெரிய கோயிலில் உள்ள ராஜராஜ சோழனின் ஓவியம்



வ.உ.சி. நூலகம்